# சங்க இலக்கியப் பின்னணியில் அகத்திணைப் பிரிவுகள் - தலைவன், தலைவியர் பிரிவுகள்

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக
முழுநேர முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு


ஆய்வாளர்

**கா.அன்பரசு**

பதிவு எண். **30278 / Ph.D. K6 / Tamil / F.T. OCT 2012**

ஆய்வு நெறியாளர்

முனைவர் மேஜர் **ச.சோமசுந்தரம்** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
மேனாள் தமிழாய்வுத்துறைத் தலைவர்
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி ஏ+)
திருச்சிராப்பள்ளி - 620 017



முதுகலைத் தமிழாய்வுத்துறை
**பிஷப் ஹீபர் கல்லூரி** (தன்னாட்சி ஏ+)
திருச்சிராப்பள்ளி - 620 017.
நவம்பர் - 2016.

# நெறியாளர் சான்றிதழ்

முனைவர் மேஜர் **ச.சோமசுந்தரம்**
மேனாள் தமிழாய்வுத்துறைத் தலைவர்
தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 017

இடம்: திருச்சிராப்பள்ளி
நாள் :

**"சங்க இலக்கியப் பின்னணியில் அகத்திணைப் பிரிவுகள் – தலைவன் தலைவியர் பிரிவுகள்"** என்ற தலைப்பில் ஆய்வாளர் செல்வன் கா.அன்பரசு எழுதியுள்ள இவ்வாய்வேடு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காகப் பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழாய்வுத் துறையில் முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளராகப் பயின்ற காலத்தில் (2012 - 2016 ஆம் கல்வியாண்டில்) என் மேற்பார்வையின்கீழ் அவரது சொந்த முயற்சியில் எழுதப்பட்டது என்றும், இவ்வாய்வின் மீது வேறு எந்தப் பட்டமும் அவருக்கு அளிக்கப்படவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

முனைவர் **இரா.விஜயராணி**
தமிழாய்வுத்துறைத் தலைவர் - (பொ)

முனைவர் மேஜர் **ச.சோமசுந்தரம்**
நெறியாளர் (ஓய்வு)

## ஆய்வாளரின் உறுதிமொழி

செல்வன். **கா.அன்பரசு**
பதிவு எண்.30278 / Ph.D. K6 / F.T. / Tamil / Oct.2012
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி ஏ+)
திருச்சிராப்பள்ளி - 620 017

இடம்: திருச்சிராப்பள்ளி
நாள் :

**“சங்க இலக்கியப் பின்னணியில் அகத்திணைப் பிரிவுகள் – தலைவன் தலைவியர் பிரிவுகள்”** என்ற தலைப்பில் செல்வன். கா.அன்பரசு எழுதியுள்ள இவ்வாய்வேடு பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழாய்வுத் துறையில் முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளராகப் பயின்ற காலத்தில் என் சொந்த முயற்சியினால் உருவானது என்றும், இதற்கு முன் வேறு எந்தப் பட்டத்திற்கும் இவ்வாய்வேடு அளிக்கப் பெறவில்லை எனவும் உறுதியளிக்கிறேன்.

முனைவர் மேஜர் **ச.சோமசுந்தரம்**
(நெறியாளர்)

**கா. அன்பரசு**
(ஆய்வாளர்)

## நன்றியுரை

**உதவி உரைத்தன்று உதவி உதவி**
**செயப்பட்டார் சால்பின் உரைத்து**

"The benefit itself is not the measure of the benefit, the worthof those who have received it is the measure."

எனக்கு ஞானத்தை வழங்கி, தெளிந்த எண்ணங்களையும், ஆற்றலையும் கொடுத்து முனைவர்பட்ட ஆய்வை மேற்கொள்ள அருளை வழங்கிய என் இறைவனுக்கு நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

தாயிற்சிறந்த கோயிலுமில்லை,அன்னையைப்போல் ஒரு தெய்வம் இல்லை என்ற வாக்கிற்கிணங்க பெரிதுவக்கும்படி என்னை ஈன்று என் வாழ்வில் அக்கறை காட்டி, என் வளர்ச்சியைக் கண்டு அகமும் முகமும் மலர்ந்து நிற்கும் என் தாய் திருமதி சி.மணிமேகலை கார்த்திக்கேயன் அவர்களின் பாத அடிகளில் வீழ்ந்து நன்றியைக் காணிக்கையாய் செலுத்துகிறேன்.

என் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்து என் உளவியலில் கலந்து இவ்வாய்வேட்டை எழுதுவதற்கு துணைபுரிந்த என் தாரக மந்திரமாம் என் தந்தை அமரர் திரு இரா.கார்த்திகேயன் அவர்களுக்கு என் கண்ணீர்ப் பூக்களை நன்றிகளாய் செலுத்துகிறேன்.

முனைவர் பட்ட ஆய்வை மேற்கொள்ள அனுமதி வழங்கிய பாரதிதாசன் பல்கலைக்கழகத்தார்க்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

முனைவர் பட்ட இலட்சியத்தை நிறைவேற்ற களமாக இக்கல்லூரித் தமிழ்த்துறையைத் தெரிவு செய்தபோது, அந்த லட்சியம் நிறைவேற எனக்கு அனுமதி வழங்கிய கல்லூரி முதல்வர், முனைவர் பால் தயாபரன் அவர்களுக்கு நன்றியினைச் செலுத்துகிறேன்.

என்னை ஆய்வு மாணவராக ஏற்றுக்கொண்டு நல்முறையில் நெறிப்படுத்தி அவ்வப்போது ஆக்க ஊக்க உரைகள் கூறி, என்னை தகுதியான பேராசிரியராகவும், முனைவராகவும் உயர்த்த நல்வழிப்படுத்திய எம் மரியாதைக்குரிய நெறியாளர் முனைவர் மேஜர் ச.சோமசுந்தரம் அவர்களுக்கு என் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

முனைவர் பட்ட ஆய்வை நிகழ்த்துகையில் ஆலோசனைகளை வழங்கிய தமிழ்த்துறைத் தலைவர் இரா. விஜயராணி அம்மா அவர்களுக்கு என் நன்றி என்றும் உரிதாக்குகிறேன்.

முனைவர் பட்ட ஆய்வின் போது ஆய்வுக்கான பல களங்களையும், இவ்வாய்வு சிறக்க பல நூல்களின் கருத்துக்களையும் கூறிய ஐயா, முனைவர் வீரமணி அவர்களுக்கும், முனைவர் பிறைமதி அம்மா அவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் பட்ட ஆய்வை தொடங்கிய காலக்கட்டத்தில் இருந்து இன்றுவரை என் முன்னேற்றத்திற்கு வழிவகுத்து அன்போடும், பாசத்தோடும் என்னை நல்ல மாணவராக உருவாக்கிய என் தமிழ்ப் பேராசான்கள் முனைவர் க.கனகராசு மற்றும் முனைவர் க.தமிழ்மாறன் ஐயா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுப்பணி மேற்கொண்ட காலத்தே எதிர்கொண்ட பல சிக்கல்களையும், சந்தேகங்களையும், இடர்ப்பாடுகளையும் நீக்கி, ஆய்வுப்பணியை தொய்வின்றி தொடர ஆலோசனைகளை வழங்கிய என் மரியாதைக்குரிய ஆசான் முனைவர் க.சோ.பால்சந்திரமோகன் அவர்களுக்கு நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

நான் ஆய்வு எழுதும் காலத்தில் ஏற்பட்ட உள்ளச் சோர்வின் போதும், உடல் சோர்வின்போதும் நயந்துரைகளைக் கூறி என்னை உறுதிப்படுத்திய தாயுள்ளம் கொண்ட முனைவர் டே.கிறிஸ்துமணி அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வுக் காலத்தில் ஆய்வு தொடர்பான பல தகவல்களைக் கொடுத்து நட்புக்கு இலக்கணமாய் அமைந்து என்னை எழுச்சியுறச் செய்த என் தோழி தி.கார்த்திகா அவர்களுக்கும் என் தம்பி அறிவரசு அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி பற்பல.

மூன்று வருடங்கள் தொடர்ந்த என் ஆய்வுப்பணியின்போது தேவையான நூல்களைத் தந்து உதவிய கல்லூரி நூலகத்தார்க்கும் மற்றும் தமிழாய்வுத்துறைப் பேராசிரியப் பெருமக்களுக்கும் மிக்க நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்முகத்தோடு கணினி அச்சாக்கம் செய்து கட்டுக்கோப்பான புறவய அழகுடன் ஆய்வேட்டை உருவாக்கி அளித்த திரு.**பொ.செந்தாமரைக் கண்ணன்,** திருமதி.**சித்ராகண்ணன்** ஆகியோரை நெஞ்சார நினைந்து நன்றியைத் தெரிவித்துக் சொள்கிறேன்.

**கா. அன்பரசு**

## சுருக்கக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| ப. | - | பக்கம் |
| பக். | - | பக்கங்கள் |
| பா.எண். | - | பாடல் எண் |
| பா.வரி | - | பாடல் வரி |
| நூ. | - | நூற்பா |
| தொல். | - | தொல்காப்பியம் |
| பொருள் | - | பொருளதிகாரம் |
| அகத். | - | அகத்திணையியல் |
| புறத். | - | புறத்திணையியல் |
| அகம். | - | அகநானூறு |
| புறம். | - | புறநானூறு |
| நற். | - | நற்றிணை |
| கலி | - | கலித்தொகை |
| குறு | - | குறுந்தொகை |
| ஐங். | - | ஐங்குறுநூறு |
| குறள் | - | திருக்குறள் |
| பெரு. | - | பெரும்பாணாற்றுப்படை |
| மது. | - | மதுரைக்காஞ்சி |
| பட். | - | பட்டினப்பாலை |
| உ.ஆ. | - | உரையாசிரியர்கள் |

# பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | பக்க எண். |
| --- | --- | --- |
| | முன்னுரை | |
| 01. | அகத்திணை தலைவன் தலைவியரின் பிரிவுகள் | 1 - 61 |
| 02. | பொருள்வயிற் பிரிவு | 62 - 111 |
| 03. | பரத்தையர் பிரிவு | 112 - 162 |
| 04. | ஓதல் - தூது - போர் - நாடுகாவல் பிரிவுகள் | 163 - 211 |
| 05. | பிரிவுப் பாடல்களும் பின்புலங்களும் | 212 - 256 |
| | தொகுப்புரை | 257 - 264 |
| | துணைநூற் பட்டியல் | |
| | பின்னிணைப்பு | |

# முன்னுரை

சங்க கால மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் இலக்கியக் கண்ணாடியாகத் திகழ்வதே சங்க இலக்கியங்கள் ஆகும். அகம் புறம் என்ற இரு பெரும் பிரிவுகளைக் கொண்டிலங்கும் சங்க இலக்கியம் அகத்திற்குப் பெரும் பகுதியையும், புறத்திற்கு எஞ்சிய பகுதியையும் கொடுத்துள்ளது. இதில் அகம் என்பது வாழ்வின் உன்னதத்தையும், உள்ளன்பையும் காட்டும் பகுதியாகும். அகவாழ்வில் ஐந்திணைக்குச் சிறப்பிடம் உண்டு. தலைவன் தலைவியர் தம் எதிர்ப்பட்டுக் காதல் வயப்பட்டுக் களவு வாழ்க்கை மேற்கொண்டு கற்பு வாழ்வின் பல்வேறு நிலைகளை உலகுக்குக் காட்டுவதாக அமையப் பெறுகிறது.

அன்பின் வழியது இல்லறம். இவ்வில்லறத்தை மேற்கொள்ள பொருள் அவசியம் என்பதை அகவாழ்வு சுட்டுகிறது. பொருளுக்காக மட்டுமன்றி '**வினையே ஆடவர்க்கு உயிர்**' என்ற சங்கச் சொல்லாட்சிக்கு ஏற்ப தலைவன் பல்வேறு காரணங்களுக்காகத் தலைவியைப் பிரிய நேரிடுகிறது. ஓதல், பகை, தூது, நாடுகாவல் என்ற பிரிவை மேற்கொள்ளும்போது அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள உணர்வுகளைச் சங்கப் புலவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். பொதுநிலையில் களவுப்பிரிவு, கற்புப்பிரிவு என்ற பிரிவுகளைச் சங்க இலக்கியம் உள்ளடக்கியுள்ளது. தலைவன் தலைவியைப் பிரியும்போது, **இக்காலம் யான் வருவேன்** என்று சூளுரைத்துப் பின்பு காலம் தாழ்த்தி வருதல் பற்றியும் அதுவரையில் தலைவி தன் பிரிவுக்காலத் தனிமைத்துயரில் இருக்கும் நிலையினையும் புலவர்கள் பாடல்களின்வழி புலப்படுத்தியுள்ளனர்.

அகப்பாடல்களில் காணலாகும் ஆறு பிரிவுகளில் தலைவன், தலைவியின் மனநிலைகள், பிரிவுச் சூழல்கள், பிரிவுகளின் பின்புலம், இயற்கைப் பின்னணி, பறவைகள், விலங்குகள் சொல்லும் செய்திகள் தலைவியை ஆற்றும் தோழியின்

கூற்றுக்கள் ஆகியவற்றின் வாயிலாக அகப்பாடல்கள் காட்டும் வாழ்வியல் நிலைகளை ஆராய்வதாக இந்த ஆய்வு அமைகிறது.

**ஆய்வுப் பொருள் :**

சங்க இலக்கியப் பின்னணியில் அகத்திணைப் பிரிவுகள் - தலைவன் தலைவியர் பிரிவுகள் - சங்க இலக்கிய அகநூல்கள் காட்டும் தலைவன் தலைவியர் பிரிவை இப்பொருள் மையப்படுத்துகிறது.

**ஆய்வு எல்லை :**

சங்க இலக்கியத்தில் காணலாகும் அக நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை ஆகியனவும் இவ்வாய்வுக்குத் தொடர்பான பிற ஆய்வுரைகள், கட்டுரைகள், நூல்கள், படைப்புகள் போன்றவை துணையன்களாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வு நோக்கம் :**

சங்க கால மக்களின் அகவாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு அமைகின்ற மகிழ்ச்சியான வாழ்க்கையில் நிகழும் இன்றியமையா பிரிவுகளின் போது தலைவன், தலைவியரிடையே காணலாகும் மனநிலைகளை சங்க அக இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. அப்புலப்பாட்டுக்கு இலக்கியப் புலவர்கள் பல உத்திகளையும், பின்னணிகளையும் கையாண்டு இலக்கிய நயப்படுத்தியுள்ளனர். அகமாந்தர்தம் மனநிலைகளையும், புலவர்களின் புலப்பாட்டு முறைமைகளையும் வெளிக்கொணர்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**கருதுகோள் :**

சங்க அகப்பாடல்கள் காட்டும் தலைவன் தலைவியரின் கோட்பாடுகள் பிரிவிற்குரியோர் பற்றிய செய்திகள் பிரிவிற்கான காரணங்கள் தலைவன், தலைவியர் மனநிலை, தலைவியின் தனிமைத்துயர், உளவியல் பாங்கு,

பிரிவிற்கான நோக்கம் ஆகியவற்றிலிருந்து அன்றைய தலைவன் தலைவியரின் பிரிவு வாழ்க்கையை ஆய்வதே கருதுகோளாகும்.

**ஆய்வு அணுகுமுறை :**

விளக்கமுறை ஆய்வு, பகுப்புமுறை ஆய்வு, தொகுப்புமுறை ஆய்வு என்ற மூன்று ஆய்வு அணுகுமுறைகளைப் பின்பற்றி இவ்வாய்வேடு அமைகிறது.

**ஆய்வுப் பகுப்பு முறை :**

முன்னுரை, முடிவுரை நீங்கலாக இவ்வாய்வேடு ஐந்து இயல்களை கொண்டு அமைகிறது. அவை,

***இயல் - 1 அகத்திணை தலைவன் தலைவியின் பிரிவுகள்***

***இயல் - 2 பொருள்வயிற்பிரிவு***

***இயல் - 3 பரத்தையர்பிரிவு***

***இயல் - 4 ஓதல் - தூது - போர் - நாடுகாவல் பிரிவுகள்***

***இயல் - 5 பிரிவுப் பாடல்களும் பின்புலங்களும்***

என்பனவாம்.

**[அகத்திணை தலைவன் தலைவியர் பிரிவுகள்** என்ற முதல் இயலில் சங்க இலக்கியத்தில் அகத்திணைப் பிரிவுகள் என்பதன் விளக்கம், பிரிவுகளின் வரையறை, அகத்திணையியலில் திணைகள், தலைமக்கள் இயல்புகள், பிரிவுக்குரியோர், பிரிவுக்காலம், கூற்றுக்கள், இலக்கணங்களின்வழி வைப்பு முறை, சங்க அக இலக்கியங்களில் தலைவன் களவு, கற்பு என்ற இரு கோட்பாடுகளில் தலைவியைப் பிரிந்து வாழும் வாழ்க்கைமுறை, பிரிவுத் துன்பம், சங்க அகக்காதல் பாடல்களுக்கான பிரிவுகளின் மரபை புலவர்கள் எடுத்துரைக்கும் விதம் பற்றி விளக்குவதாக இவ்வியல் அமைகிறது.

**பொருள்வயிற்பிரிவு** என்ற இரண்டாம் இயலில் இப்பிரிவின் விளக்கம், வகைகள், இப்பிரிவிற்கான காரணங்கள், சூழல்கள் மற்றும் அகப்பாடல்களில் பெரிதும் சுட்டப்பெறும் பிரிவு பொருள்வயின்பிரிவு. இப்பிரிவின் விளக்கம்,

வகைகள், இப்பிரிவிற்கான காரணங்கள், சூழல்கள் மற்றும் அகப்பாடல்களில் புலவர்கள் பொருள்வயின்பிரிவைப் பற்றி கூறிய பொருள் கடைக் கூட்டிய நெஞ்சு, பொருள் முற்றி மறுத்தராநின்றான், பொருள் வலித்த நெஞ்சு, பொருள் வலிக்கப்பட்டுப் பிரிந்த தலைமகன், பொருள் முற்றி வந்த தலைமகன் என்ற பல்வேறு கோணங்களில் இப்பிரிவைப் பற்றி கூறிய முறைமைகள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. களவு மற்றும் கற்புக் காலங்களில் பிரிவுகள் அமைந்த விதம் பற்றியும் இவ்வியலில் எடுத்துரைக்கின்றது.

**பரத்தையர்பிரிவு** என்னும் மூன்றாம் இயலில் காரணங்கள், சங்க காலத்தில் பரத்தையர் பற்றிய வகைப்பாடுகள், தலைவனோடு பரத்தையர் வாழ்ந்த வாழ்க்கைப் பற்றி ஆராய்கிறது. தலைவியை துன்பத்தில் விட்டுப் பரத்தையருடன் இன்பந்துய்த்து பின்பு தலைவியின் அன்பைப் பெறும் பொருட்டு இரந்து வாயில் வேண்டி நிற்கும் சூழல்கள், தலைவனுக்கு வாயிலாகச் செயல்படும் மாந்தர்கள் என இப்பிரிவில் சுட்டப்பெறும் அனைத்து செய்திகளும் இவ்வியலில் எடுத்துரைக்கப்படுகிறது.

**ஓதல் – தூது – போர் – நாடுகாவல் பிரிவுகள்** என்னும் நான்காம் இயலில் இந்நான்கு பிரிவுகளின் விளக்கம், காலவரையறை, சங்க அகப்பாடல்களில் இப்பிரிவுகளை வைத்து பாக்களை புனைந்த புலவர்களின் திறம் அகவாழ்க்கையில் (வாழ்வுகளில்) இப்பிரிவுகளில் தலைவன் தலைவியுடன் வாழ்ந்தவிதம் பற்றி இவ்வியல் ஆராய்கிறது.

**பிரிவுப் பாடல்களும் பின்புலங்களும்** என்னும் ஐந்தாம் இயலில் தலைவன் தலைவியுடன் பிரிவைப் புலப்படுத்திப் பாடும் பாடல்களில் புலவர்கள் பல்வேறு பின்புல உத்திகளைக் கையாண்டுள்ளனர். இயற்கைப் பின்புலத்தில் பறவைகள், விலங்குகள், தாவரங்கள் ஆகியன பற்றிய செய்திகள் விரிவாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இடைச்சுரத்து நின்று கலங்கிய உள்ளத்தின் நினைவுகள், செலவழுங்கி தலைவியிடம் மீண்டுவந்த நிலை,

வினைமுடித்துப் பாகனுடன் கூறிய கூற்றுக்களின் விதம் பற்றி இவ்வியல் விரிவாக ஆராய்கிறது.)

**முடிவுரை :**

ஆய்வேட்டில் கண்டறிந்த முடிவுகள் முடிவுரையில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

**துணைநூற் பட்டியல் :**

ஆய்வேட்டிற்கு உதவிய நூல்கள், ஆய்வேடுகள் போன்றவை அகர வரிசைப்படுத்தப்பட்டு தரப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு :**

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சங்க இலக்கிய பிரிவு பற்றிய அட்டவணைகள் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

# முன்னுரை

தொல்காப்பியர் சுட்டும் அகத்திணைப் பிரிவுகளுள் மிக முக்கியமாகக் கருதப்படுவது தலைவன் தலைவியர் பிரிவுகளாகும். இப்பிரிவைப் பற்றி தொல்காப்பியர் கூறிச் சென்றார் எனினும் அவ்விலக்கண நூலுக்கு உரையாற்றிய நச்சர், இளம்பூரணர் உள்ளிட்ட உரைகாரர்கள் அதற்குத் தங்களது விளக்கத்தைப் பதிவு செய்தனர். திணை ஒழுகலாறுகளைக் கூற வந்த உரைகாரர்கள் தொல்காப்பியரைப் போன்றே அகத்திற்கும் புறத்திற்கும் விளக்கம் நல்கினர். தலைமக்களை முன்னிறுத்தி அன்பின் ஐந்திணைகளை ஐயம் திரிபரத் தமிழ் கூற நல்லுலகத்திற்கு விளக்கினர். ஐந்து நிலங்களைப் பகுத்த தொல்காப்பியர் அந்த நிலப் பின்னணியின் சூழலைக் கொண்டு அகத்திணைத் பிரிவுகளை உணர்த்தினார். தலைவன் தலைவியரின் வாழ்க்கையின் இருபெரும் பிரிவுகளான களவு கற்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் இவ்விரு பிரிவின்போதும் நிகழும் தலைவன், தலைவியரின் கூற்றுக்களின் அடிப்படையிலும் இப்பிரிவுகளை விளக்க முற்பட்டார் தொல்காப்பியர். அவர்தம் பதிவு செய்த கருத்தின் வழியே உரையாசிரியர்கள் தலை நின்றனர். தொல்காப்பியர் கூறும் களவு வழி பிரிவுகள் ஆறு நிலைகளில் அமைகின்றன. கற்புவழி பிரிவுகள் ஏழு நிலைகளில் அமைகின்றன. கடைசிப் பிரிவான பரத்தையர் பிரிவு கேள்விக்குரியதாக அமைகிறது. பிரிவு பற்றி கூறிய தொல்காப்பியர் அதற்கான கால வரையறையும், பிரிவுக்குரியோரையும், கூறியிருப்பது அகத்தின் பால் அவருக்கே உரிய நுண்மான் நுழைபுலத்தையும், களவு, கற்பு வாழ்வின் உளவியல் அறிவையும் காட்டுவதாக அமைகிறது. கூற்று வழி அறியலாகும் பிரிவுகளைப் பற்றியும் கூற்று நிகழ்த்துவோர் பாட்டியலையும் தொல்காப்பியர் சுட்டியிருப்பது அவர்தம் கரைகாண அறிவைப் புலப்படுத்துகிறது. பிரிவினால் ஏற்படும் துன்பத்தையும், துன்பப்படுவோரின் மனநிலையையும், இவ்உளவியலாளர் சுட்டியிருப்பதும் மனங்கொள்ளத் தக்கது. சுட்டப்பட்ட அனைத்தையும் இவ்வியல் பட்டியலுடன் விளக்க விழைகிறது.

# இயல் - ஒன்று

# அகத்திணை தலைவன் தலைவியின் பிரிவுகள்

*1.0. முன்னுரை*

*1.1. நச்சர் கருத்து*

*1.2. அகம் - விளக்கம்*

*1.3. தொல்காப்பிய அகவிளக்கம்*

*1.4. அகத்திணை*

*1.4.1. அகம் - மனம் - வெளிப்பாடு*

*1.5. புறம்*

*1.6. தலைமக்கள்*

*1.7. அன்பின் ஐந்திணைகள்*

*1.7.1. குறிஞ்சி நிலம்*

*1.7.2. பாலை நிலம்*

*1.7.3. முல்லை நிலம்*

*1.7.4. மருத நிலம்*

*1.7.5. நெய்தல் நிலம்*

*1.7.6. கைக்கிளை, பெருந்திணை ஒழுக்கங்கள்*

*1.8. கூற்று என்பதன் விளக்கம்*

*1.8.1. களவியல்*

*1.8.2. தொல்காப்பியர் தரும் களவுக்கான விளக்கம்*

*1.8.2.1.களவின்கண் தலைவன் தலைவி கூற்று*

*1.8.2.2. இயற்கைப் புணர்ச்சியில் தலைவன் தலைவி கூற்று*

*1.8.2.2.1. திருமணத்திற்கு முன் நிகழும் தலைவன் தலைவி கூற்று*

*1.9.* கற்பியல்

*1.9.1.* கற்பு - தொல்காப்பியர் தரும் விளக்கம்

*1.9.2.* திருமணம் முடிந்த (கற்பு வாழ்வில்) தலைவன் தலைவி கூற்று

*1.10.* தொல்காப்பியர் கூறும் களவுப் பிரிவுகள்

*1.10.1.* பிரிந்தவன் இரங்கல்

*1.10.2.* கலந்தபொழுது - காட்சி

*1.10.3.* அகற்சி

*1.10.4.* கொண்டுதலைக்கழிதல்

*1.10.5.* கலந்தபொழுது - காட்சி

*1.10.6.* வரைவிடைப் பிரிவு

*1.11.* கற்புப் பிரிவுகள்

*1.11.1.* அன்பு பாராட்டிக் கூறுதல்

*1.11.2.* வற்புறுத்திப் பிரிதல்

*1.11.3.* ஓதற்பிரிவு

*1.11.4.* தூதுப்பிரிவு

*1.11.5.* நாடுகாவல் பிரிவு - பொருள்வயிற் பிரிவு

*1.11.6.* பகைவயிற் பிரிவு

*1.11.7.* பரத்தையிற் பிரிவு

*1.11.8.* பிரிவுகளின் கால வரையறை

*1.11.9.* பிரிவுக்குரியோர்

*1.12.* ஐந்திணைகளில் பொது நிலையில் கூற்றுக்கள்

*1.12.1.* கூற்றுகள்

*1.12.2.* தலைவனும் தலைவியும் - நெஞ்சுக்குக் கூறும் கூற்றுகள்

*1.12.3.* மிகுதியானவை

*1.12.4.* நெஞ்சுக்குக் கூறுவோர்கள்

*1.12.5.* தலைவி கூற்று

*1.12.6.* தோழி கூற்று

*1.12.7.* தலைவியின் பிரிந்த வாழ்க்கை நிலை

*1.12.8.* தலைவனின் பிரிவு வாழ்வு

*1.12.9.* பிரிவுத் துன்பம்

*1.12.10.* தலைவியின் பிரிவுத் துயர்

*1.12.11.* பரத்தைப் பிரிவின் காரணமாக ஏற்படும் தலைவியின் மனநிலை

*1.12.12.* தலைவனின் பிரிவுத் துன்பம்

*1.12.13.* பிரிவு

*1.13.* தொகுப்புரை

# இயல் - ஒன்று

# அகத்திணை தலைவன் தலைவியரின் பிரிவுகள்

## 1.O. முன்னுரை

தொல்காப்பியம் தமிழில் கிடைத்துள்ள இலக்கண நூல்களில் தொன்மையானது. தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், என்னும் இரு பிரிவுகள் தமிழ் மொழியின் இலக்கணத்தை விரிவாகக் கூற அதன் பொருளதிகாரம் என்ற மூன்றாம் பிரிவு பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்துகின்றது. பொருளதிகாரம் என்ற பெயருக்கேற்ப வாழ்வின் பொருளை எடுத்துக் கூறுவது. வாழும் வாழ்க்கைக்கு என இலக்கணம் வகுத்தவர்கள் தமிழர்கள். முதல் உரையாசிரியரான இளம்பூரணர்,

"பொருள் என்பது யாதோ எனின் மேற்கொள்ளப்பட்ட சொல்லின் உணரப்பட்டவை. அது முதல், கரு, உரிப்பொருள் என மூவகைப்படும்" "உரிப்பொருளாவது மக்கட்கு உரிய பொருள். அஃது அகம், புறம் என இருவகைப்படும். அகமாவது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் அகத்திணை பிரிவுகள் எனவும் கைக்கிளை பெருந்திணை எனவும் ஏழுவகைப்படும். புறமாவது நிரைகோடற் பகுதியும் பகைவயிற் சேறலும், அயில் வளைத்தலும் இருபெரு வேந்தர்களும் ஒருகளத்துப் பொருதலும் வென்றிவகையும் நிலையாமை வகையும் புகழ்ச்சி வகையும் என ஏழு வகைப்படும். அஃதேல் புறப்பொருளை உரிப்பொருள் என ஓதிற்றிலரால் எனின் என விளக்கம் தருகிறார்."[1]

ஏனைய மொழிகள் அனைத்திலும் எழுத்து, சொல் ஆகியவற்றொடு நின்றுவிட தமிழ்மொழி மட்டும் வாழ்விற்கும் இலக்கணம் அமைத்துக் கொடுத்துள்ளது தமிழனின் சிறப்பைக் காட்டுவதாக அமைகிறது. மக்கள் வாழ்வதற்குரிய வாழ்வியல் நெறியான இல்லற நெறியை எடுத்துரைக்கின்றது. சங்க கால மக்களின் வாழ்வியல், உளவியல் உள்ளிட்ட அனைத்தையும் கூறுவது சங்க இலக்கியம் ஆகும்.

### 1.1. நச்சர் கருத்து

***பொருளாவன :- அறம் பொருளின்பமும் அவற்றின் நிலையின்மையும் அவற்றின் நீங்கிய வீடுபேறுமாம். பொருளெனப் பொதுப்படக் கூறவே அவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியும் காட்சிப் பொருளும் கருத்துப் பொருளும் அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும் பூதமும் அவற்றின் பகுதியாகிய இயங்குதிணையும், நிலைத்திணையும் பிறவும் பொருளாம் எனவும் அகத்திணைக்கண் இன்பமும் புறத்திணைக் கண் ஒழிந்த மூன்று பொருளும் உணர்த்துப. இது வழக்கு நூலாதலிற் பெரும்பான்மையும் நால்வகை வருணத்தார்க்கும் உரிய இல்லறம் உணர்த்திப் பின் துறவறமுஞ் சிறுபான்மை கூறுவன. பிரிதல் நிமித்தங் கூறவே இன்ப நிலையின்மையுங் கூறிக் காமஞ்சான்ற எனும் கற்பியற் சூத்திரத்தான் கூறவறமுங் கூறினார்[2]***

*எனவும் நச்சினார்க்கினியர் வடமரபுவழி நின்று பொருளதிகாரத்தின் பாடுபொருளை விளக்கியுள்ளார். (சங்க பாக்களை அகம், புறம் என்ற இருபெரும் பிரிவுகளுக்குள் அடக்கிவிடலாம்)*

### 1.2. அகம் – விளக்கம்

*அகம் என்பது உள்ளத்தில் எழும் உணர்ச்சி, உய்த்துணர்ந்தவாறே கூற இயலாத தன்மை கொண்டது. இளமைப் பருவத்திலே தலைவன் தலைவியர் துய்க்கும் காதல் ஒழுக்கமே "அகத்திணை" எனச் சுட்டப்படுகிறது. தலைவன் தலைவியின் காதல் மனநிலையும் அவ்வுணர்ச்சிக்குத் துணை நிற்கும் பிற அகமாந்தர்களின் மன உணர்வுகளுமே தொல்காப்பியத்தின் அகத்திணை தொடர்பான இயல்களிலும் சங்க அக இலக்கியங்களிலும் பாடுபொருளாக அமைந்து இருப்பதைக் காணலாம். அகம் இன்ப ஒழுக்கம் பற்றிக் கூறும் இயல். உள்ளத்தில் எழுகின்ற பேரவா உடல் வழிப் படர்ந்து உள்ளத்தைக் குளிரச் செய்வதால் உள்ளம் என்பதனோடு தொடர்புபட அதனை "அகம்" என்றனர். அதன் பிறகு இன்பத்திற்கு அடிப்படை உடல் மட்டுமன்று, உள்ளமும் என எண்ணுவரை அகம் என்ற சொல்லாட்சி உணர்த்துகின்றது.*

உள்ளத்தை அகம் என்று குறித்தனர். ஆனால் **அஃது உடல் இன்பம் மட்டும் அன்று, உள்ள இன்பம் மட்டும் அன்று. உயிர் இன்பம், உள்ளமும் உடலும் இரண்டுறவும் கலந்த இன்பச் செல்வமே அகம் ஆகும்.**

பிறர் நெஞ்சு புகாக் கற்பு என்பர் முன்னோர். இக்குறிப்புகள் அனைத்தும் காதல் செயலுக்கு உள்ளமே காரணம் என்பதைப் பறை சாற்றும். இக்காரணம் கொண்டே அற்றைத் தமிழ்ச் சான்றோர் காதல் பற்றிய இயலை "அகம்" என்று போற்றினர்.

அகத்திணை என்பது ஒத்த அன்புடைய தலைவன் தலைவி இருவரும் இணைந்த அன்பு வாழ்க்கை. இதையே அக ஒழுக்கம் என்றனர். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பன அக ஒழுக்கத்திற்குரிய திணைகளாகும். இவை, "ஐந்திணை என்பது அன்புடைக் காமம் என்பர். உள்ளத்தால் மட்டுமே உணர்ந்து அனுபவிக்கத்தக்க இல் வாழ்க்கை அக வாழ்க்கையாகும்.

**1.3. தொல்காப்பிய அக விளக்கம்**

**ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்து பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தில் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்கும் புலனாகா இவ்வாறிருந்ததெனக் கூறப்பட்டதாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்த இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை "அகம்" என்றார்.**[3] எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்று ஓர் ஆகுபெயராகும் என்று தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரை தெளிவுப்படுத்துகின்றது. **இதனையே தொல்காப்பிய இளம்பூரணர் உரையில் அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலின் அதனால் ஆய பயன் தானே அறிதலின் அகம் என்றார்.**[4] அகம் என்ற சொல்லிற்கு உள்,மார்பு, மனம், ஞானம், பாவம், வீடு, நிலம், மருதம், மலை, உடல், உயிர் ஆகிய பொருள்களை அகராதி தருகின்றது. அகத்திணைப் பொருளான காமமோ, ஆண், பெண் என்னும் பால்வாய்ந்த உயர்திணை, அஃறிணை உயிர்க் களுக்கெல்லாம் பொதுவானதாகும்.

எல்லா உயிர்க்கும் இன்பமென்பது

தானமர்ந்து வரும் மேவற்றாகும்[5]

என்கிறது தொல்காப்பியம்.

## 1.4. அகத்திணை

அகத்திணைக்கு அடிப்படைக் காரணாக அமைவது காம உணர்வு என்பதை, உடம்போடு ஒட்டிய இயற்கைத்து ஆதலின் உயிர்கள் பிறந்ததற்கும், பிறப்பிப்பதற்கும் அடிப்படையான இன்ப உணர்வை உலகின் மருங்கு ஆறாது வழிமுறை காக்கும் காமத்துடிப்பைப் பொருளாகக் கொண்ட தலைமையுணர்வாகும். அகத்திணைக்கு உள்ளப்புணர்வு உயிர்நாடி என்பதை,

காம வாழ்க்கையில் காதலன் காதலி தம்

உள்ளப் புணர்வே அகத்திணையின் உயிர்நாடி[6]

என்று ஏ.கே.அழகம்மை குறிப்பிடுகின்றார்.

அகத்திணைத் தொடரில் அகம் என்ற சொல்லிற்கு இயல்பான பொருள் வீடு என்பதாகும். வீடு என்ற சொல்லிற்கும் குறியீட்டுப் பொருள் கொண்டதனைச் சங்கத்தார் தாம் எண்ணிய அன்பின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிக் கூற ஒரு சொல்லைக் கண்டுபிடித்து ஆராய்ந்தனர். எல்லா உயிர்களுக்கும் பொதுவான காமம், அக ஒழுக்கம் அமைவதற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது. காதலன், காதலி, உள்ளப்புணர்வு வெளிப்படுத்த முடிவதில்லை. இக்காரணத்தால் அகவொழுக்கம் என்று பெயர் வந்தது.

ஒருவனும் ஒருத்தியும் கண்டு விழைந்து கூடி இல்வாழ்க்கை ஏற்று வாழும் ஒழுகலாறு அகப்பொருளாக அமைகிறது. ஊரறிய வாழாத தலைவன், தலைவியரின் வாழ்வுக் கூறுகளைக் களவொழுக்கம் எனவும், மணமான பின்னர்படும் கூறுகளைக் கற்பொழுக்கம் எனவும் பண்டு தொட்டு வழங்கி வந்ததாகத் தெரிகிறது. தொல்காப்பியமும், சங்க இலக்கிய அகப்பாடல்களும், வள்ளுவரின் காமத்துப்பாலும் அகத்திணைக் கோட்பாடுகளைத் தெளிவுபடுத்தும் அரிய மூலமுதல் நூல்களாகும்.

அகம் என்பது உள்ளத்தின்கண் நிகழ்வது வெளிக்குத் தோன்றாது. அது பலவகையாய் ஆயினும் உணர்வுப் பூர்வமாகத் தெரிந்து கொள்ளுவதல்லாது வெளிக்கு எடுத்துரைக்க முடியாது. அது மனத்தால் உணரும் மாண்புடையது. ஆகவே, காதலுணர்வு எனப்படும் "பருவம் வாய்ந்த ஆடவர், பெண்டிர் அகத்தே பூத்து மலரும் பாற்புடைது." இதனை அகம் என்றார் ஆன்றோர்.[7]

**"அகமெனப்படுவது வகையொடு மூன்றனுள்**

**இன்ப மென்னு மியல் பிற்றாதி**

**அகத்துநிக மொழுக்க மாதல் வேண்டும்"[8]**

அகம் என்பது புறத்தார்க்கு உரைக்கப்படாத காதல், திணையென்பது ஒழுக்கம், மணமொத்த இரு எதிர் பாலர்களின் உள்ளத்து உணர்வான காதலொழுக்கமே அகத்திணை எனப்படும். அது பண்டைத்தமிழ் மக்களால் மூவகையாகப் பகுக்கப்பட்டது. அவை ஒருபாற்காதல், ஒத்தகாதல், ஒவ்வாக்காதல் என்ற முத்திறச் சார்பாய ஒழுக்கங்களாகும். ஒத்த காதல் ஐந்து பகுதியாகப் பகுக்கப்பெறுதலின் ஒத்த காதலொழுக்கம் ஐந்திணை என வழங்கப்படுகிறது.

### 1.4.1. அகம் – மனம் – வெளிப்பாடு

எல்லா உயிரினத்திற்கும் இன்பம் என்பது முதன்மையானது. அதைப்போல உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் தங்கள் இனத்தைப் பெருக்கிக் கொள்வதும் அடிப்படையான செயலாகத் திகழ்கின்றது. உயிரினங்கள் இனவிருத்திக்குத் தத்தம் இனத்தின் எதிர்பாலினத்தைக் கவர்தல் முக்கிய நிகழ்வாகச் செயல்படுகின்றது. ஆண் இனம் பெண்ணையும் - பெண்ணினம் ஆணையும் கூர்தல் என்பது இயல்பாக நடைபெறும் செயலாகும். இது அனைத்து உயிர்களுக்கும் பொதுவான ஒன்றாகும்.

அகம் - அகவுணர்ச்சியை போக நுகர்ச்சி, இன்ப நுகர்ச்சி, பேரின்பம், காதல் உணர்வு, இன்பம், உள்ளத்துணர்வு என்று பலவிதமாக இலக்கண உரையாசிரியர்கள், ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். தொல்காப்பியத்தை

முதன்மை நூலாகக் கொண்டு வழி நூலாகப் பல்வேறு காலகட்டத்தில் தோன்றிய இறையனார் அகப்பொருள் (7நூ), வீரசோழியம் (13நூ), நம்பியகப்பொருள் (13நூ), தமிழ்நெறி விளக்கம் (17நூ), மாறனகப் பொருள் (16நூ), இலக்கண விளக்கம் (17நூ), தொன்னூல் விளக்கம் (18நூ), அறுவகை இலக்கணம் ((19நூ), சுவாமிநாதம் (19நூ), முத்துவீரியம் (19நூ) ஆகிய இலக்கண நூல்கள் அகம் என்பதற்கு வெவ்வேறு பொருளைத் தராமல் அவை, ஆண், பெண் இரு பாலினத்தவரின் மனத்தில் (அ) உள்ளத்தில் எழுகின்ற காதல் உணர்வுகளும் அவ்வுணர்வு தொடர்பாக நிகழ்கின்ற வெளிப்பாடுகள் அனைத்தும் அகம் என்ற பொருளில் குறிப்பிடப்படுவதைக் காணமுடிகிறது.

### 1.5. புறம்

புறம் என்ற சொல்லிற்கு அந்நியம், புறத்திணை, வீரம், பக்கம், முதுகு, பின்புறம், இடம், இறையிலி, நிலம் போன்ற பல பொருள்கள் உள்ளன. புற ஒழுக்கம் என்பது நாட்டு வாழ்க்கை, அறம், பொருள், இன்பம் என்ற இலக்கிய வகைப்பாடு தொல்காப்பியத்தில் கூறப்பட்டாலும் திருக்குறள் காலத்தில் இருந்துதான் செயல்பாட்டுக்கு வருகிறது. புறத்தின் வாயிலாகவே மக்களது வாழ்க்கையின் பல்வேறு கூறுகள் தெரியவருகின்றன. வீரம், தறுகண், கொடை, கல்வி, பண்பாடு, பழக்கவழக்கம், ஆன்மீகம், ஏற்றத்தாழ்வு உள்ளிட்ட பல கூறுகள் புறத்தில் அடங்கி உள்ளன. மேலும் சமூகத்திற்குத் தெரிய வேண்டிய ஒழுகலாறுகள் அனைத்தும் புறத்தை அடியொற்றியே எழுந்து உள்ளன.

அகத்திணைகள் ஏழு இருப்பதைப் போன்றே புறத்திணைகளும் உள்ளன. வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகள் அதனை ஒட்டி எழுந்து பல்வேறு துறைகள் என அனைத்தும் புறத்திணைக்கு உரியன. சங்க மக்களின் அக வாழ்க்கையை அகத்திணைகள் ஏழும் உணர்த்தியதுபோல், அவர்கள்தம் புற வாழ்க்கையையும் ஏழு திணைகள் உணர்த்தி நிற்கின்றன. சிறுவர் முதல் பெரியோர் வரை அகத்திணைப் பாடல்கள் அமைந்ததைப் போல் புறத்திணை

என்பதிலும் அமைந்து இருப்பது குறிக்கப்படவேண்டிய ஒன்று. புலவர் மட்டுமின்றி புரவலர்களும் கவிதை பாடிய சிறப்புக்குரியது புற இலக்கியங்கள்.

### 1.6. தலைமக்கள்

தலைமக்களாக அகத்திணையியலில் கருதப்படுபவர்கள் தலைவனும் தலைவியும் ஆவர். இவ்விருவரது இயல்புகளும் களவு, கற்பு ஆகிய இரண்டிலும் மாறி வருவது கண் கூடாகும். மேலும் களவு காலத்தினுடைய இயல்புகள் பலவும் கற்புக் காலத்தில் மாறி விடுவதும் உண்டு. களவொழுக்கத்தின் இயல்பானது,

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்

காமக்கூட்டம் காணுங் காலை

மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்

துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே[9]

எனத் தொல்காப்பியரால் பொது நிலையில் கூறப்படுகிறது. இதற்கு இளம்பூரணர் இன்பமும் பொருளும் அறனும் என்று சொல்லப்பட்டு, அன்பொடு புணர்ந்த நடுவண் ஐந்திணையிடத்து நிகழும் காமக்கூட்டத்தினை ஆராயும்போது அன்பொடு புணர்ந்த ஐந்திணை என்றதனால் கைக்கிளை, பெருந்திணையை ஒழித்து நின்ற முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் எனக் கொள்ளப்படும். அவை அன்பொடு புணர்ந்தவாறு என்பது கைக்கிளை, பெருந்திணையைப் போலமையாது, **ஒத்த அன்பினராகிப் புணர்தலும், பிரிதலும், இரங்கலும், இருத்தலும், ஊடலும் நிகழ்த்துப. ஆனாலும், அவை நிகழுங்கால் அத்திணைக்கு உறுப்பாகிய இடமும் காலமும் கருபொருளும் துணையாகி நிகழுமாகலானும் இவை அன்பொடு புணர்ந்தன என்க.**[10]

அகத்தின் அடிப்படையான **“சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்”**[11] என்னும் நூற்பா அனைத்து நில மக்களுக்கும் பொருந்தும்.

மேலும் ஐந்திணை மருங்கின் காமக்கூட்டம் என்பது ஐவகை நிலத்திற்குரிய உரிப்பொருளாகிய புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகியனவும் ஐவகை நிலத்தின் காலமும் கருப்பொருளும் களவு, கற்பு என்ற இரண்டுக்கும் பொருந்தி வருவதால் இருவகைப்படும். அவற்றுள் புணர்ச்சி இருவகையின் களவாகிய காமக்கூட்டத்திற்கு ஆகி வரும் என்பது பொது இயல்பு.

## 1.7. அன்பின் ஐந்திணைகள்

தலைமக்கள் இருப்பிடத்தை உரிப்பொருளை ஐந்தாகப் பிரித்து திணை வகுத்துள்ளார் தொல்காப்பியர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனலாம். இவை ஒன்றன்பின் ஒன்றாகச் சுட்டப்படுகின்றன.

### 1.7.1. குறிஞ்சி நிலம்

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலம். இங்கு தலைவன் தலைவி இருவரும் சந்தித்து கருத்திலே ஒன்றுபடுவர். இதற்குக் குறிஞ்சியொழுக்கம் (அ) குறிஞ்சித்திணை என்று பெயர். இவர்கள் வெளிப்படையாக மணம்புரிந்து கொள்ளும் வரையிலும் அடிக்கடி சந்திப்பார்கள். அவர்கள் இரவிலும் பகலிலும் குறித்த இடத்திலே கூடுவார்கள். ஆண் குரங்குகள் வெடித்த பலாவின் சுளைகளைக் கடித்து மந்திகளுக்கு ஊட்டும், களிறு மூங்கிலை ஒடித்து தன் இணைக்கும் கொடுக்கும், இத்தகைய குறிஞ்சி நிலம் பசுமை நிறத்தால், நறுமணத்தால், வண்பொலியால் ஐம்புலன்கட்கும் இன்பம் அளிக்க வல்லதாய் அமைந்துள்ள நிலை தலைவன் தலைவியின் சந்திப்புக்கு ஏற்றதாகும். தொல்காப்பியர் குறிஞ்சியின் பெரும்பொழுது, சிறுபொழுது பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

> ". . . . . . . . . . . குறிஞ்சி
> கூதிர் யாமம் என்மனார் புலவர்"[12]
> . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
> "பனிஎதிர் பருவமும் உரித்தான மொழிப"[13]

குறிஞ்சிக்குரிய பெரும்பொழுது பின்பனிக்காலம், சிறுபொழுது யாமம். இப்பொழுதுகளைப் புணர்ச்சிக்குரிய காலமாகக் கருதுவர். ஆக, காலச்சூழல், இடச்சூழல், நிலஅமைப்பு அனைத்தும் அகவுணர்வில் இடம்பெறுகின்றன.

### 1.7.2. பாலை நிலம்

பாலை என்பது தனி நிலம் அன்று. நிலம் வகுத்துரைக்கப்படாத பாலைத் திணைக்கும் காலமே முதற்பொருளாக உள்ளது. தலைவன் தன் தலைவியை மணப்பதற்கு முன்போ (அ) மணந்த பின்போ பொருள் தேடும் பொருட்டு பிரிந்து போவான் இதுவே பாலை ஒழுக்கமாகும். பாலை எனில் வறட்சி. அகத்திணையியலில் பாலை என்ற சொல்லைத் தொல்காப்பியர் எங்கும் ஆளவில்லை. மாறாக அகத்திணையியலில் தொல்காப்பியர் பாலைத் திணையைக் குறிப்பிடக் கையாண்டுள்ள கலைச்சொற்கள் நடுவணது, நடுவு நிலைத்திணை என்பன ஆகும். திணைக் கோட்பாட்டில் பாலைக்கு நிலம் இல்லை என்றாலும் இலக்கிய வழக்கில் நிலம் உண்டு.

"வேனிலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
காலைந் திருகத் தன்மையிற் இன்றி
முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் திரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுய ருற்று
பாலை என்பதோர் படிவங் கொள்ளும்"[14]

எனச் சிலப்பதிகாரம் கோடை வெப்பத்தால் குறிஞ்சியும் முல்லையும் இயல்பான தம் வளத்தை இழந்து வறண்ட நிலப்பகுதியாக மாற்றம் அடைந்துவிடும் என்று குறிப்பிடுகின்றது. இப்பாலை நிலத்தில் வெப்பம் மிகுதி. மரங்கள் காய்ந்து கரிந்து நிற்கும். வெஞ்சுரமாகக் காட்சியளிக்கும். மழை இல்லாத கொடிய பாலை நிலத்தில் குடிநீரைக் காண இயலாது. இப்பாலை நிலத்தில் கானல்நீர் என்று மயங்கி யானைகள் அதனைப் பருக நினைக்கும். கொழுத்திருந்த யானைகள் நிலத்தை உழும் கலப்பை போல ஊன்றி நிலத்தில்

கிடக்கும். ஆறலைக் கள்வரின் நடமாட்டம் இப்பகுதிகளில் மிகுதி. வழிப்பறி செய்தல் இவர்களது தொழில்.

**நடுவு நிலைத் திணையே நண்பகல் வேணிலொடு**

**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே** [15]

என்கிறது தொல்காப்பியம். அதாவது பாலைக்குரிய பெரும்பொழுது இளவேனிலும் முதுவேனிலுமாகும். சிறுபொழுது நண்பகலாகும். இந்நிலத்திற்குப் பின்பனியும் உரித்தாகும்.

### 1.7.3. முல்லை நிலம்

காடும் காடு சார்ந்த இடமும் முல்லையாகும். பிரிந்து சென்ற கணவன் திரும்பும் வரையிலும், அப்படிப் பிரிந்து சென்றதனால் உண்டான துன்பத்தைப் பொறுத்து ஆற்றியிருப்பாள். இதுவே இருத்தல் ஆகும். இதுவே கற்புடைய பெண்ணின் குணமாகும். இத்தகைய நிகழ்ச்சிகளைத் கூறுவதே முல்லைத்திணை (அ) முல்லையொழுக்கம் என்று அழைக்கப்படுகிறது. காடுகள் கார்காலத்தில் மேகங்கள் கருக்கொண்டு ஒலித்துக் குன்றும், காடும் குளிர மழை பெய்யும். நீரும் நிழலும் மலிந்து கிடக்கும். இந்நிலத்தில் மழைபெய்து முல்லை மலர்ந்து அழகிய காட்சியுடன், மான் தன் பிணையுடன் கூடிய பள்ளங்களில் நிற்கும் நீரைப் பருகி இன்புறும். முல்லை நிலத்து ஆயர்கள் காட்டிடத்தே சென்று கன்றுகளை மேய்ந்து மர நிழலில் தங்கியிருந்து குழல்களில் இனிய பாக்களை இசைப்பர். மாலை நேரத்தில் கன்றும், கறவையும் கொண்டு ஆயர்கள் வீட்டிற்குத் திரும்புவர். அவற்றின் கழுத்தில் கட்டியுள்ள மணி அசைந்து அவ்வோசையால் மாலைப்பொழுது தலைவிக்குப் பிரிவுத் துயரத்தை மேலும் அதிகப்படுத்துவதுபோல் அமையும். முல்லைக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுது பற்றித் தொல்காப்பியர்,

**காரும் மாலையும் முல்லை**[16]

என்கிறார்.

### 1.7.4. மருத நிலம்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதமாகும். இந்நிலத்தில் தலைவன் தலைவி இணைந்து நின்று குழந்தைப்பேறு முதலிய செல்வங்களைப் பெற்றுக் குறைவின்றிக் குடும்பம் நடத்துவர். இல்லற தர்மங்களை எல்லாம் இனிது நிறைவேற்றுவர். இந்நிலத்தில் தலைவன் தலைவிக்குள் பிணக்கு ஏற்படும். இதில் பரத்தையர்பால் அன்பு கொண்டு போவது பரத்தையர் பிரிவு எனப்படும். இந்தக் கூடா ஒழுக்கத்தைத் தலைவி கண்டிப்பாள். இவர்களுடைய ஊடல்கள் (பிரிவு) பாணர்களாலும் விருந்தினர்களாலும், புதல்வர்களாலும் நீங்கும். இவை போன்ற நிகழ்ச்சிகளைக் கூறுவது மருதத்திணை (அ) மருத ஒழுக்கம் என்றழைப்பர்.

இந்நிலத்தில் எப்போதும் வற்றாத நீரையுடைய ஆறு, கால்வாய்கள், குளங்கள் அதிகமாகக் காணப்படும். நிலமானது விளைபொருள்களைக் குன்றாது நல்கும் தன்மையுடையது. இங்கு வாழும் ஊர்களில் உள்ள வீடுகளில் முற்றங்களில் கன்றுகள் வரிசையாகக் கட்டப் பெற்றிருக்கும். அவை செங்கழுநீர் மற்றும் நெய்தற் பூக்களைத் தின்னும். வெட்ட வெளியில் மணற் பரப்பில் நெற்கூடு வைக்கப் பெற்றிருக்கும். உழைத்த எருமைகள் மருத மரத்து நிழலில் படுத்து உறங்கும். நெல் அரிபவர்களின் பறையொலி கேட்கும். பறவைகள் கலைந்து பறந்து செல்லும். இத்தகைய வளம் நிறைந்த மருத நிலத்தில் வாழ்பவர்களிடையே பொருட் பெண்டிருடன் கூடும் வழக்கம் இருந்தது. அச்சமயம் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே ஊடல் அதிகமாகும். இந்த ஊடலைத் தீர்ப்பதற்காக வாயில்கள் உதவி புரிவார்கள். தொல்காப்பியர் ஊடல் தீர்க்கும் வாயில்களாக,

> **தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்,**
> **பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,**
> **கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்,**
> **யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப**[17]

எனப் பன்னிரண்டு பேர்களைக் குறிப்பிடுகின்றார்.

கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில், முதுவேனில் ஆகிய ஆறு பெரும் பொழுதுகளும் மருதத்திற்கு உரியவையாகும்.

**வைகறை விடியல் மருதம்**[18]

### 1.7.5. நெய்தல் நிலம்

கடற்கரையும் அதை அடுத்துள்ள பகுதிகளும் நெய்தல் நிலம். மனைவியைப் பிரிந்து சென்ற கணவனை நினைத்து வருந்துவாள். தன் துக்கத்தை வாய்விட்டுக் கூறுவாள். அவன் இன்னும் வரவில்லையே என்று ஏங்குவாள். அவன் பிரிந்து போவதற்கு முன் சொல்லிய உறுதிமொழிகளை எண்ணியும், உரைத்தும், பழித்தும் வருந்துவாள். இவ்வாறு மனைவி தன் வேதனையை வெளிப்படையாகக் காட்டுதல் நெய்தல் ஒழுக்கமாகும். இந்நிகழ்ச்சிகள் அன்பில் நிகழ்வன. இந்நிலத்தில் பல கானற் சோலைகள் இருக்கும். புன்னை, தாழை, ஞாழல், நெய்தல், பனை முதலிய மர வகைகள் அங்குச் செறிந்து காணப்பெறும். நாரை, அன்றில், கொக்கு போன்றவை கடலிலுள்ள மீனைக் கொத்தி உண்ணும். கடல் அலை உயர்ந்து தாழ்தலைத் தலைவி பார்க்கும்போது அவளிடம் இரக்க உணர்வு தோன்றும்.

நெய்தலுக்குரிய சிறுபொழுது எற்பாடு. அந்நேரம் இவ்விரக்க உணர்ச்சியை மிகுதிப்படுத்தக் காட்டும். இதனைத் தொல்காப்பியம்,

**. . . . . . . . . . . . . . எற்பாடு**

**நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்**[19]

என்கிறது. எற்பாடு என்பது பகற்பொழுதின் பின் கூறாகும்.

### 1.7.6. கைக்கிளை, பெருந்திணை ஒழுக்கங்கள்

தொல்காப்பிய அகத்திணையியல் முதல் நூற்பாவில் சுட்டிய ஐந்திணைகளைத் தவிர கைக்கிளை, பெருந்திணை ஆகியனவும் அகப்பொருள் திணைகளாகக் கருதப்பட்டன என்பது தெளிவாகிறது. கைக்கிளைக்கு உரியனவாகத் தொல்காப்பியர் மூன்று செய்திகளைக் குறிப்பிடுகிறார்.

காமஞ்சாலா இளமையோள் உயின்

ஏமம்சாலா இடும்பை எய்தி

நன்மையும் தீமையும் என்று இருதிறத்தால்

தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்

சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்

புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே[20]

*என்ற நூற்பாவின்வழி,*

*1. காமம் சாலா இளமையோன் வயின் ஏமம் சாலா இடும்பை எய்தல்.*

*2. நன்மையும் தீமையும் என்ற இருதிறத்தின் தன்னொடும் அவளோடும் தருக்கியக் கூடல்*

*3. சொல் எதிர் பெறாது சொல்லி இன்புறுதல் என்ற மூன்றினையும் கைக்கிளைக்கு உரியவகையை விளக்கியுள்ளார்.*

பெருந்திணைக்குரியவனாக நான்கு பேசப்படுகின்றன. அவை,

ஏறிய மடல்திறம் இளமைதீர்திறம்

தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்

மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்

செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே[21]

*என இந்நூற்பாவின்வழி,*

*1. ஏறிய மடல்திறம்*

*2. இளமை தீர்திறம்*

*3. தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்*

*4. மிக்க காமத்து வாடல்*

*என்ற நான்கும் பெருந்திணைக்கு உரியனவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கைக்கிளை களவுச் செயல் பெருந்திணை பெரும்பாலானவை கற்புச்*

செயல்களாகும். பெருந்திணையின் முதல் கூறு மடல் ஏறிய தலைவன் தன் நிலை கூறுவது. மடல் ஏறித் தலைவியைப் பெற்ற நிலை மொழிவதாகும். இவ்வொழுக்கங்களும் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் இந்த ஐந்திணை நிகழ்ச்சிகளைப் பற்றியே தொல்காப்பியம் விரிவாகக் கூறுகின்றது. அகப்பொருளைப் பற்றிக் கூறும் நூல்கள் அனைத்தும் ஐந்திணை நிகழ்ச்சிகளையே அழகுபட எடுத்துரைக்கின்றன. ஒத்த பருவம் ஒத்த நிலைமையும் உடைய ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதே காதல் மணமாகும். இத்தகைய மனமொத்த தம்பதிகளுக்குள் நடைபெறும் அக நிகழ்ச்சிகளைப் பற்றியே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைகளும் அமைகின்றன.

இதுகாறும் சுட்டிய அகத்திணை ஒழுகலாறுகளால் சங்க காலத் தலைவன் தலைவியரது வாழ்க்கைமுறை புலப்படுகிறது. ஒரு கட்டுக்குள் அமைந்த கட்டுப்பாடான வாழ்க்கை, நேரம், காலம், சூழல் அதோடு இணைந்து செல்கின்ற தலைவன் தலைவியரது ஒழுக்கங்கள் ஆகியன இவ்விளக்கங்களால் தெரிய வருகின்றன.

### 1.8. கூற்று என்பதன் விளக்கம்

கூற்று எனும் சொல், பேச்சு, உரையாடல், எடுத்துரைப்பு, மொழிதல் என்ற சொற்களால் கருத்து வெளிப்பாட்டு முறை என்ற ஒரு பொருளிலேயே அறிஞர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கூற்றுக்கள் சிறப்பாக அமைய வரையறை கூறியுள்ளார் தொல்காப்பியர். ஒரு கூற்றானது பொருள் பொதிந்ததாய் அமைக்கப்பட வேண்டும்.

மரபுநிலை திரியா மாட்சியஆகி
விரவும் பொருளும் விரவும் என்ப[22]

என்று பொருள் விரவி வருவதைக் கூற்று என ச.வே.சுப்பிரமணியன் தரும் விளக்கமாகும்.

அகத்திணை மரபுகள் திரியாத நிலையில் அதற்குச்
சிறப்புத் தரும் நிலையில் மாந்தர் கூற்றுள்
பொருள்கள் விரவி வருதலும் உண்டு[23]

ஒருவர் நிகழ்த்தும் கூற்றானது எந்தச் சூழ்நிலையில் யார் யாருக்கு இடையே நிகழ்த்தப்பட ேண்டும், கூற்று நிகழ்த்துபவர் என்ன தகுதி பெற்றவராய் இருக்கவேண்டும். கூற்றினைக் கேட்பவர் என்னென்ன தகுதி உடையவராய் இருக்க வேண்டும் என்பன போன்ற விதி முறைகளைத் தொல்காப்பியம் கூறுகிறது.

### 1.8.1. களவியல்

களவு என்ற சொல் பிறருக்குச் சொந்தமான ஒரு பொருளைக் கவர்ந்திடுதல் என்ற பொருளைப் பெறும். அகத்திணையியலில் களவியலுக்கு விளக்கம் கூற வேண்டுமானால் தலைவனின் உள்ளத்தைத் திருடியவிடத்து தலைவியும், தலைவனின் உள்ளத்தைத் திருடியவளாகத் தலைவியும் வரும் எனலாம். இதன் காரணமாகவே களவியல் தோன்றியிருக்கக் கூடும் என்பது கருத்து.

### 1.8.2. தொல்காப்பியர் தரும் களவுக்கான விளக்கம்

ஒத்த தலைவனும் தலைவியும் ஊழ் கூட்டுவிக்கக் காணுகின்ற காமக்கூட்டம் என்பார் தொல்காப்பியர்.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக்கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே[24]

என்ற நூற்பாவும்,

ஒன்றே வேறே என்றிரு பல்வரின்
ஒன்றி உயர்ந்த பல . . . . . . .[25]

என்ற நூற்பாவும் மூலமும் களவுக்கு விளக்கம் அளிக்கிறார்.

### 1.8.2.1. களவின்கண் தலைவன் தலைவி கூற்று

*களவானது இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியர் கூட்டம் என்று நான்காகத் தொல்காப்பியரால் கூறப்படுகிறது.*

காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கொடு தமாஅறுந் தோழியிற் புணாவுமென்
றாங்கரல் வகையினும் அடைந்த சார்பொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே[26]

*இந்நூற்பாவில் சுட்டப்பட்ட அனைத்தும் ஆடவர்களுக்காகவே சுட்டப்பட்டது என்ற கருத்தாக்கத்தைத் தொல்காப்பியர் வாசகனுக்குள் ஏற்படுத்துகிறார். இதைத் தொடர்ந்து வரும் மெய்தொட்டு பயிறல் முதலாக மடல்மா கூறும் இடம் ஈறாகக் களவில் தலைவன் நிகழ்த்தும் இருபத்தேழு கூற்றுக்களும் இதைத் தொடர்ந்து வரும் மறைந்தவற்காண்டல் முதலாகப் பரத்தமை தோன்றல் ஈறாகக் களவில் தலைவி நிகழ்த்தும் முப்பத்தேழு கூற்றுக்களும் எனக் களவின்கண் தலைவன் தலைவிக் கூற்றாக அமைகிறது. ஒரு சில கூற்றுக்கள் இங்கு விளக்கப்படுகின்றன.*

### 1.8.2.2. இயற்கைப் புணர்ச்சியில் தலைவன் தலைவி கூற்று

*இயற்கை புணர்ச்சியானது ஊழ் கூட்டுவிக்க ஒத்த தலைவனும் தலைவியும் சந்தித்துக் கொள்ளுதல் ஆகும். இந்த இடத்தில் தலைவன் நிகழ்த்தும் கூற்றுகள் வருமாறு,*

*1) மெய்தொட்டுப் பயிறலாவது - பெருமையும் உரனுமுடைய தலைமகன் தெளிவகப்படுத்தியது. காரணமாகக் காதல் வெள்ளம் புரண்டோடத் தலைவியின் மெய்யைத் தீண்டிப் பயிறல்.*

### 1.8.2.2.1. திருமணத்திற்கு முன் நிகழும் தலைவன் தலைவி கூற்று

*திருமண வாழ்வுக்கு அதாவது தொல்காப்பியரால் கற்பு என்று கூறப்படும் ஒழுக்கத்திற்கு முன் தலைவன் தலைவிக்கெனக் கட்டமைக்கப்பட்ட கூற்றுக்களில்,*

1) தலைவன் திருமணம் புரிய விருப்பம் இல்லாதவனாகவும்

2) தலைவனின் புறத்தொழுக்கத்தினை அதாவது அவன் செய்யும் தவறினை நியாயப்படுத்துவதாகவும் கூற்றுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த நியாயப்படுத்தும் கூற்றுக்கள் தலைவியினுடையவை.

தலைவன் இன்பத்துக்கு இடையூறாகத் தலைவியின் நாணம் இருக்க அதனை நீக்குவதற்குத் தலைவன் கூற்று நிகழ்த்துகிறான்.

### 1.9. கற்பியல்

கூற்று என்பது வலிமையானது. அது தான் இருக்கும் இடத்தை வலிமையானதாக்கிவிடும். கூற்று நிகழ்கின்ற இடமே (அ) நிகழ்த்துபவரே சமுதாயத்தில் மேன்மையும் ஆளுமையும் உடையவராகின்ற உண்மையை உணர்ந்த தொல்காப்பியர் பெண்ணுக்கு அச்சம், நாணம், மடம் இவற்றைக் கூறியதோடு, கற்பியல், பொறை, நிறை, விருந்து, புறந்தருதல் முதலியவற்றையும் கூறி இதனை மீறி நடந்தால் அவள் கற்பற்றவளாகி விடுவாள் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். தொல்காப்பியர்,

> **பாணன், கூத்தன், விறலி, பரத்தை**
>
> **யானஞ் சான்ற அறிவர், கண்டோர்**
>
> **பேணுதரு சிறப்பிற் பார்ப்பான் முதலா**[27]

எனப் பன்னிருவரைக் கற்பியலில் கூற்று நிகழ்த்துபவர்களைக் கூறுகிறார். ஆய்வின் எல்லை கருதி தலைவன், தலைவி கூற்றுக்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

### 1.9.1. கற்பு – தொல்காப்பியர் தரும் விளக்கம்

தலைவனும் தலைவியும் திருமணம் செய்து வாழ்கின்ற இல்லறத்தைக் கூறும் பகுதியாகக் கற்பியல் அமைந்திருக்கிறது. தலைவியின் பெற்றோர் தனது மகளைத் தலைவனுக்குக் கொடுக்க தலைவன் அவளைப் பெற்றுக் கொள்கின்ற திருமணமுறை தொல்காப்பியரால் **கரணம்** என்ற சொல்லினால் குறிக்கப்படுகின்றது.

கற்பெனப்படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே[28]

*தலைவனுக்குத் தலைவியை அவளது பெற்றோர் கொடுக்கும் கரணமுறை கற்பு என்று முன்பு கூறியவரே, பெற்றோர் இல்லாமல் தலைவனும், தலைவியும் உடன்போக்கு மேற்கொண்டு திருமணம் செய்து கொள்வதும் உண்டு. அதுவும் கற்பென்றே கொள்ளப்படும் என்கிறார். அது,*

கொடுப்போர் இன்றியுங் கரணமுண்டே

புணர்ந்துடன் போகிய காலையான[29]

*என்ற நூற்பாவால் அறியலாம். இதன்வழி கற்பு என்பது கரணம் என்ற திருமணத்தினால் தலைவனும், தலைவியும் இணைந்து வாழ்வது என்ற உண்மை புலனாகிறது.*

### 1.9.2. திருமணம் முடிந்த கற்பு வாழ்வில் – தலைவன் தலைவி கூற்று

*1)* ***எஞ்சா மகிழ்ச்சியிறந்து பருவத்தும்***[30] *என்பது ஒழியாத மகிழ்ச்சி மிக்கு வருங்காலத்துத் தலைவன் மகிழ்ச்சியாக இருப்பது தெளிவிப்பதாயுள்ளது. இங்குத் தலைவி ஈடுகொடுத்து அவனுக்காகப் பேசுபவளாகவும், அவன் மனதை அறிந்து செயல்படுபவளாகக் காணப்படுகிறாள். தலைவியின் கூற்றுக்கள் தலைவனது மகிழ்ச்சி ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்டும் அவனை உயர்த்திக் கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது.*

*'**அவனறி வாற்ற அறியுமாகலின் ஒற்றற் கண்ணும்**'*[31] *என்பது தலைவனது நினைவைத் தலைவி மிக அறியுமாதலின் அவையுயர்த்திக் கூறுதற்கண்ணும் தலைவி கூற்று நிகழும் என்ற கூற்றில், பெண் தலைவனின் உள்ளத்தைப் புரிந்து நடந்து கொள்பவளாகப் படைக்கப்பட்டுள்ளார்.*

*பிரிவு என்பது தலைவன் தலைவி இருவருக்குமே துன்பத்தினைத் தரக்கூடியதே. ஆனால் பிரியும் தலைவன் தலைவியை ஆற்றுப்படுத்திப்*

*பிரிகிறான் என்று கூற்றுக் கட்டமைக்கப்பட்டிருப்பதன்வழி பெண் வருந்தவும் அவளைச் சமாதானம் செய்து தலைவன் பிரிகிறான் என்று கூறப்படுவதும் தெரிகிறது.*

*1) அழகியல்* ***“அஞ்சலென் றாயிரு பொருளினுற் தானவட் டிழைத்த”***[32] *வருவத்தானும் என்பது அழகியல், அஞ்சல் என இயற்கைப் புணர்ச்சிக்குக் கூறிய அவ்விரு பொருளைப் பிழைத்த காலத்தினும் தலைவன்கண் கூற்று நிகழும்.*

*இக்கூற்றில் அஞ்சாதே நான் பிரியமாட்டேன் என்று கூறிப் பிரிந்து சென்றுதான் கூறியதைப் பிழைத்த பொழுது தலைவிக்கு ஏற்படும் ஊடலினை நீக்கும்படி தலைவன் கூற்று நிகழ்த்துவான் என்றும் கூறப்பட்டு இருக்கிறது. இதை,*

பொழுது தலைவைத்த கையறுகாலை

இறந்த போலக் கிளக்குங் கிளவி

மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு

அவைநாற் பொருட்கான் நிகழும் என்ப[33]

*என்ற நூற்பாவழி அறியலாம்.*

***2) நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளும் என்பது நிலை நிற்க மிகப் பிரியும் பிரிவின்கண் அஞ்சிய நோயின் கண்ணும்***[34] *கூற்று நிகழும்.*

*தலைவியைப் பிரிந்தால் அவள் பிரிவை எப்படித் தாங்கியிருப்பாள் என்று அஞ்சுவது தலைவனுக்கு நோய் எனக் கூறப்படுகிறது. தலைவனுக்குப் பிரிவில் கட்டமைக்கப்பட்ட கூற்றில் பசலையினால் வாடுவதுடன் தன் உறுப்புகளை வினவுவதாகவும் கூறப்படுகிறது.*

வண்ணம் பசந்து புலம்புங்காலை

உணர்ந்ததுபோல உறுப்பினைக் கிழவி

புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே[35]

என்பது தலைவி கூற்று. தலைவிக்கு என்று கட்டமைக்கப்பட்ட கூற்றுகள் மிகக்குறைவு. அதிலும் தலைவனை நினைத்து வருந்திப் புலம்புவதாகக் கூறப்பட்டுள்ளது.

*3)* **சென்ற கையிகந்து பெயர்ந்துள்ளிய வழியும்**[36] என்பது

மேற்கூறிய வாறினைக் கையிகந்து முன்னொருகாற் சென்று

மீட்டும், அந்நெறியினைப் போக நினைத்தவழியும் கூற்று நிகழும்

*4)* **காமத்தின் வலியும் என்பது - பொருளினுங் காமம்**[37]

வலியுடைத்து என உட்கொண்ட வழியும் கூற்று நிகழும்.

இவ்வாறு பொருள்தேடிச் செல்லும் தலைவன் தலைவியின் மேல் உள்ள அன்பின் காரணமாக மீண்டு வருவதாகக் கூற்றினை அமைத்துள்ள தொல்காப்பியர்,

**புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து**

**இடைச்சுரத் திறைச்சியும் வினையும் கட்டி**

**அன்புறதக்க கிளத்தல் தானே**

**கிழவோன் செய்வினைக்கு அச்சமாகும்**[38]

தன் பிரிவினைத் தலைவி தாங்கிக் கொள்ளமாட்டாள் என்பதற்காகப் பிரியமாட்டேன் என்று கூறிப்பிரிந்து செல்கிற பொழுது கூற்று நிகழ்தல், தலைவனின் பிரிவானது தலைவியைப் பெரிதும் வாட்டும், அதன் காரணமாகப் பிரியமாட்டேன் என்று கூறிய தலைமகன் பிரிந்து சென்றபொழுது கூற்று நிகழ்த்துவாள்.

### 1.10. தொல்காப்பியர் கூறும் களவுப் பிரிவுகள்

அகத்திணையியலில் தொல்காப்பியர் களவுப் பிரிவுகளைப் பின்வருமாறு கூறுகிறார்.

*1)* இருவகைப் பிரிவு

**இருவகைப் பிரிவு நிலைபெறத் தோன்றலும்**

**உரியதாகும் என்மனார் புலவர்**[39]

இருவகை பிரிவான தலைமகளைப் பிரிதலும் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும் நிலைபெறத் தோன்றலும் உரியது ஆகும் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

### 1.10.1. பிரிந்தவன் இரங்கல்

கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவன் இரங்கலும்

உண்டென மொழிப ஓரிடத்தான[40]

கொண்டு தலைகழிதலும் உண்டு, பிரிந்து அவன் இரங்கலும் உண்டு. தலைவன் தலைவியைத் தன்னுடன் உடன் கொண்டு செல்லுதலும், சுற்றத்தினர் வந்து பிரிந்தவழி பிரிவிற்காகக் கலங்குதலும் சில வேளைகளில் உண்டு எனக் கூறுவர்.

### 1.10.2. கலந்தபொழுது – காட்சி

கலந்த பொழுதும் காட்சியும் அன்ன[41]

தலைவனைக் கண்ணுற்றவழி மனநிகழ்ச்சி உளதாங் காலமும், பின்னர்க் குறிப்பறியுந் துணையும் நிகழும் நிகழ்ச்சியும், காட்சியும் - தலைவியை எதிர்ப்படுதலும் அன்ன - ஓரிடத்து நிகழும் உரிப்பொருள் இஃது தலைவன் தலைவி இணைந்தபோது உரிப்பொருள் அமையும்.

### 1.10.3. அகற்சி

அயலோர் ஆயின் அகற்சி மேற்றே[42]

மனைக்கு அயலிடத்துச் சென்றோராயினும் அதுவும் பிரிவின்கண்படும் எனக் கூறுவார். இந்நூற்பாக்களின்வழி மேற்கூறிய கருத்துக்களை நச்சினார்க்கினியரும், சோமசுந்தரபாரதியாரும் தவிர இப்பிரிவு பற்றி எல்லா செய்திகளையும் களவில் நடந்ததாகவே குறிக்கின்றனர். மேலும் இப்பிரிவுகளைக் களவியல் பிரிவு என்று கூறுதலே மிகவும் பொருத்தமுடையதாகும்.

இருவகைப் பிரிவு என்பது பற்றிய நூற்பா இடம் மாறி தொடர்பற்று நிற்பது வெளிப்படையாக உள்ளது. அகத்திணையியலில் வருகின்ற 6-12

நூற்பாக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலத்தையும் அவற்றின் பொழுதுகளையும் குறிப்பிடுகின்றது. அகத்திணையியலில் உள்ள 13-வது நூற்பா இருவகைப்பரிவு பற்றிக் கூறுகின்றது. 14, 15 திணை மயக்கத்தை உரைப்பதாக அமைகிறது.

17-வது நூற்பா உரிப்பொருளில் ஒன்றான பிரிவைப் பற்றிக் கூறுவது. மேலே உள்ள அமைவை நோக்குகிறபொழுது, இருவகைப்பிரிவு என்ற நூற்பா இடம் மாறிக் கிடப்பது தெளிவாகும். எனவே இந்த நூற்பாவைப் பிரிவு உள்ளிட்ட உரிப்பொருளைக் கூறியதாகக் கொண்டு பின் வைத்தலே முறை. அவ்வாறு எடுத்துக் கொண்டால் இருவகைப் பிரிவு என்ற நூற்பாவை முதலில் நிறுத்தி, (15) கொண்டு தலைக்கழிதல், பிரிந்தவன் இரங்கல் (16) என்ற இரு நூற்பாவில் தொகுத்துச் சுட்டியதையே கொண்டுதலைக்கழிதல் என்ற நூற்பாவின் வழி உரைத்தார்.

### 1.10.4. கொண்டுதலைக் கழிதல்

கொண்டுதலைக்கழிதல் என்பது தலைவன் தலைவியை அழைத்துக்கொண்டு உடன்போக்குச் சென்றதைக் குறிக்கும். அப்போது தலைவி தம் சுற்றத்தைப் பிரிவாள் ஆதலின் இது பிரிவு என்று கூறப்படுகிறது.

### 1.10.5. கலந்தபொழுது – காட்சி

தலைவி தம்மை விட்டுப் பிரிந்து சென்றதை அறிந்து தாயார் வருந்தி அழுவாள். பல இடங்களில் தேடுவாள். தனது மகள் காணாததால் பெரிதும் மனக்கலக்கத்திற்கு ஆளாவாள். எப்படியேனும் சில சமயம் அவர்கள் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்வாள். அவர்கள் இருவரும் கலந்து உறைவது தாயாரால் கண்டறியப்பட்டால் இவ்விரு நிலைகளையும் தாய் காண்பது காட்சி என்றழைக்கப்படுகிறது. கண்டவர் மகளை மீண்டும் அழைத்து வருதலும் உண்டு. அவ்வாறு அழைத்து வருதல் இடைச்சுரமாக இருப்பின் அவள் உறவினர் எய்துதல் கடைக்கொண்டு பெயர்தல் எனப்பட்டது. அவ்வாறு உடன்கொண்டு சென்றவனைப் பெற்றோர் கூட்டி வருதல் அருமை.

அவ்வருமை நேரிட்டால் உடன் அழைத்துச் சென்ற தலைவன் தலைவியை நினைந்து கலங்குவான். அவன், கலங்கி அழுது நிற்பதைப் பிரிந்து அவண் இரங்கல் என்றுரைப்பர். தலைவியைச் செவிலித்தாய் தேடிச் செல்வதும் உண்டு.

கொண்டுதலைக் கழிதலும், கலந்தபொழுது தாயார் காண்கின்ற காட்சியும், உடன் வந்த உறவினருடன் உடன் வந்த தலைவி பிரிந்து சென்றதை எண்ணித் தலைவன் இரங்குதலும், உடன்போக்கு மேற்கொண்டவரைத் தமரும், ஏவலரும், பிறரும் தேடிச் செல்லுதலும் என அனைத்தும் உடன்போக்கு என்று கருதப்படுகிறது. மேற்கொண்ட உடன்போக்கில் தலைவி, தலைவன் உடன் இருப்பதால் இதை மாலை என்றோ, குறிஞ்சி என்றோ ஐயுற வேண்டுதல் உள்ளது. பெற்றோரை விட்டு அவர் அறியாமல் பெயர்வதால் களவு என்பதால் இருவரும் சேர்ந்தே உறைய செல்லுவதால் கற்பு என்பதா என்ற வினாவும் எழக்கூடும். களவினும், கற்பினும் கூறுவதற்கு இயைபு இல்லாத இவ்வுடன்போக்கைப் பிரிதல் அதிகாரத் தொடர்பு எண்ணித் தொல்காப்பியர் அகத்திணையியலில் கூறியுள்ளார்.

களவு இருவழிகளால் கற்பு மணம் எய்தும் ஒன்று அறத்தொடு நிலை. மற்றொன்று உடன்போக்கு, எனினும் அன்றைய சமூகத்தில் உடன்போக்கை மறுத்தலும் இல்லை. மறு என ஒறுத்தலும் இல்லை. உடன்போக்கே என முடிவு கொள்க. அதனைக் கற்பாகக் கருதிக் கொள்ளக்கூடாது. வேனிற் பிரிவும், பின்பனிப் பிரிவும் கற்புப் பிரிவுகளே, அவை பிரிவு அதிகாரத்தில் அடக்கப்பெறும். காலிற் பிரிவு, கலத்திற் பிரிவு என்ற இரண்டும் கற்பிற் பிரிவுகளே அவை. முந்நீர் வழக்கம் எனத் தொடங்கும் நூற்பாவழி எதிர்முகமாக உணர்ந்து கொள்ளலாம்.

### 1.10.6. வரைவிடைப் பிரிவு

தலைவன் தலைவியை வரைவதற்கு முன்பு அவளை விடுத்து, ஓதல், பகை, தூது என்னும் மூன்றன் காரணமாகப் பிரிவதில்லை என்னும் மரபைத் தொல்காப்பியர்

**வெளிப்படை தானே கற்பினொ டொப்பினும்**

**ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக**

**வரையாது பிரிதல் கிழவோற் கில்லை**[43]


என்று களவியலில் கூறுகிறார். ஞாங்கர்க் கிளந்த என்ற சுட்டு அகத்திணையியலில் கூறிய ஓதல் பகையே தூதிவை பிரிவே என்னும் நூற்பாவைச் சுட்டி நிற்கின்றது. இவ்வாறு கூறவே தலைவன் வரைவிடை வைத்துத் தலைவியைப் பொருள், காவல் ஆகிய இரண்டு குறித்து மட்டுமே பிரிவான் என்பது பொருளாகும். ஆனால் இளம்பூரணரும், நச்சினார்க்கினியாரும் தலைவன் வரைவிடை வைத்து மன்னர்க்கு உதவி செய்ய பிரியும் பிரிவையும் மேற்கொள்வான் என்று கூறுகின்றனர். இவர்கள் இருவரும் வேந்தர் குற்றுழிப் பிரிவைப் பகைவயிற் பிரிவினும் தனியே வேறொரு பிரிவாகக் கருதுகிறார்கள். தொல்காப்பியரும் இவ்விரு பிரிவுகளைத் தனித்தனிப் பிரிவாகவே கருதியுள்ளார். அவர் கருத்துப்படி பகைவயிற் பிரிவு என்பது வேந்தன் மேற்கொள்வது வேந்தர்க்கு உதவ ஏனோர் பிரிவு மேற்கொள்வதாகும். இருப்பினும் அவர் வேந்தர்க்கு உதவியாக ஏனோர் மேற்கொள்வதும் வேந்தன் மேற்றேயாகும் என்கிறார். இதை,

**தானே சேறலும் தன்னொடு சிவணிய**

**ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே**[44]

என்று தொல்காப்பியர் கூறுவதைக் காணலாம். எனவே வேந்தர்க்கு உதவி செய்யச் செல்லும் பகைவயிற் பிரிவினுள்ளேயே அடங்கிவிடும்.

வேந்தர்க்கு உதவும் பிரிவும் இயல்பாகவே அடங்கி விடுகிறது. எனவே தலைவன் வரைவுக்கு முன்பு வேந்தர்க்குற்றுழியாகப் பிரிந்தான் என்று உரையாசிரியர்கள் கூறுவது தொல்காப்பியர் கருத்துக்கு முரணாகும்.




## 1.11. கற்பு பிரிவுகள்

மணத்திற்கு முன் அமைந்த ஒழுக்கம் களவு எனப்படும். மணத்திற்குப் பின் நிகழ்வது கற்பு எனப்படும். களவுவாழ்வு உணர்வு மேலோங்கி நிற்பது. கற்புவாழ்வு அறிவு மேலோங்கி நிற்பது. களவுப்பிரிவு உணர்வு வழி நிகழ்வது. கற்புப்பிரிவு அறிவுவழி நிகழ்வது. எனவேதான் ஓதற்பிரிவும் முதன்மை பெறுகிறது. களவுப்பிரிவு - காதற்பிரிவு வாழும். கற்பிற்பிரிவு, கடமைப்பிரிவு வாழும். இப்பிரிவுகள் பெரிதும் மன்னனை முன்னிறுத்தி நிகழ்வதாகும். ஓதற்பிரிவு, பகைவயிற்பிரிவு, தூதிற்பிரிவு, பரத்தையற்பிரிவு, வேந்தர் குற்றுழிப் பிரிவு, பொருள்வயின்பிரிவு, காவற்பிரிவு ஆகியன கற்பில் நிகழும் பிரிவுகளாகக் கருதப்படுகிறது. இவற்றில் பரத்தையிற்பிரிவு நீங்கலாக ஏனைய ஆறும் தலைவியை விடுத்து ஊரிடையிட்டும், காட்டிடையிட்டும், நாட்டிடையிட்டும் பிரிந்து செல்லும் பிரிவுகளாகும். இவற்றைக் குறித்த மரபுகளைத் தொல்காப்பியர் கற்பியலிலும், பொருளியலிலும் கூறுகின்றார். அவை,

1) ஓதற்பிரிவு 2) தூதுப்பிரிவு

3) நாடுகாவல்பிரிவு 4) பகைவயிற்பிரிவு

5) பொருள்வயிற்பிரிவு 6) பரத்தையிற்பிரிவு

எனலாம்.

### 1.11.1. அன்பு பாராட்டி கூறுதல்

தலைவியை விடுத்துப் பிரிய எண்ணியது முதல், பிரிவது வரையிலும் தலைவன் அவளிடம் அன்பு பல பாராட்டுவான். சொல்லால் அன்பு தோன்றப் பாராட்டுதலும் மெய்யால் அன்பு தோன்றப் பாராட்டுதலும் நிகழும். இவ்வாறு பாராட்டுதல் இரண்டு குறிப்பைக் கொண்டது. ஒன்று தான் பிரிகின்றதனைத் தலைவி உணரும்படி செய்வதாகும். மற்றொன்று தான் பொருள் செய்தற்கு அவள் இடையூறாகக் கூடாதே என்ற தனது அச்சத்தை அவளுக்குக் காட்டுவதாகும்.

செய்பொருள் அச்சமும் வினையின் பிரிவும்
மெய்பெற வுணர்த்துங் கிழவி பாராட்டே[45]

என்று மொழிகின்றார்.

### 1.11.2. வற்புறுத்திப் பிரிதல்

தலைவியை அன்பு பாராட்டிப் பிரிதலேயன்றி, அவளிடம் சொல்லிப் பிரிதலும் உண்டு. அவ்வாறு சொல்லும்போது, தலைவி சொல்லொணாத் துயரத்திற்குள்ளாவாள். அப்போது தலைவன் வற்புறுத்திப் பிரிதலே (அ) செலவழுங்கிச் சில நாள் கழித்து வற்புறுத்திப் பிரிதலோ செய்வான். தலைவி துன்புறும் பொழுதில் அவளை வற்புறுத்தியே தலைவன் பிரிய வேண்டும். வற்புறுத்தாமல் பிரிதல் கூடாது என்று தொல்காப்பியர் விதிக்கின்றார். இதனை,

துன்புறு பொழுதினும் எல்லாங் கிழவன்
வற்புறுத் தல்லது சேறல் இல்லை[46]

என்ற நூற்பாவால் அறியலாம்.

### 1.11.3. ஓதற்பிரிவு

கற்புப்பிரிவில் முன்னிலை வகிப்பது ஓதற்பிரிவாகும். ஓதுதல் என்பதும், தூது என்பதும் உயர்ந்தோர்க்குரியதாகத் தொல்காப்பியர் குறிக்கிறார். இது பெரும்பாலும் அரசர்க்கும் அந்தணர்க்கும் உரியதாகக் கருதப்பட்டது. அக்காலத்தில் ஓதுதல் என்பது பெரும்பான்மையும் ஆன்மிக நெறி சார்ந்த வேதக் கல்வியை மட்டும் குறித்தது. ஏனைய பின்தங்கிய வகுப்பினர்க்குக் கல்வி மறுக்கப்பட்டதன் காரணமாக ஓதற்பிரிவு இருந்திருக்க இயலாது என்பது இதனால் அறியப்பெறும். அந்தணர்க்கே உரிய ஓதற்பிரிவு முதன்மையானதாகக் கருதப்பட்டதால் அரசன் முதலானோர் ஆரியரைப் போல் கடல் கடந்து கற்கவில்லை. ஊர்ப்புறத்திலே படைக்கல்வியும், பொருட்கல்வியும் இருந்ததால் அரசன் முதலானோர் பிரிந்து செல்வதற்கு வாய்ப்பில்லை. எனவே ஓதற்பிரிவு மட்டும் கற்பியல் பிரிவாக அந்தணரைச் சார்ந்து கூறப்பட்டது. வடபுலம் இருந்து தென்புலம் வந்து தங்கிய ஆரிய அந்தணர் அக்காலத்து வேதம் பயிலத் தமிழ்ப்புலத்தில் தக்கோர் இன்மையால் தம்புலம் சென்று வந்தனர். அதனாலேயே மூன்று ஆண்டுகள் அவர்க்கு வேண்டி இருந்தன. ஏனைய பிரிவுகள் ஓராண்டிற்குள்ளேயே அமைய, ஆரியப்பிரிவிற்கு மட்டும் மூன்று ஆண்டுகள் அமைந்த காரணம் அவர்கள் நாடுகள் கடந்து கற்க வேண்டும் என்பதாகும்.

### 1.11.4. (2) தூதுப்பிரிவு

அரசு காரணமாகவோ, அரசியல் காரணமாகவோ, ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்க்கு அரசனால் அனுப்பப்படும் நிகழ்வு தூது ஆகும். மேலோர் எனக் கருதப்பட்ட நால்வர்க்கும் உரித்தாகத் தூது கருதப்படுகிறது. உயைாசிரியர்களான இளம்பூரணரும் நச்சரும் இதைக் குறிப்பர். பிற்கால உரையாசிரியர்கள் அதை ஏற்றுக் கொள்வர். தூதின் காரணமாகக் கடல் கடந்து சென்றதாகவோ அதனால் தலைவி வருந்தியதாகவோ தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் பாடல்கள் காணப்பெறவில்லை.

**1.11.5. (3) நாடுகாவல் பிரிவு – பொருள்வயின் பிரிவு**

*மேவிய சிறப்பின் என்ற நூற்பாவின் வழி,*

> **மேவிய சிறப்பின் ஏனோர் பழமைய**
>
> **முல்லை முதலாச் சொல்லிய முறையால்**
>
> **பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்**
>
> **இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே**[47]

*இந்நூற்பாவிற்கு மேவுகின்ற சிறப்பினையுடைய மக்கள் அல்லாத தேவரது பூசையும் விழாவும் முதலியனவும் முல்லை முதலாகச் சொல்லப்பெற்ற எல்லா நிலங்களிலும் மக்கள் தப்பியவழி தப்பாது நிறுத்தல் வேண்டியும் (காவல்) செய்யப்பெற்ற பொருளை ஆக்குதற்காகவும் பிரிவு உளதாம் என்ற பொருளை உரையாசிரியர்கள் வழங்குகிறார்கள். இதில் ஏனோர் என்பது மேலோர் எனத் தொல்காப்பியர் குறிக்காதவர்களைக் குறிப்பதாக அமைகிறது. மேவிய சிறப்பின் என மேலே சுட்டிய நூற்பாவின் மூலம் காவல், பொருள்வயிற்பிரிவு என இளம்பூரணர் உரைக்கிறார். மேலும், பிற்கால உரையாசிரியர்களான அருணாச்சலம் பிள்ளை, சோமசுந்தர பாரதியார், புலவர் குழந்தை ஆகியோரும் இதை ஏற்றுக் கொள்கின்றனர். சுட்டப்பட்ட கருத்துக்களின் வழி அறியலாகும் செய்தி யாதெனில் நாடுகாவற்பிரிவிற்கும், பொருள்வயிற்பிரிவிற்கும் மேலோர் அல்லாத ஏனையோர் மட்டுமே அனுப்பப்பட்டனர் என்பதை அறிய முடிகின்றது.*

**1.11.6. பகைவயிற்பிரிவு**

*இரு நாட்டிற்கிடையே காணப்படும் பகையின் காரணமாக அரசன், குறுநில மன்னன், ஆகியோர் பிரிய நேரிட்டதாகக் கருதமுடிகிறது. வணிகர், வேளாளர் ஆகியோரும் பகை காரணமாகப் பிரிந்திருக்ககூடும் எனப் புலவர் குழந்தை கூறுகிறார். பிற்காலத்தில் வந்த நம்பியகப்பொருளிலும் இச்செய்தி காணப்படுகிறது.*

### 1.11.7. பரத்தையிற்பிரிவு

பரத்தைப்பிரிவு அனைவர் மாட்டும் நிகழ்ந்ததாகக் கருதலாம். மனைவி, குழந்தை ஈன்றதின் காரணமாகவும், மருத நிலத்தின் செல்வ வளத்தின் மிகுதியாலும் பரத்தையிற்பிரிவு நிகழ்ந்திருக்கக் கூடும். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியோர் பரத்தையின் காரணமாகக் பிரிந்ததாக இளம்பூரணரும், அந்தணர், அரசர், வணிகர் இருவகை வேளாளர், குறுநில மன்னர் ஆகியோர் பிரிந்ததாக நச்சினார்க்கினியரும் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பியர் எவரையும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. இது கலத்திற்பிரிவு, காலிற்பிரிவு என இருவகை தன்மையது.

### 1.11.8. பிரிவுகளில் கால வரையறை

தலைவன் தலைவியை விடுத்துப் பிரியும் காலந்தொட்டு மீண்டு வரும்வரையில் உள்ள காலம் இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு பிரிவுக்கும் தொல்காப்பியர் வரையறை செய்கின்றார்.

1) ஓதல் பிரிவில் தலைவன் தலைவியை மூன்றாண்டுகள் வரை பிரிந்திருக்கலாம் என்பதை தொல்காப்பியர்,

**வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது**[48]

என்ற நூற்பாவில் கூறுகிறார். இரவாது என்று கூறப்படுவதுவே ஓதற்பிரிவின் கால வரையறை மூன்றாண்டுகட்கு மேல் போதல் கூடாது என்பது பொருள்.

2) பகைவயிற் பிரிவுக்கும், ஏனைய பிரிவுகட்கும் ஓராண்டு என்று வரையறை செய்கின்றார். இதனை,

**வேந்துறு தொழிலே யாண்டியின் தகமே**[49]

**ஏனைப் பிரிவும் கல்வியின் நிலையும்**[50]

என்ற நூற்பாக்களால் அறியலாம். யாண்டின் தாமே என்றதனால் இப்பிரிகளின் கால அளவு ஓராண்டுக்குமேல் போதல் கூடாது என்பது புலனாகும். ஏனையப் பிரிவு என்பது பொருள்வயிற்பிரிவு, தூதிற்பிரிவு,

காவற்பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளைக் குறிக்கும். வேந்தர்க்குற்றுழிப் பிரிவு, வேந்துறுதொழில் எனப்பட்ட பகைவயிற்பிரிவுகள் அடங்கும்.

### 1.11.9. பிரிவுக்குரியோர்

பிரிவுக்குரியோராகத் தலைவன், தலைவி மட்டுமே கருதப்படுவர். இப்பிரிவு களவு, கற்பு ஆகிய இரு நிலைகளிலும் நிகழ்வுறும். பிரிவுக்குரியோராகத் தொல்காப்பியர் குறிப்பிடுவது,

1) வேந்தன் 2) குறுநில மன்னன் 3) அந்தணன் 4) வணிகன் 5) வேளாளண் என்பவர்களே. தொல்காப்பியர் காலத்திற்குப் பின் பிரிவில் சிறிது வளர்ச்சி ஏற்பட்டது. ஆயின் அகப்பிரிவைப் பொறுத்தவரையில் தலைவன் தலைவியர் மட்டுமே பெரிதும் இடம் வகிக்கின்றனர்.

**பிரிவுக்குரியோர்**

| அகப்பிரிவு | | புறப்பிரிவு |
|---|---|---|
| தலைவன் | சேரிப்பரத்தை | வேந்தன் |
| தலைவி | வம்பரத்தை | குறுநில மன்னன் |
| தோழி | காதற்பரத்தை | அந்தணன் |
| பாங்கன் | வம்பப்பரத்தை | வணிகன் |
| நற்றாய் | அயல்மனை பரத்தை | வேளாளன் |
| செவிலி | பின்முறை வதுவை | |
| பாணன் | மேலோர் | |
| பாடினி | கீழோர் | |

பிரிவில் பேசப்படுபவர்களாகத் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், நற்றாய், செவிலி, பாணர், பாடினி, கண்டோர், கேட்டோர், வாயில்கள், பரத்தை, பகைவர், பார்ப்பர், அறிவர், காமக்கிழத்தி, சேரிப்பரத்தை, வம்பப் பரத்தை, அயல்மனை பரத்தை பின்முறை வதுவை, மேலோர், கீழோர் ஆகியோரைச் சுட்ட முடியும். ஏதாவது ஒருநிலையில் கூற்றுக்களாகவோ, சந்து

செய்விப்போராக இடம்பெறுவர். நிலம், பொழுது ஆகியனவும் பிரிவு என்ற கோட்பாட்டில் இடம்பெறுகின்றது. தொல்காப்பியர் காலத்தையும், நேரத்தையும் பிரித்து அகவாழ்க்கையோடு ஏதாவது ஒரு நிலையில் தலைமக்கள் வருந்துவதாகக் காட்டுவார். அகப்பாடல்கள் பலவும் இதற்குச் சான்றுகளாகும். காலமும் நேரமும் பிரிந்திருக்கும் தலைமக்களுக்கு வருத்தத்தை அளிக்கக்கூடியது. தொல்காப்பியர் சுட்டும் காலமும், நேரமும் பொழுதுகள் இங்கு தலைமக்களின் பின்னணி கருதிக் கொடுக்கப்படுகின்றன.

### 1.12. ஐந்திணைகளில் பொதுநிலையில் கூற்றுகள்

அன்பின் ஐந்திணைகளாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவை பற்றி முறையே நூற்றுக்கும் மேற்பட்ட கூற்றுகள் காணக் கிடக்கின்றன. இவை,

| | |
|---|---|
| 1) தலைவன் கூற்று | 2) தலைவி கூற்று |
| 3) தோழி கூற்று | 4) நற்றாய் கூற்று |
| 5) செவிலிக் கூற்று | 6) பரத்தையர் கூற்று |
| 7) கண்டோர் கூற்று | 8) கேட்போர் கூற்று |

ஆகிய நிலைகளில் பிரித்துக் காணமுடியும். ஒவ்வொரு கூற்றுக்கும் பாடல்களைப் புலவர்கள் கொடுத்திருப்பது அவர்கள்தம் நுண்மாண் நுழைபுல அறிவினைக் காட்டுவதாக அமைகிறது.

### 1.12.1. கூற்றுகள்

சங்க அகப் பாடல்களைக் கூற்று அடிப்படையில்,

| | | |
|---|---|---|
| தலைவன் கூற்று | - | 344 |
| தலைவி கூற்று | - | 550 |
| தோழி கூற்று | - | 785 |
| செவிலி கூற்று | - | 72 |
| பரத்தைக் கூற்று | - | 51 |
| ஏனையோர் கூற்று | - | 77 |

எனப் பகுத்துக் கூறுவார் **அறிஞர் இராம.பெரிய கருப்பன்**[51] மற்றும் இவையல்லாமல் திணை அடிப்படையிலும் பிரித்துச் சுட்டுவர்.

### 1.12.2. தலைவனும் தலைவியும் – நெஞ்சுக்குக் கூறும் கூற்றுகள்

மேற்கூறிய அகமாந்தர்கள் தமக்குத்தாமே கூறுவதும் ஒருவர் மற்றொருவருக்குக் கூறுவதும், தூதுப் பொருட்கள் சில கண்டு கூறுவதும் சங்கப் பாடல்களில் காணக்கூடிய செய்திகளாகும். இவற்றுள் பிரிவின்போது தலைவனும் தலைவியும் உயர்திணைப் பொருட்களேயன்றி அஃறிணைப் பொருட்களும் கூற்றினைக் கேட்பவனாக அகப்பாடல்களில் அமையும். கூற்றுக் கூறுவோர் தம் நெஞ்சினை விளித்தும், முன்னிலைப்படுத்தியும் கூறுவதாகப் பாடப்பெறும். நெஞ்சுக்கு மானிடத் தன்மைகளையெல்லாம் ஏற்றிக் கூறுவதுண்டு.

தலைவி பருவம் கண்டும், பொழுது கண்டும் தன்னுள்ளே கூறியது. தலைவன் தலைவியை நினைந்து தன்னுள்ளே கூறியது. நெஞ்சுக்குக் கூறுதல் தனிமையில் இருந்து கூறும் கூற்றாக இருப்பினும் இங்கே கேட்கும் பொருளும் உண்டு. இது கேட்போர் உள்ளக்கிளவி இக்கூற்றிற்குரியோரே தம் நெஞ்சைக் கேட்கும் பொருளாக்குவர். இந்நிலை அகப்பொருள் மாந்தர் ஒருவர் பிறிதொருவருக்குக் கூறும் கூற்றினும் தனி மொழியினும் வேறுபட்டது. நெஞ்சம் கூற்றினைக் கேட்டும் பொருளாக அமையும்.

> **கேட்டுந போலவும் கிளக்குந போலவும்**
>
> **இயக்குந போலவும் இயங்குந போலவும்**
>
> **அஃறிணை மருங்கின் அறையவும் பலமே**[52]

எனவும்,

> **புலவரும் மாவும் புனரியும் கானலும்**
>
> **உள்ளிறுத் தியன்றவும் ஒழிந்தவை பிறவும்**
>
> **தன்சொற் கேட்குந போலவும் தனக்கவை**

இன்சொற் சொல்லுந போலவும் ஏவல்

செய்குந போலவும் தோன்றுந போலவும்

மெய்குழற் கிழத்தி மொழித்தாங் கமையும்[53]

*எனவும் வரும் இலக்கண மரபுகள் பொருந்தக் கூறப்படும்.*

முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுதல்

நன்னயம் உரைத்தல் . . .[54]

*எனவும் தொல்காப்பியத் தொடர்களுக்கு நச்சினார்க்கினியர் எழுதும் உரையும் இத்தன்மைக்குப் பொருந்தும்*

*சங்க இலக்கியத்தில் நெஞ்சொடு கிளத்தல், நெஞ்சுக்குச் சொல்லியது எனப் பாடப்பெற்ற பல பாடல்கள் காணப்படுகின்றன. சங்க அகப்பாக்களின் கீழ் உள்ள பல பிரிவுப் பாடல்களில்,*

*1) நெஞ்சிற்குச் சொல்லியது*

*2) நெஞ்சினர்க் கழறியது*

*3) நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது*

*4) நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்குவித்தது*

*எனக் காணப்படுகின்றன. கூற்று வகைகளையும், கூற்று நிலைகளையும் விரித்துரைக்கும் தொல்காப்பியர் நெஞ்சிற்குச் சொல்லியது என்று கூற்று நிகழ்வினைக் குறிப்பிடவில்லை. ஆயினும் நெஞ்சுக்குக் கூறும் வகையில் அமையும் கூற்று வகைகளும் தொல்காப்பியத்தில் இடம் பெறுகின்றன. அவை,*

***1) பாசறைப் புலம்பல்***

***2) பிரிந்தவழிக் கலங்கல்***

***3) நின்றநனி பிரிவின் அஞ்சிய பையுள்***

***4) வேற்று நாட்டு அகல்வயின் பெருமத்தான் போன்றன***[55]

சங்க அகப்பாடல்களில் 133 பாடல்கள் நெஞ்சை விளித்தும், நெஞ்சை முன்னிலைப்படுத்தியும் நெஞ்சுக்குக் கூறியது என்ற நிலையில் பாடப்பெற்றுள்ளன. இவை நீங்க நெஞ்சை நினைந்து சொல்லிய பாடல்களும் உள்ளன.

| | | |
|---|---|---|
| அகநானூறு | - | 73 பாடல்கள் |
| நற்றிணை | - | 24 பாடல்கள் |
| குறுந்தொகை | - | 21 பாடல்கள் |
| ஐங்குறுநூறு | - | 13 பாடல்கள் |
| கலித்தொகை | - | 1 பாடல் |

என்பன.

நெஞ்சுக்குச் சொல்லிய நிலையில் பாடப்பெற்றுள்ளன. இவற்றுடன் பொருள் காரணமாகப் பிரியவிருக்கும் தலைவன், திருமாவளனாகிய கரிகாற்சோழன் பகைவர்பாற் செலுத்தும் வேலினும் கொடிய கானத்தை நினைந்தும் அவன் செங்கோலினும் தண்ணிய தலைவியின் தடமென் தோளினை நினைந்தும்,

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே[56]

என நெஞ்சினை விளித்துச் செலவழுங்குதல் நிலையில் அமையும் பட்டினப்பாலை பாடலும் சேரும். இப்பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 62 ஆகும். பரணர், இளங்கீரனார், மருதனிளநாகனார், பேயனார், கபிலர், பாலை பாடிய பெருங்கடுங்கோ ஆகியோர் மிகுதியான பாடல்களைப் பாடியோராவர். ஆசிரியர் பெயரில்லாதன நான்கு பாடல்கள். அகப் பாடல்கள் பாடிய புலவர்கள் 378 பேரில் ஆறில் ஒரு பகுதியினர் நெஞ்சுக்குக் கூறுதல் என்னும் நிலையில் பாடியுள்ளது குறிக்கத்தக்கதாகும்.

அரிய புதிய துறைகளை மேற்கொண்டு பாடும் விழைவுடையவர் பரணர் எனக் கூறும் **தமிழ்க்காதல் ஆசிரியர் வ.சுப.மாணிக்கனார்**[57] தலைமகன் தன் நெஞ்சுக்குக் கூறியது என்ற துறையில் களவும் கற்பும் என்ற இரண்டையும் சேர்த்து 17 செய்யுட்களைப் பரணர் இயற்றியுள்ளார் என்றும், இடைச்சுரத்தில் திரும்ப நினைக்கும் போதும் தலைவி மிக்க ஊடல் கொண்ட போதும் பரணரின் தலைவர் நெஞ்சினை முன்னிலைப்படுத்திச் சொல்லியதாகும் என்றும் குறிப்பார். மேலும் இவர் இளங்கீரனார் பற்றிக் குறிப்பிடும் போது தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியது என்ற ஒரு துறை பற்றியே இவர்தம் பெரும்பாலான செய்யுட்கள் 12 அமைந்துள்ளன.[58]

தமிழ் அகத்திணைச் செய்திகளை நோக்கும்பொழுது குறிஞ்சித்திணையை மட்டுமே தனித்த ஒரு களவுத் திணையாக எடுத்துக் கொள்ளமுடியும். பாலைத்திணை களவு, கற்பு ஆகிய இரண்டிற்கும் உரியது. வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல் என்பது இத்திணைப் பாற்படும். பிற முல்லை, நெய்தல், மருதம் ஆகியன கற்பிற்குரியனவாகும்.

திணை அடிப்படையில் பார்க்கும்போது நெஞ்சுக்குச் சொல்லுதல் என்னும் நிலையில் பாலைத்திணையில் மிகுதியான பாடல்கள் காணப்படுகின்றன. அடுத்து குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என்ற வரிசையில் அமைகின்றன.

| | | |
|---|---|---|
| பாலையில் | - | 77 பாடல்கள் |
| நெய்தலில் | - | 7 பாடல்கள் |
| மருதத்தில் | - | 2 பாடல்கள் |

இவ்வகையினவாக அமைகின்றன. நெஞ்சுக்குச் சொல்லுதல் என்பது அகத்தலைமை மாந்தர் பிரிவின் காரணமாகவும் பிரிவு நிமித்தம் காரணமாகவும் நிகழ்த்தப் பெறுவது. அதாவது, தனிமையுறும் போதும், தனிமையுறவிருக்கும் போதும் நிகழ்த்தப்பெற்றது.

### 1.12.3. மிகுதியானவை

சங்க அகப்பாடல்களில் பாலைத் திணைக்குரியவற்றில் நெஞ்சுக்குச் சொல்லும் நிலையில் மிகுதியான பாடல்கள் அமைந்திருத்தலுக்கு அத்திணை பிரிதலும் பிரிதல் நிமித்தத்தை உரிப்பொருளாகக் கொண்டிருப்பதே காரணம் எனலாம். குறிஞ்சி நீங்கலாகவுள்ள பிற திணைகளிலும் பிரிவு உண்டு. முல்லைத் திணையில் தலைவி ஆற்றியிருப்பாள். இது தலைவன் பிரிவில் ஆற்றியிருத்தலாகும். பிரிந்த தலைவன் குறித்த பருவத்தில் வினைமுடித்து விரைந்து வருவான் என நம்பி தன் காமத் துன்பத்தைப் பொறுத்திருந்து ஆற்றியிருப்பாள். இந்நிலையில் நெஞ்சுக்குச் சொல்லுதல் நிகழ இடமுண்டு. இரங்கலாகிய உரிப்பொருள் கூறப்படும் நெய்தல் திணையில் வினை முடிக்கப் பிரிந்த தலைவன் குறித்த பொழுது வராத நிலையில் பிரிவாற்றாத தலைவி கழிபெருங் காமத்தால் இரங்கித் தவித்தல் கூறப்படும். இங்குப் பிரிவு உண்டு. நெஞ்சுக்குச் சொல்லுவதற்கும் இடமுண்டு.

### 1.12.4. நெஞ்சுக்குக் கூறுவோர்கள்

கூற்றுகள் அடிப்படையில் பார்க்கும்பொழுது தலைவன் தலைவி ஆகிய இருவர் மட்டுமே நெஞ்சுக்குச் சொல்லும் நிலை சங்கப் பாடல்களில் காணப்படுகிறது. ஏனெனில் இவ்விருவர்தான் காதற்குரிய மாந்தர்கள், காதல் மாந்தர்கள், காதல் நெஞ்சினை உடையவர்கள், பிற அக மாந்தர்கள் இவர்களின் காதலுக்குத் துணை நிற்போரும், தொடர்புடையோரும் ஆவர். தலைவன், தலைவி இவ்விருவருள்ளும் தலைவியின் கூற்றில் நெஞ்சுக்குச் சொல்லுவதாக இரண்டு பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன. பிற பாடல்கள் அனைத்தும் தலைவன் கூற்றில் இடம்பெறுவன. அக மரபில் பிரிவு நிகழ்த்துவது தலைவனே ஆகப் பிரியப்படுவது தலைவியாவாள். இதனால் பிரிவுத் தனிமையும், பிரிவுத் துன்பமும் இருவர்க்கும் உண்டு. தலைவன் பிரிவின்பொழுது நெஞ்சே துணையாகச் செல்வான். தலைவியோ தோழி ஆற்றி வைக்கவும் சுற்றமும் வீடும் சூழவிருக்கவும் இருப்பாள். இச்சூழலில்

நெஞ்சுக்குச் சொல்லுதல் தலைவியைக் காட்டிலும் தலைவனுக்கே பெரும்பான்மை உண்டு. இவ்வகையில் தலைவன் கூற்றில் நெஞ்சுக்குக் கூறுதல் சங்க இலக்கியத்தில் பெருகிக் காணப்படுகின்றது. சங்க இலக்கியத்தில் 344 பாடல்கள் தலைவன் கூற்றாக அமைந்தவை. இவற்றில் மூன்றில் ஒரு பகுதிக்கும் மேலான கூற்றுகள் நெஞ்சுக்குக் கூறுதலாக அமைந்திருத்தல் எண்ணத்தக்கதாகும்.

### 1.12.5. தலைவி கூற்று

கலித்தொகையில் நெஞ்சுக்குக் கூறுவதாகத் தலைவி கூற்றில் ஒரு பாடலைத் தவிர நெஞ்சுக்குக் கூறுவதாகத் தலைவன் கூற்றிலும் வேறு பாடல்கள் இல்லை. சங்க இலக்கியத்தில் தலைவன் கூற்றினைக் குறைவாகக் கொண்ட நூல் கலித்தொகை என்பதும் குறிக்கத்தக்கது. நாடகப் பாங்கில் உரையாடல் தன்மையில் அமைந்தவை கலித்தொகைப் பாடல்கள். இந்நூலில் அமைந்த பெரும்பான்மையான பாடல்களில் உரைப்போர் உரையும், கேட்போர் உரையும் சேர்ந்து அமைந்திருத்தலைக் காணலாம். தலைவி கூற்றில் அமைந்த நெய்தற் கலிப்பாடலின் கீழ்க்குறிப்பு, காப்பு மிகுதிக்கண் ஆற்றாத தலைவி தலைவன்பாற் சென்ற நெஞ்சினை நோக்கி அறிந்து கூறியது என அமையும். தலைவி தன் காதற்குரிய தலைவன் பிரிந்து சென்றானாகவும், தன் நெஞ்சு அவனைக் காணவும் அவன் காதலைப் பெறவும் அவன்பின் தொடர்ந்து சென்றதாகவும் சென்ற நெஞ்சு யாதும் பெறாது திரும்பி வந்ததாகவும், வந்த நெஞ்சினை விளித்து வினாவுவதாகவும் இப்பாடல் அமையும்.

> மாணாநோய் செய்தான்கண் சென்றாய் மற்றவனைக்
> காணவும் பெற்றாயோ காணாயோ மடநெஞ்சே,
> அல்லல்நோய் செய்தான் கண்சென்றாய் மற்றவனை நீ
> புல்லவும் பெற்றாயோ புல்லாயோ மடநெஞ்சே
> செறிவளை நெகிழ்த்தான் கண்சென்றாய் மற்றவனை நீ
> அறியவும் பெற்றாயோ அறியாயோ மடநெஞ்சே,[59]

என நெஞ்சம் விளித்துப் பேசப்படுகிறது.

தலைவன் பிரிவின்கண் வேங்கை மீதூர்ந்த தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியது என்னும் குறிப்போடு காணப்படும். அகநானூற்றுப் பாடலில் தலைவி தன் நெஞ்சை விளித்து, தான் கண்ட கனவினைக் கூறாதது போல நம் நுண்ணிய காதலைப் பிறர் அறியாதவாறு மறைத்து வைத்துள்ளோம். கொல்லிமலை உச்சியில் பரவிச் செல்லும் அருவியின் ஒலிபோல ஊரில் அவர் எழும்படி பிரிந்து சென்ற நம் தலைவர் பணியின் பறம்புமலைச் சாரலில் குருவிகள் காலையில் இரை தேடிச் சென்று துன்பம் தரும் மாலைப் பொழுதில் திரும்பி வருவதுபோல் வருவர் என உணர்ந்த மடநெஞ்சே! அவர் வாரார் என்பதை நீ அறிவாயாக என்று கூறுவதுடன், நானே அவர்வழிச் செல்வேன் என்றும் கூறுகிறாள். இப்பாடற் பொருட் குறிப்பால் இது களவுப் பாடல் என்பதும் தலைவன் பொருள் காரணமாகப் (வரைவிடை வைத்துப் பொருள் தேடுதற்காகப்) பிரிந்தான் என்பதும் உணரப்படுகின்றது.

**அழிநீர் மீன் பெயர்ந் தாங்கள்**

**வழிநடைச் சேரல் விலிந்திசின் யானே**[60]

என்னும் இப்பாடலின் இறுதியடிகள் சிறப்பாக அமைந்துள்ளன. தலைவன் வினை காரணமாகப் பிரியுங் காலத்துத் தலைவி தலைவனுடன் உடன் செல்லுதலும் தலைவன் பிரிந்து சென்றவிடத்துத் தலைவி தானே சென்று தலைவனைச் சேரலும் தமிழ் அக மரபில் இல்லை என்பர்.

**நீரிடை இருக்கும் மீன் தானே கரை சேர்வதில்லை**

**சேரின் இறந்துபடும்**[61]

எனக் குறித்த மேலே காட்டிய அகநானூற்றுப் பாடலடிகளின் செய்தி இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஆயின் தலைவி தலைவன் வராதபோது தானே தலைவன் இருப்பிடம் நாடிச் செல்வேன் என்று கூறுவதற்குத் தொல்காப்பியர் அக மரபில் விளக்கம் தந்துள்ளார்.

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**

**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத்**

தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு

காமக் கிழவ னுள்வழிப் படினும்

தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்

ஆவகை பிறவுந் தோன்றுமன் பொருளே[62]

*எனினும் கற்பு நிலையில் தன் நெஞ்சோடு சொல்லியமைக்கு எடுத்துக்காட்டாக எப்பாடலும் அமையவில்லை. தலைவன் கூற்றில் காதலுக்கும் கடமைக்கும் இடையே நடக்கும் போராட்டம் நெஞ்சுக்குக் கூறும் ஒரு பாடலில் நன்கு காட்டப்படுதலைக் காணலாம்.*

ஆள்வினைக் கெழுந்த அசைவில் உள்ளத்து

ஆண்மை வாங்கக் காமந் தட்பக்

கவைபடு நெஞ்சங் கட்கண் டனையே

இருதலைக் கொள்ளியிடை நின்று வருந்தி

ஒருதலைப் பாடாஅ உறவி ரோன்றனம்[63]

*இப்பாடலடிகளில் வினையாற்றக் கருதி எழுந்த தளர்வில்லா நெஞ்சின்கண் உள்ள ஆண்மை முன்னே இழுக்கவும், காமமானது பின்னே நின்று தடுக்கவும் இரு தன்மைத்தானே நெஞ்சமே நாம் மூங்கில் கணுக்களின் இருபக்கமும் தீப்பற்றி எரிய அதனுள்ளே நின்று எப்பக்கமும் செல்லா நிலையில் வருந்தித் திரியும் எறும்பினை ஒப்போம் எனத் தலைவன் கூறுதல் காட்டப்படுகின்றது. எனினும்,*

. . . . . . . . . யாக்கைக்கு,

உயிரியைந் தன்ன நட்பின் அவ்வுயில்

வாழ்தல் அன்ன காதல்

சாதல் அன்ன பிரிவரி யோளே[64]

*எனவும் கூறப் பெறுவதற்கு அமைந்தவள் தலைவியாயினும் அவளைப் பிரிந்து வினையாற்றச் செல்பவனே தலைவன் எனக் காட்டுவது அக மரபாகும்.*

### 1.12.6. தோழி கூற்று

தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்வதனால் தலைவிக்கு உண்டாகும் பெரும் துன்பத்தினைத் தலைவன் அறிவான். ஆதலின் பொருளுக்காகப் பிரியவிருக்கும் அத்தலைவன் தன் பிரிவை வெளிப்படையாகத் தலைவியிடம் தெரிவிப்பதில்லை. பாடல்களிலும் அவ்வாறு செய்தி கூறப்படுவதில்லை. தலைவியின் தோழியிடம் தன் பிரிவைத் தலைவன் சிலகாலம் தெரிவிப்பதுண்டு. பெரும்பான்மையும் அவன் தன் பிரிவைக் குறிப்பால் உணர்த்துதலே உண்டு. அதனை உணரும் தலைவி அப்பொழுதே பெருந்துன்பத்திற்கு உள்ளாவாள். தோழியோ பிரியக் கருதும் தலைவனின் செலவைத் தடுத்துத் தலைவிக்கு நேரவிருக்கும் துன்பத்தை நீக்க முற்படுவாள். இத்தன்மையில் பிரியக் கருதும் தலைவனின் செலவைத் தவிர்க்கும் படியாகக் கூறும் தோழியின் கூற்றில் அமைந்த குறுந்தொகையிலும் அகநானூற்றிலும் இடம்பெற்றுள்ள சில பாடல் செய்திகள் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதுகிறான். அவ்வாறு பிரியக்கருதும் தலைவனிடத்தில் பிரிந்து செல்லுதற்கமைந்த சுரவழியின் கொடுமையைக் கூறி அவ்வழியில் நிகழும் துன்பத்தை அவனுக்கு உணர்த்துகிறாள். ஒரு தோழி, இலைகளற்ற புன்மையான அடியினையுடைய கூகாய் மரத்தினது நிரம்பா நிழலில் தங்குதற்குக் காரணமான துன்பமுடைய கடத்தற்கரிய இக்காட்டைக் கடந்து செல்லுதல் உமக்கு விருப்பமோ? என்று கூறுவதாக ஒரு குறுந்தொகைப் பாடற்செய்தி அமைகிறது.

> கண்ணி மருப்பின் அண்ணல் நல்லேறு
>
> செங்கோற் பதவின் வார்க்குரல் கறிக்கும்
>
> மடக்கண் வரையா நோக்கி வெய்துற்றுப்
>
> புல்லரை உகாஅம் வரிநிழல் பதியும்
>
> இன்னா அருஞ்சுரம் இறத்தல்
>
> இனிதோ பெரும் இன்றுணைப் பிரிந்தே[65]

இனிய காதலியைப் பிரிந்து கண்ணி போன்று விளைந்த கொம்பினை உடைய தலைமைப்பாடுடைய நல்ல எருது சிவந்த தண்டை உடைய அறுகம்புல்லின் நீண்ட கதிரினை மேய்ந்து திரியும் மடப்பமுடைய மலை ஆவினைக் கண்டு பெருமூச்சு விட்டு நிற்கும் கடத்தற்கரிய பாலை நிலத்தில் செல்லுதல் மிகவும் துன்பத்தைத் தரக்கூடியது என்று பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைவனுக்குக் கூறுகிறாள். பொருளுக்காக நீண்ட பாலைவழிப் பயணம் செல்லும் தலைவன் இடையில் தங்க நேர்ந்தாலும் நிழலற்ற கொய்யா மரத்தடியில்தான் தங்க நேரிடும். அப்பாலை நிலத்தின் வெப்ப மிகுதியால் பசும் புற்களும் காய்ந்து செந்நிறத் தண்டினை உடையதாக இருக்கும். அவற்றையே மேய்வனவாய்த் திரியும் பசுக்களை எருதுகள் சேர்தல் நினையாது பெரும் மூச்சுவிட்டிருக்கும் எனப் பாலை நிலத்தின் காட்சி கூறப்படுகின்றது. இப்பாலை வழியில் சென்று பொருள்தேட வேண்டுமா? என்பது தோழி தலைவனுக்கு உணர்த்தும் செய்தியாகும். இதனால் தலைவனின் செலவைத் தவிர்க்கும் படியாகக் கூறுதலை அறியலாம்.

### 1.12.7. தலைவியின் பிரிந்த வாழ்க்கை நிலை

களவொழுக்கத்தில் தலைவியிடம் குறிப்பிடத்தக்க பண்பு ஒன்று உண்டு. தலைவனின் ஆண்மையிலும் அழகிலும் எவ்வளவுதான் ஈடுபட்ட போதிலும் தலைவி தன் உணர்வுகளை வெளிப்படையாகச் சொல்லுதல் இல்லை. தலைவியின் வேட்கை,

> புதுக்கலத்துப் பெய்தநீர் புறத்துப் பொசிந்து காட்டுமாறு போலும்[66]

உணர்வினை உடைத்தென்று கூறுவர், தொல்காப்பியர்

> தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல்
> எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்
> பிறநீர் மாக்களின் இன்றிய ஆயிடைப்
> பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப[67]

காதல் உணர்வுகளில் தலைவனும் தலைவியும் ஒரு நிகரானவர் ஆயினும் தலைவியின் காதல், நுட்பமும் செறிவும் உடையதாகும்.

தலைவியின் பெரும்பான்மையான கூற்றுக்கள் அவளுடைய பிரிவுத் துன்பத்தை உணர்த்துவதாக அமைந்து காணப்படுகின்றன. களவு நிலையில் தலைவன் சிறைப்புறமாக இருக்க அவன் மனத்தில் படுமாறு கூறப்பட்ட கூற்றுக்கள் (அ) வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவனின் நினைவால் தலைவி கொள்ளும் துன்பத்தைப் பற்றிய கூற்றுக்கள் இடம் பெறுகின்றன. வரைவிற்குப்பின் (கற்பு நிலையில்) பொருள் (அ) போர்வயிற் பிரிந்து சென்ற தலைவனின் வரவை எதிர்நோக்கி இருக்கும் மனநிலை (அ) பரத்தையிற் பிரிந்த தலைவனுக்கு வாயில் நேரும் (அ) மறுக்கும் தலைவியின் மனநிலைகள் சங்கப் பாடல்களில் காட்டப்பெறுகின்றன. புணர்ந்த தலைவன் வரையாமையால் தோன்றும் மனப்போராட்டங்கள் களவினும் பிரிந்த தலைவன் மனப்போராட்டங்கள் களவினும் பிரிந்த தலைவன் வாராமையால் தோன்றும் மனப் போராட்டங்கள் கற்பிலும் காணப்படுகின்றன.

தாங்கொணாது துன்புறுத்தும் பிரிவும், தலைவன் கொள்ளும் தகாத உறவும் (பரத்தை ஒழுக்கம்) தலைவியின் துன்பத்திற்குக் காரணங்களாகின்றன.

1) தன் துயரைக் கட்டுப்படுத்துதல்

2) தலைவனைக் குறை கூறாமை

3) தலைவனின் வரவை எதிர்நோக்கிப் பொறுமையுடன் இருத்தல்

இவற்றின் மூலம் முல்லைத் தலைவி தன் உயர் பண்புகளை வெளிப்படையாக உணர்த்தி நிற்பாள் எனத் தனிநாயக அடிகள் குறிப்பிடுவர். இஃது இலக்கணம் கூறுகின்ற முல்லைத் தலைவியின் உணர்வு. ஆனால் பருவங்கண்டு தலைவனின் வரவை எதிர்நோக்கும் இலக்கியத் தலைவியின் முல்லைத் திணைப் பாடல்களில் ஆர்வமனநிலை, அவளை உணர்ச்சிவசப்பட்ட நிலையிலேயே காட்டுகிறது. பிரிந்த தலைவன் வராமல் இருப்பதற்குரிய காரணங்கள் தன்னிடத்துத் தலைவனது அன்பில்லாத் தன்மையும், தன்னை நினையாமையும்

ஆகும் என்று தலைவி கருதுவாள். பிரிவுத் துயரின் உச்ச நிலையில் தோன்றும் காமம் மிக்க கழிபடர் கிளவியால் தலைவி, குருகு, கிளி, சேவல், அலவன் போலும் உயிருள்ளவற்றை (அ) கடல், மாலை, திங்கள், ஞாயிறு போலும் உயிரற்றவைகளை விளித்து ஆற்றாது புலம்புவாள். இந்நிலையில் தலைவியின் உணர்வுகள் எல்லை மீறியவையாகவும் சொற்கள் நாணம் கடந்தனவாகவும் அமையும்.காரணமின்றிச் சிரித்தல், துயரை அடக்காமல் தன் நிலையைப் புறத்தார்க்கு எடுத்துரைத்தல், மதி மயங்கிப் புலம்புதல் போன்றன காமம் மீக்கூர்ந்த நிலையில் தலைவியின் செயல்களாகக் கூறப்படுகின்றன.

**1.12.8. தலைவனின் பிரிவு வாழ்வு**

அகத்திணையில் தலைவனுக்கு எனச் சிறப்பு இடம் உள்ளது.

1) தலைவி கொண்டிருக்கும் காதலின் அளவைத் தலைவன் பல நிலைகளில் போற்றுவதும்

2) தலைவனின் பிரிவின்போது தலைவியும் தோழியும் வருத்தமுற்று பலவாறாகத் தலைவனை நினைந்துப் பாடுவதும், தலைவனுக்குரிய பாடல்களில் அழகாகப் புலவர்கள் எடுத்துக் கூறியிருப்பார்கள். தலைவனின் மனம் பிரிவு நிலையில் தலைவியுடன் உடனிருக்கும்போதும், அவளைப் பிரிந்திருக்கும்போதும் அவனது மனம் முழுதும் நிறைந்திருப்பது தலைவியின் நினைவே. தலைவிக் கூற்றிலும் தோழியின் கூற்றுக்களிலும் களவு காலத்தில் தலைவன் இன்ப நாட்டம் கொண்டு பிரிவை நீட்டிப்பவனாகவும் காட்டப்படும் தலைவன், கற்பு வாழ்வில் பொருள் நாட்டம் கொண்டு பிரிவை நீட்டிப்பவனாகவும் காட்டப்படுகிறான்.

1) பிரிந்த தலைவியின் துயரை எண்ணி அவன் கொள்ளும் வருத்தமும்

2) பொருள் நாட்டமும் போர் நாட்டமும் விடுத்துத் தலைவியைச் சந்திக்க அவன் கொள்ளும் துடிப்பும் கார்காலம் வரும்முன் தலைவியோடு சேர்ந்து இன்புற்று வாழ விரையும் மனவேகத்தையும்,தலைவியைக் காணும் வாய்ப்பு நெருங்கியபோது அவன் கொண்டிருக்கும் மகிழ்ச்சியும் அவனது கூற்றுக்களில்

முழுதும் பரந்துபட்டு காணப்படுகின்றது. தலைவனின் பிரிவுக் கால வாழ்க்கையின் நிகழ்வுகளாக,

1) தலைவன் கூற்று

2) புணர்ந்து நீங்கும் தலைவன்

3) அல்ல குறிப்பிட்ட தலைவன்

4) தோழியை இரந்து பின்நிற்கும் தலைவன்

5) இடித்துரைக்கும் பாங்கன் முன் தலைவன்

6) மடல் வலித்த தலைவன்

7) உடன் போகும் தலைவன்

8) பிரிவு வலித்த தலைவன்

9) இடைச்சுரத்து நின்ற தலைவன்

10) பாசறைக்கண் தலைவன்

11) வினைமுற்றி மீளும் தலைவன்

எனப் பல்வேறு நிலைகளில் அமையும். இதில் அமைந்த அவன் மனநிலை தலைவியின் மனதினைத் திரையிட்டுக் காட்டுகின்றது.

இடைச்சுரக் காட்சிகள், இயற்கை உயிர்கள் கொள்ளும் இன்பம் எனப் பிற நிகழ்வோ, உணர்வோ அவனது சிந்தனையை ஊடறுப்பின் அவை தலைவியைச் சந்திக்கத் தடைப்படுத்தி நிற்பனவாக (அ) தலைவியின் நினைவைத் தூண்டி அவனை இன்புறுத்தி நிற்பனவாக அகப்பாடல்கள் அமைகின்றன. பிரிவு வலித்த தலைவனின் நெஞ்சும் அதனை மறுத்துச் செலவழுங்க விரும்பும் அவனது விருப்பத்தை வெளியிடுவனவாக அமைகின்றன. பிரிய நினையும் நெஞ்சிற்குப் பிரிதல் வேண்டாம் என அமையும் பாடல்களில் தலைவனின் வாழ்வு காட்டப்படுகிறது.

பிரிய விரும்பும் தலைவனின் நெஞ்சிற்குப் பொருளால் தோன்றும் பயன்கள் நினைவுக்கு வருகின்றன. பிரிய மறுக்கும் தலைவனுக்குப் பொருளின்

நிலையாமை மனத்துள்படுகிறது. தனது விருப்புடன் முரண்பட்ட நெஞ்சோடு கலந்துரையாடித் தலைவன் செலவழுங்குவதைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. ஆள்வினை ஊக்குதலால் பிரிதலை நன்று எனக் கருதிய நெஞ்சினுக்குத் தலைவி தரும் இன்பத்தை எடுத்துரைத்தும், தலைவியைப் பிரிய இயலாத தன் நிலையை விளக்கியும் பொருளின் நிலையாமையை எடுத்துரைத்தும் செலவழுங்குமாறு தலைவன் தன் மனதைத் தடுக்கிறான். தலைவன் கூற்றுப் பாக்களில்,

1) நாளது சின்மை

2) மூப்பின் வரவு

3) காமத்தின் இயற்கை என அறிந்து

1. பிரிவைத் தவிர்க்குமாறும்

2. தலைவியை மதிக்குமாறும்

3. அவளை நினைந்து மகிழுமாறும்

நெஞ்சிற்கு அறிவுரைகள் கூறும் செய்திகள் காணப்படுகின்றது. தனது விருப்பத்திற்கு முரணாகப் பிரிவு வலித்த நெஞ்சை மட்டும் பிரிந்து செல்லுமாறும் வாரேன் எனவும் தலைவன் கூறி நிற்கும் காட்சிகள், பிரிவுப் பாடல்களில் பெருகிக் கிடக்கும் செய்திகள் பிரிந்து பெறும் பொருள் வளமும், இருந்து பெறும் இனிய வளமும் ஒப்பிடப்பட்டுத் தலைவி தரும் இன்பத்திற்கு முன் எதனையும் பொருட்படுத்தாத தலைவனின் மன ஓட்டத்தைப் பொருள் உயிர் பிரிவுப் பாடல்களில் காணப்படுகின்றன.

களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல்
இழந்த நாடுதந் தன்ன
வளம்பெரிது பெறினும் வாரலென் யானே[68]
அரிது செய் விழுப்பொருள் எளிதினிற் பெறினும்
வாரேன் வாழி என் நெஞ்சே[69]

இறந்துசெய் பொருளும் இன்பம் தரும் எனின்

இளமையிற் சிறந்த வளமையும் இல்லை[70]

என்பன தலைவனின் எண்ணங்களாக அமைகின்றன.

தலைவியுடன் கொள்ளும் உறவினும் உயர்ந்த பொருள் இல்லை என்பது தலைவனின் முடிவு. தன் முடிவுடன் முரண்பட்ட நெஞ்சினைப் பிரித்துப் பார்க்கிறது. தலைவியின் துன்பத்தைக் கருதிப் பார்க்காதத் தன் நெஞ்சுப் பிரிவில் மகிழும் நெஞ்சமாகவும் தன்னைப் பிரிந்து தனித்துறைய விரும்பும் அந்நெஞ்சு அன்பற்ற நெஞ்சாகவும் தலைவனின் நெஞ்சு தனிமைப்படுத்திச் சாடப்படுகிறது. இம் முரண்பாட்டால் பொருளாசை கொண்ட உள்ளமும் பிரிதற்குக் காரணமான பொருளும் எள்ளி நகையாடப்படுகின்றன. பொருள் வயிற் பிரிவு கொண்டோர் அறிவற்றவராகவும் அளியராகவும் செலவழுங்கிய தலைவனால் கருதப்படுகின்றனர்.

### 1.12.9. பிரிவுத் துன்பம்

பாலை எனும் சொல்லே பிரிதல் என்னும் சொற்பொருளை அடிப்படைப் பொருளாகக் கொண்டது. மற்ற திணைக் குறியீடுகளான குறிஞ்சி முதலியவற்றுக்கு இல்லாத வகையில் பாலை காரணக் குறியீடாக அமைந்த கலைச்சொல்லாக ஆளப்பட்டுள்ளது. எனவே பிரிதல் என்பதே இதற்கான உரிப்பொருளாக உரிமை பூண்டிருப்பதை இந்தப் பெயரீடே வெளிப்படுத்துவதாக உள்ளது. இந்தப் பிரிவு பற்றிய கூறுகளும் வரையறைகளும் அகத்திணையியலிலேயே மிகுதியும் உரைக்கப்பட்டுள்ளதை கவனத்தில் கொண்டு திணைக் கோட்பாட்டை ஆராய வேண்டியுள்ளது. நடுவணைத்திணைகள் அனைத்திற்கும் பிரிவு ஒழுக்கம் பொதுவானது என்பதை உணர்த்தும் நோக்கில் பிரிவு பற்றிய தகவல்கள், தலைவன் தலைவியின் பிரிவுத் துன்பங்கள் அமைந்துள்ளன.

இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்

உரியதாகும் என்மனார் புலவர்[71]

கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவனி ரங்கலும்
உண்டென மொழிப ஓரிடத்தான[72]
பொருள் வயின் பிரிதலும் அவர்வயின்
முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை[73]

*என்றவாறு பிரிவு பற்றிய செய்திகளை வெளிப்படுத்துவதாகப் பாலையின் பொதுப் பண்பு வெளிப்படுகிறது. பொருள்வயின் பிரிவும், நாடுகாவற்பிரிவும் சங்க அகத்திணைப் பாடல்களில் முதன்மை இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பொருள்வயின் பிரிவு பாலைப் பாடல்களில் முதன்மையானதாகவும், மிகுதியானதாகவும் பாடப்பட்டுள்ளது. கணவனின் பயணம் குறித்த மனைவியின் கவலை பாலைக்குரிய ஒழுக்க வடிவமாகும். பிரிவு பற்றிய பாடல்களில் தலைவனைக் குறித்த தலைவியின் கவலையானது அவன் கடந்து செல்ல வேண்டிய காடுகள் மலைகளையும் அவ்வழியில் உள்ள கொடிய கொள்ளைக்காரர்களையும் (கள்வர்களையும்) குறித்த வருணனைகளால் நுட்பமாக விளக்கிக் காட்டப்படுகிறது.*

### 1.12.10. தலைவியின் பிரிவுத்துயர்

*தனக்கு இருக்கும் பிரிவுத் துயர் தலைவனுக்கு இல்லை என்ற எண்ணம், தன் பிரிவுத் துயரைத் தலைவன் பொருட்படுத்தவில்லை என்ற நினைவு சூளுரைத்துப் புணர்ந்து சென்றவன் மறந்து விட்டானோ என்ற ஐயம், தலைவன் புணர்வில் காட்டிய ஈடுபாடு விரைவில் காட்டாமையால் தோன்றிய அதிர்ச்சி இவையனைத்தும் தலைவியின் பிரிவுத்துயரை ஆழப்படுத்தும் பின்புலங்கள் ஆகும்.*

*1.தலைவிக்கு மனத்துயரை உருவாக்குவது*

*2.தலைவனின் வரவு பற்றிய உறுதிப்பாடில்லா நிலை*

*3.அவளது மனத்துயரை ஆழப்படுத்துவது*

*4.தனது வருங்காலம் பற்றிய உறுதிப் பாடின்மை*

தலைவியைத் தேற்றத் தோழி கைக் கொள்ளும் அணுகுமுறைகளுக்கசேற்ப, பிரிவுத்துயரைத் தலைவி வெளியிடும் முறைகளும் வேறு படுத்துகின்றன. தன் துயர் கண்டு தோழி கவன்ற போது தலைவி தன் துயரை மறைத்துத் தோழியைத் தேற்ற முனைகிறாள்.

பிரிந்த தலைவன் துறந்து விட்டான் என்ற ஐயம் தலைவியின் உள்ளத்தில் எழும்போது அவளது துயரக்குரல் காமம் மிக்கக் கழிபடர் கிளவியாக உருக்கொள்கிறது. காமம் மிக்கக் கழிபடர் கிளவி கூறும் தலைவியின் உணர்வுகள் எல்லை மீறியவை. சொற்கள் நாணம் மீறியவை. இக்கூற்றுகள் தோழியை நோக்கிக் கூறப்படுவன அல்ல. அஃறிணை உயிர்களையோ, பொருள்களையோ, தன் நெஞ்சையோ, விளித்துக் கூறப்படுவன. இவை பதிலை எதிர்நோக்கிப் பிறர்க்கு உரைக்கப்படுவன அல்ல. பிறர் வாயிலாக ஆறுதல் பெறுவது இக்கூற்றின் நோக்கமன்று, தன் ஆற்றாமையை வெளியிடுவது இதன் நோக்கமாகும்.

பிரிதல், இரங்கல் ஆகிய உரிப்பொருள்கள் தலைவியின் துயருற்ற மனத்தில் வேறுபாடு காட்டவில்லை. அளவில்தான் வேறுபாடு காட்டுகின்றன. தலைவியின் மனநிலையை முழுவதுமாக உட்கொண்டு கவிஞர்கள் அவலத்தால் வாடுகின்ற, ஆனால் நம்பிக்கையை முழுவதும் இழக்காத தலைவியின் கூற்றுக்களைப் பாலையிலும் நம்பிக்கையை முழுதும் இழந்து அவலத்தால் வாழுகின்ற தலைவியின் கூற்றுக்களை நெய்தலிலும் பிரித்து வைத்த நுண்மை அறிவு இங்குச் சிந்திக்கத்தக்கதாக அமைகிறது.

### 1.12.11. பரத்தைப் பிரிவின் காரணமாக ஏற்படும் தலைவியின் மனநிலை

தலைவனின் பரத்தையிற் பிரிவில் தலைவிக் கூறும் கூற்றுகள் பரத்தமை மிக்க சமுதாய நிலையைப் புனையும் நோக்கம் உடையன அல்ல. தொல்காப்பியர் களவில் தலைவன் கொள்ளும் பரத்தமை பற்றி விதி வகுப்பினும் ஆக இலக்கியங்களில் அதற்குச் சான்று இல்லை. தொல்காப்பியர் சுட்டும் காமக்கிழத்தி பொதுமகளாகக் காட்டப்படவில்லை. தலைவி

குறிப்பிடும் தலைவன் - பரத்தை உறவுக்குப் பொருள் அடிப்படை அன்று. அன்பும் காமமுமே அதன் உயிர்நாடி. தலைவியின் ஊடலில் தலைவன் பரத்தையை மாற்றுவதாகக் குறிப்பிடப்படுவது போன்று பரத்தை தலைவனை மாற்றியதாகக் குறிப்பிடப்படவில்லை.

முதலில் மணம் செய்த தகுதி தலைவனின்வழி சிறந்து விளங்க வழித் தோன்றல்களை வழங்கும் உரிமை - இவை இரண்டுமே தலைவனின் தனிச்சிறப்புகள் புலவர்களால் பரத்தைக்கு வழங்கப்படாதவை. உணர்வாலும் புணர்வாலும் தலைவிக்கு, ஒரு நிகராகப் பரத்தையைப் படைப்பின் ஊடல் உணர்வுகள் மெருகுபடும் எனக் கவிஞர்கள் கருதியிருக்கலாம்.

இளமையும் அழகையும் கலக்கிக் காட்ட விரும்பும் பரத்தையின் உள்ளத் தோய்வினின்று குடும்பநலம் பேணும் தனது வேட்கையையும் அகத்தூய்மை காக்கும் தனது ஆர்வத்தையும் வேறுபடுத்திக் காட்ட விரும்பும் தலைவியின் முனைப்பு அவளது ஊடல் பாடல்களின் உயிர்நாடி. தனது பரத்தமையை மறுக்கும் தலைவனின் முன் நின்று தலைவி கூறும் சொற்கள் அளவானவை. ஆனால் கூர்மையானவை. தலைவியின் ஊடல் கூற்றுக்கள் அவளது மன உணர்வை வெளிப்படுத்தி நிற்பன அல்ல. தலைவியின் மன உணர்வை வெளிக்கொணரக் கூறப்பட்டவை.

பிரிவினால் தலைவி மட்டும் துயருருவாள். அந்தத் துயரம் தலைவனுக்கு இல்லை என்ற கருத்து எழக்கூடும். ஆனால் தலைவியைப் போன்ற மனதும் நெஞ்சும் தலைவனுக்கும் உள்ளது என்பதைச் சங்க இலக்கியங்கள் செப்புகின்றன. போருக்குச் செல்லும்போதும், போரின் போதும் அவனது அடிமனம் தலைவிக்காக ஏங்கும். ஒருவினையைச் செய்வதற்காக வெளி உலகம் செல்லும் தலைவன், தலைவியை நினைந்து நினைந்து ஏங்கும் நிலையைக் காணமுடியும். அதேபோல் வினைக்குச் செல்லுகின்ற போதும் வினையின் போதும் தலைவனின் நிலையை நெடுநல்வாடை காட்டுகிறது. எனவே பிரிவுத் துன்பம் என்பது தலைவிக்கு எப்படியோ அப்படியே தலைவனுக்கும் என்ற கருத்தைப் பெறலாம்.

### 1.12.12. தலைவனின் பிரிவுத் துன்பம்

தலைவன் காதல் நினைவுக்கும் கடமை உணர்விற்கும் இடையே இடைச்சுரத்துத் தலைவன் கொள்வது மனத்தடுமாற்றம். மன ஆசைகளுக்கும் அதன் செயலாக்கமின்மைக்கும் இடையே மடலேறும் தலைவன் கொள்வது மனமுறிவு. மனத் தடுமாற்றம் தலைவனைத் தயங்கி நிற்கச் செய்கிறது. இடைச்சுரத்துத் தலைவன் தன் மனத் தடுமாற்றத்தின் காரணமாகத் தன்னைச் சூழ்ந்த உலகை வெறுத்து நோக்குகிறான். ஆதலின் தன்னை சூழ்ந்த இயற்கைக் காட்சிகள் வறண்டு காட்சியளிக்கின்றன. மடல் தலைவன் தான் கொள்ளும் மன முறிவின் காரணமாகத் தன்னை வெறுத்து நோக்குகிறாள். ஆதலின் தன் வாழ்வு வறண்டு காணப்படுகிறது.

இடைச்சுரத்துத் தலைவனின் உள்ளத்தில் தலைவியின் நினைவு மையப்படுத்தப்பட்டிருந்தது. ஆதலின் தலைவி பற்றிய சிந்தனை அவன் பேச்சில் பெரிதும் ஊசலாகிறது. மடலேறிய தலைவனின் உள்ளத்தில் தலைவியைத் தரமறுத்ததால் தோன்றிய தனது நிலை மையப்படுத்தப்பட்டிருந்தது. ஆதலின் தனது நிலை பற்றிய சிந்தனை அவன் பேச்சில் பெரிதும் மாற்றம் தெரிகிறது.

### 1.12.13. பிரிவு

பிரிவு வலித்த தலைவனின் கூற்றுக்கள் பிரிய விரும்பும் நெஞ்சினைத் நெருட்டிச் செலவழுங்க விரும்பும் அவனது விருப்பத்தை வெளியிடுபவை. பிரிய நினையும் நெஞ்சிற்குத் தரும் அறிவுரைகள் இவை.

செலவழுங்குமாறு தலைவன் நெஞ்சிற்குத் தரும் இவ்வறிவுரைகள் தோழி தலைவனுக்குத் தரும் அறிவுரைகளுடன் ஒன்றுபட்டு விளங்குகின்றன. ஆனால் செலவழுங்கிய தலைவன் தன் பிரிவுச் சிந்தனை மாறியதற்குத் தோழியின் வற்புறுத்துதலைக் காரணம் காட்டாது தலைவியின் நினைவையும் மொழியையும் காரணம் காட்டுகிறான். அனைத்து நிலையிலும் தலைவியிடம் ஆராக்காதல் உடையவனாகத் தலைவனைக் காட்டும் புலவர்கள், பிரிவு

வலித்த நிலையில் மட்டும் தோழியின் அறிவுரையைப் பெற்று அவன் தலைவியோடு தங்கும் சிந்தனை கொண்டதாகக் காட்டின் அது தலைவனின் படைப்பில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடும் என நினைத்திருக்க வேண்டும்.

**1.13. தொகுப்புரை**

சங்க இலக்கியத்தில் அகத்திணைப் பிரிவுகள் என்ற முதல் இயல் அகத்திணைப் பிரிவுகள் பற்றிய பொதுச் செய்திகளை அளித்தது. தொல்காப்பியர் காட்டும் பிரிவுகள் பற்றிய செய்திகளும் உரையாசிரியர்கள் தரும் விளக்கங்களும் இவ்வியலில் கண்டறியப்பட்டன. அகம், புறம் என்ற வாழ்வியல் பாகுபாட்டில் அகம் பற்றிய செய்திகள் அறிஞர்தம் கருத்துகள் முறையே எடுத்தாளப்பட்டுள்ளன. மக்கள் வாழ்க்கையுடன் இணையப்பெற்ற நிலம், திணை ஆகியவற்றைப் பற்றிய செய்திகள் விளக்கப்பட்டன.

1. அகத்திணை மாந்தர்கள், ஒழுகலாறுகள், அகத்திணைப் பிரிவு, பிரிவுக்குரியோர், தொல்காப்பியர் அகம் என்ற சொல்லிற்குத் தரும் விளக்கம் அதற்கு உரையாசிரியர்கள், பிறர் தரும் கருத்துக்கள் ஆகியனவும் கண்டறியப்பட்டன. அகம் என்பதற்கு மனத்தின் வெளிப்பாடு என்றும் அக உணர்வு பலதரப்பட்டது என்ற உண்மையும் பெறப்பட்டுள்ளது.
2. ஐவகை நிலத்தின் பின்னணி, ஐவகை நில மக்களின் இயல்பு, வாழ்வியல் சூழல் ஆகியவற்றைப் பற்றிய கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நில இயல்புக்கு ஏற்றபடி மக்கள் வாழ்க்கை இருப்பினும் எவ்வகை நிலத்தில் பிரிவு ஏற்பட்டாலும் மன உணர்வு ஒன்றே என்ற கருத்தும் தெளிவும் பெறப்பட்டது. பிரிவின்போது தலைவியின் துயரை ஆற்றுப்படுத்துகின்ற தோழியின் நற்பண்புகள் அறிய வந்துள்ளன.
3. உளவியல், காலநிலை, பருவமாற்றம் ஆகியவற்றின் குறிப்பால் தலைவி தம் கருத்துக்களை வெளிப்படுத்துதலும் இவற்றை வைத்துக் கொண்டே

வாழ்வின் பல்வேறு நுட்ப திட்பங்களைத் தலைவிக்குப் பிறர் கூறுதலும் உளவியல் பண்போடு கூறப்பட்டுள்ளன.

4. பெருந்திணை, கைக்கிளை பற்றிய குறிப்புகள் தனித்தனியே காட்டப்பட்டுள்ளன. இழிதிணை எனக் கருதப்பட்ட இத்திணைகள் வழியேயும் வாழ்வின் நுட்பங்கள், வாழ்வியல் கூறுகள் ஆகியன உரையாசிரியர்களால் எடுத்தோதப்பட்ட திறனும் வெளிக் கொணரப்பட்டது.

5. தொல்காப்பியர் கூறும் பிரிவுகள் கண்டறியப்பட்டு இப்பிரிவுகள் களவில் நிகழ்கின்றபோது தலைவியின் மனநிலை, கற்பில் நிகழ்கின்றபோது தலைவியின் மனநிலை ஆகியவற்றின் வேறுபாடுகள் எடுத்துரைக்கப்பட்டன. உயர்ந்தவர் மாட்டு நிகழும் சில வகைப் பிரிவுகள் அக்காலத்தில் சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் காட்டுவதாக அமைந்திருந்ததையும் உய்த்துணர ஏதுவாக உள்ளது.

6. அந்தணர்களின் ஆதிக்கம் தலைதூக்கி நின்ற நிலை நேரடியாகவும், மறைமுகமாகவும் இருந்தது என்ற உண்மையும் பெறப்பட்டன. குறிப்பிட்ட சில உயர்வுகள் அனைத்தும் அந்தணர்களை முன் வைத்துப் பேசப்பட்டது என்பதும் தெரிய வந்துள்ளது. கூற்றுகள் வாயிலாகத் தலைவன், தலைவி, பாங்கன், தோழி, நற்றாய், செவிலி ஆகியோரின் மன எண்ணங்களும் அவர்கள்தம் பண்புகளும் தெரிய வந்துள்ளன. தலைவியின் கூற்று வாயிலாக அவளது உளப்பாங்கும் உளவியலும் விளக்கப்பட்டன.

7. தலைவனைத் தலைவி பிரிந்தபோதும், அவளது வாழ்வில் துயரம் நிகழ்ந்தபோதும் ஒழுக்கத்தால் அவள் குன்றவில்லை என்ற உயரிய உண்மை படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

8. தலைவனின் சூழல் அவனது பிரிந்த வாழ்வு வாழ்வின்போது அவனது உயரிய பண்பு காட்டப்பட்டாலும் பரத்தைப் பிரிவு என்பது தலைவனை விட்டு வைக்கவில்லை என்ற கருத்தும் ஆங்காங்கே பெறப்பட்டன.

9. தோழி தலைவனை இடித்துரைக்கும் மாண்பும் தெளிவுற அறியப்பட்டது. இதனால் தோழி தலைவனின் மீது கொண்ட அன்பு, பிரிவு, மதிப்பு ஆகியனவும் தலைவனின் கீழ்மைத் தன்மையைக் கண்டு பொங்கும் பண்பும் அறியப்பட்டது.

10. சில நேரங்களில் தலைவனுக்குப் பாடம் புகட்ட எண்ணிய தோழி தலைவியின் ஆற்றாமை, காப்பு முதலியவற்றைக் கூறி அமைதல், பிரிவினால் தலைவிக்கு ஏற்படும் உளவியல் இடையூறுகள் ஆகியவற்றைக் கூறியும் தலைவனுக்கு உணர்த்தும் அவர் தம் பண்பும் விளக்கப்பட்டது.

11. பிரிவுத் துன்பமே தலைவிக்கு மட்டுமல்ல தலைவனுக்கும் உள்ளது என்ற கருத்தும் பெறப்பட்டது.

12. ஐவகை ஒழுக்கங்களும் காட்டப்பட்டு ஐவகை நிலத்துத் தலைவன் தலைவியர் பிரிவின்போது எத்தகைய மனநிலையில் இருந்திருப்பார்கள் என்ற சிந்தனையை இவ்வியல் தந்துள்ளது. இன்னல்படும் போதும் இடைச்சுரத்தின் போதும் தலைவனின் உளவியல் இவ்வியலில் கண்டறியப்பட்டது.

13. அகத்திணையியலில் பொதுவான செய்திகள் மட்டுமின்றி பிரிவுகள், அப்பிரிவின்போது அகத்திணை மாந்தர்களின் உளவியல் உள்ளிட்ட பல செய்திகளை இவ்வியலில் பொதுநிலையில் அறிய முடிந்தது என்ற கருத்துடன் இவ்வியல் நிறைவு பெறுகிறது. தொடர்ந்து வரும் இயல் பொருள்வயிற் பிரிவாக அமைகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. *தொல் - பொருள் - இளம்பூரணர் உரை விளக்கம் ப-46*
2. *தொல் - பொருள், நச்சர் உரை ப-48*
3. *தொல்- பொருள், நச்சர் உரை நூ-1039*
4. *தொல் - பொருள், இளம்பூரணர் உரை விளக்கம் ப-3*
5. *தொல் - பொருள் - அகம் நூ-219*
6. *சமூக நோக்கில் சங்க மகளிர், ஏ.கே.அழகம்மை ப-48*
7. *இறையனார் அகப்பொருள் விளக்கம் - 1939 ப - 9*
8. *மேலது ப-375*
9. *தொல், பொருள் - களவியல் நூ- 1038*
10. *தொல், பொருள் - அகம் இளம்பூரணார் உரை நூ-153*
11. *மேலது -அகம் நூ-1000*
12. *மேலது நூ -952*
13. *மேலது நூ - 953*
14. *சிலப்பதிகாரம் - பாடல் - 11, பா.அடி- 62-66*
15. *தொல், பொருள், அகம் நூ - 955*
16. *மேலது நூ - 952*
17. *மேலது - கற்பியல் நூ -1139*
18. *தொல் - பொருள் - அகம் நூ-9548*
19. *மேலது நூ - 954*
20. *மேலது - நூ - 996*

21. மேலது - நூ - 997

22. தொல், பொருள், மரபியல் - நூ-991

23. மேலது - முதற்பதிப்பு - 1988 ப-370

24. தொல், பொருள், களவியல் நூ - 1038

25. மேலது நூ - 1039

26. மேலது செய்யுளியல் நூ - 1442

27. மேலது நூ - 1446

28. தொல், பொருள், கற்பியல் நூ - 1088

29. மேலது நூ - 1089

30. மேலது நூ - 1092

31. மேலது நூ - 1093

32. மேலது நூ - 1092

33. மேலது - பொருளியல் நூ - 1182

34. மேலது - கற்பியல் நூ - 1092

35. மேலது - பொருளியல் நூ - 1148

36. மேலது - கற்பியல் நூ - 1092

37. மேலது நூ - 1092

38. மேலது நூ - 1094

39. மேலது நூ- 957

40. மேலது நூ - 961

41. மேலது நூ - 962

42. மேலது நூ - 984

43. மேலது - களவியல் நூ - 1087

44. மேலது - அகம் நூ - 973

45. மேலது - பொருளியல் நூ - 1078

46. மேலது - கற்பியல் நூ - 1130

47. மேலது - அகம் நூ - 974

48. மேலது -கற்பியல் நூ - 1134

49. மேலது நூ - 1135

50. மேலது நூ - 136

51. அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு ப - 36

52. நன்னூல் கழக உரை நூ - 459

53. நம்பி அகப்பொருள் நூ - 203

54. தொல் பொருள் களவியல் நூ - 1047

55. மேலது - அகம் நூ -987

56. பட்டினப்பாலை பா - 218-220

57. தமிழ் காதல் வ.சுப.மாணிக்கனார் ப - 452

58. மேலது ப - 454

59. அ.விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, பா- 123

60. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா-303

61. மேலது பா- 308

62. தொல் பொருள் களவியல் நூ-1059

63. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா-339

64. மேலது பா-339

65. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, பா-343

66. அகநானூறு பா-283

67. தொல் பொருள் களவியல் நூ-1064

68. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா- 199

69. மேலது, பா-149

70. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா-127

71. தொல் பொருள் அகம் நூ-957

72. மேலது நூ-961

73. மேலது நூ-979,980

# இயல் - இரண்டு

# பொருள்வயிற் பிரிவு

*2.0. பொருள்வயிற் பிரிவு - அறிமுகம்*

*2.1. தலைவனைப் பற்றிய தலைவியின் உணர்வுகள்*

*2.2. தலைவியின் அன்பு*

*2.3. பொருள்வயிற் பிரிவில் தலைவியின் மனநிலைகள்*

*2.4. தலைவியின் மன உறுதி*

*2.5. தலைவியின் துயரில் தெய்வங்களின் பங்கு*

*2.6. சகுனத்தின் மூலம் துயரினை அகற்றும் தோழி*

*2.7. தலைவியின் பிரிவு அச்சம்*

*2.8. பிரிவிற்கு உடன்பட்ட தோழியை உவந்தது*

*2.9. பிரிவுணர்ந்து வேறுபட்டாள் தோழிக்குச் சொல்லியவை*

*2.10. தலைவனின் மனநிலைகள்*

*2.10.1. பிரிவு வலித்த தலைவன்*

*2.10.2. பொருள் கடைக் கூட்டிய நெஞ்சிற்குரைத்தது*

*2.10.3. இடைச்சுரத்தில் கவலையுறும் நெஞ்சினைக் கூறியது*

*2.10.4. பிரிவினை ஆற்றாத தலைமகனை ஆற்றியது*

*2.10.5. வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது*

*2.11. குறித்த காலத்தில் வினைமுற்றி (பொருளீட்டி) வந்தமைக்கான காரணம் கேட்டல்.*

*2.12. தலைவன் தலைவியின் மனநில*

*2.13. தொகுப்புரை*

# இயல் - இரண்டு

# பொருள் வயிற் பிரிவு

## 2.0. பொருள்வயிற் பிரிவு – அறிமுகம்

> **அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
>
> **இவ்வுலகம் இல்லாங்கி யாங்கு**[1]

என்பது பொதுமறை என்று இக்குறள் காட்டுகிறது.

அறமே அனைத்திற்கும் அடிப்படை. மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறம். அறத்தான் வருவதே இன்பம் என்று கூறி அறவழி நின்று பொருள் ஈட்டி அதனைக் கொண்டு இன்புறுதலே வாழ்வு என்கிறது வள்ளுவம்.

> **பிழைத்து பிழையாதாகல் வேண்டி, இழைத்த**
>
> **ஒண்பொருள் முடியவும் பிரிவே**[2]

எனும் நூற்பா நிலவருவாய் குன்றிப் போகும் சூழலில் பொருளீட்டல் காரணமாகப் பிரிவு நிகழும் என்பதைத் தெரிவிக்கின்றது.

தலைவன் பொருளை முன்னிட்டுத் தலைவியைப் பிரிந்து செல்கின்றான். தலைவன் தன்னுடைய பிரிவினைத் தலைவனுக்குச் சில நேரங்களில் நேரடியாகச் சொல்வதில்லை. தோழியின் மூலமே உணர்த்துகின்றான். தோழியின் மூலம் தலைவனின் பிரிவை அறிந்த தலைவி, சில வேளை மகிழ்ந்து அதற்கு உடன்படுதலும் சில வேளை அவன் பிரியேன் என்ற சொல் தவறிப் பிரிந்ததை எண்ணி நொந்து கூறுதலும் உண்டு.

## 2.1. தலைவனைப் பற்றிய தலைவியின் உணர்வுகள்

தலைவனின் பிரிவால் தலைவியின் உடல் நலம் சிதைகிறது. தலைவியின் கண்களும் தோள்களும் மேனியும் ஒளி இழந்தன. பருவ எழில் கொழிக்கும் உடலில் பசலை நோய் உண்டானது. தலைவியின் மனத்துயர் மிகுந்தாலும்

அவளின் மன உறுதியும், அதே நேரத்தில் கணவன் மீது வைத்துள்ள எதிர்ப்பார்ப்பும் மாறவில்லை என்பதை,

**கண்ணுந் தோளும் தண்ணுறுங் கதுப்பும்**

**பழநலம் இழந்து பசலை பாய**

**இன்னுயிர் பெரும் பிரிதாயினும் என்ன தூஉம்**

**புலவேன் வாழி தோழி**[3]

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

இவ்வடிகளின் மூலம் தலைவி, தலைவனிடம் கொண்டுள்ள தூய்மையான காதலையும், நிலை கலங்காத உள்ளத்தையும் அறிய முடிகிறது. தனது தலைவன் தன்னை விட்டுப் (விடல்) பிரிந்தான் என்ற மன உளைச்சலும் கவலையும் இருந்தாலும் இவற்றை ஒரு பொருட்டாக எண்ணாமல் பொருள் வயிற்பிரிந்த தலைவனைப் பாராட்டுகிறாள் என்பதையும் பாடல் அடிகள் சுட்டுகின்றன. மேலும் பொருள் இருந்தால் மட்டுமே வாழ முடியும் என்பதை அறிந்த தலைவி, பொருள் வயிற் பிரிதல் ஆடவரது இயல்பு என்பதையும் உணர்கிறாள்.

**செயல்படு மனத்தர் செய்பொருட்டு**

**அகல்வர் ஆடவரதன் பண்பே**

**செய்பொருட் ககன்ற செயிரிதீர் காதலர்**[4]

என்ற தொடர்களின் மூலம் தலைவியின் மனப்பக்குவத்தினையும், சிறப்பினையும் தெளியலாம்.

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பதை நன்கு உணர்ந்தவள் தலைவி. இல்லறம் நடத்தத் தேவைப்படும் பொருளின் தேவையை உணர்ந்த தலைவியிடம் தலைவன் பொருளின் பொருட்டுப் பிரிகிறேன் என்று கூறும் போது அவள் மறுக்கவில்லை. தலைவன் கூறிய உயர்மொழிகளை எண்ணித் தன்னைத் தேற்றிக் கொண்டாள். தலைவனைப் பிரியாமல் வாழ்வு நடத்த

வேண்டும் என்ற உணர்வு அவள் மனத்தில் பதிந்திருந்தாலும், பிரிவானது அவளுக்கு ஆறுதல் தரவில்லை. அமைதி தரவில்லை. அரிய வழிகள் கடத்தற்கியலாதன எனத் தெரிந்தும், பிரியக் கூடாத தன்னையும் பிரிந்து தலைவன் பொருளீட்டச் சென்றான். இவ்வுலகத்தினர் பொருளையே உறுதிப் பொருளாக முடிவு செய்து விட்டனர். அருள் ஒன்றே மேற்கொள்வார் யாருமின்றித் தவிப்பது எனத் தலைவி உள்ளம் என்று நொந்து தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள். இக்கருத்தை,

**அத்தம் அரிய என்னார் நிந்துறந்து**

**பொருள் வயிற் பிரிவா ராயின வுலகத்துப்**

**பொருளே மன்ற பொருளே**

**அருளே மன்ற ஆருமில் லதுவே**[5]

என்ற பாடல் அடிகள் அரண் செய்கின்றன. தலைவி, தலைவன் பால் நம்பிக்கையின்மையால் தவித்தாள் என்பதைவிட அன்பு மிகுதியால் மனம் நொந்தாள் என்பதே பொருத்தமாகும். தலைவன் சொன்ன சொல்லைத் தவறாதவன் என்பதில் அவளுக்கு நம்பிக்கை மிகுதி. ஒரு வேளை தலைவன் பொருள்வயிற் பிரிவதாயின் தலைவன் தான் கூறிய சொல்லின் பொருளினின்றும் சற்றும் மாறுபடாதவன் என்பது அவள் தலைவனைப் பற்றிக் கொண்டிருக்கிற எண்ணமாகும்.

தலைவி, தலைவனை உயர்வாக எண்ணி,

**உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்**

**இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவெனச்**

**சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்**

**சென்றனர் வாழி தோழி**[6]

தலைவன் பொருள் தேடப் பிரிந்து சென்றது தன் வளமான வாழ்வின் உயர்வுக்காகவே என எண்ணியதாகக் கீழ்க்கண்ட பாடல் அடிகள் சுட்டுகின்றன.

அரும்பொருள் வலித்த நெஞ்சமோடேகி

நம் முயர்வு உள்ளனிர் காதலர்[7]

*இதன் மூலம் தலைவனின் உணர்வுகளைத் தலைவி போற்றிச் சிறந்தாள் என அறிய இயலுகிறது.*

*தலைவன் தலைவியைப் பிரிந்த நிலையில் தன்னுடைய பிரிவுத் துயரை வெளிப்படுத்துகின்றான். அது இரண்டு நிலைகளில் அமைகின்றது.*

**2.2. தலைவியின் அன்பு**

*தலைவனிடம் தலைவி கொண்ட அன்பு இத்தகையது என்று கூற முடியாது. அத்தகைய உண்மையான அன்பைத் தலைவனே நன்கு உணர்ந்தவன். பொருளைச் சேர்க்க அவளைப் பிரிந்து செல்ல வேண்டும்; சென்றால் அப்பிரிவினால் அவள் மனத்தில் ஏற்படும் கடுந்துயரையும் அவன் அறிவான்.* ***காதல் எனின் உடன் வாழ்தல்; சாதல் எனின் பிரிதல்; அன்பு எனின் உயிர் கலந்தது*** *போலாகும்.*

உயிரியைந்தன்ன நட்பின் அவ்வுயிர்

வாழ்தல் அன்ன காதல்

சாதல் அன்ன பிரிவரியோளே[8]

*என்ற எண்ணம் தலைவனின் உள்ளத்தில் மட்டுமல்ல தலைவியின் உள்ளத்தும் தோன்றும் என்பதை '**உயிரியைந் தன்ன நட்பு**' என்னும் தொடர் உறுதி செய்கிறது. தலைவன் பொருள் தேடுவதற்காகப் பிரிந்தான். தலைவனின் பிரிவினைத் தாங்கிக் கொள்ள இயலாமல் தலைவி வருந்தினாள் இதைத் தான்.*

செல்லாமை உண்டேல் எனக்குறை மற்றுநின்

வல்வரவு வாழ்வார்க்கு உரை[9]

*என்று வள்ளுவம் சுட்டிக் காட்டுகிறது. தலைவியின் பிரிவாற்றாமையை உணர்ந்த தலைவன் பொருள் பொருட்டுப் பிரிவதைத் தவிர்த்து செலவழுங்குதலும் உண்டு. பிரிகிறேன் என்று கூறிய மாத்திரத்தில் தலைவியின்*

மேனியைக் கண்ட தலைவன் வாடாத மலரையுடைய குளத்தில், மீன் ஓடும் வழியைப் போல நிலையற்ற பொருளை நம்பிச் செல்லாமல் செலவைத் தவிர்த்து விடுவதாகக் கூறினாள். இதனை,

வாடாப் பூவின் பொய்கை நாப்பன்

ஓடுமீன் வழியிற் கெடுவ[10]

எனும் பாடல் அடிகளின் மூலம் அறியலாம். வாழ்வதற்குப் பொருள் அவசியம் ஆனால் அது நிலையில்லாதது.எனவே நிலையில்லாத வாழ்வில் சிறிது காலம் நிலைத்திருக்கிற இன்பம் வேண்டி தலைவன் செலவழுங்குவித்தான்.

**2.3. பொருள் வயிற் பிரிவில் தலைவியின் மனநிலைகள்**

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்

ஏனை இரண்டும் ஒருங்கு[11]

என வள்ளுவர் கூறுகிறார். அதாவது, சிறந்த பொருளை அதிகம் ஈட்டியவர்களுக்கு அறமும் இன்பமும் எளிதில் கிடைக்கும் என்கிறார். தலைவனும் இத்தகைய பொருளை ஈட்டுவதற்காகத் தலைவியைப் பிரிந்து செல்கின்றான். தலைவனைப் பிரியும் நேரத்தில் தலைவியின் மனநிலைகளில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்கின்றன.

தலைவன் தலைவி இருவரும் ஒன்றாக இருக்கும் போது உள்ளத்தன்மைக் காட்டிலும் தலைவன் பிரிந்திருக்கையில் தலைவியின் ஆழ்ந்த அன்பு உள்ளத்தைத் தொடும் வண்ணம் நன்கு புலப்படுகிறது. அவன் பிரிவு அவளுக்குப் பிரிவு என்ற மனச்சுமையை ஏற்படுத்துகிறது. அதனால் வரும் துன்பம் ஆற்ற முடியாத ஒன்று. இருப்பினும் தலைவன் பிரியும் போது கூறிச் சென்ற நம்பிக்கை மிகு வார்த்தைகளை எண்ணித் தன்னைத் தானே தலைவி தேற்றிக் கொண்டாள்.

நம் முன்னோர்கள் சேகரித்தப் பொருளைச் செலவு செய்வோர் செல்வமுடையவர் அல்லர். தாமே முயன்று ஈட்டும் பொருள் சிறப்பு வாய்ந்தது. தாமே ஈட்டும் பொருள் இல்லாதோர் வாழ்க்கை, இரந்து

வாழ்தலைவிட இழிவுடையதாகும் எனச் சான்றோர்கள் கூறிய உண்மையைத் தெளிவாகக் காட்டித் தலைவன் பொருள் தேடிக் கொணரத் தன்னைப் பிரிந்ததாக எண்ணினாள்.

**உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்**

**இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவெனச்....**[12]

என்ற பாடல் அடிகள் மேற்கண்ட கருத்தைப் புலப்படுத்துகின்றன.

தனக்குள்ளே ஆற்றிக் கொண்டாலும் தலைவனைப் பிரிந்த துன்பம் மனதிற்குள் தலைவிக்கு அதிகம் இருந்தது என்ற கருத்து புலப்படுகிறது. துன்ப உணர்வுகளை மறைப்பதற்காகத் தன் கூந்தலால் கண்களை மறைத்துக் கொண்ட தலைவி தன் அழுகையை மறைக்க முடியவில்லை. வாய்விட்டு அழுதாள். அந்த அழுகை ஆம்பற் பண்ணைப் புல்லாங்குழலில் பாடியதைப் போலத் தலவைனுக்குத் தோன்றியது.

தலைவன் பிரியும் போது அழக் கூடாது என்பதையும் ஆனால் அழாமல் இருக்க முடியவில்லை என்பதையும் அறியலாம். தலைவியின் இயல்பான மனநிலை இங்குத் தெளிவாக உணர்த்தப்படுகிறது.

## 2.4. தலைவியின் மன உறுதி

பொருள் தேடப் பிரிந்த தலைவன் கார்காலம் வருவேன் என்று வஞ்சினம் கூறிச் சென்றான். வஞ்சினம் கூறிச் சென்ற தலைவன் திரும்பி வரும் நாளுக்காகக் கண்ணீருடன் தலைவி காத்திருந்தாள்.

கார்காலம் வந்தவுடன் திரும்பி வருவதாகச் சொன்ன சொல்லைத் தலைவி உறுதியுடன் நம்பினாள். அவன் வருவதற்குள் கார்காலம் எப்படி வரக்கூடும்? என ஆழ்ந்து சிந்தித்தாள். காலங்கள் மாறுவது இயற்கையின் நியதி. இயற்கையின் நியதியைக் கூட ஏற்றுக் கொள்ளாத அளவுக்குத் தலைவனின் சொற்களில் தலைவி நம்பிக்கை வைத்திருந்தாள். தலைவன் பொய்க் கூற வல்லமை அற்றவன் என அவள் தெளிவான மன உறுதியுடன் நம்பினாள் என்பதை,

கானம் காரெனக் கூறினும்

யானோ தேரேன் அவர் பொய் வழங்கலரே

நிலம்புடை பெயர்வதாயினும் கூறிய

சொற்புடை பெயர்தலோ இலரே[13]

*எனவே இயற்கையின் நியதிகள் பொய்க்காலம்.ஆனால் தலைவனின் வஞ்சினம் பொய்க்காது என நம்பும் தலைவியின் உறுதிமிக்க தெளிவான உள்ளத்தினை மேற்கண்ட சான்றுகள் வெளிப்படுத்துகின்றன.*

## 2.5. தலைவியின் துயரில் தெய்வங்களின் பங்கு

*சிறு தெய்வங்களிடத்தும், கடவுளிடத்தும் தலைவி கொண்ட நம்பிக்கை அவள் வாழ்வில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. சூழ் உரைத்தோர் தம் உரையிலிருந்து தவறுவராயின் அவருக்குத் தீமை வரும் என்பதில் தலைவி உறுதியான நம்பிக்கை கொண்டவள். கூறிய உறுதி மொழியிலிருந்து தவறுதல் கொடிய செயலாகும். ஊர் மன்றத்தின் கண் உள்ள மாமரத்தில் வாழும் அச்சம் ஊட்டும் கடவுள் கொடியவர்களை வருத்தும் என்பது வழக்காகும்.*

குன்று கெழு நாடனாகிய தலைவன் கொடியவன் அல்லன்[14]

*எனத் தலைவி பரிவுடன் கூறுகிறாள். இவ்வாறு பரிவுடன் பேசும் தலைவியே சில இடங்களில் கடவுளைப் பழித்தும் உரைக்கின்றாள்.*

*பொருள் தேடச் சென்ற தலைவன், மிகக் கொடிய காட்டு வழியிலும் மலைப் பகுதியிலும் தீங்கின்றித் திரும்ப வேண்டுமே என்னும் அச்சத்தால் சில நேரங்களில் கடவுளைப் பழித்து உரைக்கிறாள். இதைத் தலைவன் மீது தனக்கு நம்பிக்கை இன்மையால் தலைவி இவ்வாறு பழித்துரைத்தாள் எனத் தவறாகக் கருதக் கூடாது.*

***(கவலை, அச்சம், விரக்தி, கோபம் ஆகியன உச்சநிலையில் இருக்கும் போது கடவுளரையும் இடித்துரைக்கும் போக்கு மானிட மனத்தில் தோன்றுவது என்பது மானிட உளவியல்)[15]***

கொற்றவையை வணங்கி சிறு தெய்வங்களின் தீய விளைவுகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டிய தலைவி 'தாயத்து' அணிதலும் 'விரிச்சி கேட்டலும்' உண்டு.[16]

### 2.6. சகுனத்தின் மூலம் துயரினை அகற்றும் தோழி

சங்க காலம் தொட்டு பல்லியின் ஒலி நல்ல நிமித்தமாகக் கருதப்படுகிறது. தலைவனின் பிரிவுத் துயரினை ஆற்றாது வருந்திய தலைவி தன் தோளின் மெலிவைப் போக்கும் மருந்தாகப் பல்லியின் ஒலியைக் கேட்டுத் தன்னைத் தேற்றிக் கொள்கிறாள்.

வருந்து தோள் பூசல்களையும் மருந்தென
உள்ளுதொறு படூஉம் பல்லி
புள்ளுத் தொரு துறைவி செவி முதலானே[17]

பல்லி ஒலித்தலைத் தோழி கேட்டுத் தலைவிக்கு அதனைச் சுட்டி நற்சகுனம் எனக் கூறி ஆற்றுவித்தாள். பொருள் வயிற் பிரிந்த தலைவனை எண்ணித் துயரில் இருந்த தலைவிக்கு இது நல் நிமித்தமாகப்பட்டது. தலைவியின் மனநிலையை அறிந்த தோழி தலைவியைத் தேற்றுவதற்குத்தான் பல்லியின் ஒலியைப் பயன்படுத்திக் கொண்டாள்.

நீங்குக மாதோ நின்னவலம் ஓங்குமிசை
உயர்புகழ் நல்லில் ஒண்சுவர்ப் பொருந்தி
நயவரு குரல பல்லி
நள்ளென் யாமத்து உள்ளுதொறும் படுமே[18]

என்ற நற்றிணைப் பாடல் இக்காட்சியைப் படம் பிடித்துக் காட்டி மேற்சுட்டிய கருத்திற்கு அரண் சேர்க்கிறது.

### 2.7. தலைவியின் பிரிவு அச்சம்

சங்க இலக்கியத்தில் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் பிரியாத இனிய வாழ்வை நெஞ்சார விரும்புகின்றனர். தலைவன் **நெகிழா மென்பிணி**

***வீங்கிய கைசிறிது அவிழினும் உயவும்***[19] *தலைவியை இளங்கீரனாரின் பாட்டில் காணலாம். இளங்கீரன் தலைவனின் உடனுறைவு வேட்கையை மற்றொரு பாடலில், கூறுகின்றார். இதை,*

வார் முலை முற்றத்து நூலிடை விலங்கினும்

கலவுப் புலந்துறையுங் கழிபெரு காமத்து

இன்புறு நுகர்ச்சியில் சிறந்த தொன்றில்[20]

*என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. அத்தகைய அன்புமிக்க வாழ்க்கையில் பிரிவு நேருமோ என்னும் அச்சம் தலைவியின் மனத் தவிப்புக்குக் காரணம் ஆகின்றது. மேலும் வினை முடித்து வருவதாகத் தலைவன் சொல்லி முடிக்கும் முன்னே துன்புற்று கண்ணீர் விடும் தலைவியைக் குறுந்தொகையில் காண முடிகிறது.*

செல்லா முன்னர் நில்லாவாகி நீர் விலங்க முதல்[21]

*கண்ணீர் சொரிந்து தலைவனை நினைத்து நினைத்து நெடுநாட்களாகக் காத்திருக்கும் தலைவிக்குத் தலைவனைப் பற்றிய எண்ணம் இன்பத்தைச் தருகிறது.*

வந்தன்று போலுந் தோழி நொந்து நொந்து

எழுதெழில் உண்கண் யாவை

அழிதகு வெள்ளம் நீந்தும் நாளே[22]

*பிரிவுத் துன்பத்தால் மனம் நைந்த தலைவியைப் பற்றிய நிலையை எயினந்தை மகனார் இளம்கீரனார் பாட்டில் குறிப்பிட்டுள்ளார். தலைவன் தான் செலவழுங்குவித்தலைத் தலைவியிடம் கூறினான். கேட்ட மாத்திரத்தில் அவள் உள்ளம் அழிந்து, மேனியழகு இடிந்து, தலைகுனிந்து, விரலால் நிலத்தைக் கிண்டினாள். கண்ணீர் பெருகியது. கால்நிலை கொள்ளாமல் நா நடுங்கி மன மயக்கத்தால் தடுமாறினாள் என்பதை,*

புலம்பு கொள்அவலமொடு புதுக்கவின் இழந்த

நலங்கெழு திருமுகம் இறைஞ்சி நிலங்களையா

**கால்நிலை கொள்ளாது கழிபடர்க் கலங்கி .....**

**நா நடுக்குற்ற நவிலாக் கிளவியோடு......**

**பருவரல் எவ்வமொடு அழிந்த**

**பெருவிதுப் புறுவி பேதுறு நிலையே**[23]

*என்னும் அகப்பாடல் துன்பச் சூழலில் அகப்பட்டுத்தடுமாறும் பேதை உள்ளத்தை வெளிப்படுத்துகிறது.*

*தலைவன் பிரியலாகாதப் பனிக்காலத்துப் பொருள் கருதிப் பிரிய முற்படுகிறான்.* **எப்பொருள் பெறினும் பிரியன் மினோ** *என்று தோழி தடுக்கவும் பிரிகிறான். அதனை அறிந்த தலைவி,*

**பாழ்படு மேனி நோக்கி நோய்பொர**

**இணரிறுபு உடையும் நெஞ்சமொடு புணர்வு வேட்டு**

**எயிறுதீப் பிறப்பத் திருகி**

**நடுங்குதும் பிரியின் யாங் கடும் பனி உழந்தே**[24]

*எனக் கூறிக் கவல்கின்றான். இனிவரும் துன்ப நிலையை மனக்காட்சியாகக் கண்டு நடுங்குகிறாள்.*

*மேனி அழகு கெடுதலையும் காம நோயொடு பொருதலையும் அதனால் உள்ளம் நைந்து நலிதலையும் நினைக்கின்றாள். தன்னுள் தான் பலவாய் உடைந்து சிதையும் நெஞ்சத்தின் அவலநிலை 'இணரிறுபு உடையும் நெஞ்சம்' எனும் தொடரில் இலக்கிய அழகொடும் உளநூல் பொருளோடும் விளக்கப்படுகிறது.*

*பற்களிடைத் தீயெழத் திருகிக் கடிதலுக்குப் பனிக் குளிர் புறக் காரணம் என்றால் புணர்வு வேட்கை அகக் காரணம் எனலாம். துன்பத்தைப் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்தல் என்னும் நடைமுறைத் தொடரும் என இவ்விடம் கருத முடியும்.*

**நோனேன் தோழி யென் தனிமை யானே**[25]

*எனத் தலைவி தன் தனிமையைக் குறிக்கிறாள்.*

**இன்னுயிர் அன்ன பிரிவிருங் காதலர் நீத்து**

**நீடினர் எனும் புலவி**[26]

*இப்பாடலில் விளக்கங்கள் மனத்தின் நைந்து கலங்கிய அவல நிலையைக் காட்டுவனவாகும். பெருங்கடுங்கோ இந்நிலையைப்* ***பெருங்கையற்ற நெஞ்சம்***[27] *எனக் குறிக்கின்றார். செயலற்ற ஆதரவற்ற உள்ளத்தின் இயல்பு இத்தொடரில் நன்கு வெளிப்படுகிறது.*

*பிரிந்து சென்ற தலைவன் விரைவில் திரும்பி வர வேண்டும் எனும் வேட்கை அதிகரிக்க தலைவியின் உள்ளம் வெம்மையானது. இந்நிலை பெருங்கடுங்கோவின்,*

**...... வரல் நசை இ நோயோடு முலையிடைக் கனதமென் நெஞ்சு**[28]

*எனும் தொடரில் உள்ளது. வேட்கை நோயாகி, நோய் வெம்மையாகி உள்ளத்தைப் பற்றியது என்பதைப்* **புலம்பு கொண்டு உறையும் புண்கண் *வாழ்க்கை***[29] *என்ற அடிகள் உணர்த்துகின்றன. மோகண்ணத்தாரின் பாட்டு பிரிவின் துன்பத்தோடு தலைவன் திரும்பி வருதலையும் பற்றிய எதிர்பார்ப்பு, ஆர்வம் பொய்த்துத் தவறிய வேட்கை முறிவும் இணைகின்றது. தலைவன் எண்ணிய நாளகம் வருதல் என்பது தலைவியின் வேட்கையாகும்.*

*பகல் இரவாகி, இரவு பகலாகி, விடியல் பகலாகி நாட்கள் தொடருகின்றன. வினை முடிந்து மீண்டும் வராத தலைவன் எங்குள்ளானோ எனத் தலைவி ஏங்குகிறாள்.*

**வைகல் வைகல் வைகவும் வாரார்**

**எல்லா எல்லை எல்லையும் தோன்றார்**

**யாண்டுளர் கொல்லோ தோழி ஈண்டிவர்**

**சொல்லிய பருவமோ இதுவே**[30]

*இளவேனில் விழாவிற்கான செவ்விகள் நிறைந்து விட்டன. ஆனால்,* ***வரார் தோழி நம் காதலோரே***[31] *எனத் தலைவி தன் துன்பத்தைத் தோழியிடம்*

கூறினாள். இயல்பான நாட்களை விட விழாக்காலங்களில் தன் விருப்பத்திற்குரியவர் அருகில்லாத போது அது மிகப் பெரும் துன்பத்தைத் தரும்.

நாளிடைப் பாடஅது வருவர்[32]

எனும் நம்பிக்கை பொய்த்துவிட்டது. ஆகவே இன்னின வேனிலும் வாரார் எனத் தலைவி பேசுகிறாள். இத்தகையச் சூழலில் தலைவனை நினைத்து நைந்த உள்ளம் இற்றுச் சிதறி உதிர்ந்தது. உள்ளத்தின் இறுக்கத்தை உணர்த்தும் பல தொடர்கள் கருதத்தக்கன.

### 2.8. பிரிவிற்கு உடன்பட்ட தோழியை உவந்தது

பொருள்வயிற்பிரிவேன் எனத் தலைவன் கூறக் கேட்ட தோழி, நன்றென விடுக்க, அதனை அறிந்த தலைவி, ஆடவர் பொருளுக்கு அகலுதல் பண்பு தான் என்றறிந்து விடுத்தது நன்று காண் என உவந்து கூறுகின்றாள். இவ்வாறு கூறும் போது

பார்பக வீழ்ந்த வேருடை விழுக் கோட்டு
உடும்படைந்தன்ன நெடும்பொரி விளவின்
ஆட்டொழி பக்திற் கோட்டு மூக் கிறுபு
கம்பலத் தன்ன பைம்பயிர்த்தாவும்
வெள்ளில் வல்சி வேற்று நாட் பாரிடை[33]

என அவன் சென்ற நாட்டினைக் குறிப்பிடுகின்றாள்.

'விளாங்கனியே உணவாக இருந்தும்' சுவை எடுப்பார் அதிக மின்மையால் பயிரில் பரவிக் கிடக்கும் என்பது செல்லும் அத்தேசத்தில் பொருள் வேட்கையர் இருந்தும் அவர் அதிகம் இன்மையால் எம் தலைவர் விரைவில் பொருளீட்டி உரிய காலத்தில் திரும்புவார். அதனால் நான் வருந்த மாட்டேன் என்னும் கருத்தினைப் புலப்படுத்துவதற்காகத்தான். இதனால் இன்பத்தைக் காட்டிலும் தன் கடமையாகிய அறத்தையே பெரிதும் பேணும் தலைவியின் மாண்பும் வெளிப்படுகின்றது. தலைவிக்குப் பிரிவினால் ஏற்படும் நிலையினை,

**மரல்நார் உடுக்கை மலையுறை குறவர்**

**அறியா தறுத்த சிறியிலைச் சாந்தம்**

**வற வற்று ஆர முடுக்கிப் பையென**

**மரம் வறிதாகச் சோ்ந்துஉக் காங்கு**[34]

*என்ற உவமையின் மூலம் வெளிப்படுத்துகின்றான். இதில் மேற்பட்டை சீவியதனால் நீர் வடிந்து சந்தனமரம் படுவது போல், என்ற தன் மூலம் புணர்ச்சி, விருப்பின் வழியாலே என்னறிவும், உள்ளமும் அங்கே செல்ல உடம்பு இறக்கும் தன்மையுடையதெனத் தன் உள்ளக் கிடக்கையை உயிர்க் காட்சி மூலம் புலப்படுத்தும் தலைவியின் திறம் கருதத்தக்கதாகும்.*

*பிரிவிடை யாற்றாளாகிய மற்றொரு தலைவி, பலபடியாகத் தன்னைப் புகழ்ந்து பாராட்டி, பின்பு பிரிந்த தலைவன் மீது தான் கொண்ட காதலை கானல் நீரை நீரெனச் சென்று பருக முற்படும் ஏமாறுகின்ற மானாகக் குறிப்பிடுகின்றாள். இதனை,*

**பெருநீர் ஒப்பின் பேஎய் வெண்தேர்**

**மரனில் நீளிடை மான்நசை உறூஉம்**[35]

*என்ற உள்ளுறையின் மூலம் சுட்டுகிறாள்.*

*தலைவனின் பிரிவினால் மெலிந்த தலைவியொருத்தி, தலைவன் சென்ற வழியில் செல்லும் தன்னெஞ்சினை நொந்து கூறுகின்றாள். யானையைத் தலைவனாகவும், பாலையைத் தலைவியாகவும், புலியை அன்னை முதலியோராகவும், சுத்தம் (வழி) தோழியாகவும் கொண்டு புலித் தோலைப் போர்த்துக் கொண்டது போலத் தலைவியின் நலத்தைத் தலைவன் பெற்று உண்டு செல்லுதலும், அந்தப் பாலையில் இலை தீர்ந்து நெற்று ஒலிப்பது போல மனம் வருந்திய தலைவி புலம்ப, தோழி புலி வழங்குதல் போல, அன்னை முதலானோர் இடையே இயங்கப் பெறுதலாலே தேற்ற முடியாமல் இருந்தாள். இதனைத் தலைவி,*

பிடி பிளந்திட்ட தாரில்வெண் கோட்டுக்
கொடிறுபோல் காய வாலிணர்ப் பாலை
செல்வளி தூக்கலின் இலைதீர் நெற்றம்
கல்விழி அருவியின் ஒல்லென ஒலிக்கும்
புல்இலை ஒமைய புலிவழங்கு அத்தம்[36]

என்று அடுக்கடுக்காய் உள்ளுறைப் பொருள்பட விளக்குகின்றாள்.

பிரிவிடை மெலிந்த தலைவியை, மற்றொரு பாடலில் காமக்கனி பசலையார் என்னும் பெண்பாற் புலவர், இயற்கை உயிரினக் காட்சி மூலம் இளவேனில் காலத்தில் ஆடவர் பெண்டிரைப் பிரிந்து பொருள் தேட முயலுதல் அறமன்று என விளக்குகிறார்.

மாமரச் சோலையில் குயில் கூவுவது பிரிவு காலத்தில் தலைவிக்கு, அறிவுடையீர் பிரியாதீர், புணர்ந்தே இருமின் என்பது போல் தோன்றுகிறது. இதனை,

பொதும்புதோறு அல்கும் பூங்கண் இருங்குயில்
கவறு பெயர்த்தன்ன நில்லா வாழ்க்கையிட்டு
அகறல் ஓம்புமின் அறிவுடை யீர்எனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல[37]

எனவரும் தலைவிக் கூற்றுப் பாடல் உணர்த்தும்.

### 2.9. பிரிவுணர்ந்து வேறுபட்டாள் தோழிக்குச் சொல்லியவை

தலைவன் பிரியப் போவதை முன்னரே அறிந்து பிரிவினைத் தாங்க முடியாமல், தலைவனைச் செலவழுங்க வைக்கும் பொருட்டு தோழியிடம் வினவுகிறாள்.

தலைவனோடு முயங்கியிருக்கும் காலத்தில் கூட மாலையைக் கண்டு அஞ்சும் தலைவியொருத்தி, அவன் வினைவயிற் பிரியக் கருதியதறிந்து, அவனைச் செலவழுங்குமாறு செய்ய,

**வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன**

**மாணா விரல் வல்வாய்ப் பேஎய்**

**மல்லன் மூதூர் மலர்ப்புலி உணீஇயப**

**மன்றம் போழும் புன்கண் மாலை**

**. . . . . . . . . . . . .**

**செந்நெலஞ் செறுவின் அன்னத்துஞ்சும்**[38]

*எனத் தோழியிடம் கூறுகின்றாள். இதில், **மலர்ப்பலியுண்ண மாலை, பேய் புடைத்தெழும்** என்ற கருத்து பசலையானது என் நலத்தை உண்ண வேண்டி நெஞ்சைப் புடைத்து நெற்றியில் எழும் என்பதைக் குறிக்கின்றது.*

*செறுவில் அன்னத் துஞ்சும் என்பது முன்பு நானும் சேக்கையில் (படுக்கையில்) அவர் (மார்பில்) துஞ்சியிருந்தேன். இப்பொழுது அது வாய்க்கவில்லை என்று இரங்கியதைக் குறிப்பதாக அமைகிறது. இதன்மூலம் சங்க காலச் சமூகத்தில் பேய் நம்பிக்கை மிகுந்திருந்தது என்ற கருத்தையும் பெறமுடிகிறது.*

*பிரிவுணர்வு வேறுபட்ட இன்னொரு தலைவி,*

**சிறைநாள் ஈங்கை உறைநனி திரள்வீ**

**கூரை நன்மனைக் குறுந்தொடி மகளிர்**

**மணலாடு கழங்கின் அறைமிசைத் தாஅம்**[39]

*என்ற காட்சியைச் சுட்டுகிறாள்.*

### 2.10. தலைவனின் மனநிலைகள்

*களவில் தலைவன் கொள்ளும் பொருள்வயிற் - பிரிவு வரைவின் பொருட்டு மேற்கொண்டது தலைவன் தலைவியை மணம் புரிதற்குப் பொருள் கொடை தரும் மரபு பின்பற்றப்படுகிறது. இரந்தோர்க்கு ஈயாத இளிவரலும், வறுமையால் வரும் இழிவும், தலைவனின் நெஞ்சைப் பொருள் முயற்சியின்பால் ஈர்த்துப் புறக்கடமையை நினைவுறுத்துகின்றன.*

தலைவனின் உள்ளம் பொருள் ஈட்டச் செல்ல வேண்டும் என்ற நினைவில் இருக்க அருள்வேண்டி தலைவியின் உள்ளம் துடித்தது. பொருளில்லார்க்குக் காதலால் பயனில்லை என்பது தலைவனின் அடிமன உணர்வு என்பதை,

**ஒன்றன் கூறுஆடை உடுப்பவரேயாயினும்**

**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை**[40]

இப்பாடல் அடிகள் வெளிப்படுத்துகின்றன.

பிரிந்தால் ஒழிய, பொருள் கைகூடாது என்னும் நினைவு, தலைவனின் நெஞ்சைப் பொருளின்பால் ஈர்த்து நின்றது.

பொருள்வயிற் பிரிய நினையும் தலைவன் தன் பிரிவு நோக்கத்தைத் தலைவிக்குத் தான் செய்யும் மிகைப்பட்ட தலையளியால் குறிப்பாக உணர்த்த எண்ணினான். தலைவனின் இடையீடு படாத முயக்கம். இமையாத நோக்கு தலையளியின் பின்னும் கொள்ளும் தணியாத வேட்கை ஆகியனவும் தலைவியின் நுதல் தடவுதல் அணிகலன்களைத் திருத்துதல் ஆகிய செயல்களும் உறுப்பு நலன்களைப் பலப்படப் பாராட்டும் சொல்லும் தோழிக்கும் தலைவிக்கும் ஐயத்தை உருவாக்குகின்றன.

தலைவனின் பிரிவைத் தோழி உணர்த்திய போது தலைவியையும் உடன் அழைத்துச் செல்லுமாறு தலைவனை வேண்டினாள். தலைவன் தலைவியை உடன் அழைத்துச் செல்ல இயலாமைக்குப் பாலைநிலத்தின் பல்வேறு கொடுமைகளைக் காரணம் காட்டினான்.

### 2.10.1. பிரிவு வலித்த தலைவன்

பிரிவு வலித்த தலைவனின் கூற்றுக்கள் பிரிய விரும்பும் நெஞ்சினைத் தெருட்டிச் செலவழுங்க விரும்பும் அவனது விருப்பத்தைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. பிரிய விரும்பும் தலைவனின் நெஞ்சிற்குப் பொருளால் தோன்றும் பயன்கள் நினைவுக்கு வருகின்றன. பிரிய மறுக்கும் தலைவனுக்குப் பொருளின் நிலையாமை மனத்துள்படுகிறது.

*ஆள்வினை ஊக்குதலால் பிரிதலை நன்று எனக் கருதிய நெஞ்சினைத் தலைவி தரும் இன்பத்தை நினைத்தும், தலைவியைப் பிரிய இயலாத தன் நிலையை உணர்ந்தும், பொருளின் நிலையாமையைச் சுட்டியும் செலவழுங்குமாறு தலைவன் நெருட்டுகிறான்.*

*தனது விருப்பத்திற்கு முரணாகப் பிரிவு வலித்த நெஞ்சை மட்டும் பிரிந்து செல்லுமாறும்,* ***வாரேன்*** *எனவும் தலைவன் கூறி நிற்கும் காட்சிகள் இப்பாடல்களில் பெரிதும் காணப்படுகின்றன.*

*பிரிந்து பெறும் பொருள் வளமும், இருந்து பெறும் இன்ப வளமும் ஒப்பிடப்பட்டுத் தலைவி தரும் இன்பத்திற்கு முன் எதனையும் பொருட்படுத்தாத தலைவனின் மன ஓட்டத்தைக் காணமுடிகிறது.*

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே[41]

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன
வளம் பெரிது பெறினும் வாரலென் யானே[42]

அரிது செய் விடுப்பொருள் எளிதினிற் பெறினும்
வாரேன் வாழி என் நெஞ்சே[43]

இறந்துசெய் பொருளும் இன்பம் தரும்எனின்
இளமையிற் சிறந்த வளமையும் இல்லை[44]

*வளமை என்றும் வரும், இளமை வராது, சென்ற வளமை திரும்பும், இளமை திரும்பாது, இளமையை மீட்டுத் தரும் ஆற்றல் வளமைக்கு இல்லை.*

வளமையினும் இளமைக்குச் சிறப்பிடம் தரப்படுகிறது. பொருள் இன்பத்தைக் கூட்ட வல்லதாயினும் இளமை இல்லாதபோது வளமையால் பயன்இல்லை. இன்பத்தை முதுமையில் தேட இயலாது. ஆனால் பொருளை முதுமையிலும் தேட இயலும். பொருளில்லார்க்குக் காதலால் பயனில்லை என்னும் தலைவனின் அடிமன உணர்வைக் குறைகூறும் நோக்கம் உள்ளவையாய் பாடல்கள் அமைந்துள்ளன.

தலைவியின் துன்பத்தைக் கருதிப் பார்க்காத தன் நெஞ்சுப் பிரிவில் மகிழும் நெஞ்சாகவும் தன்னைப் பிரிந்து தனித்து வாழ விரும்பும் அந்நெஞ்சு அன்பற்ற நெஞ்சாகவும் தலைவனின் நெஞ்சு தனிமைப்படுத்திச் சாடப்படுகிறது. இம்முரண்பாட்டால் பொருளாசை கொண்ட உள்ளமும் பிரிதற்குக் காரணமான பொருளும் எள்ளி நகையாடப்படுகின்றன.

பொருள்வயிற் பிரிவு கொண்டோர் அறிவற்றவராகவும் எளியவராகவும் செலவழுங்கிய தலைவனால் கருதப்படுகின்றனர். தலைவனின் கூற்றிலும் சிந்தனையிலும் தலைவியே முழு ஆதிக்கம் செலுத்துகிறாள். தலைவியின் நினைவை மறக்க முடியாதநிலை பிரிவால் தலைவியின் நலம் அழியும் என அஞ்சுதல், தலைவி ஆற்றாது அழுதமை, காமத்தால் அலைக்கழிக்கப்படும் தன் நெஞ்சினை ஒருநிலைப்படுத்த இயலும் என்ற நம்பிக்கை இழத்தல் எனத் தலைவியின் நினைவுடன் உள்ளன (அ) தலைவியின் நினைவால் தன் உள்ளத்தில் தோன்றிய விளைவுகளால் தலைவனின் மனம் தடுமாறியது.

இறப்ப எண்ணுதி ராயின் அறத்தாறு
அன்று என மொழிந்த தொன்னுபடுகிளவி[45]

புல்லென் மாலை யாம் இவண் ஒழிய
ஈட்டகுங் குரைய பெருள்வயிற் செலினே
நீட்டுவீர் அல்லிரோ[46]

எனத் தலைவியின் அவலக் குரலே தலைவனின் பிரிவின்போது மனத்தில் நிற்கிறது. இடைச்சுரத்து நின்று புலம்பும் தலைவனின் குரலில் செலவழுங்குவித்ததை மீறி வந்த வருத்தம் ஒலிப்பதைக் காணமுடிகிறது.

**அது மறந்துஉறைதல் அரிதாகின்றே . . . . .**

**செய்பொருள் மருங்கின் செலவு தனக் குரைத்தென**

**வைகுநிலை அவலமொடு மதியம் போலப் பையென**

**புலம்புகொள் அவலமொடு புதுக்கவின் இழந்த . . .**

**பெருவிதுப் புறுவி பேதுறு நிலையே**[47]

எனத் தலைவன் தன் பொருள்வயிற் பிரிவைத் தலைவிக்கு உரைத்தபோது தலைவி கொண்ட துயர்நிலையே பாலைவனத்தில் தன்னைக் கவலையுறச் செய்வதாக உணர்கிறான்.

இடைச்சுரத்து நின்ற தலைவனின் உணர்வுகள் அவன் புறவாழ்வில் கொள்ள விரும்பிய செம்மாப்பிற்கும் அகவாழ்வில் தலைவியோடு கொண்ட மன ஒன்றிப்பிற்கும் இடையே நடைபெறும் மனப்போராட்டத்தை விளக்குகின்றன.

இடைச்சுரத்து நின்று புலம்பும் தலைவனின் மனநிலைக்கேற்பத் தலைவன் நின்று புலம்பும் இடமும் தலைவியை விட்டு வெகுதூரம் கடந்து வந்த மொழிப்பெயர் நாடாகக் காட்டப்படுகிறது. கருதிய வினை கெடுமாறு செய்கின்ற காதல் நினைவின்படி தலைவன் திரும்ப விரும்பினாலும் தலைவியை விரைவில் சந்திக்கும் வாய்ப்பு அங்கு இல்லை. மனம் தலைவியோடு சேர வேண்டும் என்று நினைக்கின்றது. உடல் பிரிந்து நிற்கிறது. இயற்கையில் இணைந்து நிற்கும் உயிர்கள் இடைச்சுரத் தலைவனுக்கு அவனது தனிமையை உணர வைக்கின்றன.

புறா தன் பெடையுடன் பயிரும் காட்சியைக கண்டு தலைவி தன்னை நினைத்து அழுது கொண்டிருப்பாள் என்ற எண்ணம் தலைவனின் மனத்தை உருக்கச் செய்கிறது.

பசியட முயங்கிய பைங்கண் செந்நாய்

மாயா வேட்டம் போகிய கணவன்

பொய்யாமரபின் பிணவு நினைந்து இரங்கும்

விருந்தின் வெங்காட்டு வருந்துதும் யாமே[48]

எனத் தலைவன் கூறும் உள்ளுறை, பிரிவுத் துயரில் பட்ட தலைவனின் உள்ளக்கிடக்கையை வெளிஉலகில் காண்பதாக அமைகிறது.

வறண்ட சுரத்தின் கொடுமையையும் மறந்து ஆண் இனம், தன் பெண் இனங்களைப் பேணும் ஈடுபாட்டினைக் கண்டபோது தலைவியுடன் தான் இல்லறம் இல்லையே என்ற தலைவனின் உள்ளத்தில் எழுந்த குற்ற உணர்வு மேலோங்குகின்றது. அவலம் கொண்ட தலைவனின் நினைவும், தலைவனை நினைத்த அவள் நெஞ்சம் இடைச்சுரத் தலைவனின் குரலில் எப்போதும் ஒலிப்பதற்கு இது காரணமாகலாம்.

தூங்காமல் இருப்பதால் ஏற்பட்ட சோர்வும், தலைவனின் பிரிவை நினைந்துப் புலம்பிக் கொண்டிருந்த அவல நிலையும் எண்ணிக் கொண்ட தலைவி தனது பிரிவுத் துயரைப் பெரிதாக எண்ணாது தன்னை நினைந்து இலங்குகிறாள் என்ற நினைவு, பொருள் தேடும் தலைவனின் மனத்தை நோக்கச் செய்கிறது.

ஆனா நாயொடு அழிபடர்க் கலங்கி

நம்வயின் கினையும் இடும்பை கைம்மிக[49]

சுரம் பல கடந்த நம்வயின் படர்ந்துநனி

பசலை பாய்ந்த மேனியிள் நெடிது நினைந்து[50]

எனத் தலைவியின் துயரும் தலைவனை நினைந்து நிற்கும் அவள் மனமும் இணைத்தே பேசப்படுகிறது. தலைவியின் இவ்வன்பு மிகை, தலைவனை, அவளது உயர் பண்பினை நினையச் செய்கிறது. புற அழகினும் அவளது அகஅழகு அவனுக்குக் கட்புலனாகிறது.

எய்தவந் தனவால் தாமே

ஏந்தெழில் மழைக்கண் எம்காதலிகுணனே[51]

ஒழிதல் செல்லாது ஒண்தொடி குணனே[52]

வந்த நெஞ்சம் நீ நயந்தோள் பண்பே[53]

எம் வெம் காதலி பண்பு துணைப்பெற்றே[54]

இனிய மன்றயான் ஒழிந் தோள் பண்பே[55]

தண்மை செய்த இத் தகையோள் பண்பே[56]

எனத் தலைவியின் பண்பு நலன்கள் இடைச்சுரத் தலைவனால் நினைவுக் கூறப்படுகிறது.

தலைவன் தான் பிரிவுத் துயரால் தலைவி கொள்ளும் துயரை முழுமையாக உணர்கிறாள். தலைவி தன் துயர்மிகையிலும் தன்னை நினைந்தே இருக்கிறான் என்ற எண்ணம் அவள் உடல் வளத்தினும் மன வளத்தினும் பெரிதாக்கிக் காட்டியிருக்கின்றது.

பிரிவு வலித்த சூழலில் பொருள்வயிற் பிரிய மனம் இசையவில்லை. தலைவியை எண்ணித் தலைவன் தடுமாற்றம் கொள்கிறான். பொருள் தேடும் வேட்கை தலைவனை முன்னுக்கு இழுக்கிறது. தலைவியின் அருகிலேயே இருந்த மகிழ்வான பொழுதுகள் என்னும் நினைவு அவனைப் பின்னுக்குத் தள்ளுகிறது. சமுதாயத்தை எண்ணும்போது கடமை உணர்வு மேலோங்கி நிற்கிறது.

இவ்விருவித மன உணர்வுகளின் போர்க்களமாக அவன் நெஞ்சு அமைந்தாலும் வினை ஈடுபாடும், காதல் நினைவும் சமநிலையில் நிற்கின்றன. செய்வினையை இடையிலேயே விலக்கிப்பின் வாங்குதலால் தோன்றும் இழிவுணர்வினை எண்ணிக் கடமை உணர்வு இழுக்கிறது. இக்கடமை உணர்விற்கும் இடைநின்று தடுக்கும் காதல் நினைவிற்கும் இடையில் சிக்கிய தலைவனின் மன உளைச்சலை இடைச்சுரத்து நின்ற தலைவனின் கூற்றுக்கள்

விளக்கி நிற்பதற்கு அவனது இம்மனப் போராட்டம் காரணமாகலாம். இம்மாறுதலை உணர்வுகளின் மோதல் களமாகத் தலைவனின் உள்ளம் இருந்ததை,

> **இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி**
> **ஒரு தலைப்படா எறும்புடன்[57]**

என்பதாகப் புலவர் உரைக்கின்றார்.

உவமிக்கப்படும் பொருத்தம் அழகியல் உணர்வுடன் இருந்தாலும் மனிதனுக்கு அமைந்த மகிழ்ச்சியற்ற சூழ்நிலைகளை அனுபவத்தின் அடிப்படையில் ஆய்ந்த உளவியலார் மனதில் தோன்றும் குலைவுகளுக்குப் பொருளாதார நிலையைக் காரணமாகவே கொள்ள வேண்டியுள்ளது.

### 2.10.2. பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குரைத்தது

பொருள் கடைக்கூட்டி நெஞ்சிற் குரைக்கும் பாடல்களில் தலைவன் எடுத்துக்காட்டும் உயிரினங்கள் அவனது உள்ளத்துணர்வுகளை நன்கு பிரதிபலிக்கக் காணலாம். முன்னொரு காலத்துப் பொருள்வயிற் பிரிந்தான். தற்பொழுதும் பிரியக் கருதும் நெஞ்சினை நோக்கி,

> **ஈன்பருந்துயவும் வான்பொரு நெஞ்சினைப்**
> **பொரியரை வேம்பின் புள்ளி நீழல்**
> **கட்டளை அன்ன லட்டரங் கிழைத்துக்**
> **கல்லாச் சிறார்அர் நெல்லி விட்டாடும்**
> **. . . . . உள்ளினென் அல்லெனோ யானே உள்ளி[58]**

என்றொரு காட்சியினைக் காட்டுகின்றான் புலவன். இதில் பருந்து வருந்தியிருக்கும் வேம்பின் நிழலில் அப்பருந்தின் வருத்தத்தை ஏறிட்டு நோக்காது, சிறார் நெல்லி வட்டாடி மகிழ்வர் என்றது. யான் இவளைப் பிரிதலால் வருந்துன்பத்திற்கு அஞ்சி வருந்தவும், அதனைக் கருதாமல் என்னெஞ்சோ பொருள் மேற்சென்று மகிழ்ச்சியை உடையதாயிருக்கின்றது என்னும் உணர்வினைச் சுட்டுகின்ற இறைச்சிப் பொருளாக உள்ளது.

மற்றொரு பாடலில் தலைவன் தலைவியுடன் இருக்கும் பொருட் பிரிவைத் தவிர்க்க எண்ணி, அவளின் கூந்தலில் சூடிய மலர்களை,

**மாக்கொடி அதிரல் பூவோடு பாதிரித்**

**தூத்தகட்டு எதிர்மலர் வேய்ந்த கூந்தல்**[59]

என்று குறிப்பிடுகிறான். இவ்வாறு அவன் கூறுவதற்குக் காரணம், மல்லிகையைத் தலைவியாகவும், பாதிரி மலரைத் தானாகவும் உள்ளுறையாக உணர்த்துவதாக பாடலாசிரியர் குறிப்பிடுகிறார். மேலும் இவ்விரு மலரின் நறுமணம், அவனது பிரிவினைத் தடுத்து அகத்துணர்வு தூண்டுவதாக உள்ளது என்ற கருத்தையும் இதன் மூலம் பெறமுடிகிறது.

இளங்கீரனார் காட்டும் பொருள் வலிக்கப்பட்ட தலைவன், வேர்கள் பிணிப்புண்ட மூங்கில்களில் காற்று மோதுதலால் உண்டாகிய ஒலியானது, தறியில் கட்டப்பட்ட பானை நெட்டுயிர்ப் பொறிந்தாற் போன்ற மூங்கில் காட்டில் இருக்கிறது. இதை,

**வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை**

**கந்து பிணி யானை அயாவுயிர்த் தன்ன**

**என்றூழ் நீடிய வேய்பிறங்கு அழுவத்துக்**

**. . . . . . . உள்ளினேன் அல்லனோ . . .**[60]

என்ற பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

இதில் வேர்கள் ஒன்றோடொன்று பிணிப்புண்ட மூங்கில் என்பது, அன்பு வேர்கள் பிணிப்புண்ட தலைவன் தலைவியின் காதல் என்பதைக் குறிக்கும். இதில் எழும் ஓசையானது கட்டப்பெற்ற யானை நெட்டுயிர்த்தலுக்கு உவமையாக்கப்பட்டது. அன்பின் பிணைப்பில் கட்டுண்ட தலைவனின் உள்ளக் குமுறலைக் குறிப்பதாகும்.

வினைவயிற் செல்லுந்தலைவன், தன்னெஞ்சை நோக்கி, வறண்ட நீண்ட சுர நெறியில் இளைய பிடி யானையின் பசியைப் போக்க, களிறானது விளைந்த

அடியையுடைய ஓமை மரத்தைத் தள்ளி வீழ்த்திய வழியில் செல்கின்றாய் என்கிறான்.

இப்பாடலில் பிடி யானைக்குப் பசியைப் போக்க, முற்படும் ஆண் யானை பற்றிக் கூறியது. தலைவியின் காமப் பசியைப் போக்காது செல்லும் தன்னெஞ்சு, இயல்புக்கு மாறாகச் செயல்படுவதைச் சுட்டுவதாகும். களிறு ஓமையை ஒடித்தது, தலைவன் பொருளைத் தேட முற்படுவதை விளக்குவதாம். இதனை,

> கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇயர்
>
> பெருங்களிறு தொலைத்த முடத்தாள் ஓமை[61]

என்பதால் அறியமுடிகிறது. மேலும் பிடி யானை தலைவியாகவும், கன்று தலைவனாகவும், ஒடிக்கப்பட்ட ஓமை மரம் காமப்பசியாகவும் கொள்வதற்கு இடமளிக்கின்றன.

**சல்லியங்குமரனார் காட்டும் தலைவன்**

இளங்கீரனாரைப் போலவே சல்லியங்குமரனாரும் தலைவன் ஒருவனின் மனநிலையைச் சித்திரிக்கிறார். சல்லியங்குமரனார் பாலைவனக் காட்சியைச் சித்தரித்து உள்ளினன் அல்லனோ யானே எனத் தலைவன் கூறுவதாய் கூறி

> இருஞ்சேறு ஆடிய கொடுங்கவுள் கயவாய்
>
> மாரி யானையின் மருங்குல் தீண்டிப்
>
> பொரியரை நெமிர்ந்த புழற்காய்க் கொன்றை[62]

மேற்கண்ட பாடல் அடிகளில் யானையைத் தலைவனாகவும் அடிபரந்த துளையுடைய, காய்களையுடைய கொன்றை மரத்தைத் தலைவியாகவும் குறியீடாகப் புலவர் குறிப்பிடுகிறார். மேலும் நெஞ்சினாற் பொருள் வலிக்கப்பட்டு வருந்துகின்ற தலைவன் ஆயர்கள் பசுவிற்காகப் பறித்த சிறுகுழியினுள் நீரை யானைகள் குடிக்கும் என்பதை,

> ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல்
>
> யானை இனநிரை வௌவும்[63]

என்று சுட்டி, நான் துய்க்க வேண்டிய நலத்தைப் பசலையுண்டொழிக்கும் என்று இறைச்சிப் பொருள்பட கூறுகிறார். தோழியால் பொருள் வலிக்கப்பட்ட மற்றொரு தலைவன்,

**மடிவாய்த் தண்ணுமைத் தழங்கு குரல்கேட்ட**

**எருவைச் சேவல் கிளைவயிற் பெயரும்[64]**

என மொழிவதாக இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இதில் வரும், எருவைச் சேவல் தண்ணுமையின் ஒலிக்கஞ்சித் தன் சுற்றத்திடத்துப் பெயர்ந்துச் செல்லாது நிற்குமென்றது, யாம் பொருள்வயிற் சென்றாலும், ஈண்டு இவள்படும் வருத்தத்தை எண்ணி, அஞ்சி மீண்டு எய்துவோம் என குறிப்புப் பொருளுடையது.

பொருள்வயிற் பிரியவலித்த பாலைநிலத் தலைவனொருவன்,

**கூதிர் முல்லைக் குறுங்கால் அலரி**

**மாதர் வண்டொடு சுரும்புபட முடிந்த**

**இரும்பல் மெல்லணை ஒழியக் கரும்பின்**

**வேல்போல் வெண்முகை விரியத் தீண்டி**

**முதுக்குறைக் குரீஇ முயன்றுசெய் குடம்பை**

**மூங்கில் அம்கழைத் தூங்க ஒற்றும்[65]**

என நெஞ்சிற்கு உரைக்கின்றான். இதில் வரும் மணமில்லாத கரும்பின் மலரை வாடை தீண்டும் என்பது நிலையில்லாத பொருளை நெஞ்சு விரும்பி உலாவுறுகின்றதனைக் குறிக்கும். வாடை வீசுதலாலே குருவியின் குடம்பை அசைந்து வருந்துமாறு மூங்கில் சென்று மோதுகின்றது. பொருள் தேடும் விருப்பம் உன்னைத் தூண்டுதலாலே நான் வருந்துமாறு நீ என்னைத் துன்புறுத்துகின்றாய் என நெஞ்சத்தைச் சாடும் இறைச்சிக் குறிப்பாக அமைந்துள்ளது.

### 2.10.3. இடைச்சுரத்தில் கவலையுறும் நெஞ்சினைக் கூறியது

தலைவன் தலைவியைப் பிரிந்து சுரத்திடையே செல்லும்போது அவளது நினைவு வர, வருத்தம் மிகுந்த நிலையில் திரும்ப வருதலைக் கருதுமிடத்து

தலைவன்பால் திகழும் கூற்றாகும். இதனைத் தொல்காப்பியம், மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணும் எனக் குறிப்பிடுகின்றது. நற்றிணையில் இக்கூற்றில் ஆறு பாடல்கள் உள்ளன.

தலைவன் தான் புதிதாக வந்து வருந்தும் சுரத்தில் கண்ட காட்சியாக,

களிறுநின்று இறந்த நீரல் ஈரத்துப்
பால்வீ தோல்முலை அகடுநிலந் சேர்த்திப்
பசியட முடங்கிய பைங்கண் செந்நாய்
மாயா . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . வருந்ததும் யாமே[66]

என்பதைக் காட்டுகின்றான். இதில் யானையின் நீரல்லாத ஈரத்துப் பிணவு பசியால் வருந்த வேட்டை மேற்சென்ற அதன் கணவனாகிய செந்நாளறு, தான் சென்றவிடத்துத் தன் பிணவைக் கருதி வருந்துமென்றது, படுக்கை கொள்ளாது வேற்றிடத்துப் போய்க் காமவெப்பம் தாங்காது, நம் காதலி தளிர் மேலே கிடந்து காமத்தால், வருந்தப் பொருள்வயிற் பிரிந்து தற்பொழுது அவளைக் கருதி புலம்புகின்றேன்.

பாண்டியன் முடத்திருமாறன் சுட்டும் தலைவன் தான் எண்ணுவதெல்லாம் கெடும்படியாகக் காமம் வாட்டுகின்றது என்பதை, இலவத்தின் கிளை முறியுமாறு காற்று வீசி மோதி நிற்கும் என்று காட்சி வழி கூறுகின்றான். சுாநெறி, தலைவியொடு சேரத் தூண்டும். ஆனால் அது இயலாது என்பதை யானை கன்றோடு வருந்தும் நீரற்ற சுரம் என்று குறிப்பிடுகின்றான். இதனை,

முளிகொடி வலந்த முள்அரை இலவத்து
ஒளிர்சினை அதிர வீசி விளிபட
வெவ்வளி வழங்கும் வேய்பயில் மருங்கில்
கடுநடை யானை கன்றொடு வருந்த
நெடுநீர் அற்ற நிழல்இல் ஆங்கண்[67]

என்று மொழிகின்றான்.

பொருள்வயிற் பிரிந்த தலைவன், இடைச்சுரத்து ஆற்றா இலந்தை மானினத்தால் இலையுண்ணப்பட்டதாயினும் நிரம்பிய கனிகளை நெறியிடை உதிர்க்கும் என்கிறான். இது தலைவி பசலையால் நலன் உண்ணப்பட்டவளாயின் தான் இப்பொழுது சென்றாலும் மிக்க இன்பம் தருபவள் என்பதால் அதன்படியே செல்வோம் என்னும் இறைச்சிப் பொருளை உணர்த்துகின்றது. இக்கருத்தினை,

**உழையணிந்து உண்ட இறைவாங்கு உயர்சினைப்**

**புல்லரை இரத்திப் பொதிபுறப் பசுங்காய்**

**கல்சேர் சிறுநெறி மல்கத் தாஅம்**

**பெருங்காடு இறந்தும் எய்தவந் தனவால்**[68]

என வரும் பாடல் உணர்த்தும்.

மற்றொரு தலைவன் பிரிதொரு பாடலில் களிற்று யானை ஒன்றோடொன்று எதிராகப் பற்றி இழுத்த தேய்த்த புரியை உடைய பழைய கயிறு இற்று ஒழிவது போல என்ற உவமையைப் பயன்படுத்துகின்றான். இவ்வுண்மையினை

**ஒளிறேந்து மருப்பின் களிறுமாறு பற்றிய**

**தேய்புரிப் பழங்கயிறு போல**

**வீவது கொல் என் வருந்திய உடம்பே**[69]

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இப்பாடல் வரிகள் தலைவனின் அறிவுப் பொருளையும், நெஞ்சம் தலைவியின் சேர்க்கையை விரும்புவதையும் சுட்டுகின்றன. இவை இரண்டிற்குமிடையில் "**தேய்புரிப் பழங்கயிறு**" போல் உடம்பு இற்றாதொழிகின்றது என்ற நுட்பமான கருத்தையும் தலைவன் உணர்த்தி நிற்கிறான்.

இடைச்சுரத்து ஆற்றானாகிய மற்றொரு தலைவன்,

**வம்பலர் தொலைந்த அஞ்சுவரு கவலை**

**அழல்போல் செவிய சேவல் ஆட்டி**

நிழலொடு கதிக்கும் நிணம்புரி முதுநரி

பச்சூன் கொள்ளை மாந்திவெய்து உற்று

தேர்திகழ் வறும்புலம் துழைஇ நீர் நயந்து[70]

என இடைச்சுரக் காட்சியினைக் குறிப்பிடுகின்றான். இக்காட்சியில் ஆறலைப் போர் (கள்வர்கள்) கொன்றழிக்கும் பிணங்களைக் கழுகு தின்னாதபடி அலைத் தோப்பிக்கதிக்கின்ற நரி, தானே தின்று உண்ண நீர் பெறாது. ஒதுங்க நிழலின்றி வருந்துங்கானம் என்பது ஊழ்வினையினாலே தரப்பட்ட என் காதலிக்குப் பசலை தோன்றாதபடி மகிழ்ச்சியுள்ள நான் நுகர்ந்து ஈகை முதலியவற்றிற்காக உரிய பொருள் பெறாமல், எய்தும் இடனுந் தெரியாமல் வருந்துகின்றேன் என்பதைக் குறிக்கும்.

### 2.10.4. பிரிவினை ஆற்றாத தலைமகளை ஆற்றியது

தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதியதறிந்து வருந்துகின்றாள் தலைவி, அவளைத் தேற்றும் அவன்,

காடே நிழல்கவின் இழந்த அழல்கவர் மரத்த

புலம்பு வீற்றிருந்து நலம்சிதைந்தனவே

இந்நிலை தவிர்த்தனம் செலவே[71]

என்கிறான். கார்காலத்தில் பெண்மானை, ஆண் மான் தழுவி வேல மரத்தின் நிழலில் இருக்கும். இதனைக் கண்டு தன் மனம் தாங்காது என்பதால் அப்பொழுதும் பிரியமாட்டேன் என்கிறான். இதனை,

மடப்பிணை தழீஇய மாஎருத்து இரலை

காழ்கொள் வேலத் தாழ்சினை பயந்த

கண்கவர் வரிநிழல் வதியுன்

தண்படு கானமுந் தவிர்ந்தனஞ் செலவே[72]

என இருவகை நிலையிலும், அவளைப் பிரியாத நிலையை இயற்கையின் உயிர்க் காட்சியின் மூலம் எளிதில் விளக்கும் தலைவனின் திறம் பாராட்டுதற்குரியது.

தான் வினைவயிற் செல்லுங் குறிப்பறிந்து, தலைவியின் உள்ளம் வேறுபடக் கண்ட தலைவன் தலைவியிடம்,

**பொன்னும் மணியும் போலும் யாழநின்**

**நன்னர் மேனியும் நாறுஇருங் கதுப்பும்**

**போது பணையும் போலும்**[73]

என்று கூறுகின்றான். இவ்வாறு தலைவன் தலைவியின் உறுப்பு நலனை இயற்கையோடு இயைத்துப் பாராட்டுதல் அவளைத் தேற்றுவதற்காகும். இதில் அரிவை முயக்கிற்குப் பொருள் ஒன்றும் பெரிதல்ல எனக் கூறுவதன் மூலம் தலைவனின் அன்புள்ளம் நன்கு விளங்கும். செலவழுங்கல் என்னும் அகத்துறை தலைவியின் நுகர்ச்சியைக் கணவன் பொருட்படுத்தி உடனிருப்பான் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

தலைவன் சேண்சென்று பொருளீட்டிப் புகழ் எய்துவதற்குத் தலைவி சம்மதிக்கவும் வேண்டும். பெண் தன் உள்ளூறும் காம வேட்கையை வெளிப்பட உரைத்தல் மரபில்லை. அது பெண்மைக்கே உரித்தாகும்.

**காமத் திணையிற் கண்ணின்று வரூஉம்**

**நாணம் மடனும் பெண்மைய ஆதலின்**

**குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை**

**நெறிப்பட வாரா அவள் வயினான**[74]

தலைவி நாணத்தால் மறைத்துக் கொண்டிருக்கும் காமக் குறிப்பைக் கவனித்து உணர்ந்து கொள்ளுதல் தலைவனின் கடமை. இவ்உளவியலில், தான் தவறினால் தலைவியின் காம உணர்வு கசப்புணர்வாக மாறி, கசப்பு வாழ்க்கை முழுதும் பரவும். மனைவியின் காமப் பதத்தைப் புரிந்து கொள்பவனே சிறந்த கணவன். இல்லறத்தைக் காத்தவன் என்பது உளவியலாளர்களின் கருத்து.

செல்வம் திரட்டப் பலரோடு சென்றான் ஒரு தலைவன். நினைத்த பொருளளவு கிடைக்கவில்லை. பிரிந்திருக்கும் மனைவியின் நலத்தை

எண்ணினான். உடன்வந்த பலர் பொருளீட்டிக் கொண்டிருக்கட்டும் தனக்குக் கிடைத்தது போதும் என்று, யாரிடமும் சொல்லாது வீடு வந்து சேர்ந்தான்.

திருந்திழை அரிவை நின்நலம் உள்ளி
அருஞ்செயல் பொருட்பிணி பெருந்திரு உறுக! எனச்
சொல்லாது பெயர் தந்தேனே பல்பொறிச்
சிறுகண் யானை திரிதரும்
நெறிவிலங்கு அதிர கானத் தானே[75]

என்ற பாடற் கருத்து மேற்கண்ட உண்மைக்கு அரண் செய்கிறது.

**2.10.5. வினைமுற்றி மீள்வான் தேர்பாகற்குச் சொல்லியது.**

பொருள் செயல் காரணமாகவும், சில வினைகளை முடிக்கக் காரணமாகவும் தலைவியைப் பிரிந்த தலைவன் அவ்வினைகளை முடித்து மீளும்போது தேர்ப்பாகனிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள் அவனது அன்பின் ஆழத்தைப் புலப்படுத்துவதாகும்.

நற்றிணையில் தலைவன் தேர்ப்பாகனிடம் கூறும் கூற்றில் 12 பாடல்கள் அமைந்துள்ளன. இவற்றில் பொருள் செயல் காரணமாகவும் மீளும்போது கூறும் பாடல்கள் பத்து (நற்றிணை-21, 42, 59, 81, 106, 142, 221, 242, 321, 371) ஆகியவை உள்ளன.

வினைமுற்றி மீளும் தலைவன் தலைவியைக் காணும் விருப்பு மிகுதியில் இருப்பான். அவனுடைய இவ்வார்வ மிகுதியை இடைச்சுரத்துக் காட்சிகள் பெரிதும் தூண்டுகின்றன.

உருக்குகின்ற நெய்யில் சிறிது பாலை ஊற்றினால் ஏற்படும் கிடைகின்ற குரலைப் போன்ற குரலையுடைய கானங்கோழி மழைபெய்த காட்டில் ஈரமணலைப் பறித்து, நாங்கூழ் என்னும் புழுவைத் தன் பெடைக்கு ஊட்ட விரையும் மாண்பினைப் பார் என்று தலைவன் தேர்ப்பாகனிடம் காட்டுகிறான். இதனை,

ஏமதி வலவ! தேரே உதுக்காண்
உருக்குறு நறுநெய் பால்விதிர்த்தன்ன

அரிக்குரல் மிடற்ற தம் . . . . . . . . . . . .

புலரா ஈர்மணல் . . . . . . . . . . . .

பேடை நோக்கிய பெருந்தகு நிலையே[76]

என்ற பாடல்வரிகள் உணர்த்துகின்றன. இதன்மூலம் தலைவன் தான் சேர்த்த பொருளினையெல்லாம் தலைவியிடம் கொடுத்து அவளின் மகிழ்ச்சியைக் காணவேண்டும் என்ற அவா மிகுதியை அறியலாம். இதனால் பாகன் தேரினை விரைந்து செலுத்த வேண்டும் என்ற குறிப்பும், கான வாரணத்தின் குரலுக்கு அழகான உவமைச் சிறப்பும் அமைவதை நாம் உணரலாம்.

இதுபோலவே மற்றொரு தலைவன் பாகனிடம் மழைபெய்த பள்ளங்களில் உள்ள தேரைகள் ஒலிப்பதனால் தேரின் மணியொலி தலைவிக்குக் கேட்காது என்றும் முன்னரே சென்று வருகையைச் சொல்லுங்கள் என்று அனுப்பிய இளையோர் சொல்லியிருப்பார். அதன் காரணமாகத் தலைவி பெரு விருப்பினளாய் நோக்கியிருப்பாள், அதனால் விரைந்து தேரைச் செலுத்துவாயாக என்று முன்பொருகால் கூறியதனை நினைவு கூர்கிறான். இக்குறிப்பினை உள்ளடக்கி,

பழமழை பொழிந்த புதுநீரவல

நாநவில் பல்கிளை கறங்க நாவுடை

மணியொலி கேளான் வாணுதல்[77]

என்று வரும் இயற்கைப் பகுதி, தலைவன் தான் குறித்த பருவத்து வந்த மாண்பினை உணர்த்துகின்றது.

கபிலர் காட்டும் முல்லைத் தலைவன் ஒருவன்,

உடும்பு கொலீஇ வரிநுணல் அகழ்ந்து

நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல்கெண்டி

எல்லுமுயல் எறிந்த வேட்டுவன் சுவல

பல்வேறு பண்டத் தொடைமறந் நில்லத்து

இருமடைக் கள்ளின் இன்களி செருக்கும்[78]

என்ற காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகின்றான். உடும்பு முதலியவற்றைக் கொண்டு வந்த வேட்டுவன் அவைகளை இல்லில் போட்டுக் கள்ளின் செருக்கினால் மயங்கிக் கிடப்பான் என்பது பொருளீட்டி வந்த நானும் வீட்டில் பொருளைப் போட்டுவிட்டு என்னுடைய தலைவியின் நலனையுண்டு மயங்கிக் கிடப்பேன் என்ற உள்ளுறையைக் காட்டுகிறது. இதில் முல்லை மலர்ந்த ஊரில் தன்னையே நினைத்திருக்கும் தலைவியைக் கூறுவது, அக்கால வழக்கில் கற்புடையப் பெண்டிர் ஆற்றியிருக்கும் சிறப்பினை வெளிப்படுத்துவதாகும்.

மற்றொரு பாடலில், தலைவன், தலைவியின் இயல்பை,

**ஆடுவரி அலவண் ஓடுவயின் ஆற்றாது**

**அசை இயுள் ஒழிந்த வசைநீர் குறுமகட்கு**

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

**மறுமொழி பெயர்த்தல்ஆற்றாள் நறுமலர்**

**ஞாழல் அஞ்சினைத் தாழிணர் கொழுதி**

**முறி நிமிர்ந்து உதிர்ந்த கையள்**[79]

என்று இரண்டு உயிரினச் செய்கைகளோடு உறழ்ந்து கூறுகின்றான். கடற்கரையில் ஓடும் நண்டினைப் பின் தொடர ஆற்றாள் என்பதன் மூலம் தலைவியின் மென்மையினைப் புலப்படுத்துகின்றான். தான் வினைவயிற் செல்ல வேண்டியதனைக் கூறியவுடன், மறுமொழி கூறாமல் தாழ்ந்த கிளையிலுள்ள ஞாழல் மலர்களைத் தளிருடன் பிசையும் மடப்பத் தன்மையள் என்று கூறியதன் மூலம் அவனது பிரிவினை ஆற்றாது செய்வதறியாது தாம் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் செய்யும் அவளின் மாறுபட்ட உளவியல் தன்மையைப் புலப்படுத்துகிறான். மேலும் முன்பு நிகழ்ந்த இக்குறிப்பினைக் கூறித் தேர் கடாவல் செய்ய வேண்டுமென்பதைப் பாகனுக்குத் தலைவன் குறிப்பினால் உணர்த்துகின்றான்.

வினைமுற்றி மீளும் தலைவன் மற்றொரு காட்சியைத் தேர்ப்பாகனுக்குச் சுட்டுகின்றான். மழை துளிர்க்கின்றது. அதற்கு வருந்தி ஆடுகள் வேற்றுப்புலம்

செல்ல முற்படுகின்றன. இதனைக் கண்ட இடையன் நாவை மடித்துச் சீழ்க்கை செய்கின்றான். ஆடுகள் அப்படியே நின்று விடுகின்றன. இந்நிகழ்வு மூலம் தலைவியைக் காணாது சோர்ந்திருக்கும் தலைவனின் உள்ளம், பாகனின் தேர் விரைந்து செல்லுதலாலே ஒருவாறு சோர்வினை நீக்கிக் கொள்கின்றது. இதனை,

பறிப்புறத்து இட்ட பால்நொடை இடையன்

நுண்பல் துவலை ஒருதிறம் நனைப்பத்

தண்டுகால் வைத்த ஒடுங்குநிலை மடிவிளி

சிறுதலைத் தொழுதி ஏமார்ந்து அலகும்

புறவி னதுவே[80]

என்று உள்ளுறையாகப் புலவர் அமைத்துள்ளார். இப்பாடலின் மூலம் வினைவயின் பிரிந்த தலைவன், அவ்வினையை வெற்றியுடன் முடித்து மீண்டு வரும்போது நீண்ட வழியாயினும் இடைச்சுரத்தில் தங்கி வருதல் கூடாது என்ற தொல்காப்பிய மரபினைப் பின்பற்றி அமைதலையும் காணமுடிகின்றது.

வினைவயிற் பிரிந்தோன் மீண்டு வருங்காலை

இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை

உள்ளம் போல கூற்றுழி யதவும்

புள்ளியியற் கலிமா வுடைமை யான[81]

என்பதே மேற்கண்ட நிகழ்விற்குப் பொருத்தமான இலக்கண விதியாகும். இளவேட்டனார் காட்டும் தலைவன் தன்னுடைய பாகனிடம்,

மணிகண் டன்ன மாநிறக் கருவினை

ஒண்பூந் தோன்யொடு தண்புதல் அணியப்

பொன் தொடர்ந்தன்ன தகைய தன்மலர்க்

கொன்றை முள்ளினர் கோடுதோறும் தூங்க

வம்பு விரித்தன்ன செம்புலப் புறவில்[82]

என்ற இயற்கைக் காட்சியினைக் காட்டுகின்றான். தலைவனைப் பிரிந்த தலைவி விருந்தினரைப் போற்றும் எண்ணத்துடன் வீட்டிலிருப்பாள். தன் வரவு கேட்டு தன் மகனை எழுப்பி, எந்தையே வருக என்று புதல்வனைக் கேட்க வைக்கும் அவள் திறத்தினைக் காணாது மேற்கண்ட காட்சியினைக் காட்டுகின்றான். இதில் கருவிளைக் கொடி காந்தளுடன் புதரில் அழகு செய்யும் என்பது, தலைவி மகனுடன் அழகு பொலிய முகமலர்ச்சியுடன் இருப்பாள் என்பதையும் சுரக் கொன்றையின் பூங்கொத்துக்கள் நறுமணம் பரப்புமென்பது, தலைவனின் வரவு அவ்விருவருக்கும் இனிய மகிழ்ச்சியாரவாரத்தை உண்டாக்கும் என்பதையும் உணர்த்தும் இயல்புடையதாகும்.

வினைமுடித்து மீளும் தலைவன், இடைச்சுரத்திலே நிகழும் உயிரினடக் காட்சிகளைக் காட்டி உதுகாண், உவக்காண் என்று கூறித் தன் அடிமன உணர்வினை வெளிப்படுத்துவது, அகப்பாடல் வெளியிட்டு மரபுகளுள் ஒன்றாகும்.

இம்மரபினைப் பின்பற்றி விழிக்கண் பேதைப் பெருங்கண்ணனார் படைத்துள்ள தலைவன், இலையுதிர்ந்த பிடவ மரங்களெல்லாம் மெல்லிய பூக்கள் அரும்புவிட கொன்றைகள் மலர, காயா மரத்தின் கிளைகள் தளிர கார்காலம் தொடங்கியது. அக்களர் நிலத்தில் மருண்ட கண்ணையுடைய குட்டியோடு பிணைமான், மிகுந்த விருப்பமொடு தன் ஆண்மானைத் தேடுகின்றதனைப் பார் என்றும் அதனால் தேரை விரைந்து செலுத்துவாய் என்றும் தலைவன் கூறுகிறான். இக்காட்சியினை,

> **இலைஇல பிடவம் ஈர்மலர் அரும்ப**
>
> **புதலிவர் தளவம் பூங்கொடி அவிழ**
>
> **பொன்னெனக் கொன்றை மலர மணியெனப்**
>
> **பல்மலர் காயாங் . . . . . . . .**
>
> **. . . . . . . . இரலை ஏறே**[83]

என்ற பாடல் உணர்த்துகின்றது. இதில் தலைவனின் அன்பு நெஞ்சம் மான் மூலம் வெளிப்படுகிறது. பிடவம், கொன்றை, காயாவின் மலர்ச்சி, கார்காலத்தைக் குறித்து, குறித்த பருவத்தில் தலைவன் வருகின்றான் என்பதை உணர்த்துகின்றது. மேலும் இவ்வுயிரினக் காட்சி தலைவன் உளப்பாங்கையும் அவன் தன் மனவுணர்வினை மென்மையாகவும், இதே ஆர்வத்தினைப் பாகனுக்கும் ஏற்படுத்த வேண்டும் என்ற உளவியல் நுட்பத்தையும் கடமை தவறாத சமுதாய உண்மையையும் உணர்த்துகின்றது.

இன்னுமொரு நற்றிணைத் தலைவன் சூரியன் குன்றில் மறையும் மாலை வேளையில் மணியணிந்த புகுவையாடுகள் தொழுவம் திரும்புவதனையும், பார்ப்பன மகளிர் முல்லைப் பூவைச் சூடுதலையும் குருத்த மலர்க் காட்டினைத் தேர் தொட்டு விட்டதால், ஊர் அருகில் உள்ளதனையும் கூறித் தேரினை விரைந்து செலுத்தக் கட்டளையிடுகின்றான். இதனை,

**செந்நிலப் புறவின் புன்மயிர்ப் புருவை**

**பாடின் தெள்மணித் தோடுதலைப் பெயர**

**கான முல்லைக் கயவாய் அலரி**

**பார்ப்பன மகளிர் சாரற் புறத்து அணிய**

. . . . . . . . . . . . . .

**குருந்தவிழ் குறும்பொறை பயிற்று**

**பெருங்கலி மூதூர் மரந்தோன்றும் மே**[84]

எனவரும் பாடல் அடிகள் காட்டுகின்றன. ஆடுகள் நடக்கும்பொழுது ஏற்படும் தலைவியின் பிரிவுதுயர் மிகுதியையும், பார்ப்பன மகளிர் முல்லையைச் சூடி அவர்கள் தங்கள் கணவரோடு ஒருங்கு மகிழும் தன்மையால் தலைவிக்குப் பிரிவுத்துயர் மிகுகின்றதையும் குருந்த மரக்காடு தலைவியின் ஊருக்கண்மையில் வந்துவிட்டதையும் இவ்வுயிரினக் காட்சி நுட்பமாகச் சுட்டுகின்றன.

இப்பாடலின் மூலம் நாடெங்கினும் காடெங்கினும் மண்டிக் கிடக்கும் இயற்கைப் பரப்பில் மக்கள் வாழ்வொடு கலந்த சில இயற்கைப் பகுதிகளே புலவர்தம் அறிவைக் கவர்ந்தன. பாடும் தகுதிப் பாட்டினைப் பெற்றன. அல்லாதவை அழகுடையன என்றாலும் மக்கட்குப் பயன்படாமையால் அவை சங்கப் பாட்டில் ஏறவில்லை என்ற உண்மையை அறிந்து கொள்ளமுடிகிறது.

ஔவையார் காட்டும் வினைமுடிந்து மீண்டு வரும் தலைவன்,

**காயாங் குன்றத்துக் கொன்றை போல**

**மாமலை விடரகம் விளங்க மின்னி**

**மாயோன் இருந்தே எம் நோக்கி**

**வியலிரு விசும்பகம் புதையப் பாஅய்**

**பெயல் தொடங்கினவே . . . . . . . . .**[85]

என்று கூறுகின்றான். இதில் காயாவும் கொன்றையும் முறையே மேகம், மின்னலுக்கு உவமையாகி கார்காலத்தின் வருகையைக் குறிப்பால் கூறுவது பாகனைத் தேர்கடாவல் செய்யும் உத்தியாகும். இவ்வாறு வினைமுற்றி மீளும் தலைவன் தலைவியைக் காணவேண்டும் என்ற அவாவினால், இடையில் தங்காமல் விரைந்து வருதலம் இடைச்சுரக் காட்சிகளைக் காட்டிப் பாகனைத் தேரை விரைந்து செலுத்தக் கூறுவதும் தலைவனின் மன உணர்வுகளின் அன்பின் ஆழத்தைப் புலப்படுத்துவதாகும். வினை முடிந்து மீளும் தலைவன் நெஞ்சை நோக்கி, சிச்சிலிப் பறவை போன்ற கள்ளியின் மேல் படர்ந்த முல்லை மலரை ஆட்டிடையின் பனங்குருத்துடன் சேர்த்துத் தொகுத்த மாலையின் மணம் வீசும் தெருவிலுள்ள மாளிகையில் உள்ள பல்லிகள் அறிகுறியாக அடிக்குமோ! எனக் கூறுகின்றான்.

இது சகுனம் கண்ட தலைவி தன் புதல்வனுடன் மகிழ்ந்து தலைவன் வரவினாலே களிப்பெய்தியிருக்கும் கருத்தினைச் சுட்டுவதற்காகும். இதன்மூலம் அக்கால மக்கள் சகுனம் பார்த்தல் மீது கொண்ட நம்பிக்கையையும் அறியலாம். அதனை,

படுங்கொல் வாழி நெடுஞ்சுவர்ப் பல்லி
பரல்தலை போகிய சிரல்தலைக் கள்ளி
மீமிசைக் கலித்த . . . . . . . . . .
. . . . . . . . . . . எல்லிப் பரீஇ
வெண்போழ் தைஇய அலங்கலங் தொடலை[86]

*என்ற பாடல் உரைக்கின்றது. இதில் மீண்டும் வரும் தலைவனின் உள்ளத்தில் எழும் மகிழ்ச்சியுணர்வும், தலைவி இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பாள் என்று முந்திச் செல்லும் மனவோட்டமும் நெஞ்சோடு நினைத்துப் பார்க்க, வல்ல காட்சியாக வெளிப்படுகின்றது.*

## 2.11. குறித்த காலத்தில் வினைமுற்றி பொருளீட்டி வந்தமைக்கான காரணம் கேட்டல்

*கலையுலகத்து விதிகளும் மரபுகளும் இயற்கையின்மீது செயற்கையாகத் திணிக்கப்படவில்லை. இயற்கையை ஊடுருவி நோக்கி அதிலிருந்து கணித்தறியப்பட்ட விதிகளும் மரபுகளுமே பண்டைப் புலவர்களால் மதிக்கப்பட்டன என்பர். இக்கூற்றினைச் சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றும் மெய்ப்பிக்கின்றன. எல்லா உணர்வுகளையும் நேரடியாக உணர்த்தாமல் இயற்கையுயிர்களின் செயற்பாடுகள் நிகழ்வுகள் மூலம் வெளிப்படுத்தல் அதன் தனித்தன்மைகளைக் காட்டுவதாகும்.*

*தலைவன் குறித்த காலத்தில் திரும்பியதை உணர்ந்து மகிழும் தோழி, பிரிவினால் தலைவிக்கு ஏற்பட்ட பசப்பு, அவன் வரவினால் அஞ்சி ஓடும் என்னும் கருத்தை*

வேடர் கொன்றொழித்த பிணத்தைத் தின்னவந்த நரி
அதன்கண் தோன்றும் முடை நாற்றத்துக்கு வஞ்சி உண்ணாது
பெயர்ந்தேடும்[87]

*என்ற காட்சி மூலம் தலைவிக்குக் கூறுகின்றார்.*

தலைவியின் நினைவுகளையே தன்னெஞ்சில் சுமக்கும் தலைவன், தான் செல்லும் ஒவ்வொரு மாந்தரிடமும் வெவ்வேறு விதமான உளவியல் அணுகுமுறைகளைக் கையாளுகின்றான்.

வினைமுற்றி மீளும்போது வெளிப்படும் அவனது கூற்றில் மகிழ்ச்சிப் பெருக்குக் காணப்படுகிறது. வினை முற்றியவுடன் தலைவியைக் காண வேண்டும் என்னும் அவாவினால் தேர்ப்பாகனிடம், பிடவம், மல்லிகை, கொன்றை, காயா மலர்ந்திருப்பதையும், பிணைமான், ஆண்மானை விருப்பமோடு தேடுகின்றதையும் கூறுகின்றான். இதில் மலர்களின் மலர்ச்சியினால் தனது மகிழ்ச்சியையும் கார்கால வரவையும் இக்காலத்தில் பிணை, இரலை ஏற்றைத் தேடுவது போல் தன்னைத் தலைவி எதிர்பார்த்திருப்பாள் என்பதையும் உணர்த்துகின்றான்.

தான் மகிழ்வதுபோல் பாகனும் மகிழவேண்டும் என்பதோடு விரைவாகத் தேரைச் செலுத்தவேண்டும் என்பதையும் நுண்ணிதின் புலப்படுத்தும் தலைவன், தன்னெஞ்சிற்குச் சொல்வதில் வெளிப்படும் உயிரினக் காட்சி மூலம் தோழிக்குத் தன்னுள்ளத்தை வெளிப்படுத்தி விடுகின்றான். சில நேரங்களில் கேட்போர் இன்மையால் தனக்குத்தானே சொல்வதில் துன்பத்தைக் கொட்டித் தீர்த்து ஒருவாறு ஆறுதலடைந்து கொள்கின்றான்.

### 2.12. தலைவன் தலைவியின் மனநிலை

திருமணத்திற்குப் பின் அகத்தும் புறத்தும் யாதொரு தங்கு தடையின்றிக் காதலர்கள் ஆரா இன்பத்தைத் துய்ப்பர்.

> கரணத்தின் அமைந்து முடிந்த காலை
>
> நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சி[88]

என்று தொல்காப்பியர் களவு கற்பாக மாறுவதைக் குறிப்பிடுவார்.

உடனிருந்து துய்க்கும் இன்பியல் வாழ்க்கை ஆண்டு கணக்காக நீடித்தற்கில்லை. கடமைகளைச் செய்து குடும்பம் நடத்துதற்குப் பொருள் வேண்டும். அதனை வேற்றூர் சென்றும், வேற்று நாடு சென்றும் ஈட்டுதற்குத்

தலைவியைப் பிரிவான் தலைவன். இப்பிரிவு இன்றியமையாத உலகியல் அறமாகும்.

இன்பவுணர்வு பெண்ணைக் காட்டிலும் ஆணுக்கு அதிகம். எனினும் சமுதாயத்தில் ஆடவனுக்கு வகுக்கப்பட்டுள்ள புறக்கடமைகளும் புகழுணர்வும் அவனது இன்ப நாட்டத்தை மெலிதாக்குகின்றன. காதலெண்ணத்தைக் கலைக்கின்றன.

**பெருமையும் உரனும் ஆடுஉ மேன**[89]

பெருமை நோக்கமும் மனத்திட்பமும் ஆண் பாலுக்குரிய பண்புகள் என்று தொல்காப்பியம் செப்புகிறது.

பொருள்வயிற் பிரிவு என்னும் இத்துறை சங்கப் புலவர்களின் நெஞ்சை அள்ளிய துறைகளுள் ஒன்று. இன்பமும் கடமையும் போராடும் இடமாக நல்ல உணர்ச்சிகள் மோதிக் கொள்ளும் இடமாக இத்துறை அமைந்துள்ளது.

**நட்டோர் இன்மையும் கேளிர் துன்பமும்**
**ஒட்டா துறையுநர் பெருக்கமும் காணூஉ**
**ஒருபதி வாழ்தல் ஆற்றுபதில்ல**
**பொன்னவிர் சுணங்கொடு செறிய வீங்கிய**
**மன்முலை முற்றம் கடவா தோரென**
**நள்ளென், கங்குலும் பகலும் இயைந்தியைந்து**
**உள்ளம் பொத்திய உரஞ்சூடு கூரெரி**
**ஆள்வினை மாரியின் அவியா நாளும்**
**கடறுயுந் தீவணம் ஆக**[90]

நண்பினர் மடியையும் உறவினர் துயரத்தையும் பகைவர்களின் அகக்களிப்பையும் உள்ளூரில் இருந்தே பார்த்துக் கொண்டிருப்பர். அவர் யாரெனின் பொன்னிறச் சுணங்கும், திரட்சியும், வீக்கமும், மென்மையும் பொருந்திய முலைத் தடத்தைவிட்டு அகலமாட்டா ஆடவர்கள். யான்

இவ்வினத்தான் ஆகிவிடுவேனோ என்ற அச்சத்தீ இரவும் பகலும் என உள்ளத்தில் மூண்டது. அவ்வாறு மூண்ட நெருப்பை முயற்சி மழையால் அவித்தேன். பொருளின் பொருட்டு வீட்டைவிட்டு இதோ காட்டில் நடக்கின்றேன். இவ்வாறு புலவர் இருங்கோன் ஒல்லையான் செங்கண்ணனார் ஒரு தலைவன் தன் அகப்பூசலை மடித்து கடமைத் திட்பம் கொண்ட எண்ணத்தைப் புலப்படுத்துகிறார்.

கவலையற்று மனையாளொடு இன்பந்துய்த்தல் பிறரிடம் சென்று இரவாமை, தன்னிடம் வந்து இரந்தார்க்கு இல்லை என்று சொல்லாமை, சுற்றத்தார்க்கு உதவுதல், நண்பர் கூட்டத்தைப் பெருக்கிக் கொள்ளல், தக்கவர் தொண்டுக்கு உறுதுணையாதல், பகைவர் செருக்கை அடக்கல், அடங்காரை அழித்தல், அடங்கி வந்தவர்க்கும் தண்ணளி செய்தல், எண்ணிய வினை முடித்தல் என்றிவையெல்லாம் ஆடவனுக்கு உரிய கடப்பாடுகளாம். மானவுணர்ச்சியும் புகழ்ப் பற்றும் இக்கடமைகளைச் செய் செய் என்று அவனைத் தூண்டும். இவற்றைச் செய்தற்குப் புதிய பொருட்காதல் வேண்டும்.

**இல்லோர்க் கில்லேன் றியைவது கரத்தல்**

**வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்**

**பொருளே காதலர் காதல்**

**அருளே காதலர் என்றி நீயே**[91]

காதலர் காதல் மாறிவிட்டது எனவும், அதற்குக் காரணம் ஈகைப் பற்று எனவும் தலைமகனே கூறுவாள். நாடுகாவற் பிரிவு, பகைவயிற் பிரிவு, தூதுப்பிரிவு, ஓதற் பிரிவு, பரத்தையிற் பிரிவு எனப் பிரிவு வகைகள் பல.

இவற்றினும் பொருள்வயிற்பிரிவே பரந்தது. எல்லோர்க்கும் உரியது. களவிற்கும் கற்பிற்கும் பொதுவானது.

## 2.13. தொகுப்புரை

பொருள்வயிற் பிரிவு என்ற இரண்டாவது இயலில் இத்தலைப்பை ஒட்டி நிகழ்த்திய ஆய்வில் கீழ்க்கண்ட முடிவுகள் தெரிய வந்துள்ளன.

1. ஒரு வாழ்வாதாரத்தின் அடிப்படை பொருள், அறத்தின்வழி ஈட்டப்பட வேண்டும் என்ற உண்மையைத் தொல்காப்பியம் மட்டுமல்ல, பல அற நூல்களும் பதிவு செய்துள்ளன.

2. பொருள் கருதித் தலைவியைப் பிரியும் தலைவன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, தலைவிக்கு அதைக் கூறுகையில் சில வேளைகளில் மகிழ்ந்தும், சில வேளைகளில் மனம் நொந்தும் அப்பிரிவிற்குக் கட்டுப்பட்டிருந்ததால் உணர முடிந்தது.

3. தலைவியைப் பிரிந்த தலைவன் பல உணர்வுகளுக்கு ஆட்பட்ட நிலையில் தலைவியின் மனநிலை அறிந்து அதைத் தோழி வாயிலாக உரைத்துப் பிரிந்து சென்றதும் தலைவியைச் சுற்றியே அவன் எண்ணங்கள் வட்டமிட்டன என்பதைப் புலவர்கள் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளனர் என்ற உண்மை புலனாகிறது.

4. தலைவி, பொருள் இருந்தால் மட்டுமே வாழமுடியும் என்ற உலகியல் உண்மையை உணர்ந்து மன உளைச்சலையும் கவலையையும் மறந்து தலைவனைப் பாராட்டும் தன்மை அவளது உயர்ந்த உள்ளத்தைக் காட்டுகிறது.

5. தலைவி தலைவ மீது வைத்த நம்பிக்கை, அன்பு, நல்லெண்ணம், வளமான வாழ்வை கருதிப் பிரிந்து சென்ற அவனது கடமை உணர்வு ஆகியவற்றைத் தலைவி புகழ்ந்து உரைப்பதன் வாயிலாக அவளது பொறுப்புணர்வு தெரியவருகின்றது.

6. காதல் எனின் உயிர் வாழ்தல், சாதல் எனின் பிரிதல், அன்புஎனில் உயிர்க்கலத்தல் என்ற தலைவியின் கொள்கை அவளது சாண்றான்மையை அகப்பாடலில் கூறுகின்றன.

7. சங்க இலக்கியம் மட்டுமன்றி வள்ளுவமும் பொருள்வயிற் பிரிவை பதிவு செய்துள்ளமை சங்க இலக்கியத் தலைவியின் கருத்தாக்கங்களோடு பிரிவு என்பதைப் பின்னணியில் உரசிப்பார்க்க இவ்வியல் வழிகோலுகிறது.

8. தலைவனின் பிரிதலின்போது அழுதல், அவன் வஞ்சினம் கூறி வரும் நாட்களை எண்ணி அழுதல், கார்காலத்தின்போது இயற்கைப் பின்னணியை கண்டு அழுதல், மனதில் உறுதி உடையவளாய் நிலை கலங்காதிருத்தல், துயரில் தெய்வங்களைப் பழித்துக் கூறுதல், தலைவனின் நலத்திற்காகத் தெய்வங்களை வேண்டுதல், விரிச்சி கேட்டல் ஆகிய அனைத்தும் தலைவனின் பிரிவின்போது காணலாகும் தலைவியின் இயல்புகள் இவையென கருத இவ்வியல் துணைசெய்கிறது.

9. சகுனம் பார்த்தல், பிரிவுஅச்சத்தில் கலங்குதல், தலைவனை எண்ணி எண்ணி நெஞ்சழித்தல், பசியநிற்றல், பசலை பாய்தல் உள்ளிட்ட உடல் மாற்றங்கள் தலைவனின் பிரிவைக் காட்டுவதாக உலகியல் பார்வை மூலம் இவ்வியல் விளக்கியுள்ளது.

10. பெண்டிரைப் பிரிந்து பொருள் தேடச் செல்லுதல் அறமன்று என்று பெண்பாற் புலவர்களும் வாழ்வாதாரத்திற்காகத் தலைவன் தலைவியைப் பிரிந்தே ஆக வேண்டும் என்று ஆண்பால் புலவர்களும் கூறியுள்ளனர். இவ்விரு நிலைகளிலும் வருத்தத்திற்குரியவர்களாக இருவரும் கருதப்படுகின்றனர் என்ற நிலையைப் பெறமுடிந்தது.

11. தலைவன் பிரிவதை முன் அறிந்த தலைவி தோழி வாயிலாக அவனைச் செலவழுங்க வைக்க முயலுதலும், அவனது உளவியலுக்கு ஏற்றபடி தலைவன் சில வேளைகளில் நடந்து கொள்வதும் இயல்பு என்பதைச் சங்க அகப் பாடல்கள் பதிவு செய்கின்றன.

12. பிரிந்தால் தவிர பொருள் கைக்கூடாது என்னும் நினைவு தலைவனின் நெஞ்சத்தை, பொருளின்பால் ஈர்ப்பதும், வறுமைச் சூழலின்போது தலைவன் பொருள் ஈட்டச் செல்லவேண்டும் எனத் தலைவனுக்கு

எண்ணம் உண்டாகும்படியாக அருள் வேண்டி காத்திருத்தலும் ஒரு சிறப்பான இயல்பாக இவ்வியல் சுட்டுகிறது.

13. பொருள்தேடிப் பிரிய விரும்பும் தலைவனுக்கு அப்பொருளால் இன்பம் நினைவுக்கு வருதலும், பிரிய மறுக்கும் தலைவனுக்குப் பொருளின் நிலையாமை மனத்தில் தோன்றுவதும் முரண்பாடான கருத்துக்கள் என்பதை இவ்வியல் வெளிப்படுத்துகிறது.

14. பொருளால் கிடைக்கும் இன்பம் தலைவியின் இன்பததிற்குச் சமமாகாது என்பதைத் தலைவன் உணர்ந்து செலவழுங்குவித்தலையும், வளமை திரும்பும், இளமை திரும்பாது, இளமையை மீட்டுத்தரும் ஆசை வளமைக்கு இல்லை எனத் தலைவன் எண்ணுவதும் சங்க அகப்பாடல்கள் பதிவு செய்து உள்ளமை காணப்படுகிறது.

15. பொருள்வயின் பிரிந்து சென்றோர் எளியவர், அறிவற்றவர் என்ற உணர்ச்சி பூர்வ கருத்தை இப்பிரிவு உணர்த்துகிறது. பிரிவினால் நெஞ்சை நிலைப்படுத்த முடியாது என்பதும், பிரிவினால் மட்டுமே பொருள் சேர்த்து மகிழ்வுடன் வாழமுடியும் என்பதும் வாழ்வின் சிறப்புக் கூறுகளாக எடுத்தோதப்பட்டுள்ளது.

16. இடைச்சுரத்தில் காணலாகும் யானை, மான், பல்லி, பறவை ஆகிய உயிரினங்கள் வாயிலாகத் தலைவன் தலைவியின் கூட்டிணக்க வாழ்வின் இன்றியமையாமையை இடைச்சுரத்துப் பாடல்கள்வழி புலவர்கள் புலப்படுத்துகின்றனர்.

17. பொருள்தேடும் நோக்கம் முன்னுக்கு நிற்க, தலைவியின் நினைவுகள் பின்னுக்கு இழுக்க, தலைவனின் மனத்தடுமாற்றம் இருதலைக் கொல்லி எறும்பாய் சித்திரிக்கப்படுவதையும் காட்டுகிறது.

18. இப்பிரிவின்போது பாலைநிலக் கொடுமைகள் தலைவனை வாட்டுகையில் தலைவி அவனைச் செலவழுங்குவிக்கக் கூறியததை நினைந்துத் தலைவன் வருந்துவதும், பொருளா? காதலா? என்ற

போராட்டத்தில் பொருளே முக்கியம் என நினைந்து தலைவன் செல்லுவதும் அவனுடைய மனதின் உளவியலைச் சித்திரிப்பதாக அமைந்துள்ளது.

19. ஆண்பாற் புலவர்கள் பெண்பாற் புலவர்கள் பிரிவு பற்றிப் பாடிய பாடல்களின் வாயிலாகத் தலைவன் தலைவியின் கற்பு வாழ்வின் பல்வேறு கூறுகள் தெரிய வந்துள்ளன. இப்பாடல்கள் வாயிலாக உள்ளுறை, இறைச்சி உணர்த்தப்பட்டு வாழ்வின் கூறுகள் மறைமுகமாக வெளிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன.

20. பொருள்வயிற் பிரிதல் என்ற கருத்தை மையப்படுத்தி உள்ளுறை, இறைச்சியை அதனுள் மறைவாக வைத்து, ஆண்பாற் புலவர்களே அதிகம் பாடியுள்ளனர். இருப்பினும் உவமையல் பாடப்பெற்ற ***தேய்புரி பழங்கயிற்றனார் பாடல்*** பொருள்வயிற் பிரிதல் என்ற நிலையை உயர்த்திக் காட்டுகிறது.

21. ஆறலைக் கள்வர்களின் வழிப்பறி போன்ற கொடுமைகளும், இப்பொருள்வயிற் பிரிதல் பாடல்களில் பயின்று வந்து தலைவியின் மன அச்சத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகிறது.

22. தேர்ப்பாகன் பாடல்கள் தலைவன் தலைவியின் மீது கொண்ட அன்பை ஆழப்படுத்தி காட்டுகின்றன. அஃதோடு அமையாது தலைவனுக்கும்; தேர்ப்பாகனுக்கும் அமையும் மன ஒருமையையும் இவை காட்டுகின்றன.

23. பிரிவின்போது அச்சம், மடம், பயிர்ப்பு ஆகியனவற்றில் தலைவி எள்ளளவும் குறையவில்லை என்பதையும் அகப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. வினைமுடித்து மீண்டு வரும் பற்றிய பாடல்களில் தொல்காப்பிய மரபு காக்கப்பட்டு இருப்பதை இடைச்சுரப் பாடல்கள் காட்டுகின்றன.

24. மலர்கள், செடிகள், கொடிகள் ஆகியனவும் ஏதாவது ஓர் உணர்வைப் பதிவு செய்து இருக்கின்றன என்ற கருத்திற்குப் பொருள் பிரிவின்போது

இருக்கும் உளவியலை வெளிப்படுத்தி நிற்கிறது. இப்பின்னணியில் காயாமலர், கொன்றைமலர், கருவினைக் கொடி, பிடவமரம், முல்லைப்பூ, குருத்தப்பூ ஆகியன புலவர்களின் பாடல்கள்வழி அமைந்து வருகின்றன. இப்பாடல்கள் வாயிலாகப் புலவர்கள் இறைச்சி உள்ளுறை அமைத்துப் பாடியுள்ள திறம் சிறப்பாகும்.

**அடிக்குறிப்புக்கள்**

| | |
|---|---|
| *1.* திருக்குறள், அருளுடைமை, கழக உரை | குறள்-*247* |
| *2.* தொல் - பொருள் - அகம் | நூ-*974* |
| *3.* கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, | பா-*219* |
| *4.* வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, | பா-*232* |
| *5.* மேலது | பா-*174* |
| *6.* மேலது | பா-*283* |
| *7.* கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, | பா-*173* |
| *8.* மேலது | பா-*221* |
| *9.* திருக்குறள் | குறள்-*1151* |
| *10.* வி.நாகராஜன் (உ.ஆ)குறுந்தொகை | பா.*224* |
| *11.* திருக்குறள், குறள் - | குறள்-*760* |
| *12.* வி.நாகராஜன் (உ.ஆ)குறுந்தொகை | பா.*283* |
| *13.* கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற், | பா-*272* |
| *14.* வி.நாகராஜன் (உ.ஆ)குறுந்தொகை | பா.*87* |
| *15.* சங்க இலக்கியத்தில் உளவியல் து.சிவராஜ் | ப-*136* |
| *16.* வி.நாகராஜன் (உ.ஆ) குறுந்தொகை | பா - *218* |
| *17.* இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, | பா-*351* |
| *18.* கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை | பா-*333* |
| *19.* இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, | பா-*289* |
| *20.* இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, | பா-*361* |
| *21.* வி.நாகராஜன் (உ.ஆ) குறுந்தொகை | பா - *256* |
| *22.* மேலது | பா-*338* |
| *23.* இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, | பா-*299* |

24. மேலது பா-217

25. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா-332

26. மேலது பா-326

27. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா-185

28. மேலது பா-274

29. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா-124

30. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, பா-285

31. மேலது பா - 382

32. மேலது பா-364

33. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.330

34. மேலது பா-64

35. மேலது பா - 84

36. மேலது பா-107

37. மேலது பா-243

38. மேலது பா- 73

39. மேலது பா - 79

40. அ.விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, பா.78

41. பட்டினப்பாலை பா - 217-220

42. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா-103

43. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா - 149

44. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா-126

45. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா - 3

46. மேலது பா-239

47. மேலது பா- 299

48. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா-103

49. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா-297

50. மேலது பா-169

51. மேலது பா-83

52. மேலது பா - 321

53. மேலது பா - 323

54. மேலது பா - 325

55. மேலது பா-326

56. மேலது பா - 327

57. மேலது பா - 339

58. மேலது பா-229

59. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா-52

60. மேலது பா-62

61. மேலது பா - 137

62. மேலது பா-141

63. மேலது பா-240

64. மேலது பா - 298

65. மேலது பா-366

66. மேலது பா - 103

67. மேலது பா-105

68. மேலது பா-113

69. மேலது பா-284

70. மேலது பா - 352

71. மேலது பா-256

72. மேலது பா-256

73. மேலது பா-166

74. தொல் - பொருள் - களவு - நூ - 1054

75. அ. தட்சிணாமூர்த்தி (உ.ஆ), ஐங்குறுநூறு பா-355

76. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா-21

77. மேலது பா-42

78. மேலது பா - 59

79. மேலது பா-106

80. மேலது பா-142

81. தொல் - பொருள் - கற்பு நூ-1140

82. அகம் பா-322

83. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா-242

84. மேலது பா-321

85. மேலது பா-371

86. மேலது பா-169

87. மேலது பா-164

88. தொல் - பொருள் - கற்பு நூ-1092

89. மேலது நூ-1043

90. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு பா-279

91. மேலது பா-53

# இயல் - மூன்று

# பரத்தையர் பிரிவு

3.0. முன்னுரை

3.1. பரத்தமை   சொல் விளக்கம்

3.2. பரத்தமை – வரையறை – சமூகம்

3.3 பரத்தையர்

3.3.1. பரத்தமைக்கு மறைமுக விதிவிலக்கு

3.3.2. பரத்தையின் சமூகத்தகுதி

3.4. பரத்தமைத் தோற்றம்

3.4.1. பரத்தை – பெயர்கள்

3.4.2. தலைவன் – பரத்தை – வதுவை மணம்

3.5. காமக்கிழத்தியும் மகப்பேறின்மையும்

3.6. சிலம்பில் பரத்தை

3.7. தலைவன் குழந்தை – தன் குழந்தை

3.8. கொண்டி மகளிர்

3.9. பொது மகளிரின் இயல்புகள்

3.10. தலைவி – பரத்தை சாடல்கள் – மோதல்கள்

3.11. கிழத்தி – காமக்கிழத்தி

3.12. மனைவியர் கோபம்

3.12.1. ஊடல்

3. 13. தலைவன் – பரத்தை செயல்

3.14. புதுவோர்

3.15. தலைவியின் வெறுப்பு

3.15.1. தலைவனின் எள்ளல்

3.16. வாயில்களின் பங்கு

3.16.1. வாயில்களுக்குரிய பணிகள்

3.16.2. வாயில் மறுத்தல்

3.16.2.1. தலைவனுக்கு வாயில் மறுத்தல்

3.16.2.2. தலைவனின் பண்பினைச் சுட்டி வாயில் மறுத்தல்

3.16.2.3. தலைவியின் துயர் கூறி வாயில் மறுத்தல்

3.16.2.4. தலைவியின் உயர்வும் பரத்தையின் இழிவும் முரண் நிலையில் காட்டி வாயில் மறுத்தல்

3.17. தொகுப்புரை

# இயல் - மூன்று
# பரத்தையர் பிரிவு

### 3.0. முன்னுரை

*தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் பாலியல் மிக இன்றியமையாத ஒன்று என்பதில் ஐயமில்லை. நாகரிக மனிதன் படிப்படியே முன்னேறிய போது தன்னுடைய பழைய மரபுகளையும் மாற்றிக் கொண்டான். இதனால் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் பல. இங்ஙனம் ஏற்பட்ட திருத்தங்களில் மனிதனுடைய பாலியல் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் பல. அங்ஙனம் ஏற்பட்ட திருத்தங்களில் மனிதனுடைய பாலியல் வாழ்க்கையில் ஏற்பட்ட திருத்தமே தலைமையானது. வரையறையற்ற எதிர்ப்பாளர் உறவினை மாற்றித் திருமணம் என்பதை உருவாக்கிய பின்னரும்கூடப் பழைய நிலையின் எச்சம் நீடித்ததாகத் தெரிகின்றது.*

### 3.1. 'பரத்தமை' சொல் விளக்கம்

*சங்க இலக்கியத்தில் பரத்தை, பரத்தன், பரத்தமை என்னும் சொற்கள் காணப்படுகின்றன. பரத்தையர் என்னும் சொல் பன்மை வடிவமும் பரத்தன் என்னும் விளி வடிவமும் காணப்படுகின்றன.*

| | | |
|---|---|---|
| பரத்தன் | – | தனக்கென வரையப்பட்ட பெண்ணை விடுத்துப் பல பெண்டிரிடம் முறையற்ற இன்பம் துய்ப்பவன் |
| பரத்தை | – | தனக்கென ஒருவனை வரைந்து கொள்ளாமல் தான் விரும்பியோருடனும் தன்னை விரும்பியோருடனும் முறையற்ற இன்பம் நுகர்பவள் |

*பரத்தை, பரத்தமை என்னும் சொற்கள் பற்றிய வரையறைகள் சங்க இலக்கியத்தில் இல்லை. எனினும் அவர்களுடைய பண்புகள் பலவற்றையும் உள்ளடக்கி ஒரு வரைவிலக்கணத்தைக் கூற இயலும்.*

பரத்தையராவார் யாவரெனினும் அவர் ஆடலும், பாடலும்
வல்லாராகி அழகும் இளமையும் காட்டி இன்பமும் பொருளும்
வெஃகி யாவர் மாட்டும் தங்காதார்.[1]

என்பது இளம்பூரணர் தரும் விளக்கமாகும்.

சங்கப் பாடல்களில் விலைநலப் பெண்டிர், விலைக்கணிகை, கொண்டி மகளிர் என உள்ள குறிப்புகள் பரத்தையர்க்கும் பொருட்குமுள்ள உறவைக் காட்டுகின்றன. சங்க இலக்கியத்தில் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தினை மருதத்திணைப் பாடல்கள் அதிகமாக எடுத்தியம்புகின்றன. இப்பாடல்கள் தோன்றிய காலத்தில் வளமார்ந்த மருத நிலங்களில் வாழ்ந்த பெருமக்களிடம் இவ்வொழுக்கம் பெரிதும் பேணப்பட்டிருக்க வேண்டும்.

### 3.2. பரத்தமை – வரையறை – சமூகம்

பரத்தமை என்பதைக் குறித்துப் பல்வேறு உரையாசிரியர்களும், திறனாய்வாளர்களும் பல கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

பரத்தமை என்பது ஓர் உலகளாவிய கலாச்சாரமாக இன்றுவரை இல்லை. பாலுறவை அங்கீகரிக்கும் சமுதாயத்தில் இது தேவையற்றதென்பதால் அங்கு பரத்தமையென்பது அரிதாகவே உள்ளது. பிற சமுதாயங்களில் இது மிக அழுத்தப்பட்டுள்ளது என்று பால்ராஜ் ராய்ஸ், பெர்ணான்டோ, ரால்ப் ஆகியோர் உரைக்கின்றனர்.[2]

மத்தியதரக் குடும்பத்தையும் அதன் பெண்களையும் மாசுபடுத்தாமல் தூய்மையாகப் பாதுகாப்பதற்குப் பரத்தமை தேவைப்பட்டது என்று **செரிஸ்க் ராமர்** கூறுவார்.[3]

வீடு (அ) இல்லறத்தின் புனிதத் தன்மையையும் தம்முடைய மனைவியர் பெண்களின் ஒழுக்கத்தையும் காக்க உதவும் சாதனமே வேசித்தொழில் என்று லெக்கி உரைப்பதாக ரஸ்ஸல் கூறுகிறார்.[4]

பெரிய வீட்டுப் பெண்களின் ஒழுக்கம் மிகவும் முக்கியம் என்று கருதப்படும் வரையில் திருமணம் என்னும் சடங்குடன் வேறோர் ஏற்பாடும்

அவசியமாகும். அந்த ஏற்பாடுதான் விலைமாதரை அமர்த்திக் கொள்ளல் என்று கூறுகின்றார் பெர்ட்ரண்டு ரஸ்ஸல்.[5]

கட்டுப்பாடுகள், வரையறைகள், உயர்ந்த இல்ல மனைவிகளுக்கு வகுக்கப்பட்டிருந்தது. வரையறை மற்றும் கட்டுப்பாடு இல்லாத பெண்கள்தான் பரத்தையர் என்பார் பாஷம்.[6]

திருமணம் என்பது ஒரு சட்டமாகும்போது திருமணம் செய்து கொண்டவர்களை விடுத்து வேறொருவருடன் பாலுறவு கொள்வது ஒரு பாவமாகும். தீய ஒழுக்கமாகவும் நீதிக்கு மாறானதாகவும் கருதப்பட்டது என்பார் பென்னட் சந்திரகுமார்.[7]

பரத்தமை என்பது சமூகப் பிரச்சனை மட்டுமே அன்று. அது மருத்துவ பிரச்சனையும்கூட. பால்வினை நோய் பரத்தமையால் உருவாகிறது என்று உரைக்கிறார் சூரியகுமாரி.[8]

பரத்தையின் பெண்களை அதே தொழிலில் ஈடுபட்ட பெண்களின் குடும்பங்களில் திருமணம் செய்து கொடுக்கின்றனர். அப்பெண் பரத்தமைத் தொழிலில் ஈடுபடுகிறாள். சட்டத்தை ஏமாற்ற இது ஒரு உத்தியாக மேற்கொள்ளப்படுகின்றது எனக் குறிப்பிடுகிறார் சந்தோஷ்குமார் முகர்ஜி.[9]

பெண் பரத்தமையை மேற்கொள்ளும் அடிப்படை இருநிலைகளில் மிகச் சுருக்கமாக விவரிக்கப்படுகின்றது. 1) பொருள் (அ) பணம் 2) மதிப்புடைய பொருளுக்காகப் பாலுறவுப் பரிமாற்றத்தை மேற்கொள்ளல்.

இவ்வுறவு கணவன் மனைவி (அ) நண்பர்கள் (அ) தனி நபர்களுடன் கண்மூடித்தனமாக உருப்பெறுகிறது எனப் பால்ராக் ராய்ஸ்[10] கூறுகிறார்.

பெண் பரத்தமையை மேற்கொள்ள நான்கு காரணங்களைக் குறிப்பிடுகிறார் ராம்பால்.

1) பொருளாதாரத் தேவை. இது வாழ்வதற்குப் பொருளீட்டும் ஒரு வழியாக அமைகிறது.

2) அதிக பாலுணர்வு கொண்ட பெண்கள் (அ) பல வகையான இன்பங்களை விரும்பும் பெண்கள்.

3) நெருக்கமில்லாத கடமையுணர்வு இருக்க வேண்டிய அவசியமில்லாத ஒருவனுடன் எப்போதாவது இன்பம் அடைகின்ற வழி.

4) அனைத்துக் காரணங்களுக்கும் பின்னே உள்ள ஒரு சக்தி வாய்ந்த காரணி ஆண்கள் கொடுக்கும் ஊக்கமாகவும் வாடிக்கையாளர் இல்லையெனில் பரத்தையரும் இருக்கமாட்டார்கள்.[11]

பரத்தைமைக்கான காரணங்களைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார் பி.கே.பால்.[12]

1) நிலம் இல்லாமையும் ஏழ்மையும் அதனால் நகரங்களுக்குக் குடியேறுதலும் பரத்தமை உருவாகக் காரணமாகிறது.

2) கிராமங்களிலிருந்து நகரங்களுக்குப் பெண்களைப் பரத்தமை தொழிலில் ஈடுபடுத்துவதற்குப் பெரியதோர் அமைப்பே செயல்படுகின்றது.

3) இந்தியச் சமுதாயத்தில் பரத்தமை பரவுவதன் பெரும்பங்கை அவர்களது தாழ்வான நிலையே பெறுகின்றது.

4) கற்பழிக்கப்பட்டவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், இளம் வயதில் விதவையானவர்கள் ஆகியோரே பெரும்பான்மை பரத்தையராகின்றனர்.

5) பெண் குழந்தைகளை விரும்பாத பெற்றோர் அவர்களால் பரத்தமைத் தொழில் வியாபாரியிடம்விற்று விடுகின்றனர்.

6) தம் குடும்பத்தைக் காப்பாற்றப் பெற்றோர் பெண்களை இத்தொழிலுக்கு வற்புறுத்துகின்றனர்.

7) வரதட்சணையும் ஒரு காரணம்.

ஆடவர் மணமாகாமலோ, மனைவியைப் பிரிந்து வெளியூர்களில் பயணம் செய்யும்போதோ, புலனடக்கம் என்பதை ஏற்க இயலா நிலையில் தம்

இச்சையைப் பூர்த்தி செய்ய உயர்ந்த குடும்பப் பெண்கள் கிடைக்காத நிலையில் ஆடவர் தேவைக்குச் சமூகமே சில வகுப்புப் பெண்களை ஒதுக்கி வைக்கிறது என்பார் பெர்ட்ரண்டு ரஸ்ஸல்.[13]

பரத்தமை வளம்பெற இரு நிலைகளை எடுத்துரைக்கின்றார் பால்ராக் ராய்ஸ்.

1)பாலுறவு நெறி - குடித்தல், நடனம், பொழுது போக்கு முறைகள் இவை உலகின் பல இடங்களிலும் தொடர்ந்து காணப்படுவதே பரத்தமையின் முக்கிய அம்சமாகும்.

2)பரத்தமை சட்டம், மனிதத்துவம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டது என்றும் கூறுகிறார்.[14]

இவ்வாறு மேல்நாட்டு அறிஞர்கள், சமூகவியலாளர்கள், நம் நாட்டு அறிஞர்கள் உள்ளிட்ட பலரும் பரத்தை, பரத்தமை என்ற சொல்லாட்சிக்கு விளக்கம் தருகிறார்கள். பரத்தமை என்ற சொல் Prostitution என்ற ஆங்கில சொல்லாட்சியால் வழங்கப்படுகிறது. இத்தொழில் உலகளாவிய ஒன்று என்பதால் உலக அறிஞர் பலரும் கருத்துத் தெரிவித்து உள்ளனர். சங்க இலக்கியத்தில் காணலாகும் இச்சொல்லாட்சி பல சூழல்களில் பல்வேறு நிலைகளில் பல்வேறு சொற்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 3.3. பரத்தையர்

பரத்தையர் என்ற பொது மகளிர் ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கினர். கணிகை, விலைக்கணிகை விலைநலப் பெண்டிர், கொண்டி மகளிர், பரத்தை போன்ற பெயர்களாலும் இவர்கள் சுட்டப்பட்டுள்ளனர். வள்ளுவம் இவர்களைப் **பொருட்பெண்டிர், இருமனப் பெண்டிர்** எனக் குறிப்பிடுகின்றது. சமண முனிவர்களால் தொகுத்தளிக்கப்பட்ட நாலடியார் **பொது மகளிரின்** தன்மையைப் பத்துப் பாடல்களில் விளக்குகிறது. தம்மிடம் இன்பம் துய்க்க வந்த ஆடவரிடமிருந்து பொருள் பெற்று வாழ்ந்தது

மட்டுமின்றி செல்வந்தர் அரசர் ஆகியோருடன் சொகுசு வாழ்க்கை நடத்தியதாகவும் சமூகவியலார் குறிப்பிடுகின்றனர்.

சங்க இலக்கிய மருதத்திணைப் பாடல்கள் மதுரைக் காஞ்சி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்கள் இவர்களது வாழ்க்கையை விரிவாகக் குறிப்பிடுகின்றன. பரத்தையர் ஒழுக்கம் இழிவானது என்று சங்க காலச் சமுதாயம் கருதினாலும் ஆணாதிக்கச் சமூகம் என்பதால் அது மறைமுகமாக வழக்கத்தில் இருந்தது. ஒழுக்கத்தைப் பற்றித் திருவள்ளுவர் கடிந்துரைப்பது போலச் சங்க இலக்கியங்கள் கடிந்துரைக்கவில்லை. தொல்காப்பியமும் பரத்தமைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் கடிந்துரைக்கவில்லை.

சங்க காலத்தில் மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள் உள்ளிட்ட பலரிடையே போர்கள் பல நிகழ்ந்ததால் வீரர்கள் பலர் மடிந்தனர். அவ்வீரர்களின் மனைவியர் ஆதரவின்றி கைவிடப்பட்டனர். அவர்கள் கைம்பெண்கள் ஆயினர். ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடு பின்பற்றப்பட்டு வந்தாலும் கைவிடப்பட்ட இப்பெண்கள் காமக்கிழத்தியர் ஆகவும், ஆடவர்களின் உடல் தேவையை நிறைவேற்றும் பெண்டிராகவும் மாற வேண்டிய சூழல் ஏற்பட்டது. பரத்தையர்க்கு குழந்தை இருந்ததாகச் சுட்டவில்லை. ஆயின் பரத்தைத் தன் தலைவனுடைய புதல்வனைத் தன் புதல்வனாகக் கருதி அணைத்து கொஞ்சி மகிழ்வடைந்த நிலையை அகநானூறு குறிப்பிடுகின்றது.

> காணுநர் இன்மையின் செத்தனள் பேணி
> பொலங்கலம் சுமந்த பூண் தாங்கு இளமுலை
> வருகமாள என் உயிர் எனப்பெரிது உவந்து
> கொண்டனள் நின்றோட் கண்டு நிலைச் செல்லேன்
> மாசு இல் குறுமகள்! எவன் பேதுற் றனை[15]

என்ற அகநானூற்றுப் பாடல் எடுத்துக்காட்டுகிறது. ஓர் ஆடவன் தன் மனைவியின் மூலம் பெறுகின்ற குழந்தைக்கு மட்டுமே சொத்துரிமையும் குடிப்பெருமையும் இருந்தது. பரத்தமை ஒழுக்கத்தில் ஆடவர் வாழ்ந்து வந்த போதிலும், அதே சமூகத்தில் பரத்தமை ஒழுக்கத்தை விரும்பாத நிலையும் இருந்தது என்பதைச் சோழன் நலங்கிள்ளி பாடிய புறநானூற்றுப் பாடலால் அறியலாம்.

**தீதுஇல் நெஞ்சத்துக் காதல் கொள்ளப்**

**பல்இருங் கூந்தல் மகளிர்**

**ஒல்லா முயக்கிடைக் குழைக என்தாரே![16]**

மேலும் பரத்தையர் ஒழுக்கம் சமுதாயத்திற்கு அஞ்சி மேற்கொள்ளப் பட்டதாகவே காட்டப்படுகிறது. இவ்வாறு பரத்தையர் இருவேறு நிலைகளில் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். திருமணம் என்ற நிறுவனத்தில் இவர்கள் இடம் பெறுவதில்லை. மாறாக மன்னர், செல்வர் போன்றோர்க்கும் கீழ்மைக்குணம் கொண்டோர்க்கும் சிற்றின்பம் வழங்கும் அபலைப் பெண்களாகத் திக்கற்றவர்களாக வாழ்ந்து வந்தனர். ஏழ்மை நிலை, வறுமைச்சூழல், வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஆகிய இடர்பாடுகளால் வாழ்ந்த இவர்கள் மேற்சுட்டியவர்கள் வழங்கிய பொருளாதாரத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தியதை அறியமுடிகிறது. எனவே, பொருட்பெண்டிர் என அடையாளப்படுத்தப்பட்ட இச்சமூகத்தினர் பிற பெண்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது இவர்களது நிலை பரிதாபத்திற்குரியதாக இருந்தாலும் கட்டாயத்தின்பேரில் வாழ்ந்தனர் என்றே கருத வேண்டியுள்ளது.

தலைவி மற்றும் தோழியர் இம்மகளிரை இகழ்ந்துரைக்கும் செய்திகளைச் சங்கப் பாடல்கள் பலவும் காட்டுகின்றன. ஓர் ஆடவன் இத்தகைய பெண்டிருள் ஒருத்தியை வாழும் இல்லத்திற்கு அழைத்துச் சென்று வாழ்க்கை நடத்தியதாகவும் அவள் மகப்பேறு எய்தியபோது அவள் கற்பு நலஞ்சான்ற மனைவியோடு மதிக்கப்பட்டாள் என்பதையும் அவளுக்குப் பிறந்த

குழந்தையின் தலைவன் குடியுரிமை பெறமாட்டார் என்பதையும் வாயில் மறுக்கும் தோழி என்ற கூற்றில் அமைத்து ஆலங்குடி வங்கனார் கூறியுள்ளதை நற்றிணைப் பதிவு செய்துள்ளது.

. . . . . . . . . நின்மாண் இழைமகளிரை
எம்மனைத் தந்துந்தழீ இயினும் அவர்தம்
புன்மனத்து உண்மையோ அரிதே அவரும்
பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து
நன்றி சான்ற கற்போடு
எம்பாடு ஆதல் அதனினும் அரிதே[17]

சங்க காலச் சமுதாயத்தில் இத்தகைய மகளிரின் எழுச்சிக்கான காரணங்களுள் பெண்களுக்குச் சொத்துரிமை இல்லை என்பதும் ஒன்றாகும். எனவேதான் நற்றிணையில் கூறப்பட்ட தலைவன் இவர்களுள் ஒருத்தியைத் தன் மனையோடு வாழச் செய்ய எண்ணியதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### 3.3.1. பரத்தமைக்கு மறைமுக விதிவிலக்கு

பரத்தையிற் பிரிவோன் மனைவியின் புனிறு நாட்கள் கழிந்தபின் பன்னிரு நாட்கள் அவளைப் விட்டுப்பிரிதல் கூடாது என்ற நிலை இருந்தது. இந்நாட்கள் மனைவி சூல்கொள்ள ஏதுவான நாட்கள் என்பதால் மருத்துவ உளவியலின் அடிப்படைக் காரணமாக இந்நாட்களில் கணவன் பிரிதல் கூடாது என்னும் கருத்தாக்கம் கூறப்பட்டது. இது எஞ்சிய நாட்களிலும் மனைவி கருவுற்ற நாட்களிலும் கணவன் பரத்தையின்பாற் பிரியலாம் என்று மறைமுக அனுமதி அளிப்பது போல அக்கட்டுப்பாடு பொருள் தருவதாக உள்ளது. அதனால் அக்கட்டுப்பாடு ஆடவர்தம் நன்னெறி பிறழ்ச்சிக்கு இடமளிப்பதாகக் கருதமுடிகிறது.

### 3.3.2. பரத்தையின் சமூகத்தகுதி

பரத்தமை பற்றிக் கருத்து உரைக்கும்போது, பரத்தமை சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மணஉறவு வெளியே இன்பங்காணும் வாயிலாக

விளங்கிற்று. ஏனெனில் சொத்துரிமைக்கும், குடும்பப் பரம்பரை உரிமைக்கும் இடையூறு செய்யாத ஒரு தனியுரிமையாக இது திகழ்ந்தது என்று **கா.சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார்.**[18] ஆகவே, ஒரே ஆடவருடன் நிலைத்த தொடர்பு கொண்டிருத்தல் வேண்டுமென்று கருதும் கட்டாயநிலை பரத்தையர்க்கு இல்லை. தம்மை நாடிவரும் ஆடவர் தரும் பொருளைக் கொண்டே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் இவர்கள் இருந்துள்ளனர். பரத்தைக்கு அவள் தொடர்பு கொண்டுள்ள ஆடவனின் மனைவியோடு ஒத்த தகுதி உரிமை இல்லை. அவனது சொத்தில் பங்குபெறும் உரிமை கிடையாது. அவன் குலமரபு காக்கும் உரிமையை அவள் பெற முடியாது. இவர்கள் தம் பரத்தமை வாழ்வில் வாழ்க்கை வசதிகள் பலவற்றைக் கொண்டிருந்தாலும் இல்லற மகளிர் என்ற சமுதாயத் தகுதியையோ, தலைவி, குடும்பப் பெண் என்ற தகுதியையோ இவள் பெற முடியவில்லை.

தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவரும் எல்லா திணைகளுக்கும் உரியவராக விளங்க பரத்தை மட்டும் மருதத் திணைக்கேயுரியவளாகத் தொல்காப்பியமும் இலக்கியங்களும் சித்திரிக்கின்றன. பரத்தையர் காரணமாகப் பிரியும் தலைவனிடம் தலைவி ஊடல் கொள்வது மருதத்திணையின் ஒழுக்கமாகத் தொல்காப்பியம் கூறுகிறது. சங்க அகப்பாடல்களில் மருதத்திணைப் பாடல்கள் அனைத்தும் தலைவனின் பரத்தையிற் பிரிவு பற்றியும் அதன் காரணமாக ஏற்படும் தலைவியின் ஊடல் பற்றியுமே விளக்குகின்றன. குடும்பக் கடமைகளைப் பேணவும், குடும்ப வாரிசாகக் குழந்தைகளைப் பெறவும் திருமண வாழ்வு உதவியது. எனவே சமுதாய மதிப்பைக் குடும்ப வாழ்வு அளித்தது. ஆனால் நிறைவுறாத சிற்றின்ப உணர்வை அனுபவிக்க ஆடவர் இப்பெண்டிரை நாடினர் என்ற கருத்து நிலவுகிறது. எனவே சமூகத்தகுதி என்ற நிலையில் இப்பெண்டிரை அக்காலச் சமூகம் இரண்டாம் நிலையில்தான் வைத்து இருந்தது.

### 3.4. பரத்தமை தோற்றம்

உழவுத் தொழிலின் தோற்றத்தோடு நாகரிகம் பிறந்தது. இந்நாகரிகம் கூடா ஒழுக்கம், நகமும் தசையும் போன்று ஒட்டியே வளர்ந்திருக்கக் கூடும் எனக் கருத இடமுண்டு. கலாச்சாரம் நாகரிகத்துடன் கலந்தபோது இவ்விரண்டிற்கும் இடையே இவ்விழிந்த ஒழுக்கமும் வளர்ந்திருக்க கூடும் எனக் கருதப்படுகிறது. அக்காலத்தில் பெரிய நகரங்கள் வளமிக்க மருத நிலங்களிலேயே உருவாயின. தமிழகத்தைப் பொறுத்த வரையில் இவை காவிரி, வையை, பெரியாறு என்னும் பெரிய ஆறுகளின் கரைகளில் உருவாயின. இத்தகைய நகரங்களிலேயே இக்கூடா ஒழுக்கம் பெரிதும் வளர்ந்திருந்தது என்பதனைப் பண்டைத் தமிழர்கள் பல சங்கப் பாடல்களையும் அதன்பின் தோன்றிய பல இலக்கியங்களையும் கொண்டு உணர முடிகிறது.

மருத நிலத்தின் செல்வச் செழிப்பே இப்போற்றா ஒழுக்கத்திற்கு அடிப்படைக் காரணம் என்றும் நாகரிகம் வளர்ச்சியுறும் பொழுது மக்களிடம் நெகிழ்ச்சியான போக்குத் தோன்றியதென்றும் அறியமுடிகிறது. மருத நிலத்தில் ஏற்பட்ட கலை வளர்ச்சியும், அடிக்கடி அங்கு நிகழ்ந்த திருவிழாக்களும் இத்தகைய இழி செயலுக்கு உறுதுணை புரிந்தன எனலாம்.

#### 3.4.1. பரத்தைப் பெயர்கள்

சங்க காலத்தில் பல நிலையினரும் வாழ்ந்திருத்தல் கூடும். ஆனால் அக இலக்கியம் அவர்களனைவரையும் பொருட்படுத்தவில்லை. மாறாகத் தலைவனோடு மனைவி போன்ற உரிமையுடன் வாழ்ந்தவர்கட்கு மட்டுமே கூற்றுக்களில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. வரைவின் மகளிர்க்குத் தொல்காப்பியர் கொடுத்துள்ள பெயர் காமக்கிழத்தியர் என்பதாகும். கிழத்தியர் என்னும் பெயர் இவர்களுக்குச் சமுதாயத்தில் இருந்த உயர்வினைக் குறிக்கின்றது.

நச்சினார்க்கினியர் தாம் உரையெழுதிய கலித்தொயையில் இவ்வரைவின் மகளிரைக் காமக் கிழத்தியர் என்றே குறிப்பிடுகிறார். எனினும் பிறதொகை நூல்களில் பரத்தை, காதற்பரத்தை, இற்பரத்தை, இல்லிடப்பரத்தை, நயப்புப் பரத்தை, தலைநின்றொழுகப்பட்ட பரத்தை என்னும் பெயர்கள் கையாளப்பட்டுள்ளன. சேரிப் பரத்தையர்களே பொருட்பெண்டிர் என்றும், மாய மகளிர் என்றும் வரைவிலா மாணிழையார் என்றும் இருமணப் பெண்டிரென்றும் வள்ளுவரால் இழித்துரைக்கப்பட்டனர். பொருட் பெண்டிரைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகையில் வரைவின் மகளிர் என்று கூறிப் பொருளுக்காகத் தம்முடைய பெண்மையை விற்கிற வேசியரைப் புணரும் பொய்யான காமக் கலவி இருட்டு அறையில் உணர்ச்சியற்ற பிணத்தைப் பிணமென்று அறியாமல் தழுவிப் புணர்வதற்கு சமானமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

பகுத்தறியும் அறிவே இல்லாதவர்களுக்கு வஞ்சகமுள்ள விலைமாதருடைய உறவு விட்டு விலக முடியாத பேய்ப் பிடிப்பு போன்றது.

**வரைவிலா மாணிழையார் மென்றோன் புரையிலாப்**

**பூரியர்கள் ஆழும் அளறு**[19]


இதில் வள்ளுவர் பரத்தையரின் உறவென்பது, வேறு குற்றம் செய்யாமலும் வெறும் முட்டாள்தனத்தினால் விழுந்து தவிக்கிற நரகம் எதுவென்றால், பணங் கொடுக்கிற யாரையும் வரன்முறையில்லாமல் புணர்கின்ற விலைமாதரின் உறவேயாகும். இது மட்டுமின்றி,

**இருமனப் பெண்டிரும் கள்ளும் கூறும்**

**திரு நீக்கப்பட்டார் தொடர்பு**[20]

என்கிறார். அதாவது, இருமனமுள்ள விலைமாதரும், கள்குடியும், சூதாட்டமும் திருமகளாகிய இலட்சுமியால் விலக்கப்பட்டவர்களுடைய உறவுகள் ஆவர் என்பது வள்ளுவர் கூற்று.

தொல்காப்பியரும் நச்சரும் உயரிய நிலையில் இருந்து இப்பெண்டிரை உலகத்தார் போன்று கூறாது வரைவிலா மாணிழையார் என்றும் **இருமனப் பெண்டிர்** என்றும் கூறியது போன்றே உலகப் பொதுமறை தந்த வள்ளுவரும் தரமான சொற்களால் இப்பெண்டிர்க்குப் பெயரை வழங்கியுள்ளார். அதாவது பொருட்பெண்டிர் [21] (913), பொய்மை மகளிர் [22] (918), பொருட்பொருளர் (910)[23] மாய மகளிர் [24] (919), வரைவிலா மாணிழையார் [25] (913), இருமனப் பெண்டிர் [26] (920) என்ற சொற்களால் இவர்களுக்கு பெயர் வழங்கியுள்ளனர்.




“Economic necessity, biological, predispasition moral advantage and what may be called its civilizational value lead to preditution. Salves and destitutes in spite of their dislike they were driven to prostitution”[27] (CI - Lbid, P.255)

பெண்கள் எப்போதும் சமூகத்தோடு நெருங்கி உறவாடல், தன்னைக் கட்டுப்படுத்தியொழுகாமை, கணவனின் ஒழுக்கக் குறைபாடு, பிற ஆடவரோடு பழகுவதில் போதிய தற்காப்பின்மை, தொடர்ந்தும் நீடித்ததுமான கணவனின் பிரிவு, கணவன் வெளிநாட்டில் வாழ்தல், கணவன் தன் மனைவியின் அன்பையும், உணர்ச்சியையும் மதியாமை ஆகியவை இக்கூடா ஒழுக்கம் தோன்றுவதற்குக் கூறும் காரணமாகவும் அமைகிறது.

தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் பரத்தையரை ஒத்தக் கிழத்தியர், இழிந்த கிழத்தியர், வரையப்பட்டார் என மூவகையாகப் பிரிப்பர். இம்மகளிரை, **கண்ணிய காமக் கிழத்தி** என்று நச்சர் இம்மகளிரை காமக்கிழத்தியர் என்ற சொல்லால் சுட்டியுள்ளார். இது மட்டும் அல்லாமல், புறப்பெண்டிர், பொருட்பெண்டிர் என வேறு பெயர்களாலும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

பரத்தையரைப் புதல்வனின் தாயர் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டது நோக்கத்தக்கது. சங்கப் பாடல்களும் அவ்வாறே குறிப்பிடுகின்றன. இம்முறைவழியே தலைவியும் இவரை எங்கையர் என்று குறிப்பிடுகின்றாள். இதனைத் 'தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி எங்கையர்க்கு உரையென இரத்தற்கண்ணும்' என்ற நூற்பா அடிகளும், 'கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக் காதல் எங்கையர் காணின் நன்றென மாதர் சான்ற வகையின் கண்ணும்' என்ற நூற்பா அடிகளும் மெய்ப்பிக்கின்றன.

இவற்றில் வரும் எங்கையர் என்ற சொல் காமக்கிழத்தியரை மட்டுமே குறித்தது என்று எடுத்துக் கொள்ளமுடியாது. ஏனெனில் புதல்வனின் தாயர் என்று பரத்தையரும் குறிக்கப் பெறுவதால் எங்கையர் என்ற சொல் பரத்தையரையும் குறித்தது என்றே எடுத்துக் கொள்ளுதல்தான் பொருந்தும். ஆயினும் ஆடவர் பலரோடு பரத்தையர் உறவு கொண்டிருப்பின் அவரைத் தலைவி எங்கையர் என்று அழைப்பதாலேயே அப்பரத்தையர் தலைவனோடு

மட்டுமே உறவு கொண்டிருந்தனர் என்ற கருத்து வலுப்பெறுகின்றது. எனவே பரத்தையரில் ஒரு பிரிவினர் திருமணமான ஒரே ஒரு ஆடவனோடு வாழ்ந்து வந்தார்கள் என முடிவுக்கு வர முடியும்.

காமக்கிழத்தியர், பரத்தையர் இருவரும் வேறு வேறானவரா அன்றி ஒருவரா என்பது நீண்ட நெடிய ஆராய்ச்சிக்குரியதாகும். பரத்தை என்பதற்கு அயலவர் அதாவது தலைமகளின் வேறானவர் என வைத்துக் கொண்டால் அச்சொல் காமக்கிழத்தியரையும் குறிப்பதாகக் கொள்ளலாம். உரையாசிரியர்களும் பரத்தையரைக் காமக்கிழத்தியருள் ஒருவராகக் குறிப்பிடுவதை எண்ணிப் பார்க்க தூண்டும். எனவே தொல்காப்பியர் வேறு வேறு பெயர்கள் கொண்டு ஒருவரை அதாவது தலைமகள் அல்லாதாரைச் சுட்டிக் கூறியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம்.

பரத்தையரை விலைமகள் என்ற பொருள்பட எந்த இடத்திலும் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. இது போன்றே, பரத்தையர், ஆடவர் பலரோடு தொடர்பு கொண்ட செய்தியும் இடம்பெறவில்லை. மேற்கூறிய சான்றுகள்வழி தெரியவரும் கருத்துகள் இளம்பூரணர் கூறும், ஒருவர் மாட்டும் தங்காதவர் என்ற கொள்கையை வலியுறுத்துவனவாக (அ) விளக்குவனவாக அமையவில்லை. மாறாகத் தலைவனுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியர் (அ) காமத்திற்கு வரைந்து கொள்ளப்பட்டவர் இருந்ததாகக் கருத வாய்ப்புள்ளது. ஒருவேளை பரத்தையரில் மற்றொரு பிரிவினர்க்கு இளம்பூரணரின் கருத்துப் பொருத்தமாக இருக்கலாம்.

### 3.4.2. தலைவன் – பரத்தை – வதுவை மணம்

மருதத் திணைப்பாடல்கள் தலைவர்களைப் பரத்தை வீடு சென்று தம் இல்லத்திற்குத் திரும்பி வந்து வாயில் வேண்டி நிற்கும் நிலையிலேயே அறிமுகப்படுத்துகின்றன. இவர்களில் பலர் முதல் நாள் பரத்தையுடன் நீராடியமை பற்றிக் கடிந்துரைக்கப்பட்டு உள்ளனர். காலையில் வீடு திரும்புவோராகக் காணப்படுகின்றனர். சில ஆடவர் இரவில் மட்டுமின்றி பகலிலும் தம் மனைவியரைத் தனிமையில் விடுத்துப் பரத்தையரிடம் சென்றனர்.

பகலான் பலதிணை பரத்த[28]

முன் பகலொருத்தியைக் கூடி நண்பகல் அவளை நீக்கிப் பிற்பகல் வேறொருத்தியை நாடுவோனாகத் தலைவனொருவன் குற்றம் சாட்டப்படுகின்றான். ஒரு தலைவன் எண்ணற்ற பரத்தையரோடு உறவு கொண்டவனாகக் கூறப்படுகின்றான்.

ஓரூர் தொக் கிருந்தநின் பெண்டிருள்[29]

ஆடவரின் பொதுவான பரத்தை நாட்டத்தை இச்சான்றுகள் காட்டுவதாகக் கொள்ளலாம். தலைவன் பரத்தை உறவின் குறிப்பிடத்தக்கதொரு நிலையாவது தலைவன் அவளை வதுவை செய்ததாகும். முறையான திருமணம் வதுவை நன்மணம் எனப்பட்டது. மணம் செய்து கொள்ளப்பட்ட பெண்டிர் வதுவை மகளிர் எனப்பட்டனர்.

பரத்தையொருத்தியைத் தலைவன் தனக்குரியவளாக ஆக்கிக் கொண்ட நிகழ்ச்சியும் வதுவை எனப்பட்டது. இவ்வதுவை விறலியின் துணையால் நடந்தது. வையையையடுத்த மலர்ச் சோலையிலும் பெரிய மாளிகையிலும் இவ்வதுவை நடந்துள்ளது. பரத்தையோடு நிகழும் இவ்வதுவை எளிதிற் கைவிடத்தக்கதாகவும் இருந்தது. **பூவிளை மடந்தையர்,** என்பார் பரிசம் கொள்ளும் விலை மகளிராவர். ஒருநாள் கூட்டத்திற்கு என்று தீர்மானிக்கப்பட்ட தொகைக்குப் பூவிளை என்று பெயர். கலித்தொகையில் **வதுவையம் கமழ் நாற்றம் வைகறைப் பெற்றதை**[30] என்ற அடிக்கு, பூப்பேகிக் கொள்கின்ற கலியாணத்திலுண்டான என்று உரையெழுதியுள்ளார் நச்சினார்க்கினியர். இங்ஙனம் வதுவை செய்து கொள்ளப்பட்ட பரத்தையை அங்கும் மனைவி என்று சங்க இலக்கியம் சுட்டிக்காட்டவில்லை. தலைவி வேறானவள் எனக் குறிக்கும் முகமாகத் தலைவியைப் பரத்தை **மனையோள்** என்றே சுட்டுகின்றாள்.

### 3.5. காமக்கிழத்தியும – மகப்பேறின்மையும்

*சங்க இலக்கியம் காமக்கிழத்திக்கு மகப்பேறு உண்டென வெளிப்படக் கூறவில்லை. தலைவன் மகனைத் தம் மகனெனக் கருதி அணைத்து மகிழ்வோளாகவே பரத்தை காட்டப்பட்டு உள்ளாள்.*

பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து

நன்றி சான்ற கற்பொடு

எம்பாடு யாதல் அதனினும் அரிதே[31]

. . . . . . . . . . . . . . எம்போல்

புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து

நெல்லுடை நெடுநகர் நின்னின் றுரைய

என்ன கடத்தளோ மற்றே[32]

*என்றும் பெண்கள் கூற்றுக்களால் பரத்தையர்க்கு மகப்பேறு இல்லை என்று உணர முடிகிறது.*

### 3.6. சிலம்பில் பரத்தை

*வணிகனான கோவலனுக்கு மாதவி என்ற கணிகை வயிற்றிற் பிறந்த மணிமேகலை கணிகைக் குலத்தள் என கருதப்பட்டாள்.[33] அங்கும் தலைவன் குடிக்கு விளக்கமும் மகவினைப் பெற்றுத் தரும் தகுதியற்றவளாகவே மாதவி அடையாளப்படுத்தப்பட்ட கணிகையாவாள். சிலப்பதிகாரத்தில் பரத்தை என்ற சொல்லாட்சி நேரடியாக இடம்பெறவில்லை. ஒரு சூழலில் கோவலன் மாதவியை ஆடல் மகள் என்று குறிப்பிடுகின்றான். பொதுவாக ஆடல் மகளிர் நாட்டியத்தின் அனைத்து திட்பநுட்பங்களையும் அறிந்திருப்பர்.*

### 3.7. தலைவன் குழந்தை – தன் குழந்தை

*தலைவி, தோழியிடம் தன் புதல்வனை அழைத்துக் கொண்டு நகரையும், கோவிலையும் சுற்றிக்காட்டி வருமாறு அனுப்புகிறாள். அவ்வாறு சென்ற*

தோழியும் புதல்வனும் காலம் தாழ்த்தித் திரும்புகின்றனர். தலைவி காரணம் வினவுகிறாள். விடையளிக்கும் தோழி, நகரில் உள்ள தலைவனின் பரத்தையர் புதல்வனைப் பார்த்துக் கொஞ்சி அணிகலன் அணிவித்து அனுப்பியதால் காலம் கடந்துவிட்டது என்கிறாள். மோதிரத்தைக் கண்ட தலைவி சினம்கொண்டதை,

> **சுறா ஏறு எழுதிய மோதிரம் தொட்டாள்**
>
> **குறி அறிந்தேன் காமன்கொடி எழுதி என்றும்**
>
> **செறியாப் பரத்தை இடன்தந்தை மார்பில்**
>
> **பொறி ஒற்றிக் கொண்டு அள்வலி என்பது**
>
> **தன்னை அறீஇயச் செய்த வினை**[34]

என்ற பாடல் மூலம் விளங்கலாம். இவ்வாறாகப் பரத்தைத் தலைவனின் குழந்தையைத் தன் குழந்தையாகவே கருதிய தன்மை அரண் செய்யப்படுகிறது.

### 3.8. கொண்டி மகளிர்

தொல்காப்பியத்தில் இடம்பெறாத சங்க இலக்கியங்களில் இடம்பெறும் பாத்திரம் **கொண்டி மகளிர்** என்பது பொருள் வாங்குதலையுடைய பரத்தையர் என்று உரை எழுதுவர் நச்சினார்க்கினியர். சங்க காலத்தின் ஏழாம் தலைமுறை சார்ந்ததாகக் கருதப்படும் தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றிய மதுரைக் காஞ்சியில் அமையும் நகர் மயமாதலின் பெருமையை விளக்கும் பாடலில்,

> **மாயப் பொய்பல கூட்டிக் கவவுக்கரந்து**
>
> **சேயரும் நணியிரும் நலனயந்து வந்த**
>
> **இளம்பல் செல்வர் வளந்தப வாங்கி,**
>
> **நுண்தா துண்டு வறும்பூத் துறக்கும்**
>
> **மென்சிறை வண்புனம் இன்துயில் துறந்து**
>
> **. . . . . . . . . . . . கண்டோர்**
>
> **நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்**[35]

என்று மதுரைக்காஞ்சி கொண்டி மகளிரின் இயல்பை விரிவாகச் சித்தரிக்கும். பழம் தேடிச் செல்லும் பறவைபோல செழித்த செல்வக் குடியினர் வந்து தங்கிப் போகும் வளமான இல்லமாகப் பரத்தையர் இல்லம் காட்டப்பட்டுள்ளது. பிறர் நெஞ்சை நடுங்கச் செய்யும் வானவமகளிர் போன்ற கொண்டி மகளிர் என இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். மாயப் பொய் பல கூட்டும் மாயத்தராகவும் இவர்கள் சுட்டப்பட்டுள்ளனர். ஆக இவர்கள் நகர்மயமாதலின் ஒரு அங்கமாக நிலைத்த வளமான குடியிருப்பினை உடையவராக ஆகிப்போனச் சூழலை மதுரைக்காஞ்சி வெளிப்படுத்துகின்றது. பரத்தையர்கள் காமத்துடிப்பிற்கான பொருட்பெண்டிராக மாறிய நிலையைப் பரத்தமை உடைமைச் சமுதாயத்தின் ஒரு அங்கமாக மாறியதைக் கொண்டி மகளிர் என்னும் இச்சொல் காட்டுகின்றது.

> **கொண்டி மகளிர் உண்டுறை மூழ்கி**[36]

எனப் பட்டினப்பாலை கொண்டி மகளிரைச் சுட்டிக்காட்டும்.

> **வீழாக் கொள்கை வீழ்த்து கொண்டி**
> **மல்லல் மார்பு மடுத்தனன்**
> **புல்லுமற் றெவனோ அன்பிலங்கடைய**[37]

தலைவன் கொண்டி மகளிரை விரும்பியமையால் புல்லுதலை விரும்பேன் என்றனள் தலைவி. கொண்டி என்ற சொல் மிகுதி, கொள்ளை, கொள்ளைப்பட்ட, பிடிக்கப்பெற்ற, திரைப்பொருள் என்று சங்க இலக்கியங்கள் பயின்று வருகின்றது. கொண்டியின் வளப்பத்தை அம்மூவனார்,

> **மோட்டுமணல் அடைக்கரைக் கோட்டுமீன் கொண்டி**
> **மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்**
> **வளங்கெழு தொண்டி**[38]

என்று சுட்டுவர்.

> **கொண்டி வேண்டுவ வாயிற் கொள்கெனக்**
> **கொடுத்த மன்னர் நடுக்கற் றனரே**[39]

பொருநனும் இளையன் கொண்டியும் பெரிதென[40]

மேலைச் சான்றுகளான, **கொண்டி** மிகுதியாகக் கொள்ளப்பட்ட பொருளைக் குறிப்பதை அறிய பரத்தையருள் மிகுதியாகப் பொருள் பெற்றவர் **கொண்டிமகளிர்** என அழைக்கப்பட்டனர்.

கட்டுப்பாடின்றித் திரியும் பெண் **அடங்கா மகளிர்** என்ற பொருளில் இன்றும் இச்சொல் பேச்சு வழக்கில் **கொண்டிச்செறுக்கி** என வழங்கப்படுகிறது. மேலும் பரத்தை வீட்டின் வாயிற்புறத்தே நின்று தன்னலங்காட்டிக் கவரும் இயல்பினராகவும் இருந்தனர்.

நன்னகர் வாயிற் கதவு வெளில் சார்ந்து

தன்னலங் காட்டித் தகையினாற் கால்தட்டி விழுக்கும்[41]

என்று அவர்தம் இயல்புகளைக் கலித்தொகை சுட்டும்.

### 3.9. பொது மகளிரின் இயல்புகள்

பொதுமகளிர் என்பவர்கள் அணிகலன்களை அணிந்து மயக்கும் மாலைப் பொழுதில் வாயிற்புறத்தே நின்று வழிச் செல்வோர்களைக் கூப்பிடும் இயல்பினராக நின்று கொண்டிருப்பார் என்று **வெ.தெ.மாணிக்கம் குறிப்பிடுவர்.**[42]

கலித்தொகை தோழி கூற்றில் ஊரார் கூறும் அலர் பெரிதாயுள்ளது. உன் வருகைக்காகப் பரத்தை காத்திருக்கின்றாள். நீ இங்கே தங்கி காலம் நீட்டித்துவிட்டாய் என உன் பாகனும் பூட்டப்பட்ட தேரோடு வெளியே காத்திருக்கின்றான். எனவே தேரேறிச் சென்று பரத்தையர் தம் உறவு கெடாமல் பாதுகாத்துக் கொள்வாயாக[43] என எள்ளி நகையாடினாள் தோழி.

சேரிப் பரத்தையுடன் தங்கி வந்த தலைவனுடன் ஊடிக் கூடியதைக் கூறுபவளாகக் கலித்தொகையில் (68, 69, 71, 72, 78) என்ற பாடல்களில் அமைந்து காணப்படுகின்றன.

தீரா முயக்கம் பெறுநர்ப் புலப்பவர்

யார்நீ வருநாட்போல் அமைகுவயாம் புக்கீமோ

மாரிக் கவாவுற்றுப் மீன்வாழும் நெல்லிற்காங்கு

ஆராத் துவலை யளித்தது போலும்நீ

ஓர்யட் டொருகால் வரவு[44]

என்கிறாள் காமக்கிழத்தி. இக்கூற்றில் கதிர்விட்டு நிற்கும் நெல்லிற்குச் சிறுதூறல் போன்று ஒரு ஆண்டுக்கு ஒரு முறை முட்டுமே வரும் நின் வரவு எனக்கு இன்பம் தருவது இல்லை. எனவே நீ நின் பரத்தையரிடமே செல் என்றாள் காமக்கிழத்தி.

முன்பகற் றலைக்கூடி நண்பகல் அவள்நீத்து

பின்பகற் பிறந்தேரும் நெஞ்சமும் ஏமுற்றாய்[45]

என ஒரே நாளில் மூன்று வேளையும் பல பெண்டிரையும் நாம் தலைவனின் காம வேட்கை இழிவாகப் பேசப்படுகிறது.

ஏறுதழுவல் வழி மகளிர்க்கான திருமணம் நடைபெற்ற முல்லைநிலச் சமுதாயத்தில் கொலேற்றுக் கோடஞ்சுவானை மறுமையிலும் சேர விரும்பாத மகளிரின் இருமணம் கூடுதல் ஆயமகளிர் இயல்பல்ல எனக்கூறும் ஆயரின் இயல்பைப் பாடும் கலித்தொகை பாடல் காட்டும் சமுதாயத்தில் பரத்தமை பரவலாக இடம் பெற்றுள்ளது. ஒருபுறம்,

காரி கதனஞ்சான் பாய்ந்த பொதுவற்கே

ஆர்புற் றெமர் கொடை தேர்ந்தார் அலரெடுத்த

ஊராரை யுச்சி மிதித்து[46]

எனப் பாடப்பட்டதற்குப் பின்னர் ஏறுதழுவலின் இறுதியில்,

கோளாளர் என் ஒப்பார் இப்என நம்மனுள்

தாளாண்மை கூறும் பொதுவன் நமக்கு ஒருநாள்

. . . . . . . . . . புக்கார் பொதுவரோடு

எல்லாம் புணர்க்குறிக் கொண்டு[47]

என்ற பாடலில் பொதுமகளிர் சேர்க்கை நடைபெற்றதைச் சுட்டுகிறது. எனவே இந்தப் பொது மகளிர்முறை மற்ற எந்தச் சமுதாயத்தையும் போலவே தமிழ்ச்

சமுதாயத்திலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம் போன்று வளர்ந்திருந்த நிலையை இத்தகு பாடல்கள் காட்டுகின்றன.

### 3.10. தலைவி – பரத்தை சாடல்கள் – மோதல்கள்

பரிபாடலில் காட்டப்படும் பரத்தமை நிலை 20-ஆம் பாடல் தலைவியின் வளையலையும் ஆரத்தையும் அணிந்த ஒரு பரத்தையை வைகையில் நீராடுகையில் தலைவியும் தோழியும் அப்பரத்தையைப் பார்த்துக் கேட்பதாகவும் அவளை இழித்துரைப்பதாகவும் அமைந்துள்ளது. சங்கப் பிற்காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கையும் இழிநிலையையும் பரத்தையர் சமூகம் பரந்துபட்டதாக உள்ளதையும் வெளிப்படுத்துகின்றது.

வனப்பாகிய வயலில் முற்றாத கள்ளாகிய நீரைப் பாய்ச்சி காமக்கலப்பை எனும் ஏர்பூட்டி எம்முடைய எருது (தலைவன்) சோம்பிக் கிடவாமல் உழுகின்ற படைச்சாலே எனவும், நிரம்பப் பொருள் தருபவரைக் கண் என்ற கயிற்றால் தோளாகிய தறியில் பிணைத்துக் காம இன்பம் மிகும் பொருட்டாக எம்மிடமிருந்து களவாடிக் கொண்ட அணிகலன்களை அணிந்து கொண்டதால் வந்த அழகையும் ஊட்டுகின்ற பொதுமகளே, என்றும் ஐம்பொறிகளாலும் நுகரும் புலன்களை மட்டுமே நுகரும் இயல்புடைய காமுகர் என்ற பன்றிகளை (பரத்தையரை நாடுபவராகிய காமுகரை) அனுபவிக்கும் இரு உதடுகளை உடைய வாயை உடைய தொட்டியே என்று பரத்தை உருவகித்துக் கூறப்பட்டு இருக்கிறாள். பரத்தமை மேற்கொண்ட தலைவனை,

> பெண்மைப் பொதுமைப் பிணையில்! ஐம்புலத்தை
> தூற்றுவ துற்றும் துணை இதழ் வாய்த்தொட்டி
> முற்றா நறுநறா மொய்புனல் அட்டி
> காரிகைநீர் ஏர்வயல் காமக்களி நாஞ்சில்
> மூரி தவிர முடுக்கு முதுசாடி[48]

என்று எருதாக உருவகித்தார்கள். கெட்டுப்போன எமது இந்த எருதைத் தேடித் திரிந்து யாம் இப்பொய் மகளிரிடையே இந்த வையையாகிய தொழுவத்துள் கண்டோம். இந்த எருது எம்முடைய எருது. ஆதலை வழக்குரை மன்றத்தில் எல்லோரும் அறிய வழக்காகத் தொடர்ந்தோம். தமது எருதை உழுதொழிலைச் செய்யாமல் ஓடவிடும் இயல்பு வேளார்க்கு இல்லை என்பதால் இவ்வாறு செய்கின்றோம் என வினவும் தோழி தலைவியின் ஆரத்தை அணிந்த உன் மார்பும் தலைவி மார்பும் ஒத்த தரத்தை உடையவை அல்ல எனக் கூறுகின்றாள். இதைக் கண்ட முதுமகளிர் சிலர் தலைவியை வணங்கும்படி பரத்தையிடம் கூற அவள் இதற்கு மாற்றாளை மாற்றாள் வணங்குதல் பெருமையுடையதல்ல எனக் கூறித் தன்னைக் களவி (களவு செய்பவள்) என்ற தலைவியிடம், காம இன்பத்தை நுகர்வதற்கு உன் ஆரத்தைத் தந்தவன் நாளை உனது காற்சிலம்பையும் எனக்காகக் கழற்றுவான் எனக் கூறித் தலைவனே கள்வன் என்றாள். இந்த உரையாடல் பரத்தைமையின் செல்வாக்கையும் அது மனைவியர்களால் இகழப்பட்டதையும் வெளிப்படுத்திப் பரத்தமை சமுதாய அங்கமாக மாறிய நிலையையும் உணர்த்துகின்றது. பரத்தையை விரும்பியவன் அவளுக்குத் தரும் பொருட்கள் அவளுக்கே உரிமை உடையவை என்பதை உணர்த்தும்

**நச்சினார் ஈபவை நாடறிய தும்மவே**

**சேக்கை இனியார்பால் செவ்வான் மனையாளால்**

**காக்கை கடிந்து ஒழுகல் கூடுமோ? கூடா**

**தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்**

**இகழினும் கேள்வரை ஏத்தி இறைஞ்சுவார்**[49]

எனும் அடியில் இடம் பெற்றுள்ளது. பொருட் பெண்டிராகிப் போன பரத்தையர் இயல்பு சுட்டப்படுகிறது. இப்பாடலின் இறுதியில் ஆடவனின் பரத்தமைச் செயற்பாடு இயல்பானதே, அதைப் பொறுத்துக் கொள்ளவேண்டியது கற்புடைய மனைவியின் கடமை என்பதும்

கூறப்படுகிறது. பாடலின் கருத்து, அறிவுரையில் பெண்ணின் பணிவை வலியுறுத்தி ஆணின் மேலாண்மையை நிலைநாட்டுவதாக உள்ளது. சேர்க்கைக்கு இனியவராகிய பரத்தையரிடம் செல்லும் தலைவனைக் காத்துக் கொள்ளுதலும் கடிந்து விலக்குதலும் இயலாதவை. கணவன் தன்னை இகழ்ந்தாலும் அவனை ஏத்தி வணங்க வேண்டியது மகளிர் கடமை என்பது உலக இயல்பு என்பன வலியுறுத்தப்பட்டுள்ளன.

### 3.11. கிழத்தி – காமக்கிழத்தி

எதிர்பாராமல் பரத்தையைச் சந்தித்தபோது தலைவி அவளிடம் வெறுப்பும் சினமும் கொள்ளவில்லை என்பதையும் அவளையும் தன் மகனுக்குத் தாயாக ஏற்கும் உறவு முறையும் கூறப்பட்டது. சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் நடந்து கொள்ளும் பண்பட்ட உள்ளம் கொண்ட தலைவியின் பெருந்தன்மை இதனால் கூறப்பட்டது. பரத்தையரைத் தன் தங்கையர் எனக் குறிப்பிட்டமையினைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**அடிமேல் வீழ்ந்த கிழவனை தெருவீதிக்**

**காதல் எங்கையர் காணின் நன்றென்**[50]

இக்கூற்றில் எள்ளற்குறிப்பு இருப்பினும் காமக்கிழத்தியர் பரத்தையைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவள் மனையோள் ஒத்தவள் எனவும் தொல்காப்பியர் கூறுகிறார்.

**மைஈர் ஓதி மடவோய் யானும் நின்**

**சேரியேனே அலல் இலாட்டியேன்**

**நுங்கை யாகுவென் நினக்கு**[51]

என்னும் அகநானூற்றுப் பாடலின் மூலம் பரத்தை தன்னைத் தலைவியின் தங்கை எனக் கூறுதல் அறியப்படுகிறது.

### 3.12. மனைவியர் கோபம்

தன் கணவனே தன் உயிரென்றும் உற்ற துணையென்றும் நம்பி வாழும் கற்புடைய மனையாள் தன் கணவனின் அன்பில் குறைவு காண்கையில்

அளவில்லாமல் துயரை அடைகின்றாள். இந்த உண்மையைச் சில சங்கப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. ஒரு காலத்தில் வேம்பின் பைங்காயைத் தந்தாலும் தேம்பூங்கட்டியென்று இனிதே உண்ட தலைவன் இப்போது பரத்தையிடம் மனஞ்செலுத்தி அன்பு மாறிய காரணத்தால், ***பாரியின் பறம்பிலுள்ள இனிய சுனை நீரைத் தரினும் வெய்யது, உவர்ப்புடையது*** என வெறுக்கின்ற நிலையாயிற்று என ஒரு தோழி தலைவனிடமே கூறுகின்றாள்.

**வேம்பின் பைங்காய் என்தோழி தரினே**

**தேம்பூங்கட்டி என்றனிர் இனியே**

**பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்**

**தைஇத் திங்கள் தண்ணிய தரினும்**

**வெய்ய உவர்க்கும் என்றனிர்**

**ஐய! அற்றால அன்பின் பாலே**[52]

என்ற பாடல் அடிகள் கோபத்தைக் காட்டுகிறது.

கண்ணுக்கு இனிமை தரும் நெருஞ்சிப்பூ, முற்றியபோது வருத்தப்பட்டு அன்பு செலுத்திய தலைவன் இப்பொழுது அன்பு மாறி இன்னா செய்கின்றானை நினைந்து மற்றொருத்தி துன்புற்றாள்.

**. . . . . . . . . . நோம்என் நெஞ்சமே!**

**புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்**

**கட்குஇன் புதுமலர் முட்பயந் தாஅங்கு**

**இனிய செய்தநம் காதலர்**

**இன்னா செய்தல் நோம், என் நெஞ்சே**[53]

மித மிஞ்சிய தேனைச் சுவைக்கையில் அது நாவில் புளிக்கும் என்பதற்கு ஈடாக தேனும் புளிக்கும். தலைவன் தலைவியிடம் கொண்ட நட்பும் புளித்ததாக ஒருத்தி கூறி வருந்தினாள் அதை,

பயில்நறுங் கதுப்பின் பாயலும் உள்ளார்

செய்பொருள் தரல்நசைஇச் சென்றோர்

எய்தின ரால்என வரூஉம் தூதே[54]

இவ்வாறு புலவர் விவரிக்கிறார்.

இங்ஙனம் பெண்டிர் கூற்றுக்களிலிருந்து ஆடவர் சிலருடைய நிலை மாறிய பண்பு உணரப்பட்டாலும் பரத்தையிற் பிரிந்து மீண்டு வரும் தலைவர்கள் தம் மனைவியர்களிடத்துப் பேரன்புடையார் என்றும் அவர்களின்றித் தம்மால் வாழ முடியாதவர்கள் என்றும் உணர வேண்டியுள்ளது. தலைவியர் தம்மைத் தலைவர்களிடமிருந்து அயன்மைப்படுத்திக் கொண்டு பரத்தையரே தம் கணவன்மார்களின், மனைவிமார்கள் என்பது போல் பேசும்நிலை காணப்படுகின்றது. ***நின் பெண்டு, நின் பெண்டிர்*** என அவர்கள் கூறுகிறார்கள்.

பேணாளோ நின் பெண்டே[55]

துயர் நரியர் நின்பெண்டிர்[56]

நின் காதலி என்றதலுண்டு[57]

இவ்வாறு தலைவன் தன்னை சிறிதும் விரும்பாமல் பரத்தையையே பெரிதும் விரும்புகிறான் என்ற பொருள்பட ***நீ வெய்யோள்*** என்று தலைவி கூறுவது உண்டு. பரத்தையர்கள் வெறும் உடற்கவர்ச்சி மட்டுமே உடையவர்கள் என்றும் தலைவன் அத்தகைய புறத்தழகில் ஈடுபட்டமையால், புறத்தழகு மாறினாலும் அகத்தழகு சிறிதும் மாறாத தம்மை புறக்கணித்தான் என்றும் உணருமாறு பரத்தையருடைய அழகை அடிக்கடிச் சுட்டிக்காட்டித் தலைவி பேசுவதுண்டு.

மன்னவன் சினம் கொண்டால் அதற்கு மாற்றில்லை. அதுபோலத் தன் மனைவியின் சினத்திற்கும் மாற்றில்லை என ஒரு தலைவன் கூறுகின்றான்.

மருந்தின்று மன்னவன் சிறின் தவறுண்டோ நீ நயந்த

இன்னகை தீதோ இலேன்[58]

தன் பரத்தமையைத் தன் மனைவியிடம் மறைக்க முடியாதபோது ஒரு தலைவன், பிழைத்தேன் அருளினி என்று கெஞ்சுகின்றான். பரத்தையரிடம் உறவு கொண்டிருப்பினும் மனைவியின் மீது பேரன்பு கொண்டவன் தலைவன் என்பதற்குச் சான்று காணப்படுவது போல அவன் பரத்தைமேல் அன்பு கொண்டமைக்கு மனைவி மீதுள்ள வெறுப்பே காரணம் என்பதற்கு ஒரு சான்றும் அக இலக்கியங்களில் காணப்படவில்லை.

### 3.12.1. ஊடல்

புறத்தொழுக்கத்தில் ஈடுபட்ட கணவனிடம் மனைவி கொள்ளும் மன முரண்பாடே ஊடல் என்பது. இதனைப் புலவியெனவும் கூறுவர். இதனை அன்புப் பூசல் என்பது மிகவும் பொருந்தும். அன்புடைய தலைவன் தலைவியரிடம் பொதுவாக ஊடல் நிகழும் என்பதை,

**யாரையோ நிற் புலக்கேம்**

**புலவிய ஃதெவனோ அன்பிலங்கடையே**[59]

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன.

பொதுவாக மனைவியே தன் கணவனிடம் பணிந்து நடந்து கொள்வாள். கணவனைத் தன் தந்தை போலவும், தாய் போலவும் கருதி வாழ்பவள் மனைவி. எனவே கணவனுக்குத் தொண்டு செய்வதும், ஆனால் தலைவன் தன் கையைப் பற்றிய செய்தியைத் தலைவிபாற் சென்று சொல்லப் போவதாகப் பரத்தை கூறியதும் தலைவன் நடுங்கினான். கணவனைக் காண்கையில் அவன் தன் மனையாளிடம் கொண்ட அன்பின் ஆழத்தைப் புரிந்துகொள்ள முடிகின்றது. பரத்தையோடு உறவு கொண்டவனெனினும் தலைவன் தன் மனையாளிடம் ஓர் ஏவலன் போல நடந்து கொள்ளக்கூடிய அளவிற்கு அன்புடையவன் என்பதை ஆலங்குடி வங்கனார் ஒரு பரத்தையின் கூற்றின் வாயிலாகச் சுட்டுகிறார்.

**கழனிமா அத்து விளைந்துஉகு தீம்பழம்**

**பழன வாளை கதூஉம் ஊரன்**

எம்இல் பெருமொழி கூறி தம்இல்

கையும் காலும் தூக்கத் தூக்கும்

ஆடிப் பாவை போல

மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே[60]

என்கிறாள் பரத்தை. ஊடல் கொண்ட மனைவியிடம் தன்னை அவள் வெறுத்தால் தனக்கு வாழ்வில்லை என்றும் தன் உயிர் அவள் கையிலுள்ளதென்றும் கூறி தன்னை ஏற்குமாறு தலைவன் தலைவியிடம் கெஞ்சுவது உண்டு. தான் தன் மனைவியோடு மெய்போற் பிரிவரியாதவளென்றும், தனக்கும் தன் மனைவிக்கும் உயிர் ஒன்றே என்றும் கூறுகின்றான்.

தெரியிழாய் செய்தடறில்வழி யாங்கும் கிளவுவாய்

மெய்பிரிநீ தன்னவர் மாட்டு[61]

ஒருத்திக்கு ஒருவன் என்னும் கற்புக் கோட்பாடு ஆடவர்க்கு வரம்பற்ற உரிமையை அளித்தது. பெண்களுக்கு இது மறுக்கவியலாத கட்டாய ஒழுக்கமாக அமைந்தது. இந்நிலையில் கணவன் எத்துணைக் குறைகள் உடையவனெனினும் தாங்கிக் கொண்டு வாழ வேண்டிய நெருக்கடி பெண்ணுக்கு ஏற்பட்டது. ஒரு வகையில் இது அக்காலத்தில் தோன்றிய ஆணாதிக்கச் சூழல் என்பதை உணர்த்துகிறது. கணவன் என்ன செய்தாலும், கொடுமையினைத் தந்தாலும் அவனைச் சார்ந்து வாழ்வதே கற்புடைமையாகக் கருதப்பட்டது. வேரோடு பறித்து எறிந்தாலும் மீண்டும் மீண்டும் கடிந்த வயலிலேயே பூக்கும் நெய்தல் நிலத்து மலர் போலவே கருதப்பட்டனர்.

தாய் உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு

அன்னா யென்னும் குழவி[62]

போலக் கணவன் அவளை நாடி நிற்கும் நிலை பெண்ணுக்கு அமைவதாயிற்று. தமிழ்ப் பெண்டிரின் இப்பண்பாட்டை எண்ணிக் குலசேகர ஆழ்வார்,

கண்டா நிகழ்வனவே காதலன்தான் செய்திடினும்

கொண்டானை யல்லால் அறியாக் குலமகள் போல[63]

என அடியானுக்கும் ஆண்டவனுக்கும் உள்ள உறவை விளக்கினான்.

### 3.13. தலைவன் – பரத்தை செயல்

அகத்திணையில் மனைவியைக் கைவிடுவதற்கு எள்ளளவும் இடம் அளிக்கவில்லை. எனினும் அன்றைய தமிழ்ச் சமூகத்தில் கணவர்தம் பரத்தமையைக் கண்டு பெண்கள் கணவனிடம் மிதமிஞ்சிய ஊடல் கொண்டால் அவர்கள் அடையக் கூடிய இழி நிலையையும் படக்கூடிய துயரத்தையும் கூற அடங்காது. தலைவனுக்கும் பரத்தைக்கும் இடையே அமைந்த உறவில் பல கூறுகள் உண்டு. அவற்றுள் ஒன்று பரத்தை தலைவனுக்கு இன்பக் களியாட்டங்களில் உறுதுணையாக நிற்பதாகும். தலைவன் பரத்தையர்களோடு ஆறுகளில் புனை தழுவி நீராடுதல், அந்நீராட்டின் போது, ஒருவரையொருவர் ஆரத் தழுவுதல், காமப்பார்வை வீசி இன்புறுதல் ஆகியன இயல்பாக நிகழ்ந்த நிகழ்வுகளாகப் பாடல்கள் கூறுகின்றன. ஆறுகளில் இரு மருங்கிலும் அமைந்த இனிய சோலைகளில் மறைந்து இன்பம் துய்ப்பதும் வழக்கமாக இருந்தது.

நெருநையும் கமழ்பொழில் துஞ்சி இன்றும்

பெருநீர் வையை அவளொ டாடி[64]

நாணத்தோடு வளர்க்கப்பட்டவளும் சமூகத்தின் மதிப்புமிக்க நிலையிலுள்ளவளும் குடும்ப பொறுப்புகள் மிகுதியும் கொண்டவளுமாகிய தலைமகளால் இத்தகு களியாட்டங்களில் தலைவனுக்குத் துணைபுரியவியலாது. தலைவன் தன் மனைவியுடன் கள்ளுண்டு இன்பம் எய்துதல் குறித்து அகத்திணை இலக்கியம் கூறவில்லை. ஆனால் பரத்தையரோடு வாழ்ந்த வாழ்க்கையில் கள்ளுக்கும் இடம் இருந்தது என்பது பற்றி குறிப்பு உள்ளது. தலைவன் பரத்தையுடன் கள்ளுண்டு களித்து மகிழ்ந்திருந்த நிலை குறித்தும் பாடல்கள் கூறுகின்றன.

ஒருத்தி இறந்த களியாள் இதழ் மறைந்தகண்ணன்

பறந்தவை முகக் கடிவாள் கூடிய

இடந்தேற்றாள் சோர்ந்தனன் கை[65]

என்னும் கலித்தொகைப் பகுதியால் பரத்தை கண்ணை விழிக்க இயலாத அளவிற்குக் கள்ளுண்டு மயங்கி இருந்தாள் என்ற செய்தி அறியப்படுகின்றது. கள்ளுக்கும், காமத்துக்குமுள்ள நெருங்கிய உறவை மேற்கண்ட பாடல் அடிகள் அரண் செய்கின்றன. இவ்வாறே இசை, கூத்து முதலான இன்பக் கலைகளுக்கும், காமத்துக்கும் நெருங்கிய உறவுண்டு. இதனை நன்குணர்ந்த பரத்தையர் தம்மிடம் வருவோர்க்குக் கலை விருந்தையும் இனிய நுகர்ச்சியினையும் இணைத்து அளித்திருக்கலாம்.

இட்டார்க்கு யாழார்த்தும் பாணியில் எமீ இழையைத்

தொட்டார்த்தும் இன்பத்துறைப் பொதுவி[66]

எனக் கணிகையொருத்தி இழிக்கப்படுகின்றாள். மருதநிலத்து ஊர்களில் நடந்த விழாக்கள் பரத்தையர்க்கும் தலைவர்கட்கும் நெருங்கிய உறவை வளரச் செய்தன. இத்தகைய திருவிழாக் காலங்களில் ஆடவர் பெண்டிரைத் தழுவித் துணங்கையாடுவது வழக்கம்.

மள்ளர் குழீஇய விழவினாலும்

மகளிர் தழீஇய துணங்கையானும்

யாண்டுங் காணேன் மாண்தடக் கோனை[67]

என்ற பாடல் அடிகளால் இதனை அறியலாம். தலைவரைக் கவர்தற் பொருட்டு இத்துணங்கைநாளைப் பரத்தையர் எதிர்நோக்கி இருந்ததாக அறியமுடிகிறது.

செல்வமிக்க ஆடவர் தம்மை ஒப்பனை செய்து கொண்டு பரத்தையருடன் ஆடினர். கலைகள் பாணர் குடும்பத்திற்கும் பரத்தையர்க்கும் உரியனவாக இருந்தன. இந்நிலையில் மனைவிமார்களால் பெற முடியாத கலை உணர்வையும் இன்ப நுகர்ச்சியையும் பெற்றனர்.

செல்லல், மகிழ்ந! நிற்செய்கடன் உடையென்மன்[68]

என்றும்

ஆர்வ நெஞ்சம் தலைத்தலை சிறப்பநின்

மார்புதரு கல்லாய் பிறனா யினையே[69]

என்று கூறும் பரத்தையரிடம் உண்மையின் ஆழத்தைக் காணமுடியும். தலைவனோடு தனக்கிருக்கும் உறவின் நெருக்கம் காரணமாக அவனிடம் மகிழ்ந்து பேசும் பரத்தையையும் தன்னுடன் நீராட வருமாறு உரிமையே வேண்டும் பரத்தையையும் காணமுடிகிறது.

### 3.14. புதுவோர்

வெளிப்படையான இன்பம் துய்ப்பதற்குப் பெண்களைவிட ஆண்களே முந்திச் செல்லல் இயற்கையின் நியதி. புதிய வகை இன்பத்தைப் பெறத் தலைவன் புதுவோரான பரத்தையரை நாடிச் சென்றான். அகப்பாடல்களில் பரத்தையர் பல இடங்களில் புதுவோர் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இசைத்திறம் வல்ல பாணர், நாடகத்திறம் வல்ல கூத்தர், ஆகியோரிடையே தலைவன் கொண்ட தொடர்பும் இத்திறங்களில் வல்ல பரத்தையரிடம் அவனைச் செலுத்தியிருக்கக்கூடும். பரத்தையரிடம் தலைவன் கொண்ட தொடர்பு தலைவியின் சூழலில் உற்பத்தியை ஏற்படுத்தியது. அச்செய்தி தலைவிக்குத் தெரிய தன் கணவன் பெயர் இவ்வாறு பேசப்பட்டதை அவள் அறிந்து வருந்தினாள். தானும் தலைவனும் களவொழுக்கம் நிகழ்த்தியபோது ஊரார் அலர் தூற்றியபோது ஏற்பட்ட வருத்தத்தைக் காட்டிலும் தற்போது தலைவிக்குத் துன்பம் அதிகமாக இருந்தது.

கேவலமாகப் பேசுவதற்கு தன் கணவன் ஆளாகிவிட்டானே என்று அவள் நொந்தாள். கணவனின் பெருமைக்கு இழுக்கு நேரக்கூடாது என்பது அவள் எண்ணம். இதனால் அவள் நோக்கத்தில் தன்னலம் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. தலைவனின் போக்கினால் தலைவி அவனுடன் முதலில் ஊடினாலும் பின்னர் அவன்மீது கொண்ட அன்பு

மிகுந்ததேயன்றி குறையவில்லை. தொல்காப்பியர் அலரினால் இருவரிடையேயும் அன்பு மிகும் எனப் பொதுவாகக் கூறியுள்ளார்.

**அலரில் தோன்றும் காமத்தின் சிறப்பே**[70]

அலர் பெருக தலைவியின் துயர் பெருகுதலைப் போலவே அன்பும் ஆழமடைகிறது. உரிமையும் வலிவு பெறுகிறது எனலாம்.

### 3.15. தலைவியின் வெறுப்பு

தலைவனின் பரத்தமையை அறிந்த தலைவி அதனைத் தெளிவாக அறிந்துகொள்ள ***மற்றொருத்தியின் குணம்*** இவ்வாறு என்று அவனிடம் கூறி அவன் குறிப்பை உணர்வாள்

**கிழவோன் பிறள்குணம் இவையெக் கூறிக்**

**கிழவன் குறிப்பை உணர்தற்கு முரியல்**[71]

தொல்காப்பியர் கூறும் இலக்கணத்திற்கு இலக்கியமாக ஐங்குறுநூற்றில் ***கிழவற்குரைத்தபத்து*** அமைந்து சிறக்கிறது. தனக்கு உரிய அன்பு மற்றொருத்தியால் பிரிக்கப்படுகிறது என்னும் உரிமை உணர்வும் தலைவியின் சினத்திற்குக் காரணமாகும். தோழி தலைவியைக் கண்டிக்கும் முறையில் தலைவியின் மனநிலையைத் தெளிவாகக் கூறினாள்.

தலைவனே பல அழகிய பெண்கள் நீராடும் குளிர்ந்த குளம் போல பலர் விரும்பி இன்புறும் நின்னைக் குறித்துக் கேட்ட அளவிலேயே சொல் இறந்து வெகுளும் தலைவி, அச்செயலைக் கண்ணிற் காண்பாளாயின் என்னதான் ஆகுவாளோ?

**செவியிற் கேட்பினும் சொல்லிறந்த வெகுள்ளோள்**

**கண்ணிற் காணின் என்ன! குவள் கொல்**

**நறுவீ ஐம்பால் மளிர் ஆகும்**

**தைஇத் தண்கயம் போலப்**

**பலர்படிந் துண்ணும் நின்பரத்தை மார்பே**[72]

தலைவன் பரத்தையருடன் கொண்ட தொடர்பைத் தலைவி எந்த அளவுக்கு வெறுத்தாள் என்பதை இப்பாடல் மூலம் அறிகின்றோம்.

### 3.15.1. தலைவனின் எள்ளல்

தலைவி தாய்மைப்பேறு அடைந்த நிலையில், தலைவன் பரத்தையரை நாடிச் சென்றான். குழந்தை பிறந்த பின்னர் அவன் தலைவியிடம் நெருங்கினான். தான் வெளியே சென்றமைக்குரிய காரணத்தைக் குறிப்பாகத் தன் மனைவியிடம் சொன்னான். அழகிய கூந்தலை உடையவளே! நீ புதல்வனை ஈன்றதால் தாய் என்னும் மற்றொரு பெயர் பெற்றாய். அழகிய உடம்பில் சுருக்கத்தைப் பெற்று முதுபெண்டாகித் துயில்கிறாய் என்றான்.

**விளங்குநகர் விளங்கக் கிடந்தோட் குறுகி**

**புதல்வன் ஈன்றெனப் பெயர் பெயர்த்து அவ்வரித்**

**திதிலை அல்குல் முது பெண்டாகித்**

**துஞ்சுதி யோமெல் அம்சில் ஓதி**[73]

அமைதியாக இருந்த தலைவி மறுமொழி சொல்லும்போது மிகச் சினத்துக்குள்ளானாள். தலைவனின் எள்ளற் குறிப்பை உணர்ந்த தலைவி தன் கற்பு நிலையை அவனுக்கு நினைவூட்டி தாய் என்னும் சிறப்பைப் பலகாலும் எள்ள வேண்டாம் எனக் கடிந்துரைத்தாள்.

**புலவி அண்மைக் காலத்து, ஊடல் அதனின் மிக்கது**[74]

என்பர் இளம்பூரணர். ஊடல் ஓர் எல்லையைத் தொடும்போது அந்நிலை, ***துனி*** எனப்படும். அந்நிலையில் தலைமக்கள் இருவரும் ஊடல் எல்லை மிகாமல் பார்த்துக் கொள்வர். குற்றமிழைத்த தலைவனே பெரும்பாலும் பணிந்து போவது இயற்கை.

**மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்**

**நினையுங் காலைப் புலவியுள் உரிய**[75]

தலைவனின் பணிவு தலைவியின் காலில் விழுந்து பொறுத்துக்கொள்ள வேண்டுமளவுக்குச் செல்வதும் உண்டு. அந்த நிலையில் தலைவி தலைவனை

நெருங்கி நின்மாட்டுக் காதலுடைய என் தங்கையராகிய பரத்தையர் கண்டால் நல்லது என்று இடித்துரைப்பாள்.

### 3.16. வாயில்களின் பங்கு

வாயில் என்பதற்குக் கதவு, தூது, வாசல், இடம் எனப் பொருள் கொள்ளலாம். வாயில்கள் பொதுவாகத் தலைவன் தலைவியிடம் ஊடல், பிரிவு ஏற்பட்டால் அவற்றைத் தீர்த்து வைப்பதற்காக இடையீடுபடும் மாந்தர்கள் ஆவர். இதை இலக்கணமாக,

எல்லாப் பாயிலும் இருவர் தேஎத்து
புல்லிய மகிழ்ச்சிப் பொளை என்ப[76]

என்று புலவர் குழந்தை கூறியுள்ளார். வாயில்கள் தலைவன் தலைவியின் இன்பம் நுகர துணைபுரிவர். தலைவன் தலைவி உறவுக்கு இன்னல் ஏற்பட்டால் அதனைப் போக்குவதற்காக வருபவர்கள் என்ற கருத்தை இறையனார் அகப்பொருள்,

வன்புறை குறித்த வாயில் எல்லாம்
அன்பு தலைப்பிரிந்த கிளவி தோன்றி
தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்
பாணன், பாடினி, இளையர், விருந்தினர்
கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப[77]

இவ்வாறாகப் பன்னிரண்டு வாயில்களைக் கூறுகிறார். இவ்வாயில்கள் அனைத்தும் தலைவன் தலைவியோடு மனம் பிணிப்புண்ட சிறப்புடைய வாயில்கள் எனப்படும். மாந்தர்கள், வாயில்கள் கற்புக் காலத்தில் தலைவன் தலைவியின் ஊடலைப் போக்குவதற்காக வருகின்றனர். இவை முன்னிலைப் புறமொழியாகக் கூறப்படும். இதை,

உண்கடன் வழிமொழி திரங்கொல் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறல்

பண்டுமிவ் வுலகத் தியற்கை தின்னும்

புதுவதன்றே புலனுமை மாந்திர்[78]

என்ற பாடலால் அறியலாம். ஆனால் தொல்காப்பியர் இவ்வாயில்கள் பட்டியலில் புதல்வனைக் குறிப்பிடவில்லை.

இன்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்[79]

என்ற தலைவியின் கூற்றிலும்,

இன்னகைக் புதல்வனைத் தழீஇ இழைபணிந்து

பின்னர் வந்த வாயில் கண்ணும்[80]

எனக் காமக்கிழத்தியின் கூற்றிலும் புதல்வன் வாயிலாக அமைந்து விளங்குதலைக் குறிப்பிடுவர். இல்லற வாழ்வில் தலைவன் தலைவியர்க்கு இவர்கள் (வாயில்கள்) துணைநிற்கும் நிலை பெரிதும் பேசப்படுகிறது. இவர்களுள் தோழி தவிர்த்த பிறர்க்குத் தொல்காப்பியம் களவியலிலும் கூற்று சுட்டப்படவில்லை. கணவன், மனைவி ஆகிய இருவரின் கூட்டிணைந்த வாழ்வே இல்லறம் எனப்படும். இவ்வில்லற வாழ்வு குழந்தைப் பேற்றினால் முழுமைபெறும். இதுவே இல்லறப் பயன் ஆகும். இல்வாழ்க்கையில் பிணக்கு, மனவருத்தம் ஏற்படும்போது பெரியோர்கள், உறவினர்கள், உள்ளிட்ட பலர் சேர்ந்து செய்வித்து சிக்கலைத் தீர்த்து வைப்பர். இவர்கள் வாயில்கள் எனப்பட்டனர்.

### 3.16.1. வாயில்களுக்குரிய பணிகள்

1) தலைவியின் நற்பண்புகளையும், சிறப்பியல்புகளையும் தலைவனுக்கு உரைத்தல்

2) தலைவி பிரிவிடத்துச் சென்ற தலைவன் நிலை உணர்தல்

3) தலைவன் பிரிவிடத்துச் சென்ற தலைவியின் நிலை உணர்தல்

4) நல்லவை உரைத்தல்

5) அல்லவை கடிதல்

6) அறனெறி இதுவென எடுத்துரைத்தல்

7) நிமித்தம் கூறல்

8) ஊடல், ஊடல் தணிவித்தல்

9) செலவழுங்குவித்தல்

என்பன வாயில்களின் பணிகளுள் சிறந்து நிற்பவையாகும். தோழி தவிர்த்த மற்ற வாயில்கள் அகக் காட்சியில் ஒரு மாந்தராக ஒன்றி நிற்பது மட்டுமின்றி தம்மை காட்சிகளுள் உட்படுத்திக் கொள்ளாது விலகி நின்று அக்காட்சிகளை உற்று நோக்கிக் கருத்துரை அளிப்பவர்களாகவும் விளங்குகின்றனர். தலைவனின் பிரிவில் தலைவியின் நிலைகூறல், தலைவன் வரவால் தலைவி துயர் நீங்கும் நிலை கூறல் எனத் தகவல்களை அளிப்பவர்களாகவும் விளங்குவதைக் காணமுடிகிறது. தலைவன் தலைவி உறவைச் செறிவுப்படுத்துவதில் வாயில்களின் பங்கு சுட்டப்படவில்லை.

தொல்காப்பியர் குறிப்பிடும் இவ்வாயில்களுள் பாடினி, விருந்தினர், கூத்தர், இளையோர் ஆகியோரின் கூற்றுகள் இலக்கியங்களில் இடம் பெறவில்லை. தலைவியின் மாண்புகளைத் தலைவனுக்கு உரைத்தல் என வாயில்களுக்கு அமைந்த பொதுப் பண்பாக உரைத்தலன்றிப் பாடினி, விருந்தினர், விறலியர் ஆகியோருக்குரிய தனிக் கடமைகளைத் தொல்காப்பியர் சுட்டவில்லை. எனவே சங்க இலக்கியத்தில் அவர்கள் தனித்தன்மை வாய்ந்தவர்களாகக் கருதப்படவில்லை என்று துணியலாம்.

இளையோரின் கூற்றுக்களும் இலக்கியத்தில் இடம்பெறவில்லை. தலைவன் தலைவியர்க்குத் துணையாகி ஆற்றவல்ல பணிகள் தொல்காப்பியத்தில் இளையார்க்கு அளிக்கப்படுகின்றன. நிமித்தம் கூறுவது ஆகிய சூழல்களில் பார்ப்பார் கூற்று நிகழும் எனத் தொல்காப்பியர் சுட்டுவர். வரைவு கடாதல், வாயில் நேர்தல், வாயில் மறுத்தல், செலவழுங்குவித்தல், ஆற்றுவித்தல் ஆகிய துறைகளில் தலைவனுக்குக் கூறுவது, களவில் அறனெறிப்படுத்துவது, அறத்தொடு நிற்பது, உடன்போக்கில் நல்லவை

உரைத்தல், அல்லவை கடிந்தும் நெறிப்படுத்துல். மேலும் ஊடலைத் தணிப்பது ஆகிய செயல்களால் அனைத்து வாயில்களுக்கும் பணிக்கப்பட்ட பணிகளைத் தோழி தனதாக்கி நிற்றல் போன்ற சூழல்களில் தோழியே செல்வதால் அவர்களின் கூற்றுக்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெறவில்லை எனத் துணியலாம்.

### 3.16.2. வாயில் மறுத்தல்

தலைவியைப் பிரிந்த தலைவன் தலைவியின் உண்மையான அன்பை நினைத்தோ, துய்த்த பிழையை இன்ப நலங்களை மீண்டும் பெறக் கருதியோ, தன் பிழையைத் தெளிந்து திருத்தியோ, தன் மனைக்குத் திரும்ப முயல்கின்றான். அவனைத் திருத்தும் எண்ணத்தில் தோழி தலைவியைக் கடிந்துரைத்தாள். அவனுடைய நண்பர்களான பாணன், விறலி போன்றோரையும் கடிந்து வாயில் மறுத்தாள்.

#### 3.16.2.1. தலைவனுக்கு வாயில் மறுத்தல்

தலைவனுக்கு யார் தீங்கிழைத்தாலும் அவர்களைத் தாக்கும் உரிமை தோழிக்கு அமைந்திருக்கிறது. இப்பண்பு தலைவி தோழியின் உண்மையான அன்பையும் நட்புறவையும் உரிமையையும் காட்டுவதாக அமைகிறது.

> **இன்னாது இசைக்கு அம்பெலாடு**
>
> **வாரலீ வாழியர்! இய! எம்தெழு**[81]

என்ற இப்பாடலில் தலைவனிடமே **வீட்டிற்குள் வருதலை ஒழிக** எனத் தோழி கூறுவதாக அமைகிறது. பரத்தையரின் தாயரும் வெறுக்கும் பரத்தமை தலைவனிடம் காணப்பட்டதால் தோழி வாயில் மறுத்தாள்.

> **வாரல் எம்சேரி, தாரல் நின்தாரே**
>
> **அலரா கின்றால் பெறும காவிரி**[82]

தலைவி வாழும் சேரிக்கு வருதலை ஒழிக என்று தோழி கூறுகின்றாள். வாயில் மறுத்தலுக்குக் காரணமாகத் தலைவனின் பரத்தமை கூறப்படுகிறது.

ஒண்தொடி நெகிழினம் நெகிழ்க

கொன்றிபெரும நிற்தகைக்குநர் யாரோ?[83]

*இப்பாடலின்வழி தலைவன் பரத்தையொருத்தியைத் திருமணம் செய்தலையும் அதனால் தலைவி ஒண்தொடி நெகிழ்தலையும் கூறி உன்னை வரவேற்க ஏற்றுக்கொள்ள நாங்கள் யார் என்று அயன்மை பாராட்டி மீண்டும்* ***சென்றி பெரும*** *என்று கூறித் தலைவனின் பரத்தமை எள்ளி நகையாடப்படுவது தெளிவாகிறது. தலைவன் பரத்தையுடன் வையையாற்றில் நீராடியதைக் கூறி வாயில் மறுக்கிறாள்.*

பலர் இவண் ஒவ்வாய் மகிழ்ந! அதனால்

அலர் தொடங்கின்றாய் உளவே! மலர

தொல்நிலை மருதத்துப் பெருந்துறை

நின்னோடு ஆடினள் தண்புனல் அதுவே[84]

*பரத்தையோடு புனலாடித் தன் இல்லம் திரும்பின தலைவன் வாயில் வேண்டியபொழுது தோழி மறுக்கின்றாள். தலைவன், நான் புனலாடவில்லை என்று பொய் கூறுகின்றான். அப்போது தோழி நீ பரத்தையரோடு நீராடியதனை ஒத்துக்கொள்ளமாட்டாள். உன் காதலி உன்னோடு மகிழ்வுடன் நீராடியதைப் பலரும் கண்டுள்ளனர். அதுபற்றி ஊர் முழுவதும் அலர் பரவிற்று எனக்கூறி தவறை மறுக்காதே எனக் கடிந்து கூறினாள்.*

*பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் யாரையும் அறியேன் என்பதற்குத் தோழி வாயில் மறுத்ததை,*

கடல்மரம் கவிழ்ந்தெனக் கலங்கி உடன் வீழ்பு

பலர்கொள் பலகைபோல

வாங்க வாங்க நின்று ஊங்கு அஞர்நிலையே[85]

*என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. கலங்க வீழ்ந்தபோது உடைந்த ஒரு பலகையைப் பற்றி அவரவர் இருத்தலைப் போலத் தலைவனைப் பரத்தையர்*

பலர் இழுக்க அவன் துன்புற்ற நிலையைத் தோழி கண்டதையும் அதனால் என்ன செய்யமுடியும் என வினவியும் தலைவனின் பரத்தமை புலப்படுத்தப்படுகிறது. அக்காலச் சமுதாயத்தில் பரத்தையரின் பெருக்கத்தையும் குலமகளிரின் செயலற்ற நிலையையும் இது குறிப்பதாகவே உள்ளது.

### 3.16.2.2. தலைவனின் பண்பினைச் சுட்டி வாயில் மறுத்தல்

களவு வாழ்வில் தலைவன் அன்பு மிக்கவனாகவும் கற்பு வாழ்வில் அன்பற்றவனாகவும் இருப்பதைத் தோழி எடுத்துரைத்து வாயில் மறுக்கின்றாள்.

**நீர்நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்**

**ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்**

**தணந்தனை ஆயின்எம்இல் உய்த்துக் கொடுமோ**

**அம்தன் பொய்கை எந்தைஎம் ஊர்க்**

**கடும்பாம்பு வழங்கும் தெருவில்**

**நடுங்க அச்சூர் எவ்வம் களைந்த எம்மே![86]**

என்ற இப்பாடலில் தலைவனின் முரண்நிலை காட்டப்படுகிறது. களவில் தலைவியின் நடுங்குதுயர் களைந்தமையையும், கற்பு வாழ்வில் தலைவியை வெறுக்கும் நிலையையும் முரண் நிலையில் காட்டி வாயில் மறுக்கிறாள். தலைவியைப் பிரிந்தால் தலைவன் அடையும் நிலையைக் கூறுவது இப்பாடல்,

**உடுத்தும் தொடுத்தும் பூண்டும செர்இயும்**

**தழைஅணிப் பொலிந்த ஆயமொடு கவன்றி**

**விழவொடு வருதி நீயே இதோ**

**ஓர்ஆண் உலசிச் சீர் இல்வாழ்க்கை**

**பெருநலம் குறுமகள வந்தனெ**

**இனிவிழவு ஆயிற்று இவ்ஊரே[87]**

என்ற அடிகள் எடுத்துக் காட்டுகின்றன. தலைவன் பெருமையைச் சுட்டி அவன்

பெருமைக்கே அடிப்படைக் காரணம் தலைவிதான் என்ற இப்பாடல்வழி புலனாகிறது. உடுத்தும் தொடுத்தும் பூண்டும் விழவுடன் வரும் தலைவனின் இன்றைய நிலையையும் தலைவி வருவதற்கு முன்பு இருந்த ஓரான் வல்சிச் சிரில் வாழ்க்கையும் முரண் நிலையில் சுட்டப்படுகின்றன.

### 3.16.2.3. தலைவியின் துயர் கூறி வாயில் மறுத்தல்

தலைவியின் துயர்கூறி வாயில் மறுத்தல் என்ற துறையில் பாடல்கள் தலைவனின் பரத்தமையைத் தலைவிக்கு ஏற்பட்ட இன்னல்களைச் சுட்டுவதாக அமைகிறது.

பகல்கொள் விளக்கோடு இராநாள் அறியா
வெல்போர்ச் சோழர் ஆமூர் அன்னஇவள்
நலம் பெறுசுடர் நுதல்தேம்ப
எவன் பயம்செய்யும் நீதேற்றிய மொழியே[88]

என்ற பாடல்வழி பரத்தையோடு, தலைவனுக்கு உறவு உண்டு என்பதைச் சுட்டுகிறது. இதை அறிந்த தலைவி, மிகுந்த வருத்தத்தால் மெலிந்தாள். அதை மறுத்த தலைவன் ஒரு பொய்யைக் கூறி தலைவியைத் தேற்ற முயல அதனை அறிந்த தோழி நீ கூறிய தேறுதல் மொழிகள் பயனற்றவை என்பதைக் கூறி வாயில் மறுத்தாள். தலைவியின் நோய்க்குக் காரணமும், மருந்து கூறும் மருத்துவச்சியாகத் தோழி விளங்குவதை இப்பகுதி உணர்த்துகிறது.

### 3.16.2.4. தலைவியின் உயர்வும் பரத்தையின் இழிவும் முரண்நிலையில் காட்டி வாயில் மறுத்தல்

மருதத் திணையில் சிறுவரைப் பெற்று கற்புடன் வாழ்கின்ற தலைவியின் உயர்வும் பரத்தையின் இழிவும் முரண்நிலையில் காட்டப்படுகிறது.

யாணர் ஊர! நின் மாண்இழை மகளிரை
எம் மனைநீ தந்து நீதழீ இயிதும் அவர்தம்
புன்மனத்து உண்மையோ அரிதே, அவரும்,

பைந்தொடி, மகளிரோடு சிறுவர்ப் பயந்து

நன்றி சான்ற கற்பொடு

எம்பாடு ஆதல் அதனினும் அரிதே[89]

*என்ற இப்பாடலில் பரத்தமையைக் கூறி வாயில் மறுத்தல் நிகழ்வு தெளிவுற விளக்கப்பட்டுள்ளது. பரத்தையர் தலைவனிடம் பொருள்பறிக்கும் இயல்பினர். தலைவி புதல்வர் பெறும் தன்மையினர். ஆதலால் புதல்வர் பெறும் நிலையுடன் பரத்தையர் எப்போதும் ஒத்துக் கொள்ளமாட்டார்கள் என்று கூறி தோழி வாயில் மறுக்கின்றாள்.*

உடன்றனள் போலும் நின்காதலி? எம்போல்

புல்உளைக் குடுமிப் புதல்வர் பயந்து

நெல்லுடை நெடுநகர் நின்இன்று உறைய[90]

*என்ற இப்பாடலின் தலைவியின் தன்மைகள் எடுத்துரைக்கப்படுகிறது. விருந்தோம்பலுக்கு இன்றியமையாத நெல்வளம் பற்றி இப்பாடல் விளக்குகிறது. தலைவி புதல்வனைப் பெற்றும் விருந்தோம்பியும் இம்மை மறுமைக்கும் காரணமான மனையறத்தினின்றும் தவறாது ஒழுகுகிறாள் என்பதைச் சுட்டிக் காட்டித் தோழி வாயில் மறுத்தாள். நெய்தல் திணையில் தலைவன் தலைவியின் துயர் தீர்க்க வரவில்லை. பரத்தையின் ஊடல் தீர்க்க முடியாததால் வந்தான் எனத் தலைவி துயரைச் சுட்டியும் தலைவன் பரத்தமையை இகழ்ந்தும் கூறுகின்றாள். அப்பாடல்,*

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்

காணிய சென்ற மடநடை நாரை

கானல் அம்பெருந்துறைத் துணையொடு கொட்டும்

தண்ணந் துறைவன் கண்டிகும்

அம்மா மேனிஎம் தோழியது துயரே[91]

தோழி தலைவனிடம் பரத்தையின் துயரைத் தீர்ப்பதுவே உம்முடைய தலையாயக் கடமை. ஆதலால் தலைவியின் ஊடலைத் தீர்ப்பதைத் தவிர்த்து வருக எனக் கூறி வாயில் மறுத்தாள்.

### 3.17. தொகுப்புரை

இப்பகுதியில் பாலியல் வாழ்க்கையில் ஏற்பட்ட சில திருத்தங்களும் திருப்புமுனைகளுமே பரத்தையர் வாழ்வின் தோற்றமாக இருக்கக்கூடும் என உணர இவ்வாய்வு இடமளிக்கிறது.

பரத்தமை தொழில் சங்ககாலத் தமிழகத்துக்கோ இக்காலத் தமிழகத்துக்கோ தாய்நாட்டிற்கோ உரித்தான ஒன்று அல்ல என்பதும் இத்தொழில் உலகளாவிய ஒன்று என்பதும் பரத்தையர்கள் எண்திசைகளிலும் பரவியிருக்கிறார்கள் என்பதும் சமூகவியலாளர்களின் கருத்தின்வழி அறியமுடிகிறது.

பரத்தமை என்ற சொல்லிற்கு விளக்கம் பெறப்பட்டது. உரையாசிரியர்களுள் ஒருவரான இளம்பூரணரின் விளக்கம், பொதுவுடைமையாளர்களின் விளக்கங்கள் ஆகியனவற்றை அறியமுடிந்தது. பரத்தை என்ற சொல்லாட்சியைப் போல் பரத்தன் என்ற சொல்லாட்சியும் வழக்கத்தில் இருந்தது. ஆயின் ஆணாதிக்கச் சமுதாயம் தலைதூக்கி இருந்ததால் அச்சொல்லாட்சி நடைமுறையில் அதிகமான வழக்கில் இல்லை என்ற பேதத்தை உணர இம்முடிவுகள் வழிகோலுகின்றன.

திருமணமான பெண்ணும் (அ) திருமணம் ஆகாத பெண்ணும் பரத்தையர்கள் ஆன சூழல்கள், பின்னணி ஆகியனவற்றை அறிய முடிந்தது. அக்காலத்தில் போரில் கணவனை இழந்தோறும், அடிமைப் பெண்களும் பெரும்பாலும் பரத்தையர்களாயினர் என்ற உண்மை அறியப்பட்டது. ஆடம்பர வாழ்வு வேண்டும் என்ற நோக்கமும் பல பெண்களைப் பரத்தமை தொழிலுக்கு வழிநடத்தியது என்ற உண்மையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பரத்தையர்கள் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாத மறைமுகமான எழுதப்படாத சட்டம் வழக்கில் இருந்தது. ஆனால் பரத்தமைத் தொழில் சமூகத்தகுதி என அங்கீகரிக்கப்பட்டது. மருதத்திணைக்கு மட்டுமே உரியவளாகப் பரத்தயைச் சித்திரித்து இருக்கிறார்கள் என்ற அவலமும் தெரிய வருகிறது.

உழவுத் தொழிலோடு பரத்தமைத் தொழிலும் ஒட்டி வளர்ந்திருக்கக் கூடும் என்ற சமூகவியலாரின் கருத்தை ஆய்வின்வழி அறியமுடிகிறது.

வீட்டில் மனைவியின் மகப்பேற்றின்போதும், ஊடலின்போதும், பரத்தையர்பால் தலைவன் பிரிந்து சென்றான் என்பதும், கலைக்காகவும், திருவிழாக்களின்போது களிபேருவகை பெறவும் செல்வத்தின் செழிப்பின் மிகுதியின் போதும் பரத்தையர் பிரிவு மேற்கொண்டான் என்ற அவல உண்மையையும் கண்டறியப்பட்டது.

தொல்காப்பியரோ உரையாசிரியர்களோ பரத்தையர் பிரிவு என்ற ஒரு பிரிவைக் கூறவில்லை. சங்க இலக்கியப் பாடல்கள் மட்டுமே இப்பிரிவைக் கூறி இருப்பதாகச் சங்க இலக்கிய பனுவல்களுக்கு உரை வகுத்த உரையாசிரியர்கள் வழி அறியமுடிகிறது.

பரத்தையருள் பல பிரிவுகள் இருந்தமையை உரையாசிரியர்கள் வழியும் சமூகவியலாரின் கூற்று வழியும் அறிய முடிகின்றது. தலைவியின் குழந்தையை பரத்தையர் தம் குழந்தையாக எண்ணி மகிழ்ந்து உள்ளனர் என்ற உண்மையும் தெரிய வருகிறது.

சங்க அக இலக்கியங்கள் எனக் கருதப்படும் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை அகநானூறு நூல்களில் பரிபாடல், மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை ஆகிய நூல்களில் பரத்தமை பிரிவிற்கான உறுதியான சான்றுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பரத்தமை காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதும் அதன் காரணமாகத் தலைவி ஊடல் கொள்வதும் அந்த ஊடல் அதிகம்

இருப்பின் அது தலைவிக்கே பல சிக்கல்களை ஏற்படுத்தும் என்ற அநீதியையும் உணரமுடிகிறது.

பரத்தையர் - தலைவி - தலைவன் ஆகியோரின் வாழ்வில் வாயில்களின் பங்கு மகத்தானது என்பதைப் பாடல்கள்வழி அறியமுடிகிறது. காமக்கிழத்தி என்பவள் திருமணமான ஒருவனுடன் மட்டுமே தொடர்பு கொண்டிருந்தாள் என்பதையும் பாடல்கள் வழியும் உரையாசிரியர்கள் கருத்தின் மூலமும் உணரலாம்.

வாயில்கள் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே செய்வித்து ஊடலைத் தீர்த்து வைத்தது போல தலைவனை இடித்துரைத்தனர் என்ற உண்மையைச் சங்கப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன. வாயில்களுள் இன்றியமையா வாயில்களாகத் தோழி கருதப்பட்டாள். குழந்தையின் மூலம் ஊடல் தீர்ந்தது எனினும் குழந்தை வாயில்கள் எனச் சுட்டப்பெறவில்லை.

தலைவனின் பிரிவின்போது தலைவியை ஆற்றுப்படுத்தியும் தலைவனை இடித்துரைத்தும் அவர்கள் இருவரையும் இணைக்கும் பாலமாகத் தோழி செயல்பட்டாள் என்ற கருத்தையும் அறியமுடிகிறது.

## அடிக்குறிப்புக்கள்

1. இளம்பூரணர் - தொல்காப்பியம் - பொருளதிகாரம் - ப -98

2. Paul Lacroix .2 . . History dela prostitution III Vol.926 L.Fernno Heniques, Prostitution and society Vol.II.1962 C.A.Bolph, A.Sociological study of the common prostitute Encyclopaedia Britanica, Macropaedia Vol.15 P.76

   Prostitution is not in so far as to known been a culturaly universal in sexually permissive societies it is often rare bacuase it is unnecessary where as in other societies it has been largely suppresed.

3. Cheris KRAMA RAE & PAVLAA.TREE CHLER

   A. Feminist Dictionary

   The prostitute was needed to keep the middle class home and its female home maker unsullied and pure.

4. பெர்ட்ரண்டு ரஸ்ஸல் தமிழாக்கம், கோ.மாதவன் தமிழர் திருமண முறைகள், ப.159

5. மேலது ப.160

6. AL.Bosham, The wonder that was India, P.184

   Ancient India contained one class of women who were not bound by the rules and restrictions which limited the freedom of the high caste wife. Thee were the prostitutes. (Vesya, ganika)

7. T.Bennet Chandrakumar, Sociology of prostitution P.1

   When marriage become the rule, sex outside the matrimonial bond come to the looked upon as sinful, immoral, illegal and so on. However marriage could not completely meet the sexual needs and demands of all.

8. A.Suryakumari, Prostitution an Indian perspective P.95-96

"Prostitution is not only a social but also a medical problem Vernal disease i the common melody of a possible.

9. Santosh Kumar Mukharji, Prostitution in India, P.261

Daughters of porstitutes are sometimes given in marriage with sona and women of same trade. In most of these cases such marriages are merely formal and the girl immediately starts her life as a public porstitute. The marriage is merely a crook to bluf the police.

10. Paul Iacrois . . . Encyclopedia Britanica, Macropaedia in depth. Vol.15, P.75

Prostitution is described most precisely by emphaizing two esential elements.

1. The exchange of money or valuable materials in return for sexual activity and

2. The relatively indiscriminate availability of such a transaction to individuals other than spouses of friends.

11. S.N.Rampal; Indian women and sex P.78

Prostitution in India are,

1. Necessity in economic terms, making it means livelihood. This is the major reason.

2. Satisfaction of sex those women who are decided by oversexed or want variety.

3. A means of having accasional frill with some

4. The most potential reason which is behind all other reaon is man' encouragement to this profession in the role of custom. If there were no cutomers there would have been no prostitute either.

12. B.K.Pal, problems and concern of Indian women P.70-71

Increasing land lessness and pauperization have led many women to migrate to urban areas where they usually become prostitutes to upport themselves and their families.

13. *பெர்ட்ரண்டு ரஸ்ஸல், மு.நூ.ப.160*

Encyclopaedia, (Paul Lac Roix...)

Prostitution also is reinforced by the double standard of exual morality and by the affiliations with drinking dancing and entertainment. These recreational aspeacts have been and in many areas of the world have continued to be an important component of protitution.

14. *மு.நூ.அ.ஆசி.ப.80*

It appears imposible to eradicate prostitution in a complex ociety particularly one in which sexual gratification is made difficult by mores and law moreover the trend of legatistic and hummanitatrian ... include prostitution.

15. *இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.16*

16. *புறநானூறு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் உரை, பா.73*

17. *கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.330*

18. *கா.சிவத்தம்பி*

19. *திருக்குறள் கழக உரை குறள்.919*

20. *மேலது குறள்.920*

21. *மேலது குறள்.913*

22. *மேலது குறள்.918*

23. *மேலது குறள்.910*

24. *மேலது குறள்.919*

25. *மேலது குறள்.913*

26. *மேலது குறள்.920*

27. C.L.Libd P-255

28. *அ.விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, பா.75*

29. மேலது பா.68

30. மேலது பா.66

31. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.330

32. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.176

33. மணிமேகலை பா.அடி225

34. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.31

35. மதுரைக்காஞ்சி பா.570-583

36. பட்டினப்பாலை பா.246

37. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.174

38. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.10

39. புறநானூறு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் உரை, பா.51

40. மேலது பா.78

41. அ.விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, பா.97

42. வெ.தெ.மாணிக்கம், (மருதம்) பா-84

43. அ.விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, பா.66

44. மேலது பா.71(அ-22-26)

45. மேலது பா.74(10-11)

46. மேலது பா.104(74-76)

47. மேலது பா.104

48. வர்த்தமானன் (உ.ஆ), பரிபாடல். பா.48

49. மேலது பா.85-90

50. இளம்பூரணர் (உ.ஆ), தொல், பொருள், கற்பியல், நூ.5

51. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.386

52. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, பா.196

53. மேலது பா.202

54. மேலது ப.254

55. அ. தட்சிணாமூர்த்தி (உ.ஆ), ஐங்குறுநூறு ப.68-3

56. மேலது ப.70-4

57. மேலது ப.176-18

58. அ.விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, பா.89(10-11)

59. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, ப.46

60. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, ப.8

61. அ.விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, பா.83(384)

62. குறள், திருக்குறள் கழக உரை குற-928

63. பெருமாள் திருமொழி, பா.(12

64. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, ப.296

65. அ.விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, பா.72

66. வர்த்தமானன் (உ.ஆ), பரிபாடல். பா.20(அடிகள் 55-60)

67. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, ப.31

68. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, ப.376

69. மேலது ப.396

70. இளம்பூரணர் (உ.ஆ), தொல், பொருள், கற்பியல், நூ.38

71. மேலது - பொருளியல் நூ-1180

72. அகநாநூறு (பா.72

73. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.370

74. இளம்பூரணர் (உ.ஆ), தொல், பொருள், கற்பியல், நூ.21

75. மேலது - பொருளியல் நூ-1173

76. மேலது - கற்பியல் நூ-1124

77. மேலது - நூற்-52

78. அ.விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, பா-38

79. இளம்பூரணர் (உ.ஆ), தொல், பொருள், கற்பியல், நூ.20

80. மேலது நூ.10

81. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, பா.199

82. மேலது ப.258

83. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, ப.16

84. மேலது அகநானூறு பா.115

85. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.30

86. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, ப.354

87. மேலது ப.245

88. அ. தட்சிணாமூர்த்தி (உ.ஆ), ஐங்குறுநூறு ப.56

89. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.330

90. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, ப.176

91. அ. தட்சிணாமூர்த்தி (உ.ஆ), ஐங்குறுநூறு ப.159

# இயல் - நான்கு

# ஓதல் - தூது - போர் - நாடுகாவல் பிரிவுகள்


4.0. ஓதல் பிரிவு

4.1. இளம்பூரணரின் கருத்து

4.2. நச்சர் கருத்து

4.3. பிற கருத்துகள்

4.4.0. தூதுப்பிரிவு

4.4.1. குருகிடம் தூது

4.5.0. போர்வயிற் பிரிவு

4.5.1. போர் – சொல்லாட்சி

4.5.1.1. போர்ப் பிரிவுக்குரியோர்

4.5.1.2. போர்வயிற் பிரிவு – தலைவன் நெஞ்சுக்குக் கூறியவை

4.5.1.3. தலைவன் விடுதலை

4.5.2. காமநோய்

4.5.2.1. பெண்மையின் ஏக்கம்

4.5.2.2. தலைவனின் ஏக்கம்

4.5.3. பாசறை

4.5.3.1. பாசறைப் பாடல்கள்

4.5.3.2. பாசறை நிலை

4.5.3.3. போர்வயிற்பிரிவு – ஆற்றாமையில் தலைவியும் தோழியும்

4.5.3.4. தலைவன் பிரிவு – தலைவி நம்பிக்கை

4.5.3.5. பிரிவில் மங்கலம்

4.6. பிரிவைத் தாங்கவியலா துன்பம்

4.6.1. பிரிவு நோயும் – தோழி தேற்றுதலும்

4.6.2. உழையர் கூற்றுவழி – பிரிவில் மகிழ்ச்சி

4.7. போர்ப்பிரிவு செலவழுங்குதலும் – தலைவி மகிழ்ச்சியும்

4.7.1. இயற்கை நிகழ்வுகளும் – தலைவனின் பிரிவுத் துன்பமும்

4.8. தேர்ப்பாகனிடம் தலைவன் கூறியவையும், தலைவனிடம் தேர்ப்பாகன் கூறியவையும்

4.8.1. தலைவன் தேர்ப்பாகனிடம் கூறும் கூற்றுகள்

4.8.2. மன்னனின் வெற்றியும் – தலைவனின் மகிழ்ச்சியும்

4.8.3. தலைவியை விரைந்து காணும் மனம்

4.8.4. தூதன் மூலம் உரைத்த போர்வயிற்பிரிவு

4.8.5. தூதாக பாணர்கள் விரைந்து கூறியது

4.9. நாடுகாவல் பிரிவு

4.10. தொகுப்புரை

# இயல் - நான்கு

# ஓதல் - தூது - போர் - நாடுகாவல் பிரிவுகள்

### 4.0. ஓதல்பிரிவு

*வாழ்க்கைக்கு இலக்கணம் கூறிய நூல் உலகப் புகழ்பெற்ற தொல்காப்பியம். அகத்திணை, புறத்திணை என்ற இருவேறு திணைகளைப் பிரித்து அகத்திணையின் கீழ் ஏழு திணைகளையும் அடக்கி அவற்றிற்கான விளக்கங்களையும் கொடுத்தார். தொல்காப்பியர் பிரிவுகளில் ஓதல், பகை, தூது என்ற நூற்பாவின் வழி வரையறுக்கப்பட்ட பிரிவிற்கான களங்களைக் கூறியுள்ளார்.*

***தலைவியை விட்டுத் தலைவன் பிரிதல்***

***செவிலித்தாயை விட்டுத் தலைவி பிரிதல்***

***தலைவியையும் குழந்தையையும் விட்டு தலைவன் பிரிதல்***

*ஆகியவை அகப்பாடல்களின் வழி அறியப்பெறுகின்றன. மேற்சுட்டிய பிரிவிற்குச் சான்றுகளாக அக நூல்கள் பல பாடல்களைத் தருகின்றன. ஆனால் ஓதல், தூது, ஆகியவற்றிற்கு உரையாசிரியர்கள் விளக்கம் அளித்தனரே அன்றிப் பாடல்களைச் சான்று காட்டவில்லை. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்', எள்ளின்று எண்ணெய் எடுப்பது போல என்ற கூற்றுகள் பண்டு தொட்டப் பேசப்பட்டு வந்தாலும் நேரிடைச் சான்றுகளை அகத்திணையியலில் கூறியதாகத் தெரியவில்லை. தொல்காப்பியம் பிரிவைப் பற்றிக் கூறும் போது அரசர் அந்தணர்களுக்கு மட்டுமே ஓதல்பிரிவும் தூதுப்பிரிவும் அமைகிறது என்பதால் கருத்து முரண்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது.*

*ஓதல்பிரிவு - மூன்று வருடம்*

*தூதுப்பிரிவு - ஒரு வருடம்*

*என்பதும் தொல்காப்பியர் வகுத்த நியதி. தொல்காப்பியர் இவ்விதிகளை இவ்வாறு வரையறுத்து இருக்க, உரையாசிரியர்கள் சான்று காட்டாமைக்கும்*

தொல்காப்பியர் கருத்திற்கும் ஒரு ஒருமைத் தன்மை இல்லை என்ற உண்மையைப் பெற முடிகிறது. ஓதல்பிரிவு உயர்ந்தவர்களுக்கு மட்டும் உரியது. வேதக் கல்விக்காகவும், வேதம் அல்லாத காரணங்களுக்காகப் பிரியும் பிரிவு ஓதற்பிரிவாகும். வேதம் அல்லாப் பிரிவில்,

1) படைக்கலப் பயிற்சி
2) நூல் பயிற்சி
3) பகடாதி ஊர்தல் பயிற்சி

ஆகியவை அடங்கும். ஓதல்பிரிவில் உயர்ந்தவர்கள் மட்டுமே அடங்குவர் என்று அக்காலத்தில் ஒரு கருத்து நிலவி இருக்கலாம். அதனால் தான் ஓதற்பிரிவு உயர்ந்தோர்க்குரியது என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். உரையாசிரியர்கள் பலரும் உயர்ந்தோரை வேறுபடுத்திக் காட்டுகின்றனர்.

### 4.1.இளம்பூரணரின் கருத்து

உரையாசிரியரான இளம்பூரணர் உயர்ந்தோராக அந்தணர், அரசர், வணிகர் ஆகியோரைக் குறிக்கின்றார். அதாவது அந்தணர் மட்டுமே அன்றி நாட்டைக் காக்கின்ற அரசனும், வணிகத் தொழில் செய்கின்ற வணிகனும் இப்பிரிவில் அடங்குபவர்களாகக் கொள்ள முடியும்.

### 4.2. நச்சர் கருத்து

நச்சினார்க்கினியர் உயர்ந்தோர் என்போரை அந்தணர், அரசர், வணிகர், நால்வகை வருணத்தார் என்பதாகக் குறிக்கிறார். இவரது கருத்தை நோக்கும் போது இளம்பூரணரைப் போலவே இவரும் உரைப்பது தெரிய வருகிறது.

இருவரும் குறிப்பிட்ட சிலரையே ஓதற்பிரிவில் அடக்குவதால் இவர்கள் சமகாலத்தவர் என்று கருத இடமுண்டு. ஆனால் பிற்காலத்து உரையாசிரியர்களான சோமசுந்தர பாரதியார், புலவர் குழந்தை, அருணாச்சலம் பிள்ளை ஆகியோர் இவர்களில் இருந்து சிறிதளவு மாறுபட்டாலும் அவர்களது கருத்தை ஏற்றுக் கொள்வோராகவே உணர முடிகின்றது. நாவலர் சோம சுந்தர பாரதியார் அவர்கள் அடியார், வினைவலர், ஏவலர் அல்லாத உயரியோர்,

பொருள்பற்றி உயர்ந்தோர் ஆகியோரை உயர்ந்தோர் பட்டியலில் இணைக்கிறார். புலவர் குழந்தை அவர்கள் பெரியோர், அந்தணர் முதலாகிய நால்வர், அறிவு ஒழுங்கங்களில் சிறந்தோர் ஆகியோரைக் குறிப்பிடுகிறார். மு.அருணாச்சலம் பிள்ளை அவர்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியோரைக் குறிப்பிட்டு அவர்களோடு குறுநில மன்னர்கள், தேவர் முதலானோரையும் சேர்த்து கொள்கிறார். சுருங்கக் கூறின் நால்வரது ஆதிக்கம் மேலோங்கியும், பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழைகள் உள்ளிட்ட சூத்திரங்கள் ஓதல் பிரிவிற்குத் தகுதியற்றவர்கள் என்ற பேதத்தையும் உணர முடிகிறது.

### 4.3. பிற கருத்துகள்

பிரிவு உணர்த்திய தொல்காப்பியர் ஓதல் காரணமாகத் தலைவன் பிரிய நேரும் என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இதற்குச் சங்க இலக்கியங்களில் இரண்டு சான்றுகள் காணக் கிடக்கின்றன. கச்சிப்பேட்டு காஞ்சிக் கொற்றன் பாலைத் திணைப் பாடலொன்றில் குறுந்தொகை வாயிலாகத் தொல்காப்பியர் கூறிய கல்விப்பிரிவுக்கு அரண் சேர்க்கின்றார். வள்ளுவர் கேள்விச் செல்வத்தைக் குறிப்பிடுகின்ற போது கல்வியின் நிலையை உரைப்பார். அப்போது,

**கேடுஇல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு**

**மாடுஅல்ல மற்றை யவை**[1]

என்கிறார். அதாவது மற்ற செல்வத்தைக் காட்டிலும் உயர்ந்த செல்வம் கல்வியே என்பது இதன் கருத்து.இக்கருத்தோடு காஞ்சிக் கொற்றனின் பாடலும் ஒத்துச் செல்கிறது.

**அவரே கேடுஇல் விழுப்பொருள் தருமார் பாசிலை**

**வாடா வளளிஅம் காடு இறந்தோரே**

**யானே தோடுஆர் எல்வளைநெகிழ நாளும்**

**பாடுஅமை சேக்கையில் படர்கூர்ந் திசினே**

"அன்னள் அளியள்" என்னாது மாமழை

இன்னும் பெய்யும் முழங்கி

மின்னும் – தோழி! என் இன் உயிர் குறித்தே[2]

என்ற கருத்தமைந்த பாடல் கல்விக்காகத் தலைவன் பிரிந்து சென்றான் என்ற பொருளைத் தருகிறது. இதனால் இத்தலைவன் தொல்காப்பியர் குறிப்பிடும் உயர்ந்தோர் பிரிவில் ஒருவனாகத்தான் இருக்க முடியும் என்ற கருத்தைப் பெற முடிகிறது. இதே போல் கல்விக்காகப் பிரிந்து சென்ற மற்றொரு தலைவனையும் அகநானூற்றின்வழி அறியமுடிகிறது. பரணர் பாடிய பாலைத்திணைப் பாடலில்,

கைதொழு மரபின் கடவுற்சான்ற

செய்வினை மருங்கின் சென்றோர் வல்வரின்

விரி உளைப் ..........[3]

என்ற பகுதி இடம்பெறுகிறது. கைதொழும் வினை என்பதற்குக் கல்வி என்ற பொருளை உரையாசியர்கள் பலரும் உரைகின்றனர். இவ்வாறாக, ஓதற்பிரிவிற்காக இரண்டு பாடல்களை அக இலக்கியங்களில் சுட்ட முடியும். இவை தவிர வேறு பாடல்கள் ஓதல் பற்றிய செய்தியைத் தரவில்லை.

அன்றைய நிலையில் ஓதல் என்பது வேதம் ஓதுதல் மட்டுமே கல்வி என ஒருசாரர் கருதினர். அஃது அந்தணர்க்கு மட்டுமே உரியது எனக் கொள்ளப்பட்டது. ஓதுதல் என்பது வேதத்துடன் இணைத்துப் பேசப்படுகிறது. கற்றல், படித்தல் என்பன போன்ற வினைச் சொற்களிலும் ஓதுதல் என்ற சொல் வேதம் ஓதுதலோடு மட்டும் தொடர்புடையது. கல்வி, கல்லாமை அதிகாரங்களில் ஓதுதல் என்ற சொல்லை ஒரு முறையும் ஆளாதத் திருவள்ளுவர் பார்ப்பனரைப் பற்றிக் குறிப்பிடும்போது மட்டும்,

மறப்பினும் ஒத்துக் கொளல் ஆகும் பார்ப்பான்

பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்[4]

என்பதின் வழியாக வேதம் ஓதுதலே கல்வி எனப்பட்டது. ஆனால் வானவியல், சோதிடம், படைக்கலப் பயிற்சி ஆகியவையும் கல்வியின் கீழ் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஊரில் உள்ள ஊர்ப் புறத்திலேயே அவர்கள் போர்முறைக் கல்வியும், பொருள் ஈட்டக் கல்வியும் கற்றனர். அவர்களுக்குப் பிரிந்து செல்லும் இன்றியமையாமை இல்லை. அதனால் அவர் ஓதுதலுக்காகப் பிரிதல் இல்லை. பிராமணர் தென்புலம் சென்று வாழ்ந்து வந்தனர். அரசரைச் சார்ந்து இருந்து வந்தனர். அவர் தம் பெற்றோர், உபாத்தியாயர் ஆகியோர் வட புலத்திலேயே இருந்தனர். எனவே வேதம் ஓதுதலை அவர் செவ்வையாய்க் கற்கத் தம் வடபுலத்தாயகம் செல்ல வேண்டி இருந்தது. அதற்கு மூன்று ஆண்டுகள் ஆயின. அதனாலேயே அவர் ஓதற்பிரிவு மேற்கொள்ள வேண்டி இருந்தது.

மேற்சுட்டிய இரு கருத்துகள் வாயிலாக வேதக்கல்வி என்பது அந்தணர்க்கு மட்டுமே உரியது என்பதும் ஏனையோர்க்குப் படைப்பயிற்சி, சோதிடம் முதலானவை என்பதும் மறைமுகமாகத் தெரிகிறது. கல்வி வரையறுக்கப்பட்டதாகக் கொள்ள முடியும். சாமானியர்கள் வேதம் ஓதுதலுக்குத் தடை செய்யப்பட்டு சமூகநீதி மறுக்கப்பட்டது என்ற உண்மை புலனாகின்றது. இவ்வாறாகக் கல்விப்பிரிவு பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்களில் ஓரிரு இடங்களில் மட்டுமே காண முடிகிறது.

பகை காரணமாக (அ) போர்க்காரணமாக நிகழ்ந்த பிரிவுகளுக்குச் சான்றுகள் பல உள்ளன. அரசனே பிரிந்து சென்றது என்பது நெடுநல்வாடையில் படம்பிடித்து காட்டப்பட்டுள்ளது. கல்விக்காகவோ, தூதுக்காகவோ தலைவன் பிரிந்து சென்றான் என்பதைச் சங்க இலக்கியத்தில் சில சான்றுகள் மட்டுமே வெளிக்காட்டுகின்றன.

கல்வி பற்றிய சிந்தனைகளையும், பெண்பால் கல்வி பற்றிய கருத்தாக்கங்களையும் சங்க இலக்கியங்களில் காண முடிகிறதே ஒழிய கல்விப் பிரிவு நிகழ்ந்ததாக இரு மருங்கிலும் பெரிதாகத் தெரியவில்லை. சுருங்கச்

கூறின் 'உயர்ந்தோர் மாட்டு நிகழ்ந்ததாக உள்ள ஓதல் பிரிவும், கல்விப் பிரிவும்' தொல்காப்பியர் விதியில் உள்ளதே தவிர உரையாசிரியர்களின் கருத்து வாயிலாக அதிகம் வெளிப்படவில்லை.

### 4.4. 0. தூதுப்பிரிவு

பிரிவின் வகையுள் ஒன்றாகத் 'தூது' தொல்காப்பியத்தில் குறிக்கப் பெறுவது. தொல்காப்பியத்திலோ சங்க இலக்கியத்திலோ தூதுக்குரிய இலக்கணம் வரையறுக்கப்படவில்லை. திருவள்ளுவர் தான் முதன் முதலில் திருக்குறளில் தூது என ஒரு அதிகராம் படைத்துத் தூதர்க்குரிய இலக்கணங்களைக் கூறுகிறார். அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை ஆகிய பண்புகள் தூதுரைப்பார்க்கு இன்றியமையாதவை என்பது **வள்ளுவர் கருத்து**[5] ஆனால் தொல்காப்பியர் கூற்றுப்படி தூது என்பது அரசுப் பணி என்ற நிலையில் கருதப்பட்டது.

**வேந்துவினை இயற்கை வேந்தன் ஓரீஇய**

**ஏனோர் மருங்கினும் எய்துஇடன் உடைத்தே**[6]

அதாவது தூது என்பது உயர்ந்தோர்க்குரியதென்றும், வேந்தனைத் தவிர ஏனையோரும் தூதாகச் செல்லுதற்குரியர் என்றும் கூறுகிறார். இவரின் கூற்றுப்படி உயர்ந்தவர் மட்டுமே தூது செல்லத் தக்கவர் ஆகிறார். ஆட்சியுரிமை பெற்றவர்களும் அவர்களை அண்டியிருந்தவர்களுமே உயர்ந்தோர் எனக் கருதப் பெற்றனர். ஏனையோர் தூது செல்லத் தகுதியில்லை என்ற கருத்தினையும் இதன் மூலம் மறைமுகமாக உணர்த்துகிறார். உடைமையாளரின் செல்வாக்கு உயர்வையே இக்கருத்து சுட்டுகிறது. அரசு, எவ்வாறு தான் உருவான சமுதாயத்தில் இருந்து தன்னை மேலே உயர்த்திக் கொண்டதோ அவ்வாறே அரசனின் பணி செய்வாரும் சமூகத்தின் பொதுவான நிலையில் இருந்து மேம்பட்டவராக உயர்ந்தனர். தொல்காப்பியருக்குப் பின் தோன்றிய வள்ளுவரும் தொல்காப்பியர் கருத்தை வழி மொழிவதாகத்

தெரிகிறது. அரசினை ஆள்வோர் கூறும் பணியைச் சென்று உரியவர்களிடம் அறிவித்து வரும் பணியே தூதர் பணியாகும் அதனால்தான் திருவள்ளுவர்,

> தொகச் சொல்லித் தூவாத நீக்கிநகச் சொல்லி
> நன்றி பயப்பது ஆம் தூது[7]

என்று சொல்லித் தூதர்க்கு இருக்க வேண்டும் எனக் கூறுகிறார். அரசர்கட்கு இடையே கருத்து மாறுபாடு இல்லாமல் ஒருமைப்பாடு வளர்க்க தூதர்கள் துணை நின்றனர்.

தூது என்பது குறித்து சங்க இலக்கிய அகப்பாடல்களில் வெவ்வேறு விதத்தில் பொருட் கூறுகள் அமைந்துள்ளன.

1) **தூதுப் பொருளை விளித்தல்**

2) **தலைவனைப் பற்றிக் கூறல்**

3) **தலைவி தன் நிலை கூறல்**

4) **தலைவனுக்கு உரைக்க என உணர்த்தல்**

என்பன இடம் பெறுகின்றன. பிற்காலத்தில் தூதிற்குரிய அஃறிணைப் பொருள்களையும், உயிர்களையும் விளித்து 'மாலை வாங்கி வா' என நிறைவுறும்.

அகநானூற்றில் அமைந்த நீண்ட பாடல் ஒன்றில் நண்டினைத் தூது விடுக்கும் தலைவி பிறப் பொருள்கள் தலைவனிடம் சென்று தூது சொல்லா எனக் கூறுதல் இடம் பெறுகின்றது. நீயில்லாதது எனக்குத் துணைப் பிறிதில்லை எனச் சொல்லுதலும் இடம் பெறுகின்றது. இச்செய்திகள் பாடலின் தொடக்கத்தில் அமைகின்றன. நீர் வாழ் உயிரினைத் தூதாக அனுப்பிய செய்தி அமைந்த பாடல் அகநானூற்றில் அமைந்துள்ளது சிறப்புக்குரியதாகும்.

> காணலும் கழறாது கழியும் கூறாது
> தேன்இமிர் நறுமலர் புன்னையும் மொழியாது
> ஒருநின் அல்லது பிறிது யாதும் இலனே[8]

குறுந்தொகைப் பாடல் ஒன்றில் வரைவிடைக் கூறியது என்ற துறையில் சிறைப்புறமாக இருக்கும் தலைவனுக்குக் கேட்குமாறு தோழி தும்பியிடத்து (வண்டு) வண்டே! தலைவி இல்லிடத்தாள் என்று தலைவரிடம் சொல்லுக என்று கூறுகிறாள்.

அம்ம வாழியோ – மணிச் சிறைத்தும்பி

நல்லமொழிக்கு அச்சம் இல்லை

................ நுண்தோல் போலப்

பிரசம் தூங்கு மலைகிழ வோற்கே![9]

என்பதே இப்பாடலாகும்.

**4.4.1. குருகிடம் தூது**

நெய்தல் நிலத்தில் தலைவியின் துயர் மிகுந்து தலைவனைக் காணாது மிகவும் வருந்தி தன் நிலையைக் குருகிடம் கூறுகிறாள்.

கருங்கால் வெண்குருகு! எனவ கேண்மதி,

பெரும்புலம் பின்றே,சிறுபுன் மாலை

அது நீ அறியின் அன்புமார் உடையை

நொதுமல் நெஞ்சம் கொள்ளாது என் குறை

இற்றாங்கு உணர உரைமதி – தழையோர்

கொய்குழை அரும்பிய குமரி ஞாழல்

தெண்திரை மணிப்புறந் தைவரும்

கண்டல் வேலிநும் துறை கிழவோற்கே[10]

கரிய கால்களும் வெள்ளைச் சிறகுகளை உடைய வெண்குருகிடம் சிறிய புல்லிய மாலைப் பொழுது எனக்குப் பெரிய துன்பத்தை அளிக்கிறது. இதை இக்கடற்றுரைத் தலைவனிடத்தில் சென்று என் குறையை அவர் உணருமாறு உரைப்பாய் என்று தலைவி குருகிடம் தன் துன்பத்தைக் கூறுமாறு தூதாக அனுப்புகிறாள்.

மேற்குறிப்பிட்ட கருத்துகள் அனைத்தும் அகத்தூதாக அமைந்துள்ளது. புறத்தூது என்பது அக இலக்கியத்தில் அமைவதற்கு வாய்ப்பில்லை. உயர்ந்தோர் எனத் தொல்காப்பியர் குறிப்பிடும் அரசர், அரசர் குடும்பத்தினர், அந்தணர், வேளாளர், வணிகர் ஆகியோர் தூது சென்றதற்கான தடயங்கள் அக இலக்கியத்தில் காணப்பெறவில்லை. இருப்பினும் அகநானூற்றில் ஒரே ஒரு பாடலில் தூது சென்றதாகவும், அத்தூது நிறைவுறாமலும், தூதன் வழியிலேயே கொல்லப்பட்டதாகவும் ஒரு கருத்தாக்கத்தைப் பெறமுடிகிறது. பாலை பாடிய பெருங்கடுங்கோ, அகநானூற்றில் பாடிய தலைவன் கூற்றுப் பாடல் ஒன்றில் பார்ப்பான் தூது சென்றதாகவும் அவன் தன் மடியில் கட்டிய வெண்மையான ஓலைச்சுவடியைக் கண்டு அது பொன்னாக இருக்கக் கூடுமென்று நினைத்து அவனைக் கொன்று வீழ்த்தினர் என்றும் ஒரு கருத்தாக்கத்தை அமைத்துள்ளார்.

.................... உமணர்

சணநிரை அன்ன பல்கால், குறும்பொறை

தூது ஒயீ பார்ப்பான் மடி வெள் ஓலைப்

படையுடைக் கையர், வருதிறம் நோக்கி

உண்ணா மருங்குல குன்னோன் கையது

பொன்ஆ குதலும் உண்டு என கொன்னே

தடிந்து உடன் வீழ்த்த கடுங்கண் மழவர்

திறன்இல் சிதாஅர் வறுமை நோக்கி

செங்கோல் அம்பினர் கைந் நொடியாப் பெயர

கொடிவிடு குருதித் தூங்குகுடர் கறீஇ[11]

என்ற பாடல் அடிகள் தொல்காப்பியர் குறிப்பிடும் உயர்ந்தோர்களில் ஒருவரான பார்ப்பனர் தூது சென்றதாகவும் ஆனால் அத்தூது நிறைவு பெறவில்லை என்ற கருத்தையும் பெற முடிகிறது.

### 4.5.0. போர்வயிற்பிரிவு

போர் என்ற சொல் அரசியலோடு தொடர்புடைய ஒரு நிகழ்ச்சியாகும். **போரெனிற் புகலும் புனைகழல் மறவர்**[12] என்று கோவூர் கிழார் பாராட்டுமாறு பண்டைத் தமிழர்கள் போர் வேட்கை மிக்கவர்களாய் வாழ்ந்தனர். தமிழக எல்லைக்குள் மூவேந்தர்களும், குறுநில மன்னர்களும் போர் மேற்கொண்ட நிகழ்வுகளை இலக்கியம் பதிவு செய்கிறது. போர் அச்சம் என்பது தமிழினத்துக்கு அரியதாகும். போர் என்ற சொற்கேட்டால், போர்க்களம் நோக்கித் தமிழ் வீரர்கள் ஓடினார்கள். போர்கள் ஊருக்கு அண்மையில் நிகழ்வதுண்டு என்று இதனைக் கொண்டு அறியலாம். இவ்வண்ணம் போர் பற்றிய சிந்தனைகளைப் புறத்திணை என்னும் இலக்கியப் பிரிவு இலக்கண வடிவில் தமிழ் உலகிற்கு,

**வீரஞ் செறிந்த தமிழ் நாடு**[13]

என அளித்துள்ளது.

### 4.5.1. போர் – சொல்லாட்சி

போர்க்களத்தைக் குறிப்பதற்குக் 'களம்' என்ற சொல்லாட்சி உண்டு **'களம் புகலோம்புமின்'**[14] என்ற சொல்லாட்சி இதற்குச் சான்று. களம் பாடியது என்பது பரணி நூலின் உட்பிரிவுகளுள் ஒன்று. சமம், பறத்தலை, அமர்க்களம்,செருக்களம் எனப் பல சொற்கள் போர்க்களத்தைக் குறிக்கத் தமிழில் உள்ளன. போரில் எல்லாப் பொருள்களும் அழிந்து தரை மட்டமாகுவதால் சமம் என்று கூறப்பட்டது.செருக்கு உணர்ச்சியோடு போர் செய்வதால் செருக்களம் என்றும் காரணப் பெயர் பெற்றது.

போர்க்களம் என்றால் உயிர்கள் மொத்தமாக மடியும் கொலைக்களம் என்பது பொதுவான கருத்து. இக்கருத்திற்கேற்ப கொடுங்காட்சிகள் பல இலக்கியத்துள் இடம் பெற்று வரலாயின. யானையொடு யானை இடிப்பதும் குதிரையொடு குதிரை தாவுவதும், தேரோடு தேர் சாடுவதும் ஆளோடு ஆள் தாக்குவதும், வாளோடு வாள் உரசுவதும், வேலொடு வேல் வீசுவதும்,

அம்பொடு அம்பு விடுப்பதும் ஆகிய காட்சிகள் பழம் போரை நினைக்கும் போது வழக்கமாகத் தோன்றுகின்றன. உயிரினங்கள் உடல் துண்டு பட்டும், தலை தகர்க்கபட்டும், செவியறுபட்டும், கண்குழிப்பட்டும், நாவுதுளைப் பட்டும், குடல் புறம்பட்டும், காலடி வாலறுபட்டும், உறுப்பறைகளாய் உறுப்பிலிகளாய்க் கிடக்கும் அவல நிலையை இலக்கியங்கள் உருக்கமாய் எடுத்துரைக்கும்.

#### 4.5.1.1. போர்ப் பிரிவுக்குரியோர்

போர்வயிற்பிரிவிற்கான நபர்களை உரையாசிரியர்கள் பலரும் தெரிவித்து உள்ளனர்.

1).இளம்பூரணர் - அரசன் என்றும்,

2). நச்சர் - அரசர், குறுநில மன்னர் என்றும்,

3). சோமசுந்தரபாரதியார் - அரசர், குறுநில மன்னர் என்றும்,

4). புலவர் குழந்தைசாமி - அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்றும்,

5). அருணாச்சலம் - அரசர், குறுநில மன்னர் என்றும் குறிப்பிடுவர்.

ஆயின் சங்க இலக்கியப் பனுவல்கள் குலத்தைக் குறிப்பிடாது, அரசன், தலைவன் என்று குறிப்பிட்டு, அவர்கள் நெஞ்சுக்குக் கூறிய செய்திகளையும், தேர்ப்பாகனுக்குக் கூறிய செய்திகளையும், தூதர்க்குக் கூறிய செய்திகளையும் குறிப்பிட்டு அமைகிறது. சுருங்கக் கூறின் பாடல்கள் பலவும் தலைவன், அரசன் ஆகிய இருவரை மட்டுமே மையப்படுத்துகின்றன. குறிப்பாகத் தலைவனை மையப்படுத்திப் பாடப்பட்ட பாடல்களே அதிகம். எனவே போர்வயிற் பிரிவில் தலைமை வகிப்பவன் தலைவனே ஆவான். இப்பிண்ணனியில் போர்வயிற் பிரிவுக்குரிய பாடல்கள் சில ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுப் போர் வயிற் பிரிவின் போது தலைவன் மனநிலை, தலைவியின் மனநிலை, தோழியின் மனநிலை, ஆகியன சுட்டடப்படுகின்றன. இப்பாடல்கள் சிலவற்றில் பாணன், தூதுவன், ஆகியோரின் இடையீடு, ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. முதல்

நிலையில் தலைவன் தன் நெஞ்சுக்குச் சொல்லிய கருத்துக்கள் பாடல் வழியே இடம் பெற்றுள்ளன.

### 4.5.1.2. போர்வயிற்பிரிவு – தலைவன் நெஞ்சுக் கூறியவை

போர்வயிற்பிரிவு என்பது தவிர்க்க இயலாத ஒன்று. தலைவன் தலைவி ஆகிய இருவருக்கும் பிரிவு என்ற கொடுமையை அளித்து அவர்கள் தம் அன்பு கலப்புக்கு எதிராகச் செயல்படக் கூடிய காரணியாக விளங்குகிறது. பகைவயிற் பிரிவும் இது போன்றதே. பிரிவு எத்தகையதாக இருந்தாலும் பெரிதும் பாதிக்கப்படுவது தலைவியே. இப்பிண்ணனியில் பிரிவு என்ற நிலையில் அமைந்துள்ள அப்பாடல்களில் வழி அவர்கள் தம் மன உணர்வையும் உளவியலையும் காட்டுவதாகச் சில பாடல்கள் அமைந்துள்ளன. அவற்றை பின்வரும் பகுதி அணுகி ஆராய முற்படுகிறது.

தலைவன் போர்க் கடமையாற்ற தலைவியைப் பிரிந்து செல்கின்றான். தான் குறித்த கார்ப்பருவம் வந்த பின்பும் திரும்பி செல்ல முடியாமல் பாசறையின் கண் இருந்தான். கார் கால மாலைப் பருவத்தில் கண்ட காட்சி தலைவனை மேலும் துன்புறுத்தியது. விலங்குகள் தமது அன்புக்குரிய நல்ல பிணைகளுடன் தழுவிக் கொண்ட மாலைப் பொழுதில் தன் இருப்பிடம் தேடிச் சென்றன. இதனைக் கண்ட தலைவன் நெஞ்சம் கலங்குகிறான். என்னைப் பிரிந்து தலைவி தனிமைத் துயரத்தில் துன்புறுவாள். நீ மட்டும் வந்ததும் இல்லாமல் என்னையும் உடன் அழைத்து வந்து விட்டாயே என்று தன்னுடைய நெஞ்சினுக்கு உரைக்கின்றான். இத்தகு கற்பனையை

> **நல் ஏறு தழீஇ நாகு பெயர் கலை**
> **உள்ளுதொறும் கலிழும் நெஞ்சம்!**
> **வல்லே எம்மையும் வர இழைத் தணையே**[15]

என்ற பாடல் உணர்த்துகின்றது. தலைவியைப் பிரிந்த துயரத்தைத் தன்னுடைய நெஞ்சிடம் கூறித் தலைவன் ஆற்றியிருப்பதை அறிய முடிகிறது. தலைவன் தலைவி மீது கொண்ட அன்பை விலங்குகளைக் கொண்டு புலவர் உணர்த்தியிருப்பது மனங்கொள்ளத்தக்கது.

#### 4.5.1.3. தலைவன் விடுதலை

மற்றொரு பாடலில் வேந்தன் தன் கடமை முடிந்தால் மேலும் பாசறையில் தங்கியிருக்க மாட்டான் நாடு திரும்புவான் அப்படி அவன் நாடு திரும்புவான் என்றால் அது அவனுக்கு விடுதலை. அவனும் ஒளி பொருந்திய நெற்றியை உடைய தலைவியைக் கூடி மகிழ்வான். அதற்கு உதவும் வகையாக வேந்தன் வினையின் பணியிலிருந்து விடுதலை பெறவேண்டும் என எண்ணுகிறான். இதனை,

பிணி வீடு பெறுக மன்னவன் தொழிலே![16]

என்ற இவ்வடி தெளிவுறுத்துகிறது. மன்னன் போர் வினையிலிருந்து விடுபட்டால், தன்னாலும் தலைவியைக் காண இயலும் என்று வேற்று வினையினை எண்ணி தன் மனம் தலைவியைச் சுற்றியிருப்பதை அறிய முடிகிறது. இதே கருத்து அகநானூற்றிலும் இடம் பெறுகிறது.

இன்னாது உறைவி தொன்னலம் பெறூஉம்

இது நற்காலம் ................

வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறினே[17]

#### 4.5.2. காம நோய்

வேந்தனுக்குப் போர்க் கடமையினை ஆற்றும் பொருட்டுப் பிரிந்து சென்ற தலைவன் தான் மேற்கொண்ட பணி முடியாத நிலையில் கார்காலம் வந்ததால், தலைவியைக் காணாமல் அவன் உள்ளம் துன்பத்தை அடைகிறது. போர் விரைவில் முடியக் கூடியதாக இல்லை. அவனுடைய உடல் வெம்மை யினாலும் மிக்க பெரு மூச்சினாலும் அவனுக்குக் காமநோய் ஏற்படுகிறது. இதனைப் போக்க செவ்விய பண்புடையளைக் கண்டு அவளுடன் இன்பம் நுகர்ந்தால் ஒழிய இந்நோய் தீராது எனத் தன் நெஞ்சிற்குக் கூறுகிறான். இதனை,

வெய்ய உயிர்க்கு நோய் தணியச்

செய்யோள் இளமுலைப் படிஇயர் என் கண்ணே[18]

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

#### 4.5.2.1. பெண்மையின் ஏக்கம்

*போர்வயிற்பிரிவில் சென்ற தலைவனை நினைத்து அழுகின்ற நிலையைப் புலவர் விளக்கியுள்ளார். பூக்களில் தோன்றி இருக்கின்ற தண்ணீர் தலைவியின் கண்ணீருக்கு ஒப்பாகப் பேசப்படுகிறது. போர் முடியாத நிலையில் தலைவன் அங்கேயே தங்கிவிட்டான். பாசறையில் உள்ள தலைவன் தங்கி விட்டாலும் நம்மை நினைக்காமல் இருக்கின்றாரென்று வருந்துகின்ற நிலையிலும் கார் காலத்தில் வருவதாகச் சொல்லி ஏமாற்றி விட்ட நிலையும் இப்பாடலில் உணர்த்தப்படுகின்றன.*

**கதிர்வார் காய்நெல் கட்கு இனிது இறைஞ்ச**

**சிதர்சினை தூங்கும் அற்சிர அரைநாள்**

**காய்சின வேந்தன் பாசறை நீடி**

**நம்நோய் அறியா அறனிலாளர்**[19]

*பிரிவினால் ஏற்படும் சோகமும் ஆற்றாமையும் தலைவனுக்காக ஏங்கிக் கிடக்கும் பெண்மையும் இப்பாடல் வரிகள் உணர்த்தி நிற்கின்றன. தலைவன் மீது கொண்ட உரிமை காரணமாகவும் பற்றின் காரணமாகவும், தலைவி இவ்வாறு புலம்புகிறாள்.*

#### 4.5.2.2. தலைவனின் ஏக்கம்

*தலைவன் தன் நெஞ்சுக்குச் சொல்லும் கூற்றாக இப்பாடல் அமைகின்றது. முல்லை நிலம் பூத்து விட்டது என்பது கார்காலம் தொடங்குவதாகப் பொருள். மழைக்காலம் வருகின்ற சூழல் உள்ளது. விடியற் காலத்தில் பனி பெய்கின்றது. ஆண்மான், பெண்மான், குட்டி ஆகிய மூன்றும் குளிருக்கு ஒதுங்குகின்றன. இச்சூழல் புலவனை அமைதியாக விடவில்லை. இவையனைத்தும் தலைவனின் மனத்தில் ஊடுருவிச் சென்று அவனைக் கவலை கொள்ளச் செய்கிறது. சொன்ன சொல் மாறாமல் தான் செல்ல முடியவில்லையே என்ற வருத்தம் அவனை வாட்டியது. ஒவ்வொன்றையும், ஒவ்வொன்றுடன் பொருத்திப் பார்த்து தான்*

மட்டும் இன்னும் தலைவியைச் சேரவில்லையே எனத் தலைவனின் மனம் ஏங்குவதாகப் புலவர் உரைக்கிறார். இதனை,

. . . . . . . . . . . . . . . . . .

சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை

வலம் திரி மருப்பின் அண்ணல் இரலையொடு

அலங்கு சினைக் குருத்தின் அல்குநிழல் வதிய,

சுரும்பு இமிர்பு ஊத பிடவத்தளை அவிழ

அரும்பொறி மஞ்ஞை ஆல, வரிமணல்

மணிமிடை பவளம் போல, அணிமிகக்

காயாஞ் செம்மல் தாஅய், பலஉடன்

ஈயல் முதாய் நர்ம்புறம் வரிப்ப,

. . . . . . . . . . . . . . . . . .

எம்நொந்து புலக்கும் கொல், மாஅ யோளே?[20]

என்ற பாடல் அடிகள் தலைவனின் மன உளவியலை வெளிக் கொணர்வதாகக் குறிப்பிடுகிறது. ஆண்மான், பெண்மான், குட்டிமான் குருத்த மரத்தின் கீழ் நடுங்கிக் கொண்டு உள்ளன. பிடா மரத்தில் வண்டுகள் மொய்க்க மயில்கள் ஆடிக் கொண்டுள்ளன. காயாம் பூ, தாம்பலாம் பூச்சி ஆகியன நீலமணியோடு செம்மணி கலந்தது போல காணப்பட்டது. இத்தகைய கார்காலக் காட்சிகளைத் தலைவன் பார்க்கின்ற பொழுது அவனது மன உளவியல் அவனோடு பேசியது. காத்திருக்கும் தலைவியின் உள்ளம் அவனுக்காக ஏங்கியது. உயிரினங்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருப்பது போல, நான் என் தலைவியை இன்னும் சேரவில்லையே என அவன் ஏங்குகின்ற நிலையை மேற்சுட்டிய பாடல் அடிகள் விளக்குகின்றன.

### 4.5.3. பாசறை

போர்த்தொடுத்தல் காரணமாகப் படையினரை நடத்திச் சென்று போர் செய்வதற்கான உபாயங்களைப் பற்றிச் சிந்தித்து எதிர் நோக்கித் தலைவர்களும்

படை மறவர்களும் ஒன்று கூடி ஒருங்கே தங்கியிருக்கும் பாதுகாப்பு மிகுந்த காவல் மிகுதியோடு காக்கப்பட்டும் விளங்கும் இடம் பாசறையாகும். படையணியினர் பலவூரினராயும் பல பகுதியினராயும் அமைந்தவர்கள். முறையாகப் போர்வினைப் பகுதி நோக்கி அவர்களை நெறிப்படுத்தித் தக்க அணிகளாக ஒழுங்குபடுத்தப்படும் இடமும் பாசறை எனக் கருதப்படும். அரசின் நிலையான பயிற்சி பெற்றவை. பிற துணைப்படைகளையும் பயிற்சியளவு தேர்ந்தும் மீண்டும், வேண்டும் பல பயிற்சியளித்தும் வலிமை சேர்ப்பதும் பாசறை இடமே. ஆகவே இங்கே போர்வினை குறித்த முயற்சிகளே மேலோங்கி நிற்கும். பிற வாழ்வுக் கூறுகளிலே எவருக்கும் மனம் பற்றாமல் ஒதுங்கியும் நிற்கும்.

விதி முடிந்தவர்களாய் வீரமரணம் ஏற்பதினும் படை முகத்திலே எதிர்த்து வரும் பகைவரை எதிர்த்துப் போர் செய்யும் களத்திலே வீழ்ந்து மறந்தவர்கள் என்று சொல்லப்படும் புகழிலே நாட்டமிகும் பெருமிதவுணர்வைப் பெரிதும் போற்றியவர்கள் பழந்தமிழ் மறவர்கள். போர்வினைக்கென்று சில அறங்களைக் கொள்கைகளைப் பின்பற்றினர்.

பொதுவாகக் கூதிர்காலமும் வேனிற்காலமும் போர் செய்வதற்கு ஏற்ற காலமெனக் கருதப்படுவதால் இக்காலத்தில் மன்னரும் படைமறவரும் பாசறையில் இருத்தல் மரபாகக் கொள்ளப்பெற்றது. இப்பாசறையைக் கூதிர்ப்பாசறை, வேனிப்பாசறை என்று இருவகைப் பட்டதாகவும் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகிறது. பாசறைகள் பெரும்பாலும் காவல் வசதிகள் நன்கமைந்த பெருவெளியான இடப்பகுதிகளில் ஓலைகளாலும் மூங்கில்களால் கட்டி அமைத்து இருப்பர். பாடி, கட்டூர் எனவும் இவை பெயர் பெறுகின்றன. இயல்பான நீராண், காடு மலை அரண்கள் அமைந்து இருப்பினும், இவ்விருக்கையைச் சுற்றி முள்வேலியும், வில்லும், வேலும் ஏந்திய வீரர்களின் தொடர்ந்த விழிப்பான காவலும் நிறுவப்படும். இரவும் பகலும் பகைவரின் ஒற்றர்கள் புகாதபடி மிகவும் கவனமாகக் காக்கப்படுவதும் பாசறை நியதியாகும்.

எண்ணரும் பாசறப் பெண்ணொடு புணரார் என்பதே[21]

பெரிதும் பேணப்பெற்று வந்த போர் மரபாகும் எனினும் படைவீரர்க்குச் சிற்சில காலத்தே உதவிக் காக்கும் பொருட்டும் புறத்துறை மகளிர், 'பாடி மகளிர்' என்போரைப் பணி செய்ய விதிப்பதும் அன்று வழக்கமாக இருந்தது. இவர் புண்ணுற்றோரைப் பேணிக் காத்தல் போன்ற பல துறைகளில் அமைந்து உதவி வருவர்.

பாசறைக்கண் இருக்கும் தலைவர்களும் வீரர்களும் போர் வினையிலும் பகையழித்து வெற்றியை எட்டுவதிலும் கவனம் செலுத்துவர். ஆண்மை மேலோங்கிய மற மாண்பினர்களாகவே பெரிதும் விளங்குவர். தலைவியைப் பிரிந்து வந்தோர் கூட அந்த நினைவுகள் எல்லாம் மறந்து வீர நெஞ்சுடையவர்களாய்த் திகழ்வர். போர் செய்யும் பொருட்டு என வந்த அரசனும் அவ்வாறே இருப்பான். இதனை ஆண் கற்பாகக் கொண்டு விளங்ககுவது பாசறை முல்லை என்பதும் சான்றோர் மரபாகும்.

### 4.5.3.1. பாசறைப் பாடல்கள்

தன்னுடைய வேந்தனுக்கு உதவியாகப் போர்வினை மேற்சென்ற தலைவன் பாசறையில் தனித்திருக்கும் போது தலைவியை நினைந்து ஏங்குவான். மாரிகாலத்து மாலைப் பொழுது அவன் ஏக்கத்தைப் மிகுதிப்படுத்தும். தன் நெஞ்சோடு பேசி ஆறுதல் கொள்வான். பாசறையில் வருந்தும் தலைவன் கூறிய கூற்றுகளில் இருவகை மன நிலைகளைக் காணமுடிகிறது.

1. **பீடுகெழு வேந்தன் பகை தணிந்து போர் வினையை முற்றுப் பெறச் செய்தல் வேண்டும்.**
2. **தன் மனம் தாங்காமல் இருக்கும் தன் நோய் தணியச் செய்து தலைவியைக் கண்ணுறுக வேண்டும்.**

போர்வினை முற்று பெறாமல் பகையரசன் அருந்திறை கொடுப்பவும் கொள்ளாது, சினஞ்சிறந்து விளங்கும் தன் வேந்தன் மீது தலைவனுக்குச் சினம் பெருகுகின்றது. ஒன்றை உரிய நேரத்தில் பெற முடியாதபோது சினம் பிறப்பது

இயல்யேயாகும். எனவேதான் உரிய காலத்தில் தலைவியை அடைய முடியாது. காலந்தாழ்த்தும் வேந்தன் மீது தலைவனுக்குச் சினம் பிறக்கின்றது.

> குன்றக் குறவனொடு குறுநொடி பயிற்றும்
>
> துணை நன்கு உடையள் .................
>
> ........................ தமியேம் பாசறையேமே[22]

எனப் பாசறையில் தனித்திருக்கும் நிலைக்காகத் தலைவன் கழிவிரக்கம் கொண்டு வருந்துதல் காணலாம்.

கார்காலம் வரக்கண்டு கலங்கிய தலைவி மனையில் உரைப்பதாக வரும் பாடல்களைப் போலவே தலைவன் பாசறையில் புலம்பும் பாடல்கள் இருக்கின்றன. தலைவனின் வருத்தமும் தலைவயின் வருத்தத்திற்கு ஈடாகவே உள்ளது. தலைவியை நினையாது போரில் ஈடுபட்ட தலைவனின் மன உணர்வுகள் புறத்திலும் வீரத்தினும் காதலுக்குச் சிறப்பிடம் தந்து காதலியை நினைந்துருகும் தலைவனின் மன உணர்வுகள் அகத்திலும் இடம் பெறுகின்றன. இக்கருத்துகளுக்கேற்ப பாசறையிலிருந்து வினை ஆற்றி (போர் புரிந்து) தலைவன் கார்காலம் வந்தவுடன் போர் மீது இருந்த சினம் தணிந்து தலைவியின் காதல் நினைவால் வாடுவதைத் தலைவன் புலம்பும் பாடல்களில் அறியமுடிகிறது.

### 4.5.3.2. பாசறை நிலை

தலைவன் போர்க்கடமையில் மூழ்கித் தலைவியை மறக்கவில்லை. கார்காலத்தைக் கண்டு தான் திரும்பிவருவதாகக் கூறிய சொல்லை நினைந்து வருந்துகிறான். பாசறையில் இருந்து கொண்டு வருந்துவதை விளக்குவதா, வானம் முழுவதும் மறையும் படியாக மேகம் பரவி ஓயாமல் பெருமழை பெய்கிறது. வேந்தனும் கொடிய பகையோடு மாறுபட்டு வேல் மின்னும் பாசறையில் வென்று புகழ் பெறுவதை விரும்பி உறங்காமல் விழிந்திருக்கிறான். போர் செய்வதும் அவனது கடமை. தன்னிடம் காதல் கொண்டவன் என்று தன்னை நம்பி தான் அறிவித்த குறிப்பையும் நம்பி தனக்காகக் காத்திருக்கும்

தலைவி என்ன நிலையில் இருப்பாள் என எண்ணினான். ஒரு பக்கம் குழல் ஊத மற்றொரு பக்கம் யாழிசைத்துச் செவ்வழிப் பண்பாட காளையின் கழுத்தில் கட்டியத் தெளிந்த மணி உயிரை வருத்துவதாய் ஒலிக்கும் ஒலியை இந்த மழைக்காலத்து மாலைப் பொழுதில் அவள் தனியாக இருந்து கேட்கும் போது அவள் நிலை என்னவாகும் எனக் குழம்பினான்.

**அகலிரு விசும் பகம்புதையப் பாஅய்**

**பகலுடன் கரந்தபல கதிர் வானம் ......**

**இருங்களிற்று இனநிரை குளிர்ப்ப வீசி,**

**பெரும்பெயல் அழிதுளி பொழிதல் ஆனாது**

**வேந்தனும் வெம்பகை முரணி, ஏந்து இலை**

**விடுகதிர் நெடுவேல் இமைக்கும் பாசறை .......**[23]

என்று தலைவியைத் தனியே விட்டு விட்டு வந்ததற்காகத் தன் நெஞ்சை நோகின்றான். சிறந்த என் காதலி தனிமைத் துயரம் கூறும்படியாக அவளை அங்கே விட்டு விட்டு நீ இங்கே பாசறைக்கு வந்து விட்டாயே, இப்போது ஏறு தழுவியவாறே பசுக்கள் ஊர் நோக்கித் திரும்பும் மாலைக் காலத்தை நினைக்குந்தோறும் கலங்கும் நெஞ்சமே என்று நீதான் என்னையும் பாசறைக்கு விரைந்து வருமாறு செய்தாய் என்று தன் நெஞ்சை நொந்து கொண்டான். இதை,

**புகழ்கால சிறப்பின் காதலி புலம்பத்**

**துறந்து வந்தனையே அருந்தொழில் கட்டூர்**

**நல்லேறு தழிஇ நாகுபெயர் காலை**

**உள்ளுதொறும் கவிழும் நெஞ்சம்**

**வல்லே எம்மையும் வரவிழைத்தனையே**[24]

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன.

முரசு காலையில் ஒலிக்கக் கடுஞ்சினம் உடைய வேந்தன் போர்த்தொழிலை ஏற்றுக் கொண்டான். மென்மையான பள்ளங்களில் முல்லை

மலரக் கார்காலம் மிக்க மழை பெய்யத் தொடங்கிவிட்டது. காதலியை நினைக்குந்தோறும் உறக்கம் இல்லாமல் கலங்கும் நிலையைத் தன் மனம் ஏற்றுக் கொண்டதாகத் தலைவன் புலம்புகிறான். இதை,

**தழங் குரல் முரசம்,காலை இயம்பக்**

**கடுஞ்சின வேந்தன் தொழில் எதிர்ந்தனனே**

**மெல்அவல் மருங்கின் முல்லைப் பூப்பப்**

**பொங்குபெயல் கனைதுளி கார் எதிர்ந்தன்னே**

**அஞ்சு லோதியை உள்ளுதொறும்**

**துஞ்சாது அலமரல் நாம் எதிர்ந்தனமே**[25]

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன.

மிகத் தொலைவில் உள்ளது என்று கவலைப்படாமல் நல்ல தேரில் ஏறிச் சென்று இளம்பிறை போன்ற அழகிய ஒளி பொருந்திய அவளுடைய நெற்றியின் அழகைக் காண்பேன். காணவேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் வானளாவிய பல அரண்களை வென்று கைப்பற்றிய வேந்தன் போர்த் தொழிலை நிறுத்தவில்லையே, நிறுத்தினால் சென்று காண்பேனே எனக் கூறினான்.

**நனி சேய்த்து என்னாது நல்தேர் ஏறிச்சென்று**

**இலங்கு நிலவின் இளம்பிறை போலக்**

**காண்டுவெம் தில்ல அவள் கவின்பெறு சுடர்நுதல்**

**விண்ணுயர் அரண்பல வெளவிய**

**மண்ணுறு முரசின் வேந்து தொழில் விடினே**[26]

என்ற பாடல் அடிகள் மேற்கண்ட கருத்தைக் கூறுகின்றன.

தலைவி தன்னை நினைத்து எவ்வாறு வருந்துகிறளோ என எண்ணும் தலைவன் அவள் தன்னை நொந்து வெறுக்கவும் கூடும் என்று வருந்துகிறான். முல்லை நிலம் அழகு பெறுதற்குக் காரணமான கார்காலத்தில் வேந்தனுடைய

பாசறையில் போர்க்கடமை மேற்கொண்டு வேற்று நாட்டில் தங்கியுள்ள தலைவர் பெரிதும் அறம் உடையவர் அல்லர். நம்மிடம் அருள் இல்லாதவர் அவர் என்று அவள் என்னை நொந்து வெறுக்கின்றளோ! அவளுக்காக நான் படும் துன்பம் அவளுக்குத் தெரியாது. ஆகையால் என்னை நோவாள் போலும் என்கிறான். இதை,

புலன்அணி கொண்டகார் எதிர் காலை
ஏந்து கோட்டியானை வேந்தன் பாசறை
வினையொடு வேறுபுலத்து அல்கி நன்றும்
அறவர் அல்லர்நம் அருளாதோர் என
நம்நோய் தன் வயின் அறியாள்
எம்நொந்து புலக்குங்கொல் மாஅ யோளே[27]

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. இது போலவே போர்வினை மேற்கொண்டு சென்ற தலைவன் பாசறையில் இருக்கும் போது கார்கால வருகையைக் கண்டு பேசுவோராகப் பல பாடல்கள் உள்ளன. அகம் - 214, 304, 374 - ஐங் - 441, 448) என்ற பாடல்கள் பாசறைப் பாடல்களாக அமைந்து தலைவனின் நெஞ்சினைப் பற்றிக் கூறுகின்றன.

### 4.5.3.3. போர்வயிற் பிரிவு – ஆற்றாமையில் தலைவியும் தோழியும்

சங்க இலக்கியங்களில் பெரும்பாலும் முல்லைத் திணையில் போர்வயிற் பிரிவுகள் காட்டப்படுகின்றன. முல்லை நிலத் தலைவியர்கள் பெரும்பாலும் பருவம் கண்டு வருந்துபவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். ஒரு சில பாடல்கள் மட்டும் தலைவன் வந்த பின்பு தலைவியின் மகிழ்வு எப்படி இருந்தது என்று சுட்டிக் காட்டுகின்றன.

முல்லைத் திணைப் பாடல்களில் சுட்டப் பெற்றிருக்கும் போர்வயிற் பிரிவும், ஒரு வகையில் பொருளுக்கான பிரிவாக இருந்திருக்குமோ என்ற ஐயப்பாட்டுக்குச் சில பாடல்கள் வழி வகுத்துக் காணப்படுகின்றன. போர்

செய்து வெற்றி பெற்றதால் கிடைத்த பொருள் பற்றித் தம் மனைவி சுற்றத்தாரிடம் சொல்லிப் பெருமைப்படுவாள் என்று தலைவன் குறிப்பிட்டுள்ளது ஒரு பாடலில் காணப்படுகிறது.

**வருதும் என்ற நாளும் பொய்த்தன்ன**

**............. கேட்டு ஞான்றே[28]**

காத்திருத்தல் என்பது எல்லா திணைத் தலைவியருக்கும் பொருந்தும் என்றாலும் முல்லைத் திணைத் தலைவியருக்கு மட்டுமே இருத்தல் சிறப்பாகச் சுட்டப் பெற்றுள்ளது. காரணம் பிறத் திணைப் பாடல்களில் தலைவர்களின் பிரிவைக் காட்டிலும் முல்லைத் திணைப் பாடல்களில் தலைவர் தம் பிரிவு நீண்டது என்பதால் இவ்வாறு கூறப்படுகிறது. இருத்தல் என்பது தலைவன் வரும்வரை அவன் பிரிவைப் பொறுத்திருத்தலாகும். ஆக, முல்லைத் திணையில் தலைவர்கள் அனைவரும் போருக்குச் செல்பவர்களாகவும் தலைவியர்கள் தலைவர்கள் வரும் வரைப் பொறுத்திருப்பவர்களாகவே காட்டப்படுகின்றனர்.

போர்வயிற்பிரிவு பெரும்பாலும் சங்க இலக்கியங்களில் கூறப்படும் போது முல்லைத் திணையிலேயே வந்து சேர்கின்றன. முல்லை நிலத்ததிற்குரிய தொழில் கால்நடை மேய்த்தலாகும். ஆனால் முல்லைக்கலி தவிர்த்த பிற அகநூல்களில் முல்லைத் திணைப் பாட்டுடைத் தலைவர்கள் கால்நடை மேய்ப் போராக அல்லாமல் அவர்கள் போர் மேற்சென்று திரும்புவோராக முல்லைத் திணையில் தலைவர்கள் வைக்கப் பெற்றுள்ளனர். மொத்தம் உள்ள 231 முல்லைத் திணைப் பாடல்களில் 139 பாடல்கள் போர்மேற்சென்று திரும்பும் தலைவர்கள் வெளிப்படையாகவே காட்டப் பெற்றுள்ளனர்.

முல்லை நிலத் தலைவியர்கள் அனைவருமே கார்காலத்தின் போதும், ஊரார் அலர் தூற்றி அமைந்ததாக வரும் பாடல்களில் தலைவியின் ஆற்றாமையை எடுத்து உரைக்கின்றன. அகநானூற்றில் அமைந்த பாடல் ஒன்றில் தலைவன் போர்வயின் பிரிந்தான். தலைவி பிரிவின் வலியால்

துன்புற்றாள். ஊரார் அதனைக் கண்டு அலர் தூற்றித் தலைவியின் ஆற்றாமையைப் பற்றிக் கூற அது தலைவி தோழியிடம் பேசும் பாடலாக அமைகிறது.

நெருப்பு எனச் சிவந்த உருப்பு அவிர் மண்டிலம்

புலங்கடை மடங்கத் தெறுதலின் ஞொள்கி

நிலம் புடை பெயர்வது அன்று கொல் இன்று? என

...............................

கண் உமிழ் கழுகின் கானம் நீந்தி

சென்றார் அன்பு .................

தமிழ் கெழு மூவர் காக்கும்

மொழி பெயர் தேஎத்த பல்மலை இறந்தே[29]

இப்பாடலில் உவமையானது ஞாயிற்றின் வெப்பம் கடுமையாக உள்ளதால் நாட்டில் உள்ள விளைநிலங்கள் பாழாகி போயின. மக்கள் அனைவரும் உலகம் அழியுமென அஞ்சினர். ஆறலைக்கள்வர்கள் போரில் வீழ்த்தியவரின் உடலில் இருந்து மாமிசங்களை எடுத்து வந்து கழுகுகள் தம் குஞ்சுகளுக்கு ஊட்டிய மிகவும் கொடுமை உடைய நிலத்தின்கண் தலைவன் பிரிந்து சென்றான். இத்தகைய கொடுமைகள் நிறைந்த சூழலைக் கடந்து தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுகிறான். இவ்வாறு போர்வயிற்பிரிவு தலைவனுக்கு ஆபத்தான சூழலையும், அந்த ஆபத்தான சூழல் தலைவிக்கு அளவிற்கரிய ஏக்கத்தையும் தருவதாக அமைகிறது.

### 4.5.3.4. தலைவன் பிரிவு – தலைவி நம்பிக்கை

அகநானூற்றில் தலைவன் கூற்றாக வரும் 213-ஆம் பாடலில் தாயங்கண்ணனார் பாலைநிலத்தில் தலைவன் போர்வயிற்பிரிதலை அழகாக எடுத்தியம்பியுள்ளார். போர் ஆற்றல் உடைய யானைப்படைத் தலைவன் தொண்டையன் எனும் மன்னன் வேங்கடமலையை ஆண்டான். அவன்

அம்மலையைத் தாண்டி அவனது ஆநிரையை மீட்கச் செல்லுவதாகப் பிரிந்து சென்றுள்ளான். அப்போரில் வெற்றி பெறக் காளைகளைப் பலி தருவார்கள். நிணச்சோறு தருவார்கள். ஆநிரைகளை மீட்க வடுகர் எனும் நாட்டைத் தாண்டித் தலைவன் சென்றான். ஆனால் அங்கே அமிழ்து கிடைத்தாலும் தலைவன் அங்கே தங்காது என்னை நோக்கி வருவானா? என்று தலைவி எண்ணுகிறாள்.

**வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்**

**இனமழை தவழும் ஏற்றுஅரு நெடுங்கோட்டு**

**ஓங்குவெவள் அருவி வேங்கடத்து உம்பர் . . .**

**வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை**

**வேய் ஒழுக்கு . . . . . . . . . . . . . . .**

**. . . . . . . . . . . . கழல்தொடித் தடக்கை**

**வலம்படு வென்றி வாய்வாள் சோழர்**[30]

தலைவன் பிரிந்து சென்றாலும் தன்மீது உள்ள பற்றினால் அவன் அங்கேயே தங்கமாட்டான் என்ற நம்பிக்கை தலைவிக்கு உள்ளது என்பதை இப்பாடல் காட்டுகின்றது. சாகா வரத்தை அருளுகின்ற அமிழ்தைக் காட்டிலும் தலைவி தன் மீது கொண்ட அன்பும், தலைவன் தலைவி மீது கொண்ட அன்பும் மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. இவ்விதம் பிரிவு, அமிழ்தம் என்ற இந்நிலைகளில் அமிழ்தின் இனிய தன்மையைக் காட்டிலும், அமிழ்தின் சாகா வரத்தை அருளுகின்ற நிலையைக் காட்டிலும் தலைவன் தன்னொடு இருக்கும் மகிழ்ச்சியே மிக உயர்ந்தது எனத் தலைவி கருதுகிறாள். பிரிவு மிகமிகக் கொடுமையானது என்பதும் அப்பிரிவுத் துன்பத்திற்கு ஈடாக மரணம் இல்லாப் பெருவாழ்வு அமிழ்தமே ஆயினும் அப்பிரிவைத் தாங்க முடியாது என்ற கருத்து இப்பாடல்வழி புலனாகிறது. மேலும் அகநானூற்றில் உள்ள மற்றொரு பாடலில்,

அரசுபகை தணிய முரசுபடச் சினைஇ

ஆர்குரல் எழிலி கார் தொடங்கின்றே

அளியவோ அளியதாமே – ஒளிபசந்து

மின்னிடை நெகிழச் சாஅய்த்

தொன்னலம் இழந்தவென் தடமென் தோளே[31]

*அரசன் தான் போர் செய்யக் காரணமாகிய பகைமையானது தணிவடையும் போர் முரசங்கள் ஒலியவியாமலும், சினங்கொண்டதாக மிக்க முழக்கத்தோடுங் கூடிய மேகங்கள் தம் கார்ப்பெயலைத் தொடங்கின. அவர்தாம் சொல்லில் பிரிந்தபடி வராமையிலே மேனியின் ஒளியும் பசலையாலே கெட்டு மின்னிடும் அணிவகைகளும் நெகிழ்ந்து என் பெரிதான மெல்லிய தோள்களும் தம் பழைய அழகினை இழந்து போயின. அவைதாம் மிகவும் இரங்கத்தக்கன தோழி என்று கூறுகிறாள். இது மன்னர்களிடையே ஏற்பட்ட போர் அமைதியில் முடியவும் கார்ப்பருவம் வந்தது. கார்ப்பருவம் வந்தவுடன் வருவதாகச் சொல்லிப் பிரிந்த தலைவன் வராததால் தலைவிக்குப் பசலை பாய்ந்தது. வெற்றி என்ற மகிழ்ச்சியைக் காட்டிலும் பிரிவு என்ற துன்பமே தலைவன் இன்னும் வராததால் பெரிதாகத் தோன்றியது. இப்பாடற் கருத்தில் போர் வெற்றி என்பது அரசனுக்கு மகிழ்ச்சி தரலாம். ஆனால் போரில் வென்ற பின்பும் தலைவன் இன்னும் தலைவியைக் காணத் திரும்பாமல் இருப்பது மிகக் கொடியது என்ற கருத்து குறிக்கத்தக்கது.*

### 4.5.3.5. பிரிவில் மங்கலம்

*முல்லைநிலப் பாடலில் நக்கீரர் தலைவனின் பகைவயிற் பிரிந்து, குறித்த காலத்தில் வராமையால் வருந்திய தலைவியைத் தோழி ஆற்றியதாக உள்ள இப்பாடலில் தலைவனின் ஊரின் பெருமைகளைக் கூறிச் சிறுகுடி என்னும் ஊரினன் அருமன் என்பான். அவன் முல்லை மலர்கள் கட்டிய மாலையோடு சென்ற வீரர்கள் திரும்பி வந்து விட்டனர். தலைவனும் வந்துவிடுவான் எனக் கூறியதை,*

குவளையொடு தொடுத்த நறுவீ முல்லைத்

தளையவிழ் அலரித் தண்நறுங் கோதை

இளையருஞ்சூடி வந்தனர் நமரும்

விரியுளை நன்மாக் கடைஇ

பரியாது வருவர். இப்பனிபடு நாளே[32]

என்ற பாடல் உணர்த்துகிறது. இப்பாடல் மன்னன் நடத்திச் செல்ல வீரர்கள் போருக்குச் சென்றதான வெளிப்படையான குறிப்புகள் இல்லை. ஆனால் இளையரும் சூடி வந்தனர் என்ற குறிப்பால் போர் வீரர்கள் போர் முடிந்து வெற்றி வாகை சூடி வந்தனர் என்ற கருத்தை உணரமுடிகிறது. போர் வீரர்களுடன் தன் தலைவனும் வருகிறான் என்ற செய்தி தலைவிக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இப்பாடலை எழுதிய புலவன் இயற்கை வளம் உள்ளிட்ட பல பசுமை நினைவுகளையும் தலைவனோடு பொருத்தி எழுதியமை கருதுவதற்கு உரியது. புலவர் சுபமாகவும் மங்கலமாகவும் செயல்களை இப்பாடலில் வடித்துச் சுட்டுவர். புலவரின் அழகியல் உணர்வை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இவ்வழகியல் உணர்வோடு தலைவனின் வருகையும் இணைத்து பேசப்படுவதால் இப்பிரிவின் நிகழ்வும் அதன் முடிவும் மங்கலம் என்ற வாக்கால் குறிப்பிடப்படுகிறது.

### 4.6. பிரிவைத் தாங்கவியலா துன்பம்

போருக்குச் செல்லும் முகத்தான் தலைவன் வேலில் விளங்கும் இலையைச் சுத்தம் செய்து துடைத்தான். எதிரிகளின் அம்பில் இருந்து தன்னை காத்துக் கொள்வதற்குக் கேடயத்தையும் தூய்மை செய்து மயிற்பீலியைச் சூட்டி அலங்கரித்தான். இதுகாறும் என்னிடம் காட்டாத அன்பை இப்பொழுது காட்டி என்னைப் பாராட்டினாள் என்றும் இல்லாத சூழல் இன்று நிலவுவதை அறிந்து நான் உள்ளம் கலங்கினேன். மேலும் தலைவியின் அழகிய கண்களில் மை அழிய கண்ணீர் வந்தது. இத்தகைய துயரை,

. . . . . . . . . . . நெறிப்பட

**வேலும் இலங்கு இலை துடைப்பப் பலகையும்**

**நீலி சூட்டி மணிஅணி பவ்வே**

**பண்டினும் நனிபல அளிப்ப இனியே**

**வந்தன்று போலும் . . . . . . .**[33]

*என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. போர்வயிற் பிரிவில் போர் வீரனாகத் தலைவன் செல்லாமல் அரசனுக்காகச் சென்றான். அப்பிரிவை நேரடியாகக் கூறினால் தலைவி மிகவும் துன்புறுவாள் என்று எண்ணி, பிரிவதைச் சில செயல்கள் மூலம் அடையாளப்படுத்தினான். இந்நிகழ்வுகளே தலைவியது உளவியலாகப் புலவன் வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். தலைவனது பிரிவால் மை கரைய அழுகின்ற தலைவி இனி பிரிவு நோயாலும் பசலை நோயாலும் துன்புறப் போகிறாள் என்பது இப்பாடல் உணர்த்தும் கருத்தாகும். இப்பாடலில் பிரிவு என்பது நேரடியாகச் சொல்லப்படாமல் மறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ள நிலை புலவனது உளவியல் பாங்கின் திறத்திற்கு வலிமை சேர்க்கிறது.*

### 4.6.1. பிரிவு நோயும் – தோழி தேறுதலும்

*தலைமகன் வேந்தனுக்குப் போரில் உதவச் சென்றான். அவன் மீள்வதாகக் குறித்த பருவமும் கடந்துவிட்டது. எனவே தலைமகள் மெலிந்தாள். அவளுடைய மேனியின் நலிவையும் அவள் நொந்து நொந்து கண்ணீர் விடுவதையும் கண்ட தோழி அவளைத் தேற்றி ஆற்றியிருக்குமாறு வற்புறுத்திக் கூறுவதாக இப்பாடல் அமைகிறது.*

**வினைவயின்**

**சென்றோர் நீடினர், பெரிதெனத் தங்காது**

**நம்மினும் விரையும் என்ப**

**வெம்முரண் யனை விறற்போர் வேந்தே**[34]

இதில் தோழி தலைவியை வாழ்த்தி, யானைப் படையாலே சிறந்த போரைச் செய்யும் வேந்தனாவான். வினைவயிற் சென்றோர் பலரும் தம் வீட்டைப் பிரிந்து நெடுங்காலம் பாசறையில் தங்கியதால் மேலும் பாசறையில் தங்காது, தலைவனைக் காட்டிலும் தானே நாடு திரும்புவதற்கு விரையும் எண்ணம் கொண்டவன் என்று கூறுவார். ஆதலினாலே நீயும் புனைந்துள்ள இமைகள் நெகிழுமாறு மெலிவுற்று உள்ளம் நைந்து அழவேண்டாம் என்று தோழி தலைவியை ஆற்றுப்படுத்தினாள்.

தலைவியின் தோள் மெலிவுற்று அதில் புனைந்திருந்த செரிவான இழைகளும் நெகிழ்ந்து சரியக் கண்ட தோழி அவள் மேலும் மனம் நொந்து அழுது புலம்புதலையும் கண்டாள். அவளைத் தேற்றுபவளாகவும் தலைவன் விரைவில் வருவதனை உரைக்குமிடத்து,

புனையிழை நெகிழச் சாஅய் நொந்து நொந்து இணையல்[35]

என்றாள். அதாவது அந்நாளைய வேந்தர்கள் தம் படைமறவர்களின் ஆசாபாசங்களையும் உணர்ந்து போற்றும் மனநெகிழ்ச்சி கொண்டவர் என்பதும் விளங்கும். அரசன் வினை நிறுத்தித் திரும்புதலால் தலைவனும் விரையத் திரும்புவான் என்பது இதனால் அறியப்படும் கருத்தாகும்.

### 4.6.2. உழையர் கூற்றுவழி – பிரிவில் – மகிழ்ச்சி

வலிமையுடைய யானைப் போரை விரும்பி ஒன்றுடன் ஒன்று மாறுபடும் பாசறையில் இழைபோல் முழங்கும் வெற்றி முரசம் ஒலித்துக் கொண்டிருக்கும். போரில் வென்ற மன்னன் வெற்றிக் கொடியை உயர்த்தினான். தாய்ப்பசு கன்றுகளுடன் மகிழ்வுடன் தாவிக் குதித்து வரத் தம் குழலை வைத்து ஊதினர். ஏவலர் விரைந்து முன்னே செல்லப் பிடரி மயிருடன் மிக வேகமாகச் செல்லும் குதிரைகள் வழியில் ஓடின. பாகன் கடிவாளத்தை வலித்துப் பிடித்துத் தேரைச் செலுத்தினான். புலவர் புகழும் வீரத்தின் சின்னமாகிய விழுப்புண் ஏற்பட்ட அழகிய மாலையணிந்த மார்பில் குளிர்ந்த சந்தனத்துடன் நறுமணப் பொடிகளை அணிந்து வெற்றி பெற்ற மகிழ்ச்சியுடன் வீட்டிற்குச் செல்ல

விரும்புகிறாய். எனவே நீலமலர் போன்ற மைதீட்டிய மேனியினைக் கொண்ட தலைவிக்குப் பிரிவினால் ஏற்பட்ட பசலை நோய் நீங்கிவிடும் என்ற பொருள்பட,

**மதவலி யானை மறலிய பாசறை**

**இடிஉமிழ் முரசம் பொருகளத்து இயம்ப**

**வென்று கொடி எடுத்தனன் வேந்தனும் . . .**

**. . . . . கொண்ட உண்கண்**

**தீதிலாட்டி திருநுதற் பசப்பே?**[36]

என்ற பாடல் மேற்சுட்டிய கருத்தை அரண் செய்கின்றன. தொடர்ந்து மகிழ்வான நல்ல நிகழ்வுகள் நடந்தேறி வருகிறது. அதாவது போர்வெற்றி, பசு கன்று மகிழ்ச்சி, குதிரைகளின் வேகம், விழுப்புண் பெற்ற மார்பு என வரும் இத்தகைய மகிழ்ச்சி தலைவியின் துக்கத்தை மாற்றுவதாக அமைகிறது. பிரிவு என்பது மிகவும் வருந்தத்தக்கதே எனினும் சுட்டப்பட்ட நிகழ்வுகள் அனைத்தும் பிரிவுத் துன்பத்தின் கொடுமையைப் பின்னுக்குத் தள்ளி தலைவனின் வருகையை அறிவித்து பன்மடங்கு மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்தது. இப்பாடலில் பிரிவின் சோகத்தைப் பெரிதும் மறைத்து மகிழ்ச்சியைப் புலவன் சுட்டியிருப்பது அவர்தம் உளவியல் பாங்கை வெளிக்காட்டுவதாக அமைகிறது.

### 4.7. போர் செலவழுங்குதலும் – தலைவி மகிழ்ச்சியும்

தலைவன் வேந்தனுக்குத் தானைத் தலைவனாகச் சென்றிருக்கிறான். எனவே போர்க்காலத்தின்போது தன் படையணிகளோடு சேர்ந்து தலைவியைப் பிரிந்து போருக்குச் செல்லவேண்டும். பலகாலம் இவ்வாறே செல்வதும் மீள்வதுமாக இருந்தான். அரசனுடன் போருக்குச் செல்லாமல் தன் தலைவியுடன் நெடுநாள்கள் இல்லத்தில் இன்புற்று மகிழ்ந்து வந்தான். இப்போது அவள் உள்ளம் இன்னும் பிரிவானோ? என்னும் ஏக்கத்தால்

*பொங்கியது. தலைவி கலங்குவதனைக் கண்ட தலைவன், அதனைத் தீர்க்கக் கருதி அவளை ஆற்றுப்படுத்த வேண்டி கூறிய சொற்களாக,*

**வென்வேல் வேந்தன் அருந்தொழில் துறந்தினி**

**நன்னுதல்! யானே செலவொழிந் தனெனே!**

**முரசுபடாதிர வேலி,**

**அரசு படக் கடக்கும் அருஞ்சுமத் தானே**[37]

*எனவரும் பாடல் அமைந்து, தலைவியின் மனநிலையையும் அவளது உளவியலையும் அறிந்த தலைவன் பகையரசனை மன்னன் வென்றுவிட்டதால் இனி போருக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. போர்த் தொழிலை மறந்துவிட்டேன் எனவே மேற்கொள்ளவில்லை என ஆற்றுப்படுத்தினான். அதாவது பிரிவாலே வாடி உள்ளம் நலிந்த தலைவியின் நிலையைச் சகிக்க முடியாத தலைவன் அவளை, அவள் ஐயத்தினின்று தெளிவுபடுத்தி மகிழ்ச்சி ஏற்படுத்தினான்.*

*தன் வேந்தனுக்குப் பகையரசால் துன்பம் நேர்ந்தபோது அதனைத் தீர்த்து உதவி நிற்க போகும் தலைமகன் அதனைக் குறிப்பால் உணர்ந்து சோர்வுற்று வாடிய தன் தலைமகளிடம் அவள் இசைந்து வழியனுப்பினால் மட்டுமே தான் செல்வதாகக் கூறி அவள் கடமையையுணர்த்தி இசைவு கேட்பதாக அமைந்த முல்லைப்பாடலைப் பேயனார் காட்டியுள்ளார். இங்குத் தலைவன் பிரிவதற்குத் தலைவியின் பால் அன்பு கூறுவதை,*

**. . . . . . . . பசப்பு நீ விடின்**

**செல்வேம் தில்ல யாமே – செற்றார்**

**வெல்கொடி அரணம் முருக்கிய**

**கல்லா யானை வேந்தபகை வெலற்கே**[38]

*எனப் பிரிந்து செல்லுதல் என்பது கொடுமையான சொல். கார்காலத்தில் தலைவன் தலைவியைப் பிரிதல் என்பது இருவருக்கும் வருத்தம்*

தரக்கூடியதாகும். போரின் பொருட்டு தலைவன் தலைவியைப் பிரிய எண்ணுகிறான். ஆனால் போர் என்ற கடமையை ஆற்ற தலைவன் தலைவியின் இசைவைப் பெற்ற பின்னர்தான் செல்ல வேண்டும் என யோசித்து, உனது இசைவு இல்லையெனில் நான் போருக்குச் செல்லமாட்டேன் என உணர்த்தும் சூழலைப் பேயனார் பாடுகிறார். அதாவது தலைவனுக்கு நாட்டின் பாதுகாப்பும் பெரிது, தலைவியின் அன்பும் பெரிது, கடமையா? காதலா? என்ற விவாதத்தில் காதல் உணர்ச்சியை விஞ்சியதாக கடமை உணர்ச்சி உள்ளது என்பதைப் பேயனார் சித்திரிக்கிறார். மேலும் அதற்குத் தலைவியானவள் இசைவையும் தர வேண்டும் என்று கூறுவது தலைவன் தலைவயரிடையே காணலாகும் ஒருவிதமான புரிந்துணர்வைக் காட்டுவதாக அமைகிறது. பேயனாரது இப்பாடல் தலைவனின் கடமை உணர்ச்சி மட்டுமல்ல தலைவனின் நாட்டுப் பற்றையும் அதற்காகக் காதலையும் தியாகம் செய்யும் பெற்றியையும் காட்டுவதாக உள்ளது.

### 4.7.1. இயற்கை நிகழ்வுகளும் – தலைவனின் பிரிவுத் துன்பமும்

போர்வயிற் பிரிந்து போன தலைவன் இன்னும் வரவில்லையே என பெருங்கண்ணனார் முல்லைத் திணையில் பாடிய படல் ஒன்றில் தலைவி தோழிக்குக் கூறியதாக அமையும இப்பாடல், மழைபெழிய தேரைகள் பறைபோல் முழங்கின. பொன் அணி தொங்குவது போல் கொன்றை பூத்துத் தொங்கியது. தோன்றி விளக்குபோல் பூத்தது. விலங்குகள் நீர் உண்ண மழை பொழிய நீர் நிலைகள் நிறைந்தன. தலைவன் இக்காலத்தில் வரவுமில்லை என்னை நினைக்கவும் இல்லை என தலைவி புலம்புவதாகப் பாடப்பட்டுள்ளது.

மாதிரம் புதையப் பாஅய் கால்வீழ்த்து
ஏறுடைப் பெருமழை பொழிந்தென அவல்தோறு
ஆடுகளப் பறையின் வரிநுணல் கறங்க,
ஆய்பொன் அவிர்இழை தூக்கி, அன்ன

நீடுணர்க் கொன்றை கவின்பெற காடுஉடன்

சுடர்புரை தோன்றியப் புதல்தலைக் கொளாஅ,

முல்லை இல்லமொடு, மலர கல்ல

பகுவாய்ப் பைஞ்சுணை மாஉண மலிர

கார்தொடங்கின் றே . . . . . . . . .

. . . . . . . . . . . . . தோழி – நோதகக்

கொலைகுறித் தன்ன மாலை

துணைதரு போழ்தின் நீந்தலோ அரிதே![39]

இதில் வினைமுடித்து வருகின்றேன் என்ற தலைவன் தான் இன்னும் வராதது கண்டு புலம்புவதாக அமைந்துள்ளது. இப்பாடலில் இயற்கை உயிரினங்கள் கூட மகிழ்ச்சியாக உள்ளதாகப் பாடலாசிரியர்கள் விவரிக்கிறார்கள். தேரைகள் பறை போல் முழங்கின என்பது வெற்றிச் செய்தியாக இருந்தாலும் கொன்றை மலர்கள் பூத்துக் குலுங்குவது போரில் பெற்ற மகிழ்ச்சியைப் புலப்படுத்துவதாக இருந்தாலும், நீர்நிலைகள் நிறைந்து கால்நடைகள் நீர் உண்ணுவதாக இருந்தாலும் இந்த இனிமையான நினைவுகள் அனைத்தும் தலைவன் தன் அருகில் இல்லாததால் துன்பமாகித் தோன்றுவதாகத் தலைவி எண்ணுகிறாள். பிரிவின் கொடுமை, போரின் பெருமை இவ்வாறு உணரத்தப்பட்டுள்ளது.

## போர்ப்பிரிவு

### 4.8. தேர்ப்பாகனிடம் தலைவன் கூறியவையும் தலைவனிடம் தேர்ப்பாகன் கூறியவையும்

போர்வயிற் பிரிந்த தலைவன் போரினை முடித்துத் திரும்புகின்ற காலத்தில் தலைவனும் தேர்ப்பாகனும் உரையாடுகின்ற கூற்றுகள் பல. ஆனால், தலைவியைச் சந்திக்க துடிக்கும் தலைவனின் மன வேகத்தையும், பாகனை விரைவுபடுத்தத் தலைவன் கையாளும் உத்திகளையும் இப்பகுதி விளக்குகின்றது. தலைவன் தன் காம உணர்வுகளை முன்னிலைப்படுத்திச்

செய்திகளை உரைக்காமல், பிரிவில் தவிக்கும் தலைவியை நினைவுபடுத்தி பாகனின் வேகத்தை விரைவுபடுத்துகின்றான். தலைவியின் அவலம் தீர்ப்பது, தலைவி தன் நலத்தை மீண்டும் பெறும் வாய்ப்பினை நினைவுகூர்ந்து தலைவி எதிர்நோக்கும் காலமாகிய கார்காலம் எதிர் நிற்பதைச் சுட்டிக்காட்டுவது, தன்னைக் கண்டதும் தலைவி மகிழ்வாள் எனக் குறிப்பிடுவது, வேறு நினைவின்றித் தலைவனின் வரவையே நாடும், எதிர்நோக்கும் தலைவியின் மனநிலையை எடுத்துரைப்பது என்பன தலைவனின் அணுகுமுறையாகக் காட்டப்படுகின்றன. தலைவியைச் சேர காலம் தாழ்த்திய தலைவனின் போர் வினையையும் வினை முடித்தமையால் தோன்றிய அவனது மனவிரைவினையும் பாகன் உணருமாறு புலவர்களின் சொற்திறம் அமைந்து காணப்படுகின்றது.

தலைவன் பாகனுக்குத் தனது மனநிலைகளையும், உணர்வுகளையும் எடுத்துக் கூறுதலும் காணப்படுகிறது. ஆனால் தலைவியின் நினைவால் தனக்குத் தோன்றிய உணர்வுகளாக அவற்றைத் தலைவன் வெளிப்படுத்த முயல்கிறான். காமத்தில் தலைமயங்கிய தலைவியின் ஊரையும், அது கார்கால (அ) வாடையை எதிர்கொள்ளும் நிலையையும் சுட்டிக்காட்டி கார்காலத்திற்கு முன் அவளது ஊரை அடைய விரும்பும் தன் விருப்பத்தைத் தேர்ப்பாகனிடம் கூறுகிறான்.

தேர்ப்பாகனை விரைவுபடுத்தும் குறிப்பு மொழியாகத் தலைவன், இயற்கையையும், தலைவியின் நிலையையும் எடுத்துக் கூறுகிறான். தலைவியை அடையக் காலம் தாழ்த்திய போர்வினைகள் முடிந்ததைச் சுட்டி தன் மன விரைவினைப் பாகன் உணருமாறு தலைவன் கூறுகிறான். ***தீண்டா வைமுன் தீண்டிக்*** குதிரையை விரைவுபடுத்துமாறு பாகனை வேண்டும் தலைவனின் கூற்றில் தலைவியைச் சந்திக்க விரும்பும் வேகத்தை நற்றிணை 21-ஆம் பாடலில் ஆசிரியர் சுட்டுகிறார். இதேபோல் கார்காலத்தில் வருவதாகச் சூளுரைத்த தலைவனின் பேச்சுகள் பொய்த்து விடுமோ என்ற பதட்டத்தைத்

தலைவி கொள்கிறாள். அவள் மனம் அமைதி இழக்கிறது. கூற்றுகள் எல்லாம் துன்பத்தையே கொடுக்கின்றன. வினை முற்றி மீளும் தலைவனின் கூற்றை முல்லையாகவும் தலைவனின் வரவை எதிர்நோக்கும் தலைவியின் கூற்றைப் பிற திணைகளிலும் சங்கப் பாடல்களில் காணமுடிகிறது.

**4.8.1. தலைவன் தேர்ப்பாகனிடம் கூறும் கூற்றுகள்**

தலைவியைப் பிரிந்து நெடுங்காலம் தன் நாட்டிற்காகப் போர் செய்து அதில் வெற்றியும் கண்டு திரும்பும் தலைவன் தனியே தன்னை எண்ணிக் காத்திருக்கும் தலைவியை நினைந்து தேரினை விரைவாகச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவதாகப் பாடல்கள் பல உள்ளன.

போர் முடிந்த உடனே தலைவனுடைய நெஞ்சும் வீட்டிலிருந்து தலைவியுடன் வாழும் வாழ்க்கையை விரும்புகிறது. காதலியுடன் வாழ்ந்து கழிந்த நாட்களே இவ்வுலகத்தில் பயனுடன் வாழ்ந்த நாட்கள். மற்றவை எல்லாம் வீணாகக் கழிந்த நாட்கள். பதர் போன்ற பயனில்லாத நாட்கள் என்கிறான். இதை,

**எல்லாம் எவனோ பதடி வைகல . . . . .**

**. . . . . அரிவை தோள் அணைத் துஞ்சிக்**

**கழிந்த நாள் இவண் வாழும் நாளே![40]**

என்ற குறுந்தொகை அடிகள் விளக்குகின்றன. இவ்வாறே மற்றொரு பாடலில் வேந்தனும், தலைவனும் போர்க்களத்திற்கு வந்து பகைவரை வென்றான். பகைவரும் திறைப்பொருளைத் தந்தனர். இரண்டு படைகளும் ஒன்று என முரசறையப்பட்டது. சோழ மன்னனின் குடவாயிலைப் போன்ற நம் காதலியின் ஆகத்து இனிய துயிலைக் கொள்ள பாகனே தேரைச் செலுத்துவாயாக என்பதை,

**வந்து வினை முடித்தனன் வேந்தனும், பகைவரும்**

**தம்திரை கொடுத்துத் தமர் ஆயினரே**

**முரண் செறிந்திருந்த தானை இரண்டும்**

**ஒன்று என அறைந்தன பணையே, நின்தேர்**

**முன் இயங்கு ஊர்தி பின்னிலை ஈயாது**[41]

என்பதாக உரைத்தான். போர் காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிந்து வருகிறான். சேரனை எதிர்த்தச் சோழனைச் சேரன் கொன்றுவிட்டான். சிறைகள் தந்ததால் இருபடைகளும் ஒன்றாயின. எனவே சேரனுக்கு மகிழ்ச்சி. அதாவது விரோதிகளாயிருக்கிற இரு நாட்டு மன்னர்களும் போரின் மூலமாக உறவு கொண்டாடும் நிலைமை ஏற்பட்டது. எவ்வித விரோதமும் இன்றிப் பரிவும் பாசமும் கொண்ட என் தலைவியைவிட்டு பிரிந்து வந்துள்ளேன். எனவே வென்ற போர் மன்னன் எத்தகைய மகிழ்ச்சியில் உள்ளானோ, அத்தகைய மகிழ்ச்சியினைக் காட்டிலும் பெரு மகிழ்ச்சியை நான் என் தலைவியைக் கண்டவுடன் (மூலம்) பெற வேண்டும் என்ற எண்ணம் மேலிட தலைவன் தேர்ப்பாகனை நோக்கித் தேரை வேகமாகச் செலுத்து என்றான். எனவே மன்னனின் மகிழ்ச்சியைத் தானும் தன் தலைவி மூலம் பெற வேண்டும் என்ற உளவியல் மனநிலை இங்கு போர்வயிற் பிரிவினால் ஏற்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

### 4.8.2. மன்னனின் வெற்றியும் – தலைவனின் மகிழ்ச்சியும்

போர்வினை முடித்தத் தலைவன் தன் பணி முடிந்ததும் தலைவியை எண்ணி அவளை விரைந்து சென்று காண எண்ணித் தேர்ப்பாகனிடம் தேரை விரைந்து செலுத்தக் கூறினான். புதிய பகை மன்னர்கள் அவனுக்கு அடங்கித் திறை செலுத்தியதன் காரணமாக அவனும் அமைதியை அடைந்தான். அதனால் மழையும் வந்தது. இந்திர கோபப் பூச்சிகள் பறக்கின்றன. புதிய பகை மன்னர்கள் திறை செலுத்தியதால் கோபம் தணிந்ததைப் போல பூமியின் வெம்மை தணிய மழையும் பெய்தது. அம்மாலை நேரத்தில் அதிகமான பாலைத் தன் மடியில் சுமந்து செல்லுகின்ற பசுக்கள் தங்கள் கன்றுகளை நினைத்துப் பாலைச் சுரந்தன. மன்னன் தனக்கென வாழாத் தன்மை கொண்டவன். அவனது தோட்டத்தில் விளையும் நெல்லிக் கனியை உண்டு

தொடர்ந்து இனிமை பயக்க நீரைக் குடித்துப் பெறலாம். அதாவது வெற்றியின் காரணமாகத் தொடர்ந்து இனிமையான நிகழ்வு எனத் தோன்றுகிறது. இதை மன்னனின் கோபம் தணிந்ததால் போர் முடிந்தது. அந்த மகிழ்ச்சியே எனது மகிழ்ச்சி எனக் கூறித் தேரை விரைந்து செலுத்துக என்று கூறினான். இதில் பசுவானது தன் கன்றுகளை நினைத்து ஓடுகின்றதோ அதுபோல் நானும் என் தலைவியை நினைத்துக் கொண்டு பாகனிடம் தேரை விரைந்து செலுத்தச் சொன்னான். தாய்ப்பசு பிரிந்து பின் மீண்டு தன் கன்றினை அடைந்தது போல் தலைவனும் பிரிந்திருந்து மீண்டும் தலைவியைச் சேர வேண்டும் என நினைந்து கூறியது உள்ளுறையாக அமைந்ததை,

> **விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப**
>
> **வேந்தனும் வெம்பகை தணிந்தனன் தீம்பெயர்**
>
> **காரும் ஆர்கலி தலையின்று . . . . . . . .**
>
> **. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
>
> **முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத்திங்கள்**
>
> **பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி**
>
> **வருகுவை ஆயின் தருகுஇவன்பால்**[42]

என்ற பாடல் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

### 4.8.3. தலைவியை விரைந்து காணும் மனம்

தேர் விரைவாகச் செல்கிறது. ஊரை நெருங்க நெருங்கப் பொழுது சென்றது. இருள் சூழ ஆரம்பித்தது. ஒவ்வொரு நாளும் மாலைப் பொழுது வர வரத் தலைவி தன் தலைவன் வரவை எதிர்நோக்கி ஏங்கிக் கொண்டிருப்பதும் வழக்கமாகிவிட்டது. நாள்தோறும் எதிர்பார்த்துக் காத்திருந்த நம்பிக்கைத் தளர்ந்தது. இதை எண்ணிய தலைவன் கூறுகையில், தலைவி தன் தோழியைப் பார்த்து உயிர்த் துணைவர் இன்றாவது வருவாரா என்று கேட்டாள். தன் உடல் மெலிவால் கழன்று போகும் வளையலைக் கழலாதவாறு செறித்துக் கொண்டு அகன்ற வீட்டிலிருந்து பலமுறை வெளியே நோக்குவாள். நோக்கி நோக்கி

வருந்துவாள். பாவம் என்கிறான். (பொழுது போகிறது. இருள் வருகிறது. பாக! விரைந்து செல்க என்பதை,

**செல்க பாக! எல்லின்று பொழுதே . . .**

**. . . வருங்கொல் தோழிதம் இன்னுயிர்த் . . .**

**. . . திருந்திழை தானே![43]**

என்று பாடல் வரிகள் உணர்த்தும். தலைவியின் வருத்தம் தலைவனுக்கு நன்கு புரிந்தாலும், தலைவியை மிக விரைவாய்க் கண்டு அவளை மகிழ்ச்சிபடுத்த வேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டு விரைந்து செலுத்து என்று கூறினான்.

அரசனுக்குத் துணையாகச் சென்ற தலைவன் போரினை முடித்து தலைவியைக் காணச் செல்லத் துடித்து தேர்ப்பாகனிடம், பாகனே வலிமையுடைய நம் அரசன் பெரும் பகையைத் தடுத்து நிறுத்தியதால் இனி நமக்கு இங்கு வேலை இல்லை. ஆதலால் களைப்பு தோன்றாமல் நம் அரசன் பாராட்டும்படியாக ஓடுவது நம் குதிரை. அதனை விரட்டித் தேரைச் செலுத்து. கண்ணீர் கசிந்து அறுசுவை உணவு செய்து காத்திருப்பவள் எம் தலைவி. அதனால் சமையல் அறையை விடுத்து உணவை வருந்திச் சமைத்துக் கவலையோடு கூடிய மகிழ்ச்சி பொங்க அவள் நகைப்பதைக் காண்போம் என்று கூறியதை,

**. . . . . . . . . . . நோன்தாள்**

**மன்னர் மதிக்கும் மான்வினைப் புரவி**

**. . . . . . . . . . அசைஇய**

**முறுவல் இன்றகை காண்கம்**

**உறுவகை தணிந்தனன்! உரவுவாள் வேந்தே![44]**

போர்வயிற் பிரிந்த தலைமகன் தலைவியை நினைத்த வண்ணமே இருந்தான். அரசன் வென்றுவிட்டதால் உடனே வீட்டிற்குச் சென்று தலைவியைக் காணவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. உடனே நமக்காக வருந்திச்

சுவையுடன் சமைத்துக் காத்திருக்கும் தலைவியைக் காணச் செல்லலாம் எனத் தேர்ப்பாகனிடம் கூறுகிற தலைவன், தலைவியின் கைவண்ணத்தை நினைப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. விரைந்து செல்வதால் அவளது முழு அன்பையும் பெறலாம். மேலும் பசலை நோய் தீரவும் வாய்ப்புண்டு என்பதைத் தலைவன் உணர்கிறான். பொதுவாக மனைவி கணவனை வயப்படுத்தும் நிகழ்வுகளில் ஒன்று சமையல். இதன் பொருள் என்னவெனில் தலைவனது பிரிவால் இருவருக்கும் ஏற்படும் துக்கம் இமைப்பொழுதில் மாறிவிடும் என்பதாகும்.

### 4.8.4. தூதன் மூலம் உரைத்த போர்வயிற்பிரிவு

போர்வயிற் பிரிவில் தலைவன் பாசறைக்கண் இருக்கும்போது தலைவியை எண்ணி வருந்தி நிற்பான். அங்கு வரும் பாணனிடம் தன்நிலையை எடுத்துத் தலைவியிடம் போய் கூறும்படி தூதாக அனுப்பும் பாடல்கள் பல உள்ளன. அதேபோல் முல்லை நிலத்தில் வாடி இருக்கும் தலைவியானவள் மிக வருந்தி இயற்கையிடம் பேசி கொண்டிருக்கும் நிலையைப் புலவர்கள் அழகாக எடுத்தியம்புகின்றனர்.

போர்ப் பாசறையில் இருக்கும் தலைவன் தலைவியிடம் தூதன் மூலம் கூறியதாக அமையும் இப்பாடலில் போர் நிறைவுறாததால் தலைவன் தான் குறித்தபடி கார்காலத்தில் வீடு திரும்புவதற்கு இயலவில்லை. பாசறையில் பிற வீரர்களோடும் மறவரோடும் தங்கியிருந்து போர் முயற்சிகளிலே ஈடுபட்டுக் களம்புக சரியான நேரத்தையும் எதிர்பார்த்திருந்தான். அப்போது பாணன் தலைவியின் பிரிவுத் துயரமானது மேலெழ நல்ல உள்ளமும் பண்புள்ளவனான என் தலைவியானவள் தனக்கு அதனை உணர்த்தி உரைக்குமாறு அவனிடம் சொல்லி அனுப்பின சொற்களும் மிக நன்றாக உள்ளது. இருப்பினும் அச்சொற்கள் தனித்து வாழும் எனக்கும் நோயை அதிகப்படுத்தியது. அதனைக் கேட்டு நான் அடையும் இத்துயர மிகுதியை அவளும் அறிந்தால் நன்று. அதனை நீவிர் சென்று அவட்குச் சொல்லவேண்டும் எனச் சொல்லி அனுப்பினான். இக்கருத்தை,

கார்நாள் உருமொடு கையறப் பிரிந்ததென

நோய்நன்கு செய்த . . . . . .[45]

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. தலைமகன் வினைமுடித்துத் திரும்ப இயலவில்லை. கார்காலம் வந்ததால் அவள் துக்கத்திலிருந்து மீள முடியவில்லை. தலைவி அவன் வராதது கண்டு அவள் மனம் கலங்கித் தனது துயரையும் சொல்லி வருமாறு தூது அனுப்பினாள். அவனது கவலையையும் அவளுக்குத் தூதனாக வந்தவனிடம் சொல்லி அனுப்பினாள். தனது துன்பத்தையும் அவள் அவனிடம் அறியச் செய்தாள். தலைவனும் நம்மீது கருணை உள்ளவராக உள்ளார் என்பதனை இதன் மூலம் அறிவித்தாள். இதனால் தலைவன் மீண்டும் வந்து விடுவான் என்று தூதன் அவளை ஆற்றுப்படுத்தினான்

### 4.8.5. தூதாகப் பாணர்கள் விரைந்து கூறியது

ஐங்குறுநூற்றில் பேயனார் முல்லைநிலப் பாடலில் போர்வயிற் சென்ற வேந்தன் வினையை முடித்தான். அச்செய்தியை ஊரில் கூறுவதற்காகத் தூதர் சிலர் முன்னதாகவே ஊர் திரும்பித் தலைவியிடம் வந்து தலைவன் விரைந்து வருவான் என்று கூறிச் சென்றனர். இதில் பகையரசர்களது கடத்தற்கரிய அரண்களைக் கடந்து வெற்றி கொண்ட சிறப்பிற்கு உரிய சேனையைக் கொண்டவன். வெல்லும் போரினைச் செய்வோனுமாகிய வேந்தனோடும் சென்றவன் தலைவன். அத்தகைய தலைவன் மார்பைத் தன் தோள்கள் தழுவிப் பசலைத் தீர்க்குமா எனத் தலைவி வருந்தினாள் என்பதை,

மெல்இறைப் பணைதோட் பசலை தீர

புல்லவும் இயைவது கொல்லோ புல்லார்

ஆரசுரன் கடந்த சீர்கெழு தாணை

வெல்போர் வேந்தனொடு . . .[46]

போரிற்குச் சென்ற வேந்தன் வென்றான் என்ற செய்தியைத் தூதுவர்கள் முன்னதாக ஊரில் அறிவித்தனர். அதுகேட்ட தோழி, தலைவியிடம் நின்

தலைவன் முன்னதாகவே வந்துவிடுவான் எனக் கூறித் தலைவி மகிழ்ச்சியுடன் தோழியையும், தலைவனையும், மன்னனையும் புகழ்ந்து கூறினாள். நல்ல வயல் நிலங்களைக் கொண்ட ஊரனாகிய நம் தலைவன் வருவதால் நம் பசலை நோயும் விரைவில் தீருமா எனக் கேட்டாள். அதாவது கடுக வருவார் எனக் கூறக் கேட்டவள், எப்போது வருவார் எனக் கூறவில்லை. அவன் வரும் வரை அந்நோயால் அவதியுற வேண்டும் என்பதாகக் கூறினாள். பிரிந்த தலைமகன் கூறிய கார்காலத்திற்கு முன்னரே வந்தாலும், எப்போது வந்தாலும் என ஏங்கும் ஏக்கம் அதிகமாக உள்ளதாகத் தெரிகிறது. இவ்வாறு பிரிவு என்பது தன்னை மகிழ்ச்சிபடுத்தக் காத்துக்கிடக்கும் காலமாகப் போர்வயிற் பிரிவு உள்ளதைப் பேயனார் உரைக்கிறார்.

### 4.9. நாடு காவல் பிரிவு

தொல்காப்பியர் பொது நிலையில் அக இலக்கியப் பிரிவுகளை ஐந்தாகப் பிரிக்கின்றார். அவை ஓதல், பகை, தூது, காவல், பொருள் என்பனவாம். ஆனால் பரத்தையர்பிரிவு தனி நிலையில்தான் பார்க்கப்படுகிறது. பொருள் வயிற்பிரிவுக்கும் பகைவயிற் (போர்) பிரிவுக்கும் சான்றுகள் பல உள்ளன. தூதுப்பிரிவுக்கும், ஓதல்பிரிவுக்கும் ஓரிரு சான்றுகளே அக இலக்கியங்களில் காணக் கிடக்கின்றன. ஆனால் காவல்பிரிவிற்குச் சான்றுகள் இல்லை. இப்பிரிவைப் பற்றி நேரடியாகக் குறிக்க எப்பாடல்களிலும் கருத்து இல்லை. மாறாகப் பாசறைப் பாடல்கள், போர்வயிற்பிரிவுப் பாடல்கள் பல உள்ளன. முல்லை நிலம் கூறும் வினைகள் அனைத்தும் போர்ப்பிரிவு, அரசுப்பணி, அரசர்பணி என்ற நிலையில் அடக்கமுடியும். ஆயின் நாடுகாவல் பிரிவு என்பதை ஒரு தனிப் பிரிவாகக் கருதமுடியாது. போர்ப்பிரிவுக்குள் நாடுகாவல் பிரிவை அடக்கிவிடலாம். போர்ப்பிரிவு என்று கருதப்படுகின்ற (அ) போர்ப்பிரிவுக்குள் அடக்கப்படுகின்ற நாடுகாவல்பிரிவு தனி ஆய்வுக்குரியது. ஒரு பார்வையில் நோக்குகின்ற பொழுது முல்லைநில பிரிவுகள் அனைத்தும் வேந்துவினை எனக் கருதப்படுகின்ற மேற்சுட்டிய பணிகளுக்குள் அடங்குவதால்

வினை முடித்து வரும் தலைவன் அரசுப்பணி காரணமாகவோ, பகையின் காரணமாகவோ சென்றிருக்க கூடும் என்ற கருத்து எழ வாய்ப்புண்டு.

காவல்பிரிவு என்பதனை இரண்டாகப் பிரிக்கும் ஆய்வாளர்கள் அதற்கு *1)* அறங்காவல்பிரிவு *2)* நாடுகாவல்பிரிவு எனப் பெயரிட்டர். அறப்பிரிவும் நாடுகாவல் பிரிவும் தொல்காப்பியத்துடன் உரசிப் பார்ப்பது என்பது சற்று சிந்திக்க வேண்டிய ஒன்று. ஏனெனில் நாடுகாவல் என்ற பிரிவைத் தொல்காப்பியர் கூறினாலும், கூறாவிட்டாலும் அதற்குப் பின்வந்த உரையாசிரியர்களோ, ஆய்வாளர்களோ சரியான சான்றை அக இலக்கியங்களில் காட்டியதாகத் தெரியவில்லை. இளம்பூரணர், நச்சர், எயினர், குழந்தை உள்ளிட்ட முப்பெரும் உரையாசிரியர்களும் நாடுகாவல் பிரிவு என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தி உள்ளதாகத் தெரியவில்லை.

சுருங்கக்கூறின் தொல்காப்பிய மறுவாசிப்பின்படி காவல்பிரிவு என்பது தனிப்பிரிவு கிடையாது. போர்வயிற் பிரிவே நாடுகாவல் பிரிவாகக் கூட்டிக் கொள்ளமுடியும் எனத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

**4.10. தொகுப்புரை**

1. ஓதல் - தூது - போர் - காவல் என்ற இவ்வியலில் இந்நான்கு பிரிவுகளைப் பற்றிய விளக்கங்கள் பல்வேறு கோணங்களில் ஆராயப்பெற்று கீழ்க்கண்ட முடிவுகள் பெறப்பட்டன / மேற்சுட்டிய நான்கு பிரிவுகளும் சங்க காலத்தில் வழக்கில் இருந்தாலும் ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொருவருக்குரியது எனப் பகுக்கப்பட்டு இருந்தது.
2. ஓதல் பிரிவும், தூதுப்பிரிவும் முறையே மூன்று வருடம், ஒரு வருடம் என வழக்கில் இருந்தது. ஆயின் உரையாசிரியர்களின் சான்றுக்கும் தொல்காப்பியர் கருத்திற்கும் ஒரு முரண்பாடு இருந்ததை அறியமுடிகிறது. ஓதல்பிரிவு பெரும்பான்மையும் வேதக் கல்விக்காக வழக்கில் இருந்தமையைக் காட்டுகிறது. உயர்ந்தோர் என அக்காலத்தில் கருதப்பட்ட ஆரியர்கள் மட்டுமே இக்கல்வியைக் கற்றனர் என்று

அக்காலத்தில் உள்ள ஏற்றத்தாழ்வினைக் காட்டுகின்ற உண்மையை அறியமுடிகிறது.

3. இளம்பூரணர், நச்சர் உள்ளிட்ட பலரும் தங்களது கருத்துக்களைத் தத்தம் உரைகளில் பதிவு செய்துள்ள நிலையையும் அறிய முடிந்தது. பிரிவுகளுள் படைக்கலப் பயிற்சி, பகடாதி ஊடுதல் பயிற்சி, நூல் பயிற்சி ஆகியனவும் அடங்கி இருக்கக்கூடும் என உரையாசிரியர்கள் ஒப்புக் கொள்கின்றனர். கல்விப் பிரிவு பெண்கள் மாட்டு நிகழ்ந்ததற்குத் தொல்காப்பியமோ, உரையாசிரியர்களோ சான்று காட்டவில்லை.

4. தூதுக்குரிய இலக்கணத்தைத் தொல்காப்பியர் வகுக்கவில்லை என்றும், திருவள்ளுவரே முதன் முதலில் தூது என்ற அதிகாரத்தை வகுத்து அதற்கு இலக்கணம் கூறினார் என்பதை அறியமுடிந்தது. உயர்ந்தோர் மட்டுமே தூது சென்றதாக உள்ள கருத்தாக்கத்தைப் பெற முடிந்தது.

5. சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரை தூது என்பதற்கு வெவ்வேறு பொருட் கூறுகள் அமைந்தன என்பதையும் கண்டு உணர முடிந்தது.

6. தூதுப் பொருட்களாகக் குருகு என்ற பறவையையும், சில இயற்கை அம்சங்களையும் தலைவன் தலைவி கருதியமை அகப்பாடல்கள் வழி ஆராய்கின்றபொழுது தெரியவந்தது.

7. போர் என்ற சொல்லாட்சியின் பொருளை அறிய இவ்வியல் வழிவகை செய்துள்ளது. போர்ப்பிரிவின் நபர்களை உரையாசிரியர்களான நச்சர், சோமசுந்தர பாரதியார், புலவர் குழந்தை, அருணாச்சலம் ஆகியோர் குறித்து உள்ளத்தை அறியமுடிந்தது. ஆயின் சங்க இலக்கிய அகப்பாடல்கள் அரசன், தலைவன் ஆகிய இருவரை மையப்படுத்தி தேர்ப்பாகனுக்கு உரைத்த செய்திகளைப் பதிவு செய்துள்ளன என்ற உண்மையையும் பெறமுடிந்தது. பிரிவு எத்தகையதாக இருந்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது தலைவியே என்பதை அகப்பாடல்கள் பதிவு செய்கின்றன. எனினும் தலைவனின் பிரிவுத் துயரைப்

புலப்படுத்தியதாகவே பாசறைப் பாடல்கள் அமைந்துள்ளன. அகப்பாடல்களை ஆராய்ந்ததன்வழி தலைவனின் பிரிவுத் துயர், காமநோய் பற்றியும் பெண்மையின் ஏக்கம் பற்றியும் தலைவனின் ஏக்கம் பற்றியும் உளநிலையையும் அறியமுடிகிறது.

8. பாசறைப் பாடல்கள் வாயிலாக, பாசறையின் அமைப்பு, மன்னன், தலைவன் ஆகியோரின் மனநிலை, பாசறைப் பிரிவின் இயல்புகள் ஆகியனவும் அறியப்பட்டன. பாசறையில் தலைவன் மனநிலை, அரசன் மனநிலை மட்டுமின்றி அவர்களது புலம்பல், தலைவியின் மீது வைத்துள்ள அன்பு, உளவியல், தங்களின் மனக்கருத்துக்களைப் பாணன் வாயிலாகத் தலைவிக்கு அனுப்புதல், தலைவியின் மனநிலையைச் சிந்தித்துக் கொண்டிருத்தல், இயற்கைச் சூழலின் வருத்தத்தை எண்ணித் தவிர்த்தல் ஆகியன தெரியவந்துள்ளன.

9. போர்வயிற் பிரிவு பெரிதும் முல்லைத் திணையைப் பற்றியே அமைகிறது என்ற உண்மையை அறியமுடிந்தது. தலைவியின் வருத்தம், தலைவன் மீண்டபோது தலைவியின் மகிழ்ச்சி, தலைவியின் ஆற்றாமையின்போது தோழியின் ஆற்றுதலும், இருத்தல், இருத்தலின் கொடுமை ஆகியன அறியப்பட்டன. முல்லைநிலப் பாடல்கள் தலைவனின் பிரிவு, பிரிவின்போது தலைவனின்மீது வைத்துள்ள தலைவியின் நம்பிக்கை ஆகியவற்றைப் பல்வேறு புலவர்கள் தம் பாடல்கள்வழி உணர்த்தி, தலைவியின் மாண்பைப் பதிவு செய்துள்ளனர்.

10. தலைவனின் பிரிவிலும் ஒரு சில மங்கலக் குறிகளும், தாங்கவியலா உளவியல் துன்பங்களும், தலைவியை ஆக்ரமிப்பு செய்துள்ளதை அறிய முடிந்தது. புலவனின் உளவியல் பாங்கும் இயற்கையைப் பிண்ணி அஃதோடு அகவாழ்க்கையை இணைத்துப் பார்க்கும் அழகியல் உணர்வுகளையும் முல்லைநிலப் பிரிவுப் பாடல்கள் ஆங்காங்கே பதிவு செய்துள்ளன.

11. பிரிவு நோயின்போது தலைவியைத் தோழி ஆற்றுப்படுத்தலும், உழையர் கூற்றுவழி பிரிவு மகிழ்ச்சியும் தலைவியின் உளவியலை அறிந்து தலைவன் செலவழுங்குவித்ததால் ஏற்பட்ட தலைவியின் மகிழ்ச்சியும் புலவர்களால் பாங்குற எடுத்தாளப்பட்டத் திறமையும் புலனாகிறது. பிரிவுப் பற்றி அகப்பாடல்கள் வழியே தலைவன் தலைவியர்க்கு இடையே உள்ள புரிதலும் கடமையா? காதலா? என்ற மனப்போராட்டத்திற்கு நடுவே சூழல் கருதி தலைவன் எடுக்கும் முடிவுகளும் பிரிவுப் பாடல்களின் வழி எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

12. உயிரினங்களையும் இயற்கையையும் இணைத்துப் பார்த்து அகவாழ்வின் உள்ளக்கிடக்கையை அழகுறப் புலவர்கள் உணர்த்தியுள்ள பெற்றியும் திறம்பட விளக்கப்பட்டுள்ளது.

13. போர்ப்பிரிவின் ஒரு பகுதியாகத் தலைவனுக்கு, தேர்ப்பாகன் கூறியதும், தேர்ப்பாகனுக்குத் தலைவன் கூறியதும் இவர்கள் இருவரிடையே உள்ள புரிந்துணர்வையும் நல் உணர்வையும் காட்டுவதாகவும் அமைந்துள்ளன. தலைவனின் உளநிலையை அறிந்து தேர்ப்பாகன் குதிரையைச் செலுத்தியதும், இக்கருத்தாக்கத்தின் தளமாக அமைந்ததையும் அறிய முடிகிறது.

14. தலைவன் தேர்ப்பாகனிடம் கூறும் கூற்றுக்களை ஆய்ந்தபோது தலைவனின் முழு எண்ணமும் தலைவியைச் சார்ந்து இருந்தது என்பதை அறியமுடிந்தது. தலைவியோடு வாழும் வாழ்க்கை, இவ்வுலகத்தின் பயனுள்ள நாட்கள் எனக் கருதும் தலைவனின் உண்மை அன்பையும் அறிய முடிந்தது. மன்னன் வெற்றி பெற்றதால் மகிழ்ச்சியடையும் தலைவன் அம்மகிழ்ச்சி தலைவியைக் காணும்போது பன்மடங்காகப் பெருகும் என நினைப்பது, அவனது உண்மையான அன்பைக் காட்டுகிறது எனப் புலவர்கள் கூறுகின்ற கருத்தினை அறியலாகிறது.

15. தூதன் மூலம் போர்வயிற் பிரிவு உணர்த்தும் பாடல்களும், ஆய்வின்வழி அறிய முடிந்து. இவ்வாறே பாணர்க்கும் தலைவன், தலைவியர்க்கு இடையே அமைந்து செயல்பட்ட சமூக நல் உறவையும் அறிய பாடல்கள்வழி காணப்பட்டது.

16. காவல் என்பது நாடுகாவலாகச் சங்க இலக்கியத்தில் மொழியப்படுகிறது. நாடுகாவல் பிரிவைக் குறிக்கச் சங்க இலக்கியத்தில் பாடல்கள் இல்லை எனவும் போர்ப்பிரிவு, அரசுப்பணி, அரசர்பணி ஆகியவற்றை இப்பிரிவினுள் அடக்கலாம் எனவும் கருத இடமளிக்கிறது. அறங்காவல் பிரிவு, நாடுகாவல் பிரிவு என்பது பற்றி உரையாசிரியர்களும் தொல்காப்பியரும் பெரிதும் கூறியதாகக் கருதமுடிகிறது. ஆனால் நாடுகாவல் பிரிவு பெயரளவிலேயே இருந்திருக்கக்கூடும் என்பதும், செயல் அளவில் இல்லை என்பதும் இவ்வியல் தரும் உண்மை என்பதுடன் இவ்வியல் நிறைவுறுகிறது.

17. தொடர்ந்து வரும் இயல் பிரிவின் பின்புலங்கள் என்பதாக அமையும்.

# இயல் - ஐந்து
# பிரிவுப் பாடல்களும் பின்புலன்களும்

*5.0. முன்னுரை*

*5.1. இயற்கையும் பின்புலமும்*

*5.2. தலைவன் தலைவியின் உணர்வுகள்*

*5.3. பிரிவு இயற்கைக் காட்சிகளில் உயிரினங்களில் அன்பு புலப்பாடு*

*5.4. இயற்கைப் பின்புலம் - நிலவு*

*5.4.1. கடல் ஓசை - பெரும் துன்பம்*

*5.4.2. வாடைக்காற்று தரும் துன்பம்*

*5.4.3. வாட்டும் மாலைப்பொழுது*

*5.4.4. எள்ளி நகையாடும் மலர்*

*5.4.5. இடிக்குரல் - பிரிவுத்துன்பம்*

*5.4.6. வாடை தரும் வருத்த மிகுதி*

*5.5. பிரிவில் பறவைகள்*

*5.5.1. அணில்*

*5.5.2. பல்லி கூறியது*

*5.6. இல்லத்தில் பல்லி கூறியது*

*5.7. இயற்கையிடம் புலம்பும் தலைவி*

*5.8. பசுவின் துயரம் - தனிமை*

*5.9. அழைப்பொலி - பல்லி*

*5.10. செலவழுங்குதல் - தலைவி அழகு*

*5.10.1. பொருள்தேட நினைத்த நெஞ்சை அடக்கி செலவழுங்குதல்*

*5.10.2. தலைவியின் மரணத்திற்கு அஞ்சி - செலவழுங்குதல்*

*5.10.3.* பிரிதலுக்குச் சம்மதித்தல்

*5.10.4.* தலைவி நெஞ்சழிதலால் செலவழுங்குவித்தல்

*5.10.5.* பிரிய விரும்புபவர் அறிவற்றவர் என எண்ணியதால் - செலவழுங்குதல்

*5.10.6.* இருதலைக் கொள்ளி எனத் தலைவனின் நிலை - செலவழுங்குதல்

*5.11.* இடைச்சுரம்

*5.11.1.* இடைச்சுரம் - தேம்புரி பழங்கயிறு

*5.11.2.* இடைச்சுரம் - மனப்போராட்டம்

*5.11.3.* இடைச்சுரத்தில் உயிர்களின் அன்புக்காட்சி

*5.11.4.* தலைவி நலன் அழிதல்

*5.11.5.* தலைவன் தன் நெஞ்சைத் திட்டுதல்

*5.11.6.* வினைவயின் செல்ல நெஞ்சை அழித்தல்

*5.12.* வினை முற்றி மீண்டு வருதல்

*5.12.1.* தேர்ப்பாகனிடம் கேள்வி கேட்டல்

*5.12.2.* வினைமுற்றிப் பாகன் கூறிய பாடல்களில் தலைவனின் மனம்

*5.12.3.* தலைவியின் ஊர் அழகு

*5.12.4.* பூக்கள் - விலங்குகள் வாயிலாக உளவியல்

*5.12.5.* தோழி வாயிலாகத் தலைவியின் அன்பு வெளிப்பாடு

*5.12.6.* இடைச்சுரம் அனுபவம் உரைத்தல்

*5.12.7.* தலைவன் - தலைவி வாயிலாக உரையாடலில் அன்பு

*5.13.* தொகுப்புரை

# இயல் - ஐந்து

# பிரிவுப் பாடல்களும் பின்புலங்களும்

## 5.0. முன்னுரை

தலைவன் தலைவியருடன் பிரிவைப் புலப்படுத்தும் பாடல்களில் புலவர்கள் பல்வேறு பின்புலன்களைக் கையாண்டுள்ளனர். தலைவன் தலைவியர் அன்பின் வெளிப்பாடுகளைக் காட்ட காரணிகளாக இருக்கும் உத்திகளாகவும் இதனைக் கொள்ளலாம். உயர்திணையில் இடம் பெறும் மனித வாழ்வின் பல்வேறு கூறுகளைப் புலப்படுத்துவதற்கு அஃறிணை உயிர்களைப் பயன்படுத்தும் புலவர்களின் திறம், இயற்கைச் சூழல் தலைவன் தலைவியரது உளவியல், மனநிலை ஆகிய அனைத்தும் இவண் பின்புலங்களாகக் கருதப்படுகின்றன. இப்பின்புலங்கள் அனைத்தும் தமிழருக்கு மட்டுமல்ல அக வாழ்க்கையில் ஈடுபடும் அனைவருக்கும் பொருந்தி வருவனவாகும்.

இயற்கையின் மாறுதல்களுக்கும் சில செயல்களுக்கும் மனித உளவியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை. நிலவு, விண்மீன், மரங்கள், செடிகள், பூக்கள், நிலம், தட்பவெப்ப மாறுதல்கள் உள்ளிட்ட பல இயற்கை நிகழ்வுகள் தனி மனித அகவாழ்வோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை என்பதைச் சங்க இலக்கிய அகப்பாடல்கள் காட்டுகின்றன. மழை, வெம்மை, கார்மேகம், பனிப்பொழிவு, இடி, மின்னல், பறவைகள், விலங்குகள் ஆகியவை ஏதோ ஒரு விதத்தில் அகவாழ்வின் உளவியல் கூறுகளில் நுழைந்து தலைவனை ஆட்டிப் படைக்கின்றன. மனையுறை மகளிர்க்கு உயிரான ஆடவரின் பிரிவு, சோகத்தையும், மேற்சுட்டிய அனைத்தும் தலைவனது வரவால் தலைவிக்கு மகிழ்ச்சியையும் தரக் கூடியதாய் உள்ளன. இவை அனைத்தும் அகவாழ்வின் வெளிப்புறக் கூறுகளால் நின்று, உட்புறத்தைக் காட்டக் கூடியதாய் உள்ளன.

### 5.1. இயற்கையும் பின்புலமும்

*முதற்பொருளும் கருப்பொருளும் இயற்கைப் பொருள்களாகும். இயற்கைப் பின்புலத்தைப் பெறாத அகப்பாடலே இல்லை. அதற்குக் காரணம் பழங்காலத்து மக்கள் வாழ்க்கை இயற்கையால் உருவாக்கப்பட்டது என்றும் மனித உணர்வின் மறுபதிப்பாகவே இயற்கை வருணிக்கப்படுகிறது என்றும்* **மு.வ.மொழிவார்.**[1] *அகப்பாடலில் அமையும் இயற்கைப் புனைவு, 1.காட்சி அழகு, 2.குறிப்புப்பொருள் வெளியீடு என இரண்டு நிலைகளில் இயங்குகின்றது எனலாம். குறிஞ்சி, மருதம், நெய்தல் திணைப் பாடல்களில் இயற்கைப் புனைவு பெரும்பாலும் உள்ளுறைப் பொருள் கொண்டதாக விளங்குகின்றது. பாலைத் திணையில் வருணனை, வழிக்கொடுமையையும் முல்லைத்திணைப் புனைவு, கார்ப்பருவத் தன்மையையும் விளங்குகின்றன. உள்ளுறைப் பொருள் கொண்ட வருணனைகள் உள்ளுறை உவமத்தில் விளக்கப்படும்.*

*பிரிவின் போது இயற்கையை முன்னிலைப்படுத்தும் தன்மை சங்க அக இலக்கியத்தில் தான் உள்ளது. பிரிவு இலக்கியமே தனிச்சிறப்புடையதாக விளங்குன்றன. பிரிவுத் துயரமும் தோழி ஆற்றுவித்தலுமே பெரிதும் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. மானிட வாழ்க்கைச் சுவடுகளை விளக்கும் குறியீடுகளாகவே சங்க இலக்கியச் சான்றோர் இயற்கை வருணனைகளைக் கொண்டனர். உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை அவ்வாறே வெளிப்படையாக எல்லா நேரத்திலும் வெளியிட்டு விடுதல் இயலாது. அத்தகைய நிலையில் நயத்தக்க நாகரிகமாக உட்குறிப்பு அமைத்துப் பாடுவதற்கும் இயற்கை வருணனை சான்றோர்க்கு உதவியது.*

### 5.2. தலைவன் தலைவியின் உணர்வுகள்

*தலைவன் தலைவியரின் உள்ளத்து உணர்வுளை இயற்கை உணர்ந்து ஒன்றிவிட்டது போல் அவர்கள் உணர்ந்தனர். அவர்கள் மகிழ்ந்த போது இயற்கையும் திளைத்தது. இவர்கள் துயர் அடைந்த போது இயற்கையும்*

துயரால் துவண்டது. இவர்கள் துயர் இதயங்களின் துடிப்பைப் பரந்து விரிந்திருக்கும் புறவுலகம் புரிந்து கொண்டது போன்ற ஒருவகை அனுபவம் இந்த அனுபவம் கைவரும் போது இயற்கையும் மனிதனும் இரண்டறக் கலந்திடும் நிலை ஏற்படுவதைக் காண முடியும். சில வேளைகளில் தலைவி முதலானவர்களின் உணர்ச்சிகள் இயற்கையோடு இயைந்து விடுவதற்காக இயற்கைப் பொருள்களுக்கு உயிரும் உணர்ச்சியும் கொடுத்துப் பாடுவதும் உண்டு.

இடைச்சுரத்து வருந்தும் தலைவனுக்குப் பொருள் வேட்கையும் காம உணர்வும் மோதுவது போன்று காற்றில் மூங்கில் மோதும் காட்சிகள் (அ) பிற போராட்டக் காட்சிகள் கட்புலனாதலைக் காண முடிகிறது. மணம் வேண்டும் தலைவனின் பொருள் கொடையைச் சுட்ட எனின் புன்னையின் தாது பரந்து கிடக்கும் காட்சியும் மணம் கூடும் வாய்ப்பைச் சுட்ட எனின் புன்னையும் தாழையும் இணைந்து நிற்கும் காட்சியும் எடுத்துரைக்கப்படுகின்றன.

அக மாந்தரின் மாறுபட்ட மனநிலையால் இயற்கையிலும் மாறுபட்ட காட்சிகள் பிரதிபலித்து நிற்பதைக் காணமுடியும். வினைமுற்றி மீளும் தலைவனும் இடைச்சுரத்து நின்று நெஞ்சோடு பேசும் தலைவனும் தலைவியைப் பிரிந்து நிற்பவர்களே. அனைத்து வழியின் காட்சிகளையும் காணும் வாய்ப்பு உள்ளவர்களே, எனினும் வினைமுற்றிய தலைவனுக்குக் கூறும் வாய்ப்பு உளதாதலின் அவனுக்கு மனமகிழ்வுக் காட்சிகள் தெரிகின்றன. இடைச்சுரத்துத் தலைவனுக்கு அவ்வாய்ப்பு இல்லையாதலின் மனமுறிவுக் காட்சிகள் தென்படுகின்றன. மனமுறிவின் அடித்தளம் புறச் சூழல்களால் அமைத்துத் தரப்படாதவரை அகமன முறிவுகள் வெளிப்படுவதில்லை என்ற **பிராய்டின்** கருத்திற்கேற்ப அகத்திணைக் கவிஞர்கள் உணர்விற்கேற்ற இயற்கைப் பின்புலங்களைப் பெய்துரைத்தற்கு இவ்வுளவியல் காரணமாகலாம். வினை முற்றிய தலைவனின் நம்பிக்கை மிகுதியால் தோன்றிய மன எழுச்சியும் இடைச்சுரத்து நம்பிக்கை இழப்பால் தோன்றிய மனத்தளர்ச்சியும் இயற்கைப்

பின்னணிகளிலும் பிரதிபலிக்குமாறு கவிஞன் பின்புலங்களை அமைத்து இருப்பதைக் காணமுடிகிறது.

சங்க அக இலக்கியங்களை முதல், கரு, உரிப்பொருள் அடிப்படையில் அமைத்துப் பாடும் மரபு காணப்படுகிறது. அகத்திணை மாந்தர்களில் மனக் குறிப்புக்களை உரைப்பதற்குக் கவிஞர்கள் கருப்பொருள் பின்னணியில் தோன்றும் இக்குறிப்புகளை இலக்கணிகள், உள்ளுறை, இறைச்சி என்ற வரையறைக்குள் உட்படுத்துகின்றனர்.

அகமாந்தரின் உணர்வுடன் ஒத்திசைக்கும் இயற்கைப் பின்புலங்கள் கவிஞர்களால் முன் வைக்கப்படுகின்றன. அகமாந்தரின் மன உணர்வுகளைத் தெளிவுபடுத்துதல் மன உணர்வு மாற்றங்களைப் புலப்படுத்துதல் அவர் தம் மனநிலையைக் கற்போர் உய்த்துணருமாறு செய்தல் என்பன இயற்கை புனைவுகளைத் துணையாக நாடும் கவிஞனின் நோக்கமாகலாம்.

### 5.3. பிரிவு, இயற்கை காட்சிகளில் உயிரினங்களில் அன்புப் புலப்பாடு

தலைவனின் பிரிவின்போது, தலைவன் சென்ற சுரத்தில் காணலாகும் இயற்கைப் பின்புலங்கள் தலைவிக்கு ஆறுதல் தரும் விதத்தில் புலவர்களால் எடுத்துரைக்கப்படுகின்றன. இயற்கையில் காணப்படும் அன்புறுகாட்சிகளைக் கண்டு தலைவன் விரைவில் தலைவியை வந்தடைவான் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறாள் தோழி. வறட்சி மிக்க சூழலிலும் அன்பு மிகுதியைக் காட்டி வறட்சித் துன்பத்தை உணர விடாமல் செய்யும் இயற்கை உயிர்கள் தலைவனுக்கு அன்பின் பெருமையை எடுத்துரைக்கும் என ஆறுதல் படுத்துகிறான். தன் பெண் இனத்தின் இன்னல்களைத் தான் ஏற்றுவாழும் ஆணினங்கள் வளம் வற்றிய போதும், பாலை நிலத்தில் குளம் வற்றிய போதும் உளம் வற்றாமல் வாழும் இயற்கைக் காட்சிகள் தலைவனை மீண்டும் தலைவியை வந்தடைய செய்யும் எனத்தேற்றுகிறாள். **"துணையோடு வதியும் வண்டுகள் கலைதல் அஞ்ச மணிநா ஆர்ந்த தேரன்"**[2] எனத் தலைவனை நினைவு கூறும் தோழியின் கூற்று. அஃறிணை உயிர்களின் காம உணர்வுக்கு

*மதிப்பளிக்கும் தலைவன் தலைவியின் உணர்வுகளுக்கு எவ்வாறேனும் உறுதியாக மதிப்பளிப்பான் என நம்பிக்கை ஊட்டுதலை உணரமுடிகிறது. இப்பின்னணியில் இயற்கை உயிர்கள் இணைந்து நிற்கும் காட்சிகளைப் பல்வேறு பாடல்களில் காண முடிகிறது.*

புன்தலை மடப்பிடி கன்றோடு ஆர
வில் கடிந்து ஊட்டின பெயரும்
கொல்களிற்று ஒருத்தல் சுரன் இறந்தோரே[3]

ஈன்றுநாள் உலந்த மெல்நடை மடப்பிடி
கன்றுபசி களைஇய பைங்கண் யானை
முற்றா மூங்கில் முளைதரு பூட்டும்[4]

மறியுடை மான்பிணை உகளத்
தண்பெயல் பொழிந்த இன்பமும் உடைத்தே[5]

கவைத்தலை முதுகலை ........ மறிக்கு நிழலாகி
நின்று வெயில் கழிக்கும்[6]

*உயிரிணைகள் தங்களின் வாரிசுகளுடன் ஒன்றி உறவாடும் காட்சிகளைச் சுட்டும் தோழியின் கூற்றில் இக்காட்சிகளைக் காணும் தலைவன் ஒன்றிணைந்த குடும்ப நினைவு கொள்ளும் வாய்ப்பு உள்ளது என்பதைச் சுட்டும் உள்ளார்வம் இருத்தலை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. பெடையை மட்டுமன்றி மறியையும் காத்து நிற்கும் ஆண் உயிர்களின் தீரமும் தியாகமும் எடுத்துரைக்கப்பட்டுத் தலைவன், தலைவியை நினைப்பது மட்டுமின்றி முழுக் குடும்ப நினைவும் கொண்டு வருவான் என* ***நம்பிக்கை அளிக்கிறாள் தோழி.***[7]

**5.4. இயற்கை பின்புலம் – நிலவு**

*தலைவன் தலைவிப் பிரிவில் நிலவு இன்றியமையா இடத்தைப் பெறுகிறது. சுகத்தை மட்டும் அல்ல சோகத்தையும் தரும் இயற்கையாக நிலவு அமைவதை எல்லா இலக்கியங்களும் உணர்த்தி நிற்கின்றன. அக வாழ்வில் நிலவு அகத்திணை மாந்தர்களுள் தலைவன் தலைவிக்குச் சாட்சியாக மட்டும் இன்றி துன்பத்திற்குரிய பொருளாகக் காட்சி அளிக்கிறது.*

*பொருள்வயிற் பிரிந்த காலத்தில் தன் தனிமையை ஆற்ற முடியாத தலைவி இயற்கையான கடல், காற்று, திங்கள் உள்ளிட்ட பலவற்றையும் நோக்கி புலம்பும் ஆற்றாமை சொற்கள் பலவும் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. நற்றிணையில் வரும் ஒரு பாடலில் பொருள்தேடச் சென்ற தலைவனின் இருப்பிடத்தைக் காட்டாத நிலவைக் கடிந்து கொள்ளும் காட்சியைக் காணமுடிகிறது.*

பளிங்கு செறிந் தன்ன பல்கதிர் இடை இடை
பால்முகந் தன்ன பசுவெண் நிலவின்
மால்பிடர் அறியா நிறையுறு மதியம்
சால்பும் செம்மையும் உடையை ஆதலின்
நிற்கரந்து உறையும் உலகம் இன்மையின்
ஏற்கரந்து உறைவோர் உள்வழி காட்டாய்
நற்கவின் இழந்த வெண் தோள் போற் சாஅய்
சிறுகுபு சிறுகுபு செரீஇ
அறிகரி பொய்த்தலின் ஆகுமோ அதுவே[8]

*நிலவானது பல பகுதிகள் ஒன்றாகச் செறிந்தாற் போன்று பல கதிர்களின் உள்ளே சென்று பாலைக் கொட்ட வைத்தது போல குளிர்ச்சியை உடையது. மேலும் வெண்மையான ஒளி நிறைந்தது. இந்நிலவானது மேகத்தின் முதுகின் மேல் தோன்றுவது போல் உள்ளது. இப்படிப்பட்ட பண்புகளை உடைய*

அனைத்துக் கலைகளும் நிறைவுற்ற சந்திரனை நோக்கிச் சான்றாண்மையும் நேர்மையையும் உடையவன் என்றும் அதற்குத் தெரியாமல் மறைந்து இருக்கும் உலகம் ஒன்றும் இல்லை எனவும் வாழ்த்தி, எனக்குத் தெரியாமல் மறைந்து இருக்கும் என் காதலர் இருக்குமிடத்தை நீ காட்டுக என்று நிலவைப் பார்த்துத் தலைவி புலம்புகிறாள். ஆனால் நிலவு தலைவிக்கு விடை தரவில்லை. எனவே தலைவி நிலவை நோக்கி நீ அறிந்து உண்மையைக் கூறவில்லை. பொய்யைக் கூறுகிறாய். அதனால் அழகு இழந்த என் தோள் போல வாட்டமுற்று நாள்தோறும் குறைவாயாக, குறைந்து மறைவாயாக அப்போதும் உன்னால் காட்ட முடியாது என நிலவைக் கோபித்துக் கொண்டாள். அதாவது ஏதோ ஒரு இடத்தில் தலைவன் இருக்கின்றான் அந்த தலைவனை விரைவில் தனக்குத் காட்டித் தன்னிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் எனப் புலம்பினாள். இதன் உட்பொருள் யாதெனில் நிலவானது பிரிந்திருக்கும் காதலர்களுக்கு வருத்தத்தை அளிக்க கூடியதும் நிலவின் பிரகாசம் தன் தலைவன் இல்லாத போது தனக்குத் துன்பத்தைத் தருவதாக உள்ளது என்பதாம்.

### 5.4.1. கடல் ஓசை – பெரும் துன்பம்

பஞ்ச பூதங்களுள் ஒன்றான மேகத்தை விளித்த தலைவி கடலையும், காற்றையும் விளித்துத் தன் ஆற்றாமையைக் கூறிப் புலம்புவதையும் சங்க அக இலக்கியங்கள் சுட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, குறுந்தொகைப் பாடலில் இடம் பெறும் தலைவி, தன் தலைவனை அடைய இயலாத தன்மையைக் கடலில் தன் கவலையை உரைப்பதாக ஒரு பாடல் அமைகிறது. தலைவன் பிரிந்த காலத்தில் நள்ளிரவிலும் உறக்கம் வரப் பெறாதவளாய் துன்புற்ற நிலை அம்மூவனாரால் எடுத்தாளப்படுகிறது. ஊர் உறங்கிக் கிடக்கக் கடலலை ஓசை மட்டும் தலைவியின் காதில் விழுந்ததால் தன் ஆற்றாமையைக் கடல் அலையிடம் தலைவி கூறுவதாக இப்புலவர் கற்பனை செய்து பாடுகிறார்.

யார் அணங் குற்றனை – கடலே! பூழியர்

சிறுதலை வெள்ளைத் தோடு பரந்தன்ன

மீன் ஆர் குறுகின் கானல்அம் பெருந்துறை

வெள்வீர்த் தாழை திரை அலை

நள்ளென் கங்குலும் கேட்கும் நின்குரலே![9]

*நெய்தல் நிலத்தில் (கடற்புறத்தில்) முன்னொரு நாள் யாரும் அற்ற போது தலைவன் தலைவி ஆகியோர் தழுவி மகிழ்ந்து இருந்தனர். அதனை நினைத்த தலைவி புலம்புகிறாள். தலைவன் பிரிந்த நிலையில் இரவுப் பொழுதில் தோழியும் உறங்குகிறாள், ஊரும் உறங்குகின்றனர். ஆனால் கடல் அலை மட்டும் உறங்காமல் எழுப்பும் ஓசை துன்பம் தருகிறது. அஃது முன்னொரு காலத்தில் நடந்த நிகழ்வை எண்ணி அவள் புலம்பும் புலம்பல்கள் அலை ஓசை அதிகம் இருக்கும் யாமத்தில் கேட்கிறது. அதாவது தலைவனைப் பிரிந்த தலைவி பஞ்சனையில் படுத்திருந்தாலும் இந்த கடல் அலையின் ஓசையானது வருத்தத்தைத் தருவதாக உள்ளது. இப்பிரிவிற்குரிய காலம் தலைவனைப் பெறாத தலைவி புலம்புகின்ற தனிமையை இப்பாடல் உணர்த்துகின்றது.*

**5.4.2. வாடைக் காற்று தரும் துன்பம்**

*கடல் அலையின் ஓசையைக் கேட்டு பெரும் துன்பம் அடைந்த நெய்தல் நிலத் தலைவி புலம்பியதைப் போலவே, வாடைக் காற்றால் துன்புற்ற பாலை நிலத் தலைவி பிரிவாற்றாமையினால் துன்புறும் நிகழ்ச்சி, ஒரு புலவரால் எடுத்தாளப்பட்டுள்ளது. தலைவன் பொருள் தேடும் பொருட்டுப் பிரிந்து அமைந்த இப்பாடல் வாடைக் காற்றைப் பார்த்துப் புலம்பி வருந்திக் கூறியதை, தலைவி கூறுகையில் என்னுடைய தலைவன் என்னை விட்டுப் பிரிந்து சென்றுள்ளான் பேச்சுத் துணைக்குக் கூட யாரும் இல்லாமல் தனிமையில் அமர்ந்திருக்கும் என் மீது வீசாதே உனக்கு நான் கெடுதல் நினைக்கவில்லை. எனவே நீ வயல் நிறைந்த பகுதிகளில் சென்று வீசுவாயாக என்று கூறித் தன் தனிமைத் துன்பத்தினைக் கூறுகிறாள். இக்கருத்தை,*

அட்டரக்கு வீருவின் வட்டுமுகை ஈங்கைத்

துய்த்தலைப் புதுமலர்த் துளிதலைக் கலாவ

நிறைநீர்ப் புனிற்றுப்புலம் துழைஇ ஆனாய்

இரும்புறம் தழூஉம் பெருந்தண் வாடை[10]

*என்ற பாடல் விளக்குகிறது.*

**5.4.3. வாட்டும் மாலைப் பொழுது**

*களவு வாழ்வில் வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீண்டு வராத காலத்து மாலைப் பொழுது ஆனது பெரும் துன்பத்தை அளிக்க கூடியது. இதனைத் தலைவியானவள் தனிமைத் துயரில் இருந்து கொண்டு மாலைப் பொழுதிடம் கூறுவதாக ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்று கூறுகிறது.*

கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்

குறும்பொறை நாடன் நல் வயலூரன்

தன் கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற்

கடும்பகல் வருதி கையறு மாலை

கொடுங்கழி நெய்தலும் கூம்பக்

காலை வரினும் களை ஞரோ இலரே[11]

*பிரிந்தோர் வருந்துவதற்குக் காரணமாக வந்த மாலைப் பொழுதை நோக்கித் தலைவி, தலைவன் தன்னைப் பிரிந்துள்ளான் என்பதால் முன்பினுங் காட்டில் கடுமையுடன் உச்சிப் போதிலும் வெம்மை காட்டியபடி வருகின்றதாகவும் வளைந்த கழியிடத்தில் உள்ள நெய்தல் மலர்களும் மாலையிலே இதழ் குவிந்து ஒடுங்கிக் காலையிலே மலர்வது போல் அழகுடன் வந்தாலும் தன் துயரத்தைக் களைகின்ற தலைவன் தன்னருகில் இல்லையே என்கிறாள். இங்கு மாலைப் பொழுது இவளின் பிரிவின் பின்னணியாக உள்ளது. பிரிந்த காதலர்களுக்கு மாலைப்பொழுது வருத்தத்தைத் தருவதாக அமைந்து வருதலை, புலவர் கூறுகையில் தவறாது கதிரவன் தன் கடமையைச் செய்கிறான். காலையில்*

தோன்றி மாலையில் மறையும் தன் வேலையைச் சரியாகச் செய்யும் போது தலைவன் தான் குறித்த பருவத்தில் சரியாக வரவில்லையே ஏன் என்று தன் நெஞ்சிடமும், மாலைப்பொழுதிடமும் வருந்திக் கூறுகிறாள்.

### 5.4.4. எள்ளி நகையாடும் மலர்

முல்லை நிலத்திலே இயல்பாக நடக்கும் சில செயல்களைத் தலைவி தன் மீது ஏற்படும் துயரமாக எண்ணிப் பாடல்கள் அமையப் பெறுகின்றன. ஆனால் வினை மேற்கொண்ட தலைவன் வினை முடிந்து திரும்புகையில் முல்லைப்பூ அழகாக மலர்ந்து இருப்பதைக் கண்டு தலைவன் உரைப்பதை,

**கார்புறந்தந்த நீருடை வியன் புலத்துப்**
**பல்ஆ புகுதரூஉம் புல்லென் மாலை**
**முல்லை! வாழியோ, முல்லை! – நீநின்**
**சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை**
**நகுவை போலக் காட்டல்**
**தருமோ மற்று – இது தமியோர் மாட்டே?**[12]

தலைவன் கூறும் போது, முல்லைப் பூவை வாழ்த்தி, மேகத்தாற் பாதுகாக்கப்பட்ட நீர் வளத்தை உடைய அகன்ற முல்லை நிலத்தில் மேயச் சென்ற பல ஆடுமாடுகள் தத்தம் குடில்களை நோக்கிச் சென்று பட்டியில் அடைந்தன. இப்படிப்பட்ட ஒளியிழந்த மாலைக் காலத்தில் நீயும் நின்னுடைய சிறுத்த வெள்ளரும்புகளைத் தோன்றச் செய்திருப்பது புன்னகைப் பூப்பது போல் உள்ளது. காதல் துணையானவரைப் பிரிந்து தனித்திருக்கும் என் தலைவியிடம் நீ செய்யும் செயல் எள்ளி நகைப்பாய் போல காட்சியை வெளிப்படுத்துகிறாய் இது உனக்குரிய செயல் ஆகுமோ? என்று கூறுகிறான் தலைவன். பொதுவாக மலர்கின்ற மலர்கள் தலைவன், தலைவி ஒன்றிணைந்து இன்புறும் காட்சியைப் புலப்படுத்தும், ஆனால் நீயோ என்னை விட்டுத் தனித்திருக்கும் என் தலைவியைப் பார்த்துப் புன்னகைப்பது என்ற நிலை இங்குப் புலவனால் எடுத்தாளப்படுகிறது.

### 5.4.5. இடிக்குரல் – பிரிவுத் துன்பம்

மேகம், காற்று, மழை போன்ற இயற்கை சக்திகள் இப்பகுதியில் எடுத்தாளப்படுகின்றன. தலைவன் குறித்த பருவத்தில் கூறியபடி வராததால் நெய்தல் நிலத் தலைவி இடியின் மூலமாகத் தன் ஆற்றாமையைப் புலப்படுத்துவதைப் புலவர் கூறுகிறார். கார்காலம் என்பது பிரிந்த தலைவன் தலைவியரை வருத்தம் செய்யும் தன்மையுடையது. இச்சூழலில் பிடவ மலர்கள் மலர்கின்றன. இம்மலர்களில் வண்டுகள் ரீங்காரமிட்டு அமர்ந்து தேனைப் பருகுகின்றன. இத்தகைய கார்காலத்தில் மின்னல் மின்னி இடியை ஏற்படுத்துகின்றது. கார்கால மேகமே சான்றோர்கள் போல் நீ இல்லாது ஏன் என்னை வருத்துகிறாய் என்ற கேள்வியைத் தலைவி கேட்கின்றாள். இது பிரிந்த தலைவனை நினைந்து இல்லின்கண் பின்னணியில் தன்னைத் தழுவும் தலைவனும் இல்லை என்ற ஏக்கம் பெரு மூச்சாகப் புலவன் சித்திரிக்கப்படுகிறான். தனிமை துயரம், கார்காலத்தின் தன்மை, குளிரை ஏற்படுத்துகின்ற மேகம், மழை பொழிந்த சூழல், இத்தகைய சூழலை நினைந்து ஏங்கும் தலைவி சான்றோர் பிறரை வருந்தமாட்டார்கள் ஆனால் சான்றோர்க்கு இணையான மேகம் தன்னை வருத்துவதைக் கூறித் தலைவனின் பிரிவால் வருந்துகிறாள். இவ்வாறு மன ரீதியான உளவியலைப் புலவர் எடுத்துக் கூறுகிறார். இதை நற்றிணை,

> ………………. நண்ணிய
> பருவஞ் செய்த கருவி மாமழை!
> "அவர் நிலை யறிமோ ஈங்கென" வருதல்
> சான்றோர்ப் புரைவதோ அன்றே – மான்றுடன்
> உரவுரும் உரறும் நீரின் பரந்த
> பாம்புபை மழுங்கல் அன்றியும் மாண்ட
> கனியா நெஞ்சத் தானும்
> இனிய வல்ல நின் இடி நவில் குரலே ……[13]

கூறுகிறது.

**5.4.6. வாடை தரும் வருத்த மிகுதி**

வாடை காற்றினால் ஏற்படும் துன்பம் கூறிக் குறையாது. அது, இங்குத் தலைவியோடு களவுறவிலே சில காலம் திளைத்து அவளை வரைந்து கொள்ளக் கருதியபோது வினை காரணமாக வேற்றுநாடு செல்ல வேண்டியவனானான் தலைவன். அவன் வினை முடிந்து மீண்டு வரும் போது வாடைக்காற்று வீசக் கண்டு அதனை விளித்து இவ்வாறு கூறுகின்றான்.

**ஓம்புமதி வாழியோ – வாடை! பாம்பின்**

**தூங்குதோல் கடுக்கும் தூவெள் அருவிக்**

**கல் உயர் நண்ணி யதுவே – நெல்லி**

**மரையினம் ..................**[14]

இப்பாடலில் தலைவி தலைவனது பிரிவால் வருந்தி இருக்கின்றாள். வேற்று நாடு சென்ற தலைவன் மீண்டும் வரும்போது வீசுகின்ற வாடைக் காற்றை நோக்கி, நீ அவளை வருத்தாமல் பாதுகாப்பாயாக என்ற கருத்தானது வருத்தத்தை ஆற்றாமல் தலைவி நலிவடைவாள். எனவே தொடர்ந்து அவளை வருத்தாதே என்பதாம். தலைவன் தலைவி பிரிவு மாயேண்டன் பாடலில் இவ்வாறு பின்னணியாகச் சுட்டப்பட்டுள்ளது.

**5.5. பிரிவில் பறவைகள்**

பிரிதல் கொடுமையானது என்பதைப் புலவர்கள் பறவை போன்ற பிரியா செயல்கள் மூலம் அறிவுறுத்தியுள்ளனர். உயிர்களின் பறவைகளின் அன்பு வாழ்க்கையினை

**மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத்**

**துணை புணர் அன்றில்**[15]

என்ற பாடல்களில் ஒரு புலவன் சுட்டுகிறான். அன்றில் பறவைகள் ஆணைவிட்டுப் பெண்ணோ பெண்ணை விட்டு ஆணோ பிரிந்தால் அப்பறவைகள் பிரிவாற்றாது மிக வருந்தும். பிரிந்து சென்ற ஆண் அன்றில்

*சிறிது காலம் தாழ்த்தாலும் பெண் அன்றில் மூன்று முறை உரத்த குரலில் கூவிப் பார்த்து விட்டு உயிரையே விட்டு விடும் என்பார். இவை போலப் பல அன்பின் காட்சிகளும் புலவர்களால் கூறப்பட்டு உள்ளன.*

**.................. பெண்ணைத் தோடு மடலேறி**

**கொடுவாய்ப் பேடைக் குடம்பைச் சேரிய**

**உயிர் செலக் கடைஇப் புணர் துணைப்**

**பயிர்தல் ஆனா பைதலங் குருகே[16]**

*என்ற அடிகளில் அன்றில் வளைந்த வாயினையுடைய தென்பது, ஆண் அன்றில் தன் புணர் துணையாகிய பெண் அன்றில் பிரிந்து காலந் தாழ்த்தியமையால் தன் கூட்டிலிருந்து வெளிவந்து பனைமரத்தின் உயர்ந்த மடல் மேல் ஏறியிருந்து பெண் அன்றில் தன் கூட்டினை அடையும் வண்ணம் உயிரே போகுமளவிற்கு உரத்த குரலை எழுப்பி ஆண் அன்றிலை அழைக்கும்.*

**மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்**

**துணையொன்று பிரியினும் துஞ்சா காண்எண[17]**

*எனத் தலைவி வருந்தும் நிலையைத் தோழி புலப்படுத்துகிறாள். இதனால் துணை ஒன்று பிரிந்தாலும் தூங்காது அழைக்கின்ற அன்றிலின் துன்பக் குரல் தலைவனைப் பிரிந்த தலைவிக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கும் என்பது புலப்படுகின்றது. நாள்தோறும் இரவில் அகவும் அன்றில் ஒருநாள் இரவு அகவாது இருக்கக்கண்ட தோழி தலைவனைப் பிரிந்த தலைவி பெரிதும் வருந்துவாள் என்ற எண்ணத்தால் தான் அந்த அன்றில் இரவில் அகவவில்லை என்று கற்பனைத் திறம் தோன்ற தற்குறிப்பேற்றமாகக் கூறியுள்ள தன்மை சுவை மிக்கதாக உள்ளது.*

**தன்றுணை யில்லாள் வருந்தினாள் கொல்லென**

**இன்றுணை யன்றில் இரவின் அகவாகவே[18]**

என்ற இப்பாடலிலும், இதே போன்று கருத்துடைய மன்றத்திலுள்ள பனை மடலில் இருந்து ஒரு அன்றிற் பறவை அகவுவது கேட்டு வருந்திய தலைவி ஒருத்தி அவ்வன்றிலையே வினவுகின்றாள்.

**மன்றிரும் பெண்ணை மடல்சேர் அன்றில்**

**நன்றுஅறை கொன்றனர் அவரெனக் கலங்கிய**

**என்றுயர் அறிந்தனை நரறியோ? எம்போல**

**இன்றுணைப் பிரிந்தாரை யுடையையோ நீ**[19]

என்பது அவள் வினா. மன்றத்தில் உள்ள கரிய பனை மரத்தின் மடலிலிருக்கும் அன்றிலே! என் தலைவர் யான் செய்த நன்றியை அடியோடு மறந்தாரே என்று கலங்கிய என்னுடைய துயரை அறிந்து அத்துயரின் பொருட்டு நீ கூவுகின்றயோ? என்கின்றாள். இந்த இரண்டு வினாவில் பின்னையது தான் உண்மை என்பதை உய்த்து உணரலாம். பிரிந்த வழி இரங்கிக் கூவுதலே அன்றிலின் இயல்பு என்பதை அறியலாம். ஆண் அன்றிலின் தலையில் சிவந்த கொண்டையிருக்கும் என்பதும் பெண் அன்றிலின் வாய் இறாமீன் போல வளைந்திருக்கும் என்பதை,

**நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்**

**இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையோடு**

**...................... நரலும்**[20]

இப்பாடல் அடிகளால் அறியலாம்.

### 5.5.1. அணில்

தலைவன் பிரிந்த பொழுது தனித்து வருந்திப் பொலிவிழந்திருப்பதற்கு உவமையாக அணிலாடு முன்றிலைத் தலைவி கூறியதாக ஒரு புலவர் கூற அவ்வுவமை நலத்தையுணர்ந்த புலவர்கள், அப்புலவர்க்கு அத்தொடரையே பெயராக அமைத்து மகிழ்ந்துள்ளார்கள்.

மக்கள் போகிய அணிலாடு முன்றில்

புலப்பில் போலப் புலலென்

றலப்பெண் தோழி அவர அகன்ற ஞான்றே[21]

என்ற அடிகள் இதனை உறுதி செய்கின்றன. இவ்வாறு பாடிய புலவர் பெற்ற பெயர் அணிலாடு முன்றிலார் என்பதேயாகும். மக்கள் யாவரும் வாழாது போகிய தனிமை வீட்டில் அச்சம் இன்றி அணில் விளையாடும் அன்றே; எனவே மக்கள் வாழாத பொலிவிழந்த வீட்டிற்கு அணில் ஆடுதலைச் சிறந்த அடையாகக் கூறுகிறார். யாரும் இல்லாத வீட்டில் அணில் மகிழ்ச்சியுடன் ஆடி, ஓடி கொண்டிருக்கும். அதை விரட்டுவதற்கோ, வீட்டை விட்டு வெளியேறச் செய்வதற்கு அறியா ஒருவரும் இருக்க மாட்டார்கள். ஆனால், எதிர்மறை நிலையில் யாரும் இல்லாத வீட்டில் தன்னுடன் தலைவன் இல்லையே என்று தலைவி ஏங்குதல், அவளது பொலிவிழந்த தன்மை ஆகியவனற்றிற்கு உவமையாகக் காட்டப்படுகிறது.

**5.5.2. பல்லி கூறியது (பல்லி கூறுமோ?)**

வினை முற்றியதைப் பல்லி அறிவிக்குமோ என நெஞ்சுக்குக் கூறுவது.

முன்னியது முடித்தனம் ஆயின் நன்னுதல்

...................... பெரு நகரானே[22]

தலைவன் தலைவியை விட்டு வினைவயிற் பிரிந்து சென்றபோது, எப்பொழுது வருவீர் எனத் தலைவி வினவினாள். தான் சென்று நினைத்ததை முடித்த அன்றே திரும்பி வருவதாகத் தலைவன் கூறியவுடன் அவள் பெரிதும் துன்புற்றாள். தலைவன் சென்ற வழியானது சிறுகற்கள் நிறைந்த பாலை நிலத்தில் கிச்சிலிப் பறவையின் தலையைப் போலக் கள்ளிகள் வளர்ந்துள்ளன. அவற்றின் மேலே படர்ந்த முல்லையில் மலர்கள் பூத்துள்ளன. ஆடும் தலையை உடைய ஆட்டு மந்தையை மேய்க்கச் செல்லும் வலிய கையுடைய இடையின் இரவில் முல்லை மலரையும் பனங்குருத்தின் நறுக்குகளையும் சேர்த்துக் கட்டிய மாலையை அணிந்து தலைவனின் மாலையின் நறுமணம் தெருவெங்கும் கமழ்கிறது.

மாலைப்பொழுதில் சிறுகுடிகள் நிறைந்த பக்கத்திலுள்ள பெரும் மாளிகைச் சுவரில் இருக்கும் பல்லி அப்போது கத்தியது. உடனே ஒரு வேளை தன் வருகையைத் தலைவிக்கு அறிவிப்பதாகக் கத்துகிறதோ என எண்ணினான். பல்லி கத்தும் சகுனம் இதனால் விளங்குகிறது. பழங்காலந்தொட்டு இன்று வரை பல்லியின் கத்தும் ஓசை இறைவனின் வாக்காக மதிக்கப்படுகிறது. தன்னைக் காண வேண்டும் என்று தலைவன் வந்து கொண்டு இருக்கிறான் என்பதைப் பல்லி தனது சத்தத்தின் மூலம் அறிவிக்கிறது என அவள் நினைப்பது அவரது இறை நம்பிக்கையைக் காட்டுவதாக அமைகிறது.

**5.6. இல்லத்தில் பல்லி கூறியது**

வினைவயின் காரணமாகப் பிரிந்து சென்ற தலைவன் வீட்டிற்கு விரைந்து வருவான் என்பதைத் தோழி தலைவிக்குச் சொல்லுகின்றாள். அவள் சொல்லுதற்குக் காரணமாக மனையிடத்துப் பல்லி நல்ல இடத்தில் சொல்லியதையும், தனது இடது கண் துடித்ததையும் கூறுகின்றாள். இந்நிகழ்ச்சியைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ,

இணை நலமுடைய கானஞ் சென்றோர்

புணை நலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்

பல்லியும் பாங்கொத் திசைத்தன

நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே[23]

என்ற பாடல் வழி விளக்குகிறார். சில வீடுகளில் இன்ன இடங்களில் பல்லி சொன்னால் இன்ன இன்ன பலன் உண்டாகும் என்பதை வழி வழியாக அறிந்து கூறுவது உண்டு. அம்முறையே விருந்தினர் வருகையையுணர்த்தும் இடத்தில் பல்லி கத்தியது. எனவே பல்லியும் பாங்கொத்திசைத்தன்ன என்றாள். தலைவியைப் பிரிந்து செல்லும் ஒரு தலைவன் இல்லத்தில் இருக்கும் மனைவியை நினைந்து நெஞ்சிற்குச் சொல்கின்றவன் மாலைக் காலத்தில் பல்லி சொல்லுந்தோறும் அதனை எண்ணி நல்ல வாக்கு காலத்தில் ஏற்படும் துன்பத்தோடு தலைவி போராடிக் கொண்டு இருப்பாளோ என்ற கருத்தமைய,

பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி

நல்ல கூறென நடுங்கி

புல்லென மாலையொடு பொரும்கொல்தானே[24]

*எனக் கூறுகின்றதாக எயினந்தை மகன் இளங்கீரனார் கூறுகின்றார். இதனால் பல்லியின் வாய் பிளந்தாற் போன்று இருக்கும் என்பதும் அறியலாகிறது. நல்லகூறு எனக் கேட்பதுண்டு என்பதும் அறியலாம். மற்றொரு பாடலில் வினைமுற்றி மனைக்குத் திரும்பும் தலைவன் தலைவியின் நிலையை மனக் கண்ணால் கண்டு,*

வருந்திதோட் பூசல் களையு மருந்தென

உள்ளுதொறு படூஉம் பல்லி

புள்ளுத் தொழுது உறைசெவி முதலானே?[25]

*என்று கூறுகின்றான். தலைவி தன்னை நினைக்குந் தோறும் பிரிவால் வருந்திய அவள் தோளின் துன்பத்தை நீக்கும் மருந்தாகவும் தன் வரவைச் சொல்லும் பல்லி நிமித்தத்தைத் தொழுது கொண்டு தங்கியிருப்பவள் என்பது பொருள். வரவையறிவிக்கும் இடத்தில் பல்லி சொல்லுவதால் தலைவர் வருவார் என்பதை அறிதலின் வருந்துவோம் பூசல்களையும் மறந்து என்று அப்பல்லியின் சொல்லைச் சிறப்பித்தார்.*

### 5.7. இயற்கையிடம் புலம்பும் தலைவி

*முல்லை நிலத்தில் மாறன் வழுதி பாடிய பாடலில் தலைவன் குறித்த காலத்தில் வராமையால் வருந்தும் தலைவி புலம்பி இயற்கையிடம்,*

அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா

எவ்வ நெஞ்சத்து எஃகு எறிந் தாங்கும்

பிரிவில் புலம்பி நுவலும் குயிலினும்

……………….. பைங்குருக் கத்தியொடு

பித்திகை விரவுமலர் கொள்ளீரோ? என

வண்டு சூழ் வட்டியுள் ………. [26]

இப்பாடலில் தோழியிடம் தலைவி மிகவும் வருந்திக் கூறியதாக அமைந்ததில், மார்பில் நெடுங்காலமாகப் பாய்ச்சியது போலத் தனித்திருக்கும் அவளை அருகேயிருந்து வருந்திக் கூவும் குயில் மேலும் துன்புறுத்துகிறது. தெளிந்த நீரோடு பெருக்கெடுத்து ஓடிவரும் ஆறும் கூட அவளைக் கொடுமை படுத்துகிறது. அழகுடைய பஞ்சு போன்ற புற இதழையுடைய குருக்கத்தி மலருடன் கலந்து கட்டிய சண்பகமலர் பூவையும் விலைக்கு விற்று வருகிறாள். உழவர் குலப்பெண். அவள் பூக்கூடையில் வண்டுகள் வட்டமிடுகின்றன. தெருவில் பூ விற்றுத் திரியும் அவளும் தனக்குக் கொடுமை செய்ததாக ஒரு கருத்தைப் புலவன் தெரிவிக்கின்றான். இப்பாடல் ஆறும் குயிலும் இணைந்து தலைவியைத் துன்புறுத்துவதாக அமைகிறது. தலைவி, தலைவனின் பிரிவால் வாடிய நிலையில் துயருற்று இருக்கிறாள். தலைவனின் நீண்ட நெடிய பிரிவு அவளை வருத்திக் கொண்டிருக்கும் போது குயில் கத்தியது, குயில் கத்திய தொனி தலைவனைப் பிரிந்த சோகத்தில் இருந்த தலைவிக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் இருந்தது. குயிலுக்குத் தன் துணை உண்டு. ஆனால் தனக்குத் தலைவன் இல்லையே என்ற வருத்தம் ஏற்பட்டது. இவ்வாறு பிரிவின் பின்புலமாகத் தலைவிக்குக் குயிலின் ஓசை இருந்தாகத் அறிய முடிகிறது. குயில் மட்டுமின்றி குருக்கத்தி பூ, ஆறு, பூ விற்று வரும் ஒரு பெண் போன்ற காட்சிகளும் பிரிவின் பின்புலமாகக் காட்சிப்படுத்தப்படுகிறது.

### 5.8. பசுவின் துயரம் – தனிமை

மீளிப்பெரும்பதுமனார் என்னும் புலவர் பாலை நிலத்தில் பிரிவில் இருக்கும் தலைவி கூறிய கூற்றில்,

"ஒன்றுதும்" என்ற தொன்றுபடு நட்பின்
காதலர் அகன்றெனக் கலங்கிப் பேதுற்று
அன்ன வோஇந் நன்னுதல்? நிலை என,
................ இம்மென
இரைக்கம் வாடை இருள் கூர் பொழுதில்

துளியுடைத் தொழுவின் துணிதல் அற்றத்து,

உச்சிக் கட்டிய கூழை அவின்

.................. பகல்மடி பொழுதே![27]

*இதில் கூற்றாக, பழமையான நட்பையுடைய நம் காதலர் உன்னைப் பிரியாமல் எப்போதும் சேர்ந்திருப்பேன் என்று கூறிப் பிரிந்து விட்டார். அதனால் கலங்கும் மயங்கிய நல்ல நெற்றியை உடைய இவளின் நிலைமை என்னவாகுமோ என வினவுகின்ற அணிகளை அணிந்தவளே யான் கூறுவதைக் கேட்பாயாக என்று கூறி, வாடைக் காற்றும் பிரிவும் தலைவியின் தனிமைத்துயரைப் புலப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது. பிரிந்த காதலர்கள் வருந்த வாடைக் காற்று வீசுகின்றது. வாடைக்காற்று ஏற்கனவே தலைவிக்குச் சோகத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. பசுவானது கட்டப்பட வேண்டிய இடத்தில் கட்டப்படாமலும், அது அமர வேண்டிய இடத்தில் அமராமலும் அலைகழிக்கப்படுகிறது. அதாவது தலைவியைத் தலைவன் நினைந்து நிலை கொள்ளாமல் தடுமாறி உள்ள சூழல் இப்பாடல் வழி விளக்கப்படுகிறது. தன் தலைவன் அருகில் இல்லாததால் மனம் அலைக்கழிக்கப்படுவதாக உரைக்கும் தலைவியின் கூற்றில் இருந்து பிரிவின் பின்புலமாகப் பசுவும் காற்றும் இப்பாடலில் குறிப்பிடப்படுகிறது.*

**5.9. அழைப்பொலி – பல்லி**

*பெருங்கடுங்கோ பாலை பாடல் ஒன்றில் பிரிந்த தலைமகனை எண்ணி ஆற்றாத தலைவியைக் கண்டு தோழி கூறும் விதமாக அமையும் பின்வரும் பாடலில்,*

உள்ளார் கொல்லோ – தோழி! கள்வர்

பொன்புனை பகழி செப்பம் கொண்மார்,

உகர்நுதி புரட்டும் ஓசை போலச்

செங்காற் பல்லி தன் துணை பயிரும்

அங்காற் கள்ளி அம்காடு இறந்தோரே[28]

காட்டைக் கடந்து செல்லும் கள்வர்கள் தங்கள் நகங்களால் வில்லில் உள்ள அம்பின் நுனியை நெருடி பார்க்கிறார்கள். அப்போது எழும் ஓசைபோல் ஆண் பல்லி கத்திக்கொண்டு தன் பெண் பல்லியை நோக்கி ஓடியது. இதைப் பார்த்த தலைவனும் தன் தலைவியை அடைய வேண்டும் என்ற நோக்கோடு விரைந்து வருவான் என்பது இதன் பொருளாகும். சுருங்கக்கூறின் பிரிந்து சென்ற தலைவன் அன்பின் மிகுதியால் எழுகின்ற போது தலைவியும் வரவேற்பாள் என்பது இப்பாடலின் மறுதலை. இவ்வாறு இக்கருத்தை உள்வாங்கிய தோழி தலைவியை ஆற்றுப்படுத்தினாள். அவ்வாறு பல்லியின் ஓசை தலைவன் தலைவியை வாழ்வில் உளவியல் பூர்வமாக அவர்கள் தம் அன்பை வெளிப்படுத்துவதாக அறியமுடிகிறது.

### 5.10. செலவழுங்குதல் – தலைவி அழகு

செலவழுங்கும் பாடல்களுள் பின்புல உத்திகளில் தலைவியின் அழகு நன்றாக விளங்குகிறது. தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறிய பாடல்கள் பின்புலங்களுள் ஒன்றாக அமைவது இயற்கை. தலைவன் பொருள் தேடப் பிரிய நேர்கையில் தலைவியின் அழகை எண்ணிப் பார்க்கின்றான். மேலும் பொருள் தேடச் செல்லும் இடத்தில் உண்ணும் உணவைக் காட்டிலும் தலைவயின் அழகையே அதிகம் ரசித்து அவ்வழகையே அமுதமாக விளங்குகின்றது எனத் தன் நெஞ்சிற்குச் கூறித் தனது பயணத்தைத் தடுக்க எண்ணினான். இக்கருத்தை,

**மருந்து எனின் மருந்தே வைப்புஎனின் வைப்பே**

**அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இள முலை**

**பெருந்தோள் நுணுகிய நுசுப்பின்,**

**கல்கெழு கானவர் நல்குறு மகளே**[29]

என்ற பாடல்வழி உணரமுடிகிறது. அதோடு அமையாது தலைவியைத் தான் பிரிவதால் அவனது அழகு கெட்டுப் பசலை பாய்ந்து ஒரு வேளை அவள் இறக்கவும் கூடும் என்பதை நினைந்து தனது பயணத்தைப் தடுத்தலும் உண்டு.

இதை,

மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை

இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து

பெரும்பெயல் விடியல் ...........

................... பணைத்தோள்

மணத்தலும் தணத்தலும் இலமே;

பிரியின் வாழ்தல் அதனினும் இலமே![30]

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. தலைவியின் ஆற்றாமையை நினைத்து நினைத்து உள்ளம் உருகுதல் போன்ற பல செயல்களைத் தலைவன் பல்வேறு சூழல்களில் சிந்திக்கும்போது அவ்வுணர்வுகள் அவனைச் செயலிழக்க வைக்கின்றன. மேலும் கண்களுக்கும் அவள் அழகிற்கும், வாழ்கின்ற வாழ்வின் தனிமைக்கும், இடையூறு ஏற்படும் என எண்ணியும் தலைவன் செலவழுங்குவிக்கிறான்.

### 5.10.1. பொருள் தேட நினைத்த நெஞ்சை அடக்கி – செலவழுங்குதல்

தலைவியைப் பிரிவதால் தலைவிக்கு ஏற்படும் நிலையை எண்ணிச் செலவழுங்குவித்தாலும், செலவழுங்குவித்தலுக்குப் பிறிதொரு காரணமும் உண்டு என்பதையும் புலவர்கள் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். பொருளார்வத்தின் காரணமாகத் தலைவியைப் பிரிதல் என்ற நிலை வரும் போது பொருளைக் காட்டிலும் தலைவியுடன் இணைந்து வாழ்தல் என்பதே அச்செய்தியாகும்.

மணிவார்ந் தன்ன மார்க்கொடி அறுகைப்

பிணங்கு அரில் மென்கொம்பு பிணையொடு மாந்தி

மான்ஏறு உகளும் கானம் ............

......................... ஆனா,

தேர்விலங் கினவால் தெரிவை கண்ணே[31]

என இப்பாடலில் விளக்கம் தந்து செலவழுங்கிய நிலை உணர்த்தப்பட்டது. மற்றொரு பாடலில் தலைவன் தன் நெஞ்சை,

புணரின் புணராது பொருளே, பொருள்வயிற்

பிரியின் புணராது புணர்வே ஆயிடைச்...[32]

என்ற பாடலில் தலைவன் தன் நெஞ்சைவுணர்த்தி தான், இல்லத்தில் தங்கித் தலைவியோடு இன்பம் நுகரின் தான் தேட நினைக்கும் பொருளை அடைய முடியாது. பொருளைத் தேடிச் செல்ல நினைத்தால் தலைவியுடன் புணர்ந்து மகிழும் இன்பம் கிட்டாது. ஆகவே பொருள் தேடச் செல்லுதல் (அ)செல்லாதிருத்தல் இவ்விரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து நல்லதையே செய்ய நினைக்குமாறு தன் நெஞ்சிற்குக் கூறினான் தலைவன். வாடாத பூக்கள் நிறைந்த குளத்தில் உள்ள மீன் புதுநீர் வரத்தொடு ஓடிச் சென்று கெடுவது போலத் தேடிய பொருளும் தொலைந்து போதலைக் காண்கின்ற தன் நெஞ்சிடத்தில் சூழ்ந்த பரந்த நிலத்தையே அளக்கும் மரக்கலமாகக் கொண்டு ஏழு மரக்கால் வரையில் அளக்கத்தக்க பெரும் பொருளே கிடைத்தாலும் அது தனக்கு வேண்டாம் எனக் கூறி, கனங்குழை அணிந்துவரும் செவ்வரி படர்ந்த குளிர்ந்த கண்களைக் கொண்டு இனிய நோக்கை பெற்ற தலைவியை நான் வென்றேன் என்று கூறி தன் நெஞ்சிடம் உன்னோடு பொருள் தேட வரமுடியாது. அப்பொருள் எப்படிப்பட்டதாயினும் அது போற்றுவாரிடம் வாழட்டும் எனக் கூறிச் செலவழுங்கினான். தனது நெஞ்சை அடக்கிப் பொருள் தேடும் முயற்சியைக் கைவிட்டு, அடங்காத நெஞ்சே, நீயே சென்று பொருள் தேடுக என்று விரட்டிய நிலையிலும் செலவழுங்குவிக்கும் தலைவனைச் காட்டுகிறார் புலவர்.

### 5.10.2. தலைவியின் மரணத்திற்கு அஞ்சி – செலவழுங்குதல்

அளி நிலை பொறாஅது அமரிய முகத்தள்

விளி நிலை கொள்ளாள், தமியிள், மென்மெல

நலம் மிகு சேவடி நிலம் வடுக்கொளாஅ,

குறுக வந்து, தன் கூர் எயிறு தோன்ற
வறிது அகத்து எழுந்த வாய்அல் முறுவலள்,
கண்ணியது உணரா அளவை ஒண்ணுதல்
.............................................
கண்டே கடிந்தனம் செலவே -ஒண்டொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும் நாம் எனினே![33]

இவ்வாறு தலைவன், தலைவியின் சோகத்தையும் கண்ணீரையும் தான் சென்றால் அதன் பின்விளைவுகளையும் நினைத்து தலைவியின் உளவியலுக்கு முதலிடம் கொடுத்து தன் மனத்தை மாற்றிக் கொண்டு பொருள் தேடுவதைத் தவிர்த்து, தலைவியுடன் வாழ எண்ணியதாகப் பாலைப் பாடிய பெருங்கடுங்கோ விவரிக்கிறார்.

### 5.10.3. பிரிதலுக்குச் சம்மதித்தல்

தலைவன், தலைவி பிரிவு என்பது இலக்கியங்களில் வருந்தத்தக்கச் செய்தியாகவே காணப்படுகிறது. ஆனாலும் பிரிதலுக்கு ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளுதல் என்ற நிலை சங்க இலக்கியங்களில் ஒரு சில இடங்களில் காணக் கிடக்கின்றது. பாலைத் திணையில் பெருந்தலைச் சாத்தனார் பாடிய ஒரு பாடல் இதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. வரலாற்றுப் புகழ் பெற்ற பண்ணி என்ற மன்னன் செய்த வேள்வியின் நிகழ்ச்சியில் இக்கருத்தைச் சாத்தனார் அகத்தில் ஏற்றி தோழி வாயிலாகப் பிரிதல் என்ற கொடுமைக்குச் சம்மதித்தல் என்ற நிலையொடு பொருத்திக் காட்ட விழைகிறார்.

தோழி தலைவனிடத்தில் அவன் ஈட்டும் பொருள் பண்ணி என்பவன் நிகழ்த்திய வேள்வியைவிட மிகு பயன் அளிப்பதாய் இருப்பினும், தலைவியைப் பிரிந்து வாழ்தல் அறமன்று என்று அறிவுறுத்தினாள். ஒரு வேளை அதை எண்ணாது தலைவன் பிரிந்தால் தலைவிக்கு அது வருத்தம் தான். ஆனால் மேற்கொண்ட வினை, இதைக் காட்டிலும் பயன் அளிப்பதாய் இருப்பின்

அதை நோக்கிச் செல்லும்படியும் வேண்டிநின்றது, செலவழுங்குவித்தலை மறை முகமாக உணர்த்தியதற்கு ஈடாகும்.

### 5.10.4. தலைவி நெஞ்சழிதலால் செலவழுங்குவித்தல்

இல்லறம் இனிதாக அமைய இன்றியமையாத பொருள் தேடச் செல்லுவதாயின், தலைவனைச் செல்க எனக் கூறி அங்கு உனக்குத் துன்ப மில்லாமல் இருக்கட்டும் எனத் தோழி தலைவனின் பயணத்திற்கு இசைந்தாள். அதாவது பொருள் தேடப் பிரிந்து தலைவன் துன்பப்படுகின்ற போது தலைவி,அவனது பிரிவால் மேலும் துன்பப்பட்டு இறந்து படுவாள் என்பது பொருளாகும். இதனால் தலைவன் இத்துன்பத்தை எண்ணித் தலைவியைப் பிரியான். இக்கருத்தைப் பின்வரும் பாடல்,

**வள்வாய் அம்பின், கோடைப் பொருநன்**

**பண்ணி தைஇய பயம்கெழு வேள்வியின்,**

**விழுமிது நிகழ்வது ஆயினும்..........**

**சாயல் இன்துணை இவட் பிரிந்து உறையின்,**

**நோய் இன்றாக செய்பொருள்! ............**

**................. வந்த பொழுது கொள் வாடை,**

**இலங்குபூங் கரும்பின் ஏர்கழை இருந்த**

**வெண்குருகு நரல, வீசும்**

**நுண்பல் துவலைய தண்பனி நாளே![34]**

என்ற பாடல் விளக்குகிறது.

தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லும் வழியில் இலைகள் வாடி இருந்தன. இது இளமையில் வறுமை உடையவனைப் போன்றது. மரங்கள் கெட்டுக் கிளை, இலை காய்ந்து கிடந்தன. பிறர்க்குக் கொடுக்காத செல்வத்தை வைத்திருந்தால் ஒழுக்கம் கெட்டுப் புகழ் அழிந்து யார்க்கும் பயனற்று போகும். செல்வந்தனும் முதுமையில் அழிவதைப் போல் மரங்கள் உதிர்ந்து

நிற்கின்றன. கொடிய அமைச்சனின் ஆலோசனைக் கேட்டு மன்னனின் நாட்டில் வாழும் மக்கள் அழிந்து கெடுவது போல் மரங்கள் அழிந்தன. அதுபோல உறங்கும் போது அவள் கையை நீக்கித் தலைவன் பிரிந்ததால் வருந்தி தலைவன் பிரிவு கண்டு ஒளி இழந்து தலைவியின் உயிர் பிரியும். பொருள்வயின் பிரிவில் மிக அழகு உடையவள் நெஞ்சழிந்து ஒளி இழப்பாள், இறப்பாள் என்பது கேட்டத் தலைவன் பிரிவதைக் கைவிட்டான்.

**5.10.5. பிரிய விரும்புபவர் அறிவற்றவர் என எண்ணியதால் செலவழுங்குதல்**

தலைவன் ஒருவன் தேடிப்பிரிந்து செல்வது அறிவு அற்றது என நெஞ்சுக்குக் கூறியதை,

> **அரவுக் கிளர்ந்தன்ன, விரவுறு பல்காழ்**
> **வீடுறு நுண்துகில் ஊடுவந்து இமைக்கும்**
> **திருந்திழை அல்குல் பெருந்தோட் குறுமகள்**
> **மணிஏர் ஐம்பால் மாசறக் கழி இக்**
> **கூதிர் ............................**
> **...................... வாடைக்குப் பிரிவோர்**
> **மடவர் வாழி, இவ் உலகத் தானே![35]**

இப்பாடலில், காலச்சூழலை நினைந்து தன்னையும் தன் செலவழுங்குவித்தலையும், தான் பயணம் மேற்கொள்ளுதலால் ஏற்படும் உளவியல் இழப்பையும் எண்ணித் தலைவன் செலவழுங்குவித்ததாகவும் பாடல்கள் உள்ளன. அதாவது வாடைக் குளிரில் குருவிகள் கூட தன் குடும்பத்தோடும் இருக்க வேண்டும் என எண்ணுகிறபோது தன் நெஞ்சு மட்டும் பிரிந்து பொருள் தேடக் கூறியதால், வாடைப் பருவத்தில் மனைவியைப் பிரியும் ஆடவன் இவ்வுலகில் அறியாமை உடையவனாக இருப்பான் எனக் கூறிப் பயணத்தைத் தவிர்த்தான். செலவழுங்குவித்தலில் தோழி பல நிலைகளைக் கூறிச் செலவழுங்குவித்தலும் உண்டு. அதில் பாலை நிலக் கொடுமையினைக் கூறுவதாக அமையும் பாடலில் தோழி, தலைவனிடம்

நீலமலர் போன்ற மையுண்ட தலைவியின் அழகு கெட நீர் வடிப்பதைக் கண்ட பின்னும் அவளைப் பிரிதல் தகுமோ? இது நல்லதல்ல. நீ பொருள் தேடச் செல்லும் வழியில் கவிந்த தலையையும், பருத்த மயிரையும் உடைய ஆண்கரடி இரவில் இரைதேடச் செல்லும் அங்கு, கறையான்கள் அமைந்த புற்றில் பாம்புகள் வாழ்கின்றன. அப்புற்றைத்தன் ஒடிந்த வாயை உடைய பெரும் நகங்களால் புற்றைப் பறிக்கக் கூடியது. நினைத்தற்கரிய இத்தகைய வழியில் நீ பயணம் செல்வதைக் கைவிடுவாயாக என்று பாலை நிலத்தின் கொடுமையைக் கூறி நீ பொருள் தேடாது தலைவியோடு தங்கியிரு எனக் கூறியதால் தலைவன் செலவழுங்குவித்தான். இதை,

**கவிதலை எண்கின் பரூஉமயிர் ஏற்றை**

**இரைதேர் வேட்கையின் இரவிற் போகி**

**................ புதுநலம் சிதைய**

**வீங்குநீர் வாரக் கண்டும்**

**தகுமோ பெரும்! தவிர்க நும் செலவே**[36]

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றது.

### 5.10.6. இருதலைக் கொள்ளி எனத் தலைவனின் நிலை செலவழுங்குதல்

தலைவி நல்ல அணிகளை அணிந்தவள் தலைவன் பொருள் தேட போவதாகச் சொன்ன சொல்லை விரும்பிக் கேட்டாள். கேட்டவள் அழுதாள். அதனை அறிந்த தலைவன் அவளைத் தேற்றினான். அதற்கு அவள் நாணி அருகில் வந்து தலைவன் செல்லும் இடத்திற்குக் செல்ல வேண்டாம் எனத் தடுக்கவும் இல்லை. ஆனால் பழுதடைந்த எந்திரம் போலத் தலைவன் மீது சாய்ந்தாள். அவளது சோகத்தையும் கண்ணீரையும் கண்டான். எனவே பொருள் தேட எண்ணிய அவன் நெஞ்சமும் அவளும் இரண்டறக் கலந்ததால் பொருள் வேலை விட்டு தலைவன் தலைவியைப் பிரியாது அவளோடு தங்கி விட்டான். இதைப் புலவன் தலைவனின் நிலையிலிருந்து.

பொறி அழி பாவையின் கலங்கி நெடிது நினைந்து
ஆகம் அடைதந் தோளே, அது கண்டு
ஈர்மண் செய்கை,நீர்படு பசுங்கலம்
பெருமழைப் பெயற் கேற் றாங்கு எம்
பொருள் மலி நெஞ்சம் புணர்ந்து உவந்தன்றே[37]

எனத் தன் நெஞ்சுக்கும் கூறிச் செலவழுங்குவினான் என்கிறார்.

செலவழுங்குதல் என்ற உத்தி என்ற நிலையில் எடுத்தாளப்படுள்ளது. தலைவியின் நிலை கண்ட தலைவன் செலவழுங்குதல் தோழி கூறக் கேட்டுச் செலவழுங்குதல், பாலை நிலத்தின் கொடுமையை எண்ணி மனம் மாறுதல் என்ற நிலைகளில் இத்தனை நிகழ்வுகள் ஏற்படுவதாக அகப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. மேலும் செலவழுங்குதல் என்ற உத்தி பெரும்பாலும் அன்பின் மிகுதியாலும் தலைவியின் கண்ணீரால் மட்டுமே நிகழ்வதாகக் கொள்ள முடிகிறது. தலைவியின் மகிழச்சிக்காகவும் தலைவியின் அழகில் மயங்கி வாழ்வதற்காகவும் செல்லும் வழியின் அருமை கருதியும் செலவழுங்குதல் ஏற்பட்டதற்கான சான்றுகளை அக இலக்கியங்களில் காணமுடிகிறது.

### 5.11. இடைச்சுரம்

சுரம் என்பதின் மற்றொரு பொருள் பாலைவனம் இதற்கு இடைக்களம் (அ) இடைச்சுரம் வேறு பெயர்களும் உண்டு. வினைமேற் செல்லும் தலைவன் (அ) பொருள்வயிற் பிரியும் தலைவன் தான் உறையும் இல்லத்தில் இருந்து பொருள் வயிற் பிரிந்து சேரும் இடம் வரையில் பல இன்மைகளை அவன் கடக்க நேரிடுகிறது. குறிப்பாக நீரில்லா கானகம், காய்ந்த ஓமை மரங்கள், சுடுமணல், கால்களைக் குத்திக் கிழிக்கும் கூர்கற்கள், வறண்ட தாவரங்கள் ஆகியவற்றைக் கடந்து சென்றபோது ஏற்படுகின்ற இன்னகல்களை நினைத்துப் புலம்புகின்ற இடம் இடைச்சுரம் என வழங்கப்படுகிறது. (அ) இடைக்களம் எனவும் வழங்கபெறும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### 5.11.1. இடைச்சுரம் – தேம்புரிப் பழங்கயிறு

இடைச்சுரத்தில் நிகழ்வுறும் தலைவனின் உள்ளப் போராட்டம் பற்றிய நுட்பமான உளவியல் தேம்புரிப் பழங்கயிற்றனாரின் பாடலில் இடம் பெற்றுள்ளது. தலைவியின் துன்பம் தீர்க்க ஊர் நோக்கித் திரும்பலாம் என்பது தலைவனின் உள்ளம் கூறுகிறது. ஆனால் வினை முடியாது திரும்பினால் பொருளிழப்பும் இழிவும் நேரும் என்பதால் அறிவு தடுத்தது. ஆனால் உள்ளம் காதல் உணர்வைச் சுட்டுகிறது. ஒருபுறம் காளை மறுபுறம் களிறு என்பது போல உவமைகளைப் புலவர் கையாள்வது நோக்கத்தக்கது. இது யானை இருபுறம் இருக்கப்பட்ட கயிறு போல உடம்பு வருத்துகிறது. இக்கருத்தை,

> ஒளிறேந்து மருப்பின்கயிறு மாறு பற்றிய
> தேம்புரியப் பழங்கயிறு போல
> வீவது கொல்லென் வருந்திய உடம்பே?[38]

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. பயணத்தின் முன்னேர தொடங்கிய மனப்போராட்டம் ஆதலால் உள்ளம் படும்பாடு பிரிவில் காட்டப்படுகிறது. புரிகள் முன்னரே நேய்ந்த கயிற்றை யானைகள் இழுப்பது போல நெஞ்சை இருவேறு விருப்பத்தின் ஆற்றங்கள் இருக்கின்றன என்ற கருத்தைப் புலவன் தலைவனின் கூற்றினால் உளவியல் போராட்டம் சித்திரிக்கப்படுகிறது.

### 5.11.2. இடைச்சுரம் – மனப்போராட்டம்

இடைச்சுரம் பாடல்கள் முக்கிய பங்கு பெறுகின்றன. இத்தகைய பாடல்கள் தலைவனின் மனம் போராடிய பின் தெளிவு நிலையை அடைந்து, வினையின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து, இடைக்களத்திற்கு வந்த பின்பு மீண்டும் தலைவன் உள்ளம் தலைவியிடம் செல்லத் தூண்டியது. இவ்வாறு ஒரு நிலையில் உறுதியுடன் நில்லாத தன் நெஞ்சிடம் தலைவன்,

> ஒன்று தெரிந்து உரைத்திசின்நெஞ்சே....
> ஆள்வினைக்கு அகல்வாம் எனினும்
> மீள்வாம் எனினும் நீ துணிந்ததுவே ...... [39]

எனச் சாடுகின்றான். வினைமுற்றுப் பெறாத நிலையில் தலைவனின் நெஞ்சம், தனது உள்ளம் நினைந்து இரங்கிக் கொண்டுள்ள தலைவியை நினைந்து ஒன்று அவள் துன்பம் நீக்குக என்கிறது. அறிவானது செய்வினை முடியாது செல்லுதல் இயலாத தன்மையுடன் இழிவையும் தரும் எனவும் கூறி மனது எண்ணியது. இவ்விரண்டிற்கும் இடையே தலைவனுடைய மனப்போரட்டம் இடைக்களத்தில் வளர்கிறது. தலைவியுடன் இருத்தல், தலைவியை விட்டுப் பிரிதல், பொருளா? தாரமா? என்ற கவலைகளில் தலைவன் துன்பம் வெளிப்படுகிறது.

### 5.11.3. இடைச்சுரத்தில் உயிர்களின் அன்புக்காட்சி

ஆணும், பெண்ணுமாய் உயிர்கள் அன்புடன் வலம் வருதல் பெண்ணை ஆண் பெரிதும் பேணுதல் தலைவனுக்குத் தலைவியை நினைவூட்டுகின்றன.

மென்புனிற்று அம்பிணவு பசித்தெனப் பைங்கண்

செந்நாய் ஏற்றைக் சேடில் தாக்க

பசியட வேட்டம் போகிய கணவன்

மாயா வேட்டம் போகிய கணவன்

பொய்யா மரபின் பிணவு நினைந்து குரல்கும்[40]

என்பது போன்ற காட்சிகள் தலைவியை இங்ஙனம் பேணாது அவள் தனித்துத் துன்புறும் வகையில் நீங்கிய நெஞ்சம் வலிமையை இழக்கத் தூண்டுகின்றன.

### 5.11.4. தலைவி நலன் அழிதல்

பிரிதல் தன் நலம் அழிந்த தலைவி வெம்மைமிக்க சுரத்தில் செல்லும் தலைவனை நினைத்தபடி இருப்பாள். அவள் உள்ளத்தே தோன்றும் துயரினை நினைக்க வேண்டி நெஞ்சிடம் கூறினான். வெம்மை மிகுந்த இப்பாலை வழியைக் கடந்து தலைவன் சென்றாலும் வந்தாலும் இனி தலைவியைப் பிரிந்து மீளவும் செல்லச் செலுத்தும் நினைவைத் தன் நெஞ்சை விட்டு அகல வேண்டுவதாகக் கூறினான். இதனை,

வெந்தகள் ஆகிய வெயிற்கடம் நீந்தி
வந்தனம் ஆயினும் ஒழிஇனிச் செலவே!
அமுத கண்ணள் ஆய் நலம் சிதையக்
கதிர்தெறு வெஞ்சுரம் நினைக்கும்
அவிர் கோல் ஆய்தொடி உள்ளத்துப் படரே[41]

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. பாலை நிலக் கொடுமையைக் காட்டிலும் தலைவியின் வருத்தம் மிகுதி என்பதை இப்பாடலை எழுதிய புலவர் அறியச் செய்துள்ளார். இப்பாடல் நினைந்து ஏங்கும் ஏக்கம் கொண்ட மகளிர்க்குரியதாகக் கொள்ள முடியும். ஆடவர்க்குத் துணிவு மிகுதியும் வினைமேற்செல்லும் உணர்வு மிகுதியும் உளவாலின் அவர் தம் உளக் காதலைப் புறத்தே காட்டதவாறு அடக்கி வினைமேற்பிரிதலையே நாடுவர் என்றும் பொதுவான கோட்பாட்டைப் பொய்யாக்கும் என்ற உண்மையைப் பெற முடியும்.

### 5.11.5. தலைவன் தன் நெஞ்சைத் திட்டுதல்

தலைவன் தன் நெஞ்சைத் திட்டிக் கூறும் பாடல் ஒன்று. தலைவன் தன் நெஞ்சிடம் அழகுகெடத் தொலை நாட்டுக்குச் செல்ல வேண்டா என்று கூறிய போது அதற்கு இசையாமல் பொருள் தேடி வந்ததாகவும் தலைவி மகிழ்ச்சியுடன் இருக்க ஈட்டித் தரவேண்டும். எனவே மீளாது காட்டில் செல்வதற்குத் தன்னுடன் வருமாறு நெஞ்சை அழைத்தான். முன்னர் துணிந்த படி வினையே ஆடவர்க்கு உயிர் என்பதால் பொருள் ஈட்ட செலவு மேற்கொண்டு செல்வதே நம் கடமை என்றும் முதலில் துணிந்த படியே சென்று பொருளை ஈட்டி வரவேண்டும் எனவும் இடையே இன்பத்தை எண்ணிக் கடமையைக் கைவிடுதல் ஆண்மையாகாது, அறிவுடைமையாகாது எனவே மனம் மாறாது சென்று பலவகைச் செல்வத்தையும் ஈட்டி வருவோம் என மயங்கிய தன் நெஞ்சத்தைத் தலைவன் தேற்றினான். வாழ்வதற்குப் பொருள் இன்றியமையாதது என்ற கருத்தை முல்லை பூதனார்,

தாழ்மென் கூந்தல் தட மென் பணைத்தோள்

மடந்தை மாண் நலம் புலம்ப, "சேய்நாட்டுச்

செல்லல்" என்று யான்சொல்லவும்,ஒல்லாய்

வினை நயந்து அமைந்தனை ஆயின் மனை நகரப்

பல்வேறு வெறுக்கை தருகம் ........... கோவலர்

ஊறாது இட்ட உவலைக் கூவல்

வெண் கோடு நயந்த அன்பு இல் கானவர்

இகழுந்து இயங்கு இயவின் ..... [42]

*என்ற பாடல் வழி விளக்குகிறார்.*

**5.11.6. வினைவயின் செல்ல நெஞ்சை அழைத்தல்**

*தலைவன் தலைவியிடம் இன்பம் எய்தி வாழ்கின்ற போது அவன் மனம் பொருளின் சிறப்பையும் அப்பொருள் இல்லையெனில் ஏற்படும் துன்பத்தையும் எண்ணியது. அப்போது தலைவியைப் பிரிந்து சென்று பொருள் ஈட்டிவரச் செல்லும் போது அந்த நெஞ்சம் தலைவியை எண்ணி மறுத்து மீண்டும் தலைவியிடமே வந்தது. தலைவன் தன் நெஞ்சத்தைக் கடிந்து திட்டினான்.*

*சினத்துடன் தன் நெஞ்சை நோக்கி, பொருளால் உண்டாகும் நன்மையை எடுத்துக் கூறித் தலைவி வீட்டில் இருக்கும் போது பிரிந்த அரிய வழியில் செல்லாமல் இப்போது இடைவழியில் வந்த பின்பு தலைவியிடம் செல்ல எண்ணியதைக் காட்டிலும் அன்றே பிரியாதிருந்தால் நன்றாயிருக்கும், எனவும் தொலைவு வந்த பின் இடை வழியில் மேற்கொண்ட செயலில் இருந்து பின் வாங்கினால் பிறரால் எள்ளி இகழ்வதற்கு ஏதுவாகும் என்று கூறி என்னுடன் வருவாயாக என்று தலைவன் கடிந்து கொண்டான்.*

............... எயிற்றோள்வயின்

பிரியாய் ஆயின் நன்றுமன் தில்ல

அன்று நம் அறியாய் ஆயினும் இன்று நம்

செய்வினை ஆற்றுற விலங்கின்

எய்துவை அல்லையோ பிறர் நகு பொருளே?[43]

என இவ்வாறு இரண்டு மனம் கொண்டு தலைவன் தள்ளாடும் நிலையைக் காணமுடிகிறது.

இவ்வாறு இடைச் சுரத்துப் பாடல்கள் வாயிலாகத் தலைவனின் மனநிலை, உளவியல், சுரத்தின் பெருமை, தன் நெஞ்சத்தைத் திட்டுதல், நெஞ்சை நொந்துக் கொள்ளுதல், உள்ளிட்ட பலவும் புலவர்களால் சித்திரிக்கப்படுகிறது. மேலும் பாடல்கள் வாயிலாகத் தலைவன், தலைவி மீது கொண்ட அன்பும், பரிவும், பாசமும் பல்வேறு கோணங்களில் புலவர்கன் பல பாடல்களில் அறியப் படுத்தியுள்ளனர்.

### 5.12. வினைமுற்றி மீண்டு வருதல்

தலைவன் வினைவயின் பொருட்டோ, போரின் பொருட்டோ, பொருள் தேடும் பொருட்டோ, எதுவாயின் பிரிந்து அவ்வினை முடிந்து மீண்டு வரும் காலம் வரின் வெற்றியோடு வருவான். இவ்வினைவயிற் பிரிந்த தலைவன் அவ்வினையை வென்றியுடன் முடித்து திரும்பி வருங்காலை தன்னூர் நோக்கி வரும் வழி எவ்வளவு நீண்டதாயினும் இடைச் சுரத்தில் தங்கி வருதல் கூடாது. தலைவியைக் காண விழையும் அவனது உள்ளத்தில் காற்றைப் போல விரைந்து சென்று உதவக் கூடிய குதிரைகள் பூட்டிய தேரை உடைமையான் இடையறாது வரல் வேண்டும் இம்மரபினைத் தொல்காப்பியர்,

வினைவயிர் பிரிந்தோன் மீண்டுவருங்காலை

இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை

உள்ளம் போல உறறுழி உதவும்

புள்ளியிற் கலிமா வுடைமை யான[44]

என்று கூறுகிறார்.

### 5.12.1. தேர்ப்பாகனிடம் கேள்வி கேட்டல்

நெடுந்தொலைவாகிய வழியைக் கடந்து செல்வோயின் பெரிய தோளையுடைய தலைவிக்குத் துன்பமின்றி அவளது காம நோயைக் களைய மாட்டோம் என்று நன்மையை விரும்பி எண்ணிய மனத்தின் ஆகி, கூரிய கற்களை உடைய கரடு முரடான பாதையில் சென்றும், நிலத்திலே புதுவழியை உண்டாக்கியும் வந்த அறிவுடைய தேர்ப்பாகனே! நோயினாலே வருந்தி வாழும் தலைவியை என்னிடம் சேர்க்க இன்று நீ தேரினையோ செலுத்தி வந்தாயா? என்ற கருத்துப்பட

**நன்று புரிந்து எண்ணிய மனத்தை ஆகி,**

**முரம்புகண் உடைய ஏகி கரம்பைப்**

**புதுவழிப்படுத்த மதியுடை வலவோய்!**

**இன்று தந்தனை தேரோ,**

**நோய் உழந்து உறைவியை நல்கலானே![45]**

கூறினான். இப்பாடலின் வழி தலைவன் நெடுந்தொலைவு கடந்தான் என்றும், தேர் விரைவாகச் சென்று புதிய பாதையை ஏற்படுத்தியது என்றும் தெரிய வருகிறது.

### 5.12.2. வினை முற்றிப் பாகன் கூறிய பாடல்களில் தலைவனின் மனம்

தொல்காப்பியர் பாகன் கூற்று குறித்து எதுவும் கூறவில்லை. தலைவன் வினைமுற்றி வருங்கால் அவனது தேரை இயக்கி வருபவனாக மட்டுமே அவர் பாகனைக் குறிப்பிடுகின்றார். தேர்ப்பாகனுக்குக் கூறியது என்ற நிலை ஒருவேளை உரையாசிரியர்கள் பிற்காலத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும். இதை நற்றிணைப் பாடல் ஒன்றில், தலைவனே நம் குதிரை விரைவாகச் செல்கிறது. தலைவன் வரவுக்காகக் காத்திருப்பவள் தலைவி, அவள் விரும்பியேற்று மகிழ்பவள். அவளுடைய மென்மையாய் உயர்ந்த பெரிய தோளில் சாய்ந்து துயில் கொள்ள விரும்பும் தலைவன். அரசன் நேற்று இரவுப் போரை முடித்து தலைவனுக்கு விடை கொடுத்து அனுப்பியதற்காக அவன்

வருந்தக் கூடாது என்றும் சூடிய வெற்றி மாலை வாழ்கவென்றும், அவன் விரும்பிச் செல்லும் தலைவியின் ஊரில் ஆயர்கள் பலமுறை உழுது புரட்டிய புழுதி நிறைந்த பழந்தோட்டத்தில் வரகு விதைத்து, அதன் கதிர்களை இட்டுள்ளனர். அக்கதிர்களை அனைவரும் பார்த்து மகிழ்கின்ற பெண்மான் உண்கின்றது. அப்படிப்பட்ட வளங்கள் உள்ள ஊரில் மரல் வித்துகள் உதிர்ந்து கிடக்கும் அழகிய காட்டில் அப்பெண்மான் ஆண்மானோடு கூடி மகிழ்ந்து விளையாடுகிறது. இத்தகைய காட்டிடமே தலைவியின் ஊராகும். இவ்வாறு மானின் மகிழ்ச்சிக்கு ஈடான தலைவனின் மகிழ்ச்சியைத் தலைவி நிறை வேற்றுவாள் என்ற கருத்தாக இப்பாடல் அமைகிறது. அதாவது பசுமை என்பது மகிழ்ச்சி என்ற கருத்தைக் குறிப்பதாகப் புலவர் கூறுகிறார்.

**விதையர் கொன்ற முதையல் ஆழி**
**இடுமுறை நிரப்பிய காமர் மடப்பிணை**
**அரலை அங்காட்டு இரலையொடு வதியும்**
**புறவிற்று அம்ம, நீ நயந்தோள் ஊரே!**
**எல்லிவிட் டன்று வேந்து எனச் சொல்லுபு**
**பரியல் வாழ்க நின் கண்ணி![46]**

நீண்ட நாள் பிரிந்து சென்ற தலைவன் விரைவாகத் தேரைச் செலுத்தும்படி பாகனிடம் கூறிய நிலை மாறி தேர்ப்பாகன் தலைவனுக்குக் கூறும் கூற்றில் இப்பாடல் அமைந்துள்ளது. நீண்ட நாட்களாகத் தலைவியின் முகத்தைக் காணாத தலைவனின் வருத்தம் வேறு கோணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்பது இப்பாடலின் சிறந்த கருத்தாகும்.

### 5.12.3. தலைவியின் ஊர் அழகு

இரவுப் பொழுதே ஆனாலும் இல்லத்திற்கு வந்த விருந்தினரைக் கண்டு மகிழ்பவள். யான் கூறிய சொல் மாறாதவள். வீட்டிலிருந்து அறம் செய்யும் கற்பினையும் மென் சாயலையும் இளமையையும் உடையவள் நம் காதலி. அவளது ஊர் புதுவருவாயை உடையது. மழை பொழிந்து நின்ற கடைசி நாளில்

ஒரு இடையன் நன்கு பின்னப்பட்ட மெல்லிய உறி, நீக்கிடை கோல் முதலிய பொருள்களை வைத்துள்ள தோற்பையைச் சுருக்கிக் கட்டிக் கையிலே எடுத்துக் கொண்டு, பனையோலைப் பாயை முதுகில் கட்டிக் கொண்டு, கையிலுள்ள கோலை ஊன்றி அதன் மேல் ஒரு காலை வைத்து நடுங்கி சீழ்க்கை அடிக்க அதைக் கேட்ட சிறிய தலையை உடைய ஆட்டு மந்தை பிற இடங்களுக்குச் செல்லாமல் அவ்வெளியில் மயங்கி அவ்விடத்திலேயே தங்கின. இத்தகைய காட்டிலேதான் காதலியின் ஊர் உள்ளது எனத் தேர்ப்பாகனிடம் கூறியதாக அமைகிறது.

அதாவது, எவ்வாறு நன்கு பழக்கப்பட்ட ஆட்டிடையனின் சீழ்க்கை ஒலிக்கு ஆடு எங்கும் செல்லாமல் நிற்கிறதோ, அவ்வாறே தலைவியும் தேரின் சத்தம் கேட்டுத் தலைவன் வருகைக்காக அசையாமல் காத்து நிற்பாள் என்பது பொருள். தலைவனின் வருகைக்காகக் காத்து நிற்கும் தலைவி அவனது வருகையால் அவள் இன்பம் எய்துவாள் என்பது இதன் உள்ளுறையாகும். இதனை,

**............ கலப்பை அதளொடு சுருக்கிப்**
**பறிப்புறத்து இட்ட பால்நொடை இடையன்**
**நுண்பல் துவலை ஒரு திறம் நனைப்பத்**
**தண்டுகால் வைத்த ...............**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே![47]**

என்ற பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

### 5.12.4. பூக்கள் – விலங்குகள் வாயிலாக உளவியல்

தலைவன் பாகனிடம் கார்காலம் தொடங்கி விட்டது. காயாம்பூவின் மலர்கள் நீலமணி போல் பூத்து உள்ளது. அதில் சிவந்த இந்திர கோபப் பூச்சிகள் பரவின. எனவே தாற்றுக் கோலால் குத்திக் குதிரைகளை விரட்டாதே. ஏனென்றால் மடல்கள் வீழ்ந்த வாழை மொட்டுப் போல் திரிந்த கொம்புகளை

உடைய மான்கள் தன் பெடை இனத்தோடு புணரும் தன்மை கொண்டவை. எனவே மணியோசை மிக்கத் தேரைச் செலுத்தும் போது அவை அஞ்சி தன் செயலைச் செய்யாமல் மிரண்டு ஓடும். புணர்ச்சிக்கு இடையூறு வேண்டாம் எனக் கூறி, தலைவி தன் வரவுக்காகக் காத்திருப்பாள். மானின் செயலைப் போல் தனக்கு ஏற்பட்டுவிடக் கூடாது, முழுமையான இன்பத்தைத் தரவேண்டும் எனவே இத்தகு தடைகள் நீங்க வேண்டும் என்ற குறிப்பை வைத்துக் கூறுவதாக இப்பாடல் உள்ளது. இதனை ஆசிரியர்,

**…………செந்நிலப் புறவின்**

**வாஅப் பாணி வயங்குதொழிற் கலிமாத்**

**தாஅத் தாள் இணை மெல்ல ஒதுங்க**

**இடிமறந்து ஏமதி – வலவ! குவிமுகை**

**…………….. காமர் புணர்நிலை**

**கடுமான் தேர் ஒலி கேட்பின்**

**நடுநாள் கூட்டம் ஆகலும் உண்டே[48]**

எனத் தலைவன் கூறுவதாகச் சீத்தலைத் சாத்தனார் கூறுகிறார்.

### 5.12.5. தோழி வாயிலாகத் தலைவியின் அன்பு வெளிப்பாடு

தலைவ, மன்னன் தான் மேற்கொண்ட போர்ச் செயலில் வெற்றியுற்றான். உடனே காலம் தாழ்த்தாது குதிரைகள் பூட்டிய தேரில் ஏறிப் பல ஊர்களைக் கடந்து வந்து தலைவியின் கூந்தலில் மலரைச் சூட்டினாய், நீ இனிய செயலைச் செய்தாய் வாழ்க எனத் தோழி தலைவனைப் பார்த்துக் கூறியதை,

**வேந்துவினை முடித்தகாலை தேம் பாய்ந்து**

**இன வண்டு ஆர்க்கும் ………..**

**வள்பு வலித்து ஊரின் அல்லது முள் உறின்**

**முந்நீர் மண்டிலம் ஆதி ஆற்றா**

**……………. சிறாரொடு உகளி,மன்றுழைக்**

கவை இலை ஆரின் அம்குழை கறிக்கும்

சீறூர் பல பிறக்கு ஒழிய மாலை

இனிது செய்தனையால் – எந்தை! வாழிய!

பனி வார் கண்ணள் பல புலந்து உறையும்

ஆய்தொடி அரிவை கூந்தற்

போது குரல் அணிய வேய்தந்தோயே![49]

*என்ற பாடல்வழி அறியமுடிகிறது.*

**5.12.6. இடைச்சுரம் அனுபவம் உரைத்தல்**

*பிரிந்து வந்த தலைமகன் சுரத்தின் வெம்மை எங்ஙனம் ஆற்றினீர் என்ற தோழிக்குச் சொல்லியது. பிரிந்து போன தலைவன் வினை முடிந்தவனாக மீண்டும் தன் வீட்டிற்கு வந்தான். அவனைக் கண்டு மகிழ்ந்த தலைவியும், தோழியும் சுரத்தின் வெம்மையை எவ்வாறு கழித்தீர்? என்று தோழி கேட்டாள். இதற்குத் தலைவன்,*

வேனில் அரையத்து இலையொலி வெரீஇ

போகில் புகா வுண்ணாது பிறிது புலம்படரும்

வெம்பலை அருஞ்சுரம் நலியா

தெம்வெம் காதலி பண்புதுணைப் பெற்றே[50]

*என்று கூறினான். வேனிற் காலத்திலே மேற்காற்று அலைத்தலாலே அரச மரத்தின் இலை ஒலி அச்சத்திற்குப் பறவைகள் பயந்தன. அவை, எடுத்து வந்த இரையையும் அங்கிருந்தவாறு வேற்றிடத்திற்குச் சென்றன. அத்தகைய கொடிய அருஞ்சுரமும் என் தலைவியின் பண்பினைத் துணையாகப் பெற்றுச் செல்லும், அவ்வெம்மை என்னை ஒரு போதும் வருத்தாது என்று கூறினான்.*

**5.12.7. தலைவன் – தலைவி வாயிலாக உரையாடலில் அன்பு**

*பொருளிட்டும் முயற்சியில் தலைவியைப் பிரிந்து தலைவன் தான் மேற்கொண்ட வினை முடிந்து பின்பு சற்று காலந் தாழ்த்தி வந்தான். அப்போது தலைவன் அயல் நாட்டில் முயன்று பொருள் ஈட்டிய போது*

அவனால் கைவிடப்பட்ட என்னை நினைத்தது உண்டோ என வருந்திக் கூறிய தலைவிக்குத் தலைவன் விடையாகச் கூறிய,

இரு வேறு ஆகிய தெரி தகு வனப்பின்
மாவின் நறுவடி போல காண்தொறும்
மேல் தண்டா மகிழ் நோக்கு உண்கண்
நினையாது கழிந்த வைகல் எனையதூஉம்
வாழலென் யான் .....................
....................... இயவுள் யானை
நீர் மருங்கு அறியாது தேர் மருங்கு ஓடி
அறு நீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும்
உள்ளுநர்ப் பனிக்கும் உனக்கு அருங் கடத்திடை
உடம்பு ஆண்டு ஒழிந்தழை அல்லதை
மடம் கெடு நெஞ்சம் நின் உழையதுவே[51]

என்பதை மற்றவர் இகழ்வதைப் பொறுத்துக் கொள்ளாது.

பொருள் ஈட்டி வரும் விருப்பத்துடன் தொடங்கிய செயலை முடிக்க வேண்டும் என்ற மனமே அத்தொழிலுடன் கட்டும் கயிறாகக் கட்டுண்டதாகக் கூறினான். மாட்சிமையுடைய பொருள் ஈட்டும் செயல் செய்தற்கு இன்றியமையாத அவன் உடல் மட்டும் அயல் நாட்டில் இருந்ததே அல்லாமல் அறியாமையுடைய அவன் உள்ளம் எப்போதும் தலைவி பக்கத்திலேயே இருந்தது என்றான். அதாவது பொருள் ஈட்டும் எண்ணத்துடன் தலைவியைப் பிரிந்தாலும், எண்ணமெல்லாம் தலைவி மீதுதான் இருந்தது எனவும் அவ்வாறு இல்லையெனில் வாழவியலாது எனவும் கூறினான். இந்த மொழியைப் புலியை விடச் சிறந்த ஊக்கம் உடையராய்ப் பொருளீட்டச் சென்றபோது தன்னை மறந்ததாகக் கேட்டத் தலைவிக்கு தலைவன் அவளை நோக்கி, நினைப்பவரை நடுக்கம் செய்யும் அரிய காட்டினைக் கடந்து பொருள் ஈட்டும் விருப்புடன் என் உடல் அங்கே இருந்ததே அல்லது நெஞ்சம் நின்னிடம் இருந்தது என்றான்.

**தொகுப்புரை**

*தலைவன் தலைவி அகப் பிரிவுப் பாடல்களில் காணலாகும் பின் புலங்களை ஆய்ந்ததன் பயனாகப் பல முடிவுகள் தெரிய வந்துள்ளன.*

1. *பின்புலம் பற்றிய அறிஞர்களின் கருத்துகள் அகப்பிரிவுப் பாடல்களோடு ஒத்துச் செல்வதை அறிய முடிந்தது. நூலாசிரியர்கள், உரையாசிரியர்கள், திறனாய்வாளர்கள் ஆகியோர் பதிவு செய்த கருத்துகள் சாலப் பொருந்துவதை உணர முடிந்தது.*
2. *அகப் பாடல்களில் தலைவன், தலைவியது அகமன உணர்வுகளை, புலவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு உரிய பாணியில் அகமன உணர்வு சிதைவுறாது, பாங்குற விளம்பியிருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளது.*
3. *பிரிவுகளைச் சுட்ட இயற்கைக் காட்சிகளைப் புலவர்கள் பயன்படுத்தி இருப்பதும், அக்காட்சிகளின் ஊடே பல்வேறு உயிரினங்களின் அன்புப் புலப்பாட்டைச் சுட்டி, தலைவன் தலைவியரின் உளவியலோடு அதை இணைத்துக் காட்டியிருப்பதும், அவர்கள் தம் அன்பையும், உளவியல் அறிவையும், காட்டுவதாக அமைந்துள்ளது.*
4. *இயற்கைப் பின்புலத்தில் அனைத்துப் புலவர்களாலும் எழுத்தாளப்படும் நிலவு, ஒரு சில புலவர்கள் எடுத்தாண்ட கடல் அலையின் ஓசை, பிரிவுத் துன்பத்தில் பெரிதும் பங்கு வகிக்கும் வாடைக் காற்று, மாலைப் பொழுது, பிரிவுத் துன்பத்தின் உச்ச நிலைக்குச் சென்று தலைவியை வருத்தும் இடியின் குரல் ஆகியன பாடல்களில் இடம் பெற்று சங்க இலக்கிய வாசிப்பிற்கு அழகு கூட்டுவதாகவும் சங்க அக இலக்கிய காதல் உணர்வைக் கூர்மைப்படுத்தி உச்ச நிலைக்குக் கொண்டு செல்வதாகவும் அமைந்துள்ள திறத்தை உரைக்கிறது.*
5. *மேலும் தலைவன் தலைவியரது பிரிவில் பறவைகளின் தலையீடு, பல்லியின் ஓசையினால் வெளிப்படும் செய்தி, தலைவியின் புலம்பல், கன்றை இழந்த பசுவின் துயரம், அணிலின் செயல்கள் ஆகிய*

அனைத்தையும் சங்கப் புலவர்கள் இடம் பெறச் செய்து மாசில்லா காதலுக்கு வளம் சேர்த்துள்ளார் என்ற இல்லற உளவியலையும், அறிய முடிந்தது.

6. செலவழுங்குவித்தல் என்ற நிலைப்பாட்டில் பொருள் தேட நினைத்த தலைவன் தன் நெஞ்சை அடக்கிக் கொண்டு பயணத்தைத் தவிர்த்தல், தலைவியின் அழகாலும், தலைவியின் மகிழ்ச்சிக்காகவும், தலைவியின் மரணத்திற்கு அஞ்சிப் பயணத்தைத் தவிர்த்தல் உள்ளிட்ட பல நிலைகள் அக்கால சமூகத்தில் வழக்கில் இருந்ததைப் பாடல்கள்வழி உணர முடிந்தது. சில நேரங்களில் தலைவி தன் மனத்தை அடக்கிக் கொண்டு பொருளுக்காகத் தலைவன் பிரிவுக்குச் சம்மதித்ததையும் காணமுடிந்தது.

7. நெஞ்சழிதல், வழியருமை கூறுதல், அறிவற்றவர் என எள்ளி நகையாடுதல், மனப்பேராட்டத்தை இடம் பெறச் செய்தல் ஆகியனவும், செலவழுங்குவித்தல் உத்தியாகக் கையாளப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் அகப்பிரிவுப் பாடல்கள் ஏற்படுத்துகின்றன.

8. இடைச்சுரம் செலவழுங்குவித்தலில் காட்சிப்படுத்திய புலவனால் கையாளப்பட்டுள்ளது. பாலைவனக் காட்சி, அங்கிருக்கும் உயிரினங்களின் அன்புக் காட்சி தலைவியின் அன்பை வெளிப்படுத்தும் காட்சி, அங்கிருக்கும் உயிரினங்களின் அன்புக்காட்சி, தலைவியின் அன்பை வெளிப்படுத்தும் காட்சி, தலைவியின் மாயத் தோற்றக் காட்சி, பிரிதலால் தலைவிக்கு ஏற்படும் நலனழியும் போக்கு ஆகியனவும் செலவழுங்குவித்தலில் ஓர் உத்தியாகக் கையாளப்பட்டுள்ளதையும் அறிய முடிகிறது.

9. வினைமுற்றி மீண்டுவருதல் என்பதும் அகப்பாடல்கள் தரும் மற்றொரு முடிவாகும். தலைவன் அகப்பிரிவுகளுக்குப் பின் தலைவியை மீண்டும் சந்திக்க வினை முடித்து வரும் விரைவைச் சங்க காலப் புலவர்கள் தம் பாடல்களில் அழகுற எடுத்தியம்பியுள்ளனர். அதனைத் தேர்ப்பாகனிடம்

தலைவன் கூறியது, தலைவனின் மன உளவியல், தலைவனின் உளவியலை அறிந்து தேர்ப்பாகன் தேரைச் செலுத்திய நிலை, தான் சந்திக்க உள்ள தலைவியின் ஊர் அழகு, இடைச்சுரத்தின் அகமகிழ்ச்சி, தோழி வாயிலாக அறியலாகும் தலைவியின் மனப் பக்குவம், இடைச்சுரத்தில் தலைவனின் பல்வேறு வித அனுபவங்கள் ஆகியனவற்றையும் அகப்பிரிவுப் பாடல்கள் படம் பிடித்துக் காட்டி, இல்லற ஓவியத்தின் பாங்கினை மனங்கொள்ளச் செய்யத்தக்கதாக மிளிர்வதையும் உணரமுடிகிறது.

# இயல் - 5

## அடிக்குறிப்புக்கள்

1. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, மு.வரதராசனார் பக்.38
2. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.104
3. மேலது பா.92
4. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.85
5. அ. தட்சிணாமூர்த்தி (உ.ஆ), ஐங்குறுநூறு பா.434
6. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, பா.213
7. அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு -இராமகிருஷ்ணன் ப.95
8. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.196
9. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, பா.163
10. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.193
11. அ. தட்சிணாமூர்த்தி (உ.ஆ), ஐங்குறுநூறு பா.183
12. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, பா.162
13. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.238
14. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, பா.235
15. மேலது பா-383
16. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.338
17. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.50
18. அ.விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, பா.131
19. மேலது, பா.129
20. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, பா.160
21. மேலது பா-14
22. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.169
23. அ.விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, பா.11
24. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.289

25. மேலது, பா.351

26. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.97

27. மேலது, பா.109

28. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, பா.16

29. மேலது, பா.71

30. மேலது, பா.168

31. மேலது, பா.256

32. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.16

33. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.5

34. மேலது, பா.13

35. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.366

36. மேலது, பா.325

37. மேலது, பா.308

38. மேலது, பா.284

39. மேலது, பா.103

40. மேலது, பா.103

41. அ. தட்சிணாமூர்த்தி (உ.ஆ), ஐங்குறுநூறு பா.330

42. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.21

43. மேலது, பா.33

44. தொல்காப்பியம், நச்சர் உரை - பொருளதிகாரம் நூ.186

45. வி.நாகராஜன் (உ.ஆ), குறுந்தொகை, பா.400

46. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, பா.121

47. மேலது,, பா.142

48. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.134

49. மேலது, பா.104

50. அ. தட்சிணாமூர்த்தி (உ.ஆ), ஐங்குறுநூறு பா.325

51. இரா.செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.29

## முடிவுரை

- ஐந்து இயல்களாகப் பிரிக்கப்பட்டு நிகழ்த்தப்பெற்ற, சங்க இலக்கியப் பின்னணியில் அகத்திணைப் பிரிவுகள் - தலைவன் தலைவியின் பிரிவுகள் என்ற ஆய்வில் பல்வேறு முடிவுகள் தெரியவந்துள்ளன.

- பழமையான சங்க அக இலக்கியப் பாக்களின் கருத்துக்கள் அக்கால மக்களின் அகவாழ்வினையே அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன என்ற பரவலான, ஆழமான, உண்மை கண்டறியப்பட்டுள்ளது. இந்த அகவாழ்க்கையே சமுதாய வாழ்க்கையின் அடிப்படை என்ற உண்மையும் வெளிக் கொணரப்பட்டுள்ளது. அகவாழ்க்கையின் பல்வேறு உண்மைகளையும், நிதர்சனங்களையும், இருபால் புலவர்கள் தம் பாடல்கள் வழியே புலப்படுத்தி உள்ளனர் என்ற உண்மை தெரிய வந்துள்ளது.

- உண்மையான தலைவன் தலைவியர் புரிந்துணர்வு அன்பு தலைவனின் பிரிவின்பால் பெரிதுபடுத்தி வெளிக்கொணரப்பட்டுள்ளது என்ற உளவியல் கருத்துப் பிரிவுப் பற்றிய பாடல்கள்தோறும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்கூறும் நல்லுலகத்தின் முதல் உளவியலாளரான தொல்காப்பியர் பிரிவு என்பதின் விளக்கத்தையும் பிரிவின் வகைகளையும், சுட்டியுள்ளார் என்ற உண்மை உரையாசிரியர்களாலும், ஆய்வாளர்களாலும், திறனாய்வாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற உண்மை தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

- அகவுணர்வு என்பது பலதரப்பட்டது என்ற உண்மையும், இது தலைவன் தலைவியரின் ஆழ்மனதின் வெளிப்பாடு எனவும் உளவியல் சார்ந்த உணர்வு எனவும் உணர்ச்சிமயமான மெய்ப்பாடு அல்ல என்பதும்,

தலைவனின் பிரிவு என்பது தலைவியை மட்டுமே பெரிதும் பாதிக்கின்றது என்பதும் கண்டறியப்படுகிறது.

- நில இயல்புக்கு ஏற்றபடி தலைவன் தலைவியரின் வாழ்க்கை அமைந்திருப்பினும், எந்நிலத் தலைவராயினும், எத்தகைய பிரிவாயினும் மனவுணர்வு ஒன்றே என்ற கருத்துத் தெளிவுப்படுத்தப் பெறுகிறது.

- பிரிவின்போது தலைவியை ஆற்றுப்படுத்துவோரில் தோழியின் பங்கே பெரிதாக அமைகின்றது என்ற உண்மையும் கண்டறியப்பட்டது. உளவியல் சூழ்நிலை, ஆகியவற்றின் குறிப்பால் தலைவி தனது உள்ளத்து உணர்வுகளைத் தோழியிடம் மட்டுமே நேரடியாகவும், மறைமுகமாகவும் பகிர்ந்து கொண்டுள்ளாள் என்ற மறுக்கவியலா கருத்தையும் இவ்வாய்வு பதிவு செய்கிறது.

- அன்பின் ஐந்திணைகள் வழியே பிரிவு பற்றிய பாடல் கருத்துக்கள் புலவர்களால் தெளிவாகவும் நுட்பமாகவும் எழுதப்பட்டுள்ளன என்ற உண்மையும் வாழ்வின் பல கூறுகளை உள்ளடக்கிய இப்பாடல்களின் வழியே தலைவன் தலைவியின் பிரிவுகள் பற்றிய திட்ப நுட்பங்களும் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

- களவு வாழ்க்கையின் பிரிவிற்கும், கற்பு வாழ்க்கையின் பிரிவிற்கும் இடையே வேறுபாடுகள் அதிகம் இருந்தன என்பதைத் தொல்காப்பியரும், சங்க அகப்பாடல்கள் எழுதிய புலவர்களும், உரையாசிரியர்களும், ஆய்வாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்ற உண்மையையும் இவ்வாய்வு முன்னிலைப்படுத்துகிறது. உயர்ந்தவர்கள் மாட்டு நிகழும் பிரிவுகள் அக்காலச் சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளை வெளிப்படையாக காட்டினாலும், தலைவன் தலைவியரின் அகப்பிரிவு ஒரே உணர்வை உடையதாய் இருந்தது என்ற உண்மையும் எடுத்துரைக்கப்படுகிறது.

- தலைவன் தலைவியைப் பிரிந்து சென்ற காலத்தும், குன்றா ஒழுக்கத்தினளாய் திகழ்ந்தாள் என்ற உண்மையும், அதே சமயம் பரத்தையர்பிரிவு தலைவனை விட்டு வைக்கவில்லை என்ற உண்மையும் இருவரது உளவியல் பாங்கின் அடிப்படையில் முரணாய் இருந்தாலும், புலவர்கள் இதைப் பாடல்கள்வழி அறிவுறுத்தினர் என்ற உண்மையும் கண்ணாடியாகப் பிரதிபலிக்கிறது.
- தலைவனின் பிரிவின்போது தலைவியை ஆற்றுப்படுத்திய தோழி, தலைவனின் கூடா ஒழுக்கத்தின் போது அவனை இடித்துரைக்கவும் செய்தாள் என்ற கூற்றின் வாயிலாகத் தோழியின் நடுவுநிலைமையும், உளவியல் பேரறிவையும் காட்டுவதாக அமைகிறது.
- பொருள்வயிற்பிரிவின்போது தலைவியின் மனநிலை பல்வேறாகக் காணப்படும். அவ்வாறு காணப்பட்டாலும் தலைவன் பிரிவின்போது கூறிச்சென்ற வார்த்தைகளை நினைத்துத் தன்னைத் தேற்றிக் கொண்டாள் என்பதை அறியமுடிகிறது. தலைவன் உடனுறையும்போது உள்ள மகிழ்வும், பிரியும்போது ஏற்படும் மன நெகிழ்வும் ஒன்றுக்கொன்று எதிராக இருந்தாலும் அதைச் சமநிலைப்படுத்தியவள் தோழி என்பதும் தெளிவாக உணர்த்தப்படுகிறது.
- பொருள்வயிற்பிரிவின்போது தலைவியின் மன உறுதியும், அவளது ஆன்மீக உணர்வும் புலவர்களால் காட்டப்பெற்று தோழியால் அவளது துயர் களையப்படுதலும், அவளது பிரிவச்சம் நீங்குதலும், தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. பிரிவிற்கு உடன்பட்டத் தலைவியைத் தோழி உவந்ததும், பிரிவுணர்ந்து வேறுபட்ட தோழிக்கு தலைவி சொல்லியதும், புலவர்களால் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது.
- பிரிவின்போது தலைவியின் மனநிலையைக் காட்டிய புலவர்கள் தலைவனின் மன உணர்வையும் காட்டியிருக்கிறார்கள். இது

தொல்காப்பியர் கூறிய மரபிற்கு உட்பட்டே இருக்கிறது என்பதையும் அறிய முடிந்தது.

- பிரிவையும், பொருளையும் சீர்தூக்கிப் பார்க்கும் தலைவன் பொருள் கடைக்கூட்டியநெஞ்சிற்குச் சொல்லிய உரைகளும், நாடகப் பாங்கில் இடம்பெறும் தனிமொழி என்ற கூற்றோடு ஒத்துச் செல்கிறது என்ற உண்மையும் பெறப்பட்டது. இத்தனி மொழியானது இருபாற் புலவர்களாலும் பாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ளது என்பதையும் இவ்வாய்வுச் சுட்டுகிறது.

- இளங்கீரனார், சல்லியங்குமரனார் போன்ற புலவர்கள் தலைவன் நெஞ்சுக்குக் கூறியதையும், இடைச்சுரத்தில் கலங்கி நின்றதையும், பல பாடல்களில் சொல்லி இருக்கின்றார்கள் என்ற உண்மையும் இவ்வாய்வு வெளிக்கொணர்கிறது. தலைமகளை ஆற்றுப்படுத்தியதும், தலைமகன் தன்னைத் தேற்றிக் கொள்வதும் இவ்விரு புலவர்களே பெரிதும் கூறியிருக்கிறார்கள் என்ற கருத்தையும் பெறமுடிகிறது.

- பொருள்வயிற்பிரிவு பற்றிய பாடல்களில் தலைவன் இயல்பு, தலைவி இயல்பு, தோழி இயல்பு, சங்க கால மரபு, புலவர் இயல்பு ஆகிய அனைத்தும் கண்டறியப்பட்டுள்ளது.

- பொருள்வயிற்பிரிவின்போது நிகழ்வுறும் தலைவன் தலைவியரது பல்வேறு செயல்கள் ஐந்திணைக்கும் பொதுவான கருத்தும் பெறப்பட்டது.

- அக்காலப் பிரிவுகளில் ஒன்றான பரத்தையர்பிரிவு தொல்காப்பியரால் நேரடியாகச் சொல்லவில்லை. ஆனால் பிரிவுகளுள் ஒன்றாகப் பரத்தையர் பிரிவும் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது. ஆடவர்களின் ஒழுங்கற்ற நிலைக்கு இப்பிரிவு எடுத்துக்காட்டு என்பதைப் பிரிவுப் பாடல்கள் உணர்த்துவதை அறிய முடிந்தது.

- பரத்தமைத் தோற்றத்திற்குப் பல காரணங்கள் இருந்ததையும் அறிய முடிந்தது. குழந்தை பெற்றுக் கொள்ளப் பரத்தைக்கு உரிமை இல்லை என்ற சமூக நீதியும் இதனால் அறியப்படடது. சூழலுக்கு ஏற்றபடியும், பல்வேறு நிலைகளுக்கு ஏற்றபடியும் பரத்தையர்க்கு வெவ்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தது என்ற சமூக அநீதியும் தெரியவந்தது.

- பரத்தையருக்கும் பல்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் சமூக தகுதியில் பரத்தைக்கு ஒரு பெயர் மட்டுமே வழங்கப்பட்டது என்பது ஏற்றத்தாழ்வினைக் காட்டுவதாக ஆய்வாளர்களாலும், சமூகவியலாளர்களாலும் குறிப்பிடப்படுகிறது.

- வரைவு கடாதல் என்பது திருமணத்தையும் வதுவை அயர்தல் என்பது பரத்தையின் திருமணத்தையும் குறிப்பதாகக் கொள்ளப்பட்ட நிலையை அறியமுடிந்தது.

- தலைவனின் மனைவியின் குழந்தையைப் பரத்தையர் தங்களது குழந்தையாகவே கருத வேண்டிய கொடுமை அக்காலச் சமூக வழக்கத்தில் இருந்தது என்பதையும் அறியமுடிகிறது. பரத்தையரின் பிரிவினால் மனைவி சினம் கொள்வதும், வாயில் மறுப்பதும், சமூக இயல்பாகவே எடுத்துக்கொள்ளப்பட்டதாகவே தொல்காப்பியம் உரைக்கிறது.

- பொதுமக்களின் இயல்புகள் இத்தகையது என்பதைச் சங்கப் பாடல்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் குறிப்பிட்டுள்ளது என்பதையும் அறியமுடிந்தது. தலைவியின் வெறுப்பு, ஊடல், கோபம் ஆகியன வெகு நாட்களுக்குச் செல்ல முடியாது என்ற நிர்பந்தமும் அறியப்பட்டது.

- ஊடலும், வாயில் மறுத்தலும் தொடர்ந்து நீடிக்குமேயானால் தலைவியின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும் என்ற அச்சமும் உணரப்பட்டது. கணவனை நம்பியே வாழும் நிலை சங்க காலம் முதற்கொண்டு இருந்தது என்பதையும் உணர முடிந்தது.

- ஊடல் கொண்ட தலைவியோடு தலைவனைச் சேர்த்து வைக்கும் சமூகப் பொறுப்பு வாயில்களுக்கு இருந்தன என்பதும் வாயில்களில் ஒன்றாக நடைமுறை வழக்கில் குழந்தை கருதப்பட்டாலும் எழுதப்படாத வாயிலாகவே அது வழக்கில் இருந்தது என்பதையும் சமூகவியலாளரின் கருத்துக்கள் வழி அறியமுடிந்தது.
- பரத்தையை நாடி தலைவன் பிரிந்து சென்றாலும் அவன் மீண்டும் தலைவியையே நாடி வந்ததும் பாடல்களால் அறியப்பட்டது. தலைவியை விட்டுத் தலைவன் பரத்தையை நாடி சென்றபோதும் தலைவியை உயர்வாக மதிக்கப்பட்டதும், பரத்தை கீழாக எண்ணப்பட்டதும், பெண்களுக்கு இழைத்த சமூக அநீதியாகவே கருத இடமளித்துள்ளது என்பதயும் கண்டறியப்பட்டுள்ளது.
- ஓதல், தூது, போர், காவல் ஆகிய நான்கு பிரிவுகளில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரிவு என்ற பாகுபாடு இருந்ததை அறியமுடிந்தது. பிரிவுகளின் காலம் பற்றிய கருத்தாக்கத்தில் தொல்காப்பியருக்கும், உரையாசிரியர்களுக்கும் முரண்பாடு இருந்தது. ஓதல் பிரிவு உயர்ந்தோர் மாட்டு இருந்தது. ஆரிய ஆதிக்கத்தின் உச்ச நிலையைக் காட்டுவதாகக் கொள்ளமுடியும் என்ற கருத்தைப் பெற முடிந்தது.
- அக்காலம் சமூகத்தில் பெண்கல்வி பற்றி பேசப்பட்டாலும் கல்விப்பிரிவு பெண்களுக்குக் கிடையாது என்ற சமூக அநீதியையும் வழக்கில் இருந்ததை ஆய்வின்வழி அறியமுடிந்தது.
- தூதுக்குரிய இலக்கணத்தைத் திருவள்ளுவரே வகுத்துள்ளார் என்ற உண்மையும் இவ்வாய்வு வெளிக்கொணருகிறது.
- போரின் காரணமாகத் தலைவன் பிரிந்து சென்றாலும் அஃது அரசுப்பணி எனக் கருதப்பட்டது. தலைவனின் பிரிவுத்துயர் காமநோய் பற்றியும், பெண்மையின் ஏக்கம் பற்றியும் அமைந்தது எனக் கருதப்படுவதால் தலைவனின் குணம் இழிவுச் சிறப்பாகக் கருத இடமளிக்கிறது.

- அகப்பாடல்கள் வழியேயும், பாசறைப் பாடல்கள் வழியேயும், தலைவன் மனநிலை மன்னனின் இயல்பு அறியப்பட்டது. காமநோய் பற்றியும், பெண்மையின் ஏக்கம் பற்றியும், தலைவன் ஏக்கம் இருந்தது என ஒரு சாரார் கருதினாலும், பாணன் வாயிலாகத் தலைவன் தூது அனுப்புவதின் மூலம் தலைவன் தலைவி மீது கொண்ட அன்பு அளப்பறியது என வேறொரு சாரார் கருதுகின்றனர் என்ற உண்மையும் பெறப்பட்டது.
- போர்வயிற்பிரிவு முல்லைத்திணை பற்றியே பெரும்பாலும் அமைவதால், தலைவியின் இருத்தல் கொடுமை, ஆற்றுப்படுத்தும் திறம், தலைவன் மீது தலைவி கொண்ட நம்பிக்கை ஆகியனவும் காண முடிந்தது.
- தலைவி தோழி ஆற்றுப்படுத்தலும், தலைவியின் உளவியல் நிலையும் தலைவன் தலைவியருக்கு இடையே எழும் மனப்போராட்டங்களும் புலவர்களால் எடுத்தாளப்படும் சூழல் கருதி தலைவன் எடுக்கும் முடிவே இறுதியானது என்பதும் அறிய முடிந்தது.
- போர்வயிற்பிரிவின்போது தலைவன், தேர்ப்பாகன் உரையாடல்கள் போர் முடிந்து வரும்போது நடக்கும் உரையாடல்கள், தலைவன் தலைவியருக்கு இடையே வரும் புரிந்துணர்வும், தேர்ப்பாகன் உளவியலையும் காட்டுவதாக அமைகிறது.
- நாடுகாவல்பிரிவு என்ற அரசுப்பணி பிரிவிற்கு எடுத்துக்காட்டான பாடல்கள் இல்லை என்ற முடிவையும் இவ்வாய்வு நிறுவுகிறது.
- சங்க அகத்திணையில் தலைவன் தலைவியரின் பிரிவைச் சுட்டும் பாடல்களில் பல்வேறு பின்புலங்களைப் புலவர்கள் அமைத்துள்ளனர். இப்பின்புலம் பற்றிய கருத்தாக்கத்தை நூலாசிரியர்கள், உரையாசிரியர்கள், திறனாய்வாளர்கள் ஆகியோர் வழிமொழிந்துள்ளனர் என்ற கருத்தைப் பெறமுடிகிறது.
- பிரிவு பற்றிய பாடல்களில் தலைவன், தலைவியரது அகமன உணர்வுகள் புலவர்களால் பாங்குறச் சித்திரிக்கப்பட்ட தன்மை புலப்படுகிறது.

அஃறிணை உயிர்களின் அன்பு வெளிப்பாட்டையும் தலைவன், தலைவியரது உளவியல் வெளிப்பாட்டையும் ஒருங்கே அமைத்துக் கணிக்க வழிகோலுகிறது. பஞ்ச பூதங்கள், தாவரங்கள் ஆகியன நேரடியாகவோ, மறைமுகமாகவோ தலைவன் தலைவியரது பிரிவிலும் அவர்கள் சேர்க்கையிலும் இடம்பெற்று அகவாழ்வின் உன்னதத்தை உளவியல் நோக்கில் படம்பிடித்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

- ஊர்வன, பறப்பன, நடப்பன என்ற மூன்று நிலைகளிலும் உயிர்வாழும் உயிரினங்கள் அகவாழ்வின் நுட்ப திட்பங்களைக் காட்டுகின்ற கருத்தைப் புலவன் எடுத்தாண்டு நேரடியாக வாசகன் மனதில் பதியச் செய்யும் அழகியல் உணர்வையும் அறிய முடிந்தது.

- செலவழுங்குதல், செலவழுங்குவித்தல், இடைச்சுரம், வினைமுற்றி மீளுதல், தேர்ப்பாகனுக்கு உரைத்தல், நெஞ்சுக்குக் கூறுதல் உள்ளிட்ட சிறப்பு கூறுகள் தலைவனது வாழ்வை புடமிட்டுள்ளன என்ற உண்மையையும் பல பாடல்களின்வழி அறியமுடிந்தது.

- தலைவயின் பொறுமை, தோழியின் நேர்மை, தலைவனின் கடமை ஆகிய மூன்று அகவாழ்வியல் அம்சங்களும் முக்கோண வடிவில் செயல்பட்டு வாழ்வின் இன்ப துன்பங்களையும், உயர்வு தாழ்வுகளையும் பண்பாடு கலாச்சாரங்களையும், வாசகனுடைய மனதில் பதியச் செய்கின்றன.

- சிற்சில இடங்களில் மீவியல்பு கூறுகளோ, தற்குறிப்பேற்றங்களோ பாடல்களில் அமைந்து அகவாழ்விற்குத் தலைவன் தலைவியரின் பிரிவில் வாழ்க்கைத் தத்துவத்தை உணர்த்துகின்றன என்ற உண்மையை உணர்த்துகின்றன.

# துணைநூற்பட்டியல்

## முதன்மை ஆதாரங்கள்


1. *இளம்பூரணனார் உரை* — *தொல்காப்பியம்*<br>*(எழுத்து, சொல், பொருள்)*<br>*சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை,*<br>*சென்னை-14.*<br>*முதற்பதிப்பு, மார்ச் 2005*

2. *பொ.வே.சோமசுந்தரனார் உரை,* *குறுந்தொகை, (மூலமும்,உரையும்),*<br>*கழக வெளியீடு,1972.*

3. *பின்னத்துர் நாராயணசாமி உரை,* *நற்றிணை, (மூலமும் உரையும்)*<br>*கழக வெளியீடு, 1967.*

4. *பொ.வே.சோமசுந்தரனார் உரை,* *ஐங்குறுநூறு (மூலமும் உரையும்),*<br>*1/140,பிரகாசம் சாலை,*<br>*கழக வெளியீடு, 1972*<br>*சென்னை - 1,*

5. *பொ.வே.சோமசுந்தரனார் உரை,* *அகநானூறு (மூலமும்,உரையும்),*<br>*திருநெல்வேலித் தென்னிந்திய சைவ*<br>*சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.*<br>*1/140, பிரகாசம் சாலை,*<br>*சென்னை - 1, 1974.*

6. *நச்சினார்க்கினியர் உரை,* *கலித்தொகை (மூலமும் ,உரையும்),*<br>*கழக வெளியீடு,*<br>*1/140.பிரகாசம் சாலை,*<br>*சென்னை - 1,1975.*

7. பொ.வே.சோமசுந்தரனார் உரை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, இரண்டாம் பகுதி (பத்துப்பாட்டு) கழக வெளியீடு, 1966.

8. பாட்டும் தொகையும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்., 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், முதல் பதிப்பு, ஏப்ரல் 2004. அம்பத்தூர், சென்னை - 600 098.

## துணைமை ஆதாரங்கள்

1. அண்ணாமலை. வே, சங்க இலக்கியத் தொன்மைக் களஞ்சியம் மெய்யப்பன் தமிழாய்வகம் 63, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001 முதற்பதிப்பு, அக்டோபர் - 2000

2. அமிர்தகௌரி. ஆ, சங்க இலக்கியத்தில் உரையாடல் கவின்கலை அச்சகம், பாலவாக்கம் சென்னை - 600 041 முதற்பதிப்பு - 1989

3. அழகம்மை. ஏ.கே, சமூக நோக்கில் சங்க மகளிர் மணிவாசகர் பதிப்பகம் பாரிமுனை, சென்னை - 600 018 முதற்பதிப்பு - ஆகஸ்ட் - 2001

4. அறவாணன். க.ப, அற்றைநாட் காதலும் வீரமும் பாரி நிலையம், பிராட்வே, சென்னை. முதற்பதிப்பு - 1998

5. அறவாணன். க.ப, — தமிழ்ச் சமுதாய வரலாறு
(பண்டை காலம்)
தமிழ்க்கோட்டம்
91, இரண்டாம் தெரு,
மோகன் நகர், புதுச்சேரி
முதற்பதிப்பு - அக்டோபர் - 1992

6. ஆறுமுகம். அ, — சங்க இலக்கியத்தில் குடும்பம்
உடைமை, அரசு
பாவேந்தர் பதிப்பகம்
அரியலூர் வட்டம்
திருச்சிராப்பள்ளி 621 851
முதற்பதிப்பு - நவம்பர் - 1994

7. இராசமாணிக்கனார். மா, — பத்துப்பாட்டு ஆராய்ச்சி
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.
முதற்பதிப்பு - 1970

8. இராமகிருஷ்ணன். ஆ, — அகத்திணை மாந்தர் - ஓர் ஆய்வு
சரவணா பதிப்பகம்
மதுரை -625 020.
முதற்பதிப்பு - ஜனவரி - 1982

9.. இளங்குமரனார். இரா, — தொல்காப்பியர் காட்டும் குடும்பம்
தமிழ்ப் பேராலயம் வெளியீடு
காட்டாங்குளத்தூர் - 605 206
முதற்பதிப்பு - 2010

| | | |
|---|---|---|
| 10. | இயேசுதாசன். ப.ச. | திருக்குறளில் குடும்பம்<br>ஓம் சக்தி கம்ப்யூட்டர் லேசர் பிரிண்டர்ஸ்<br>152, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை<br>சென்னை -600 005.<br>முதற்பதிப்பு - 1990 |
| 11. | குளோரியா சுந்தரமதி | பகுப்பாய்வு முறையில் சங்க இலக்கியம்<br>உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்<br>பெங்குடி, சென்னை - 96<br>முதற்பதிப்பு - பிப்ரவரி - 1987 |
| 12. | சந்தானம். எஸ். | கல்வி உளவியலும், கல்விச்<br>சமூகவியலும்<br>அமுத நிலையம் பிரைவேட் லிட்<br>தேனாம்பேட்டை, சென்னை - 18<br>முதற்பதிப்பு - 1961 |
| 13. | சண்முகம் பிள்ளை | அறம் பொருள் மரபும் திருக்குறளும்<br>ஜெயமாலிகா அச்சகம்<br>சென்னை - 89<br>முதற்பதிப்பு - 1980 |
| 14. | சரளா ராஜகோபால் | சங்க இலக்கியத்தில் தோழி<br>ஒளி பதிப்பகம்<br>63, ரங்காச்சாரி சாலை, சென்னை - 18<br>முதற்பதிப்பு - டிசம்பர் - 1986 |
| 15. | ,, | சங்க இலக்கியம் (அகம்)<br>ஒளி பதிப்பகம்<br>63, ரங்காச்சாரி சாலை, சென்னை - 18<br>முதற்பதிப்பு - டிசம்பர் - 1988 |

16. சிங்கார வடிவேலன் — சங்க இலக்கிய உவமைகள்
பழநியப்பன் பதிப்பகம்
65, தியாகிகள் சாலை
தேவகோட்டை
முதற்பதிப்பு - டிசம்பர் - 1986

17. சிதம்பரனார் சாமி — எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்
அறிவு பதிப்பகம்
142, ஜானிஜான்கான் ரோடு
இராயபேட்டை
சென்னை - 14.

18. சீனிவாசன், ரா. — சங்க இலக்கியத்தில் உவமைகள்
சென்னை. 1973.

19. சுப்ரமணியன். கா. — சங்க காலச் சமுதாயம்
ஆய்வுக் கட்டுரைகள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
முதல் பதிப்பு, ஏப்ரல் 2004.
அம்பத்தூர், சென்னை - 600 098.

20. சுப்ரமணியன். நா, — சங்க கால வாழ்வியல்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
முதல் பதிப்பு, ஏப்ரல் 2004.
அம்பத்தூர், சென்னை - 600 098.

21. சுப்பு ரெட்டியார், ந. — தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை
பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 600 014
1974

22. „ — அகத்திணைக் கொள்கைகள்
பாரி நிலையம்
184, பிராட்வே
சென்னை - 600 001
பதிப்பு - 1981

23. செல்வராசு சிலம்பு. நா, — பண்டைய தமிழர் திருமண வாழ்க்கை
காவ்யா வெளியீடு
கோடம்பாக்கம், சென்னை - 24
முதற்பதிப்பு - டிசம்பர் - 2009

24. திருமாவளவன் வே.சா., — அகநானூறும் கதா சப்த சதியும்
- ஓர் ஒப்பாய்வு
கொட்டிவாக்கம், சென்னை - 96
முதற்பதிப்பு - நவம்பர் - 2008

25. நசிமா பானு.சா — சங்க இலக்கியத்தில் மனையறம்
பாத்திமா பதிப்பகம்,
67, காஜீயார் வீதி,
காரைக்கால்.

26. பக்தவத்சல பாரதி — பண்பாட்டு மானிடவியல்,
மாணிவாசகர் பதிப்பகம்,
55,லிங்க தெரு, சென்னை-600 001
முதற்பதிப்பு - 1990

27. பாலசுப்பிரமணியன், சி. — சங்ககால மகளிர்
பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை - 600 001.
பதிப்பு - 1981

28. பிரடெரிக் எங்கெல்ஸ் — குடும்பம், தனிச்சொத்து, அரசு
-அகியவற்றின் தோற்றம்
நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ் - பிலிட்
அம்பத்தூர். சென்னை - 600 008
முதற்பதிப்பு - டிசம்பர் - 2008

29. புலவர் குழந்தை — தொல்காப்பியர் காலத் தமிழர்
சாரதா பதிப்பகம்
சென்னை - 600 014
முதற்பதிப்பு - 2008

30. பெரியசாமி.ப, — அகத்திற்குள் புறம்
நாம் தமிழர் பதிப்பகம்
சென்னை - 600 004
முதற்பதிப்பு - 2009

31. மணிவேல்.மு. — தமிழ் இலக்கிய அகப்பொரு மரபுகள்
செல்லப்பா பதிப்பகம்
48, தானப்ப முதலி தெரு
மதுரை - 625 001
முதற்பதிப்பு - டிசம்பர் - 2009

32. மாணிக்கம். வ.சுப. — தமிழ்க்காதல்
ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்
40, பிஞ்சால சுப்ரமணியன் தெரு,
சென்னை - 600 017
முதற்பதிப்பு ஜூன் - 2009

| | | |
|---|---|---|
| 33. | மாதையன். பெ. | அகத்திணைக் கோட்பாடுகள்<br>சங்க அகக்கவிதை மரபும்<br>பாவை பப்ளிகேஷன்ஸ்<br>16, (142) ஜானிஜான்கான் சாலை<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014<br>முதற்பதிப்பு - டிசம்பர் - 2009 |
| 34. | „ | சங்ககால இனக்குழு சமுதாயமும்<br>அரசு உருவாக்கமும்<br>16, (142) ஜானிஜான்கான் சாலை<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014<br>முதற்பதிப்பு - டிசம்பர் - 2004 |
| 35. | „ | சங்க இலக்கியத்தில் குடும்பம்<br>நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்<br>லிமிடெட்., 41-பி, சிட்கோ<br>இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,<br>அம்பத்தூர்,<br>சென்னை - 600 098.<br>முதல் பதிப்பு, ஏப்ரல் 2004. |
| 36. | வசந்தாள். த. | தமிழிலக்கியத்தில் அகப்பொருள்<br>மரபுகள் ஒரு வரலாற்றுப் பார்வை<br>நாளந்தா ஆர்ட் பிரிண்டர்ஸ்<br>சென்னை - 600 005.<br>முதற்பதிப்பு - 1990 |

| | | |
|---|---|---|
| 37. | வாசன் | இல்லற வாழ்வில் ஏற்றம் பெறும் வழிகள்<br>நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்., 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,<br>அம்பத்தூர், சென்னை - 600 098.<br>இரண்டாம் பதிப்பு, டிசம்பர் 2009. |
| 38. | வீரபாண்டியன், சுப. | குடும்படும் அரசியலும்<br>வானவில் புத்தகாலயம்<br>சென்னை - 600 017<br>முதற்பதிப்பு - மே - 2004 |